ஓம்

இராசைக்கவிஞர்

மாரய்ய ஆச்சாரியாரியற்றிய

இரவீச மரபினர் காதை

முதல் பகுதி

உரையாசிரியர்

திருவேங்கட விலாசம்

ஆ. இராமசாமி அய்யா

வெளியீடு

சடையப்பன் பண்ணை

வேலூர்] 1964. [சேலம்.

ஓம்

இராசைக்கவிஞர்

மாரய்ய ஆச்சாரியாரியற்றிய

இரவீச மரபினர் காதை

முதல் பகுதி

உரையாசிரியர்

திருவேங்கட விலாசம்

ஆ. இராமசாமி அய்யா

வெளியீடு

சடையப்பன் பண்ணை

வேலூர்] 1964. [சேலம்.

முதற் பதிப்பு.

நூல் வெளிவர உதவிய வள்ளல்:

R. கிருஷ்ணசாமி ரெட்டியார்,
தில்லை நகர்,
திருச்சிராப்பள்ளி.

விலை: ரூ. 1-50.

கருணாநிதி மின்சக்தி அச்சகம் வேலூர் (சேலம்). போன் 29.

முகவுரை

நம் பாரத நாட்டின் இரு கண்களாக இராமாயணம், பாரதம் ஆகிய இரண்டும் திகழ்கின்றன. நம் நாட்டின் எல்லா மொழிகளிலும் இவை காவிய வடிவிலும் கதை வடிவிலும் சிறப்புற்று விளங்குகின்றன. வான்மீகி முனிவரியற்றிய இராமாயணமும், வியாசபகவானியற்றிய பாரதமும் அவற்றிற்கு மூலமானவை.

என்றுமுள்ள தென் தமிழ்மொழியில் வழங்கும் கம்பராமாயணமும் வில்லிபுத்தூராரின் பாரதமும் மூலநூல்கட்குச் சம மதிப்பும் சுவையும் உடையனவாகவே சான்றோரால் மதிக்கப்பெறுகின்றன. இராமகாதையும் பாரதமும் நம் மொழியில் தனித்தனிக் காவியங்களாவே வழங்கி வருகின்றனவேயன்றி இரண்டையும் இணைக்கும் சிலேடைக்காவியம் இல்லாக்குறை இருந்துவந்தது. களி தெலுங்குமொழியிலோ "ராகவபாண்டவீயம்" என்னுஞ் சிலேடை இலக்கியம் பெரும்புலவர் "பிங்கலசூரன்ன" அவர்களாலியற்றப்பெற்றுச் சிறந்து விளங்கி வருகிறது. இது விசயநகர சாம்ராச்சியத்தின் கீழிருந்த சாமந்தனுகிய "ஆதவீட்டிபெதவேங்கடப்பிரபு" எனப் பெயரிய குறுநில மன்னன் வேண்டுகோளுக்கிணங்க இயற்றப் பெற்று, அம் மன்னன் அவையிலேயே அரங்கேற்றவும் பெற்றது. இந் நூலைத்தமிழில் வடித்தவர் திரு. மே. மு. மாரய்யாச்சாரியார்

ஆசிரியர் திரு. மே. மு மாரய்யாச்சாரியாரவர்கள் எழுபத்தெட்டு ஆண்டுகளுக்குமுன் பார்த்திப ஆண்டு மாசி மாதம் சிவராத்திரியன்று தோன்றினர். இவர் தந்தையார்

திரு. முனியாச்சாரியார் தாயார் திருமதி. புட்டம்மை. இவர்களின்மரபினர் மைசூர் பகுதியைச்சார்ந்த மேல்கோட்டை என்னும் ஊரில் வாழ்ந்தவர். எனவே, அவர்கள் மேல் கோட்டையாரென அழைக்கப்பெற்றனர். திரு. முனியாச் சாரியார் பிற்காலத்தில் இராசீபுரத்திற்கு குடும்பத்துடன் குடி வந்துவிட்டார்.

திரு. மாரய்யாச்சாரியார் தனது தந்தையிடமே இலக்கணம், நீதிநூல், காவியம், கவிபாடுதல் ஆகிய வற்றை முறையேபயின்றார். வடமொழி, தெலுங்கு ஆகிய மொழியில் திறம்பெற்றார். திரு. மீனாட்சிகார்லு என்பாரிடம் சிற்பக்கலையும் பயின்று தன் தந்தைக்கு உதவியாக விக்கிரக வார்ப்படம் செய்தல் முதலியன செய்துவந்தார் சான்றோர் பலர்வாழ்ந்துவந்த இடம் இராசீபுரமாகையால் ஆசிரியர், அவர்களுடன் அளவளாவி வருவாராயினர். தன் இளமைப்பருவத்தில் 'ரங்காராவ் சரித்திரம்' என்னுஞ்சோக நாடகத்திற்குரிய பாடல்கள், சுலோகங்கள் ஆகியன புனைந்து நடிக்கக் கொடுத்தார். பின்னர், சேலமாவட்ட நயினாமலையிலுள்ள இறைவன் மேல் 'வரதராஜ சதகம்' தெலுங்கில் புனைந்தார்.

பின்னர் ஆசிரியருக்குத் திருமணம் செய்வித்து சில ஆண்டுகள் கழிந்ததும் திரு. முனியாச்சாரியார் இறைவன் திருவடி நீழலையடைந்தனர். பிறகு தந்தையின் புரோகித வேலையை இவரே செய்து வந்தார். அங்கு உறைந்து வந்த தமிழன்பர்களின் கூட்டுறவுடன் தமிழ்க் கல்வியையும் பெருக்கிக்கொண்டு, தமிழ் இலக்கண இலக்கியங்களைச் செம்மையாய்க் கற்றுணர்ந்தார். கலைசைச் சிலேடை வெண்பா பயின்ற இவர், இராசைச் சிலேடை இயற்றி வந்தார். ஆயினும் இந்நூல் பல இடையூறுகள் காரணமாக முற்றுப்பெறவில்லை.

ஆசிரியர் தாம் பயின்ற மும்மொழியுள்ளும் அணி களையும் சிலேடைகளையுமே பெரிதும் விரும்பினர். சித்திரக் கவிகளையும் அவ்வாறே விரும்பினர். ஒரு நாள் இவர், இராகவ பாண்டவீயம் என்ற தெலுங்கு சிலேடைக்காவி யத்தைக் கண்ணுற்றார். அன்றுமுதலே நுணுகி ஆய்ந்து தமிழில் சிலேடைக் கவிதைகளாக அவற்றைப் புனைவதில் மிக்க ஆர்வங்கொண்டார். பின்னர் அவ்வூர் சாமியார் வரதய்ய செட்டியார் அவர்களுக்கு இராகவ பாண்டவீயத் தைக் கற்பித்தார். அதன்பின், 'வித்தியாபிவிருத்திசங்கம்' ஏற்படுத்தினர். இச்சங்கம் ஏற்பட்டு இருபதாண்டுகளுக்குப் பின்பு 'கலைவளர்ச்சிக் கழகம்' என்னும் பெயருடன் விளங்கி வருகிறது.

ஆசிரியருக்கு முதலில் ஓர் பெண் மகவும், பின்ன ரோர் ஆண் மகவும் தோன்றின. இவர்தம் முப்பதாண்டின் எல்லையில் மனைவியை யிழந்தார். அதன்பின் மறுமணத் தைப்பற்றிச்சிந்திக்கவில்லை. இறைவன் இவர் கனவில் தோன்றி, 'இரவிச மரபினர் காதை' யை இயற்றக் கட்டளையிட்டனன் போலும்! இதன் பாயிரத்தில்,

இராகவ பாண்டவீய மெனுநெடுங் காப்பி யத்தைத்
தராதல மிலகும் வண்ணஞ் சாற்றுக மகிழ்வ னென்றே
ரிராக்கன விடைப்போந் தீச னியம்பவாய்ந் துடல்சிலிர்த்தப்
பராபரன் றிருநா மத்தைப் பன்முறை நினைந்து மாதோ!

என இயம்புகின்றார். இவர் 1932 ஆம் ஆண்டில் ஆரம் பித்த இந்நூலை, பல இடையூறு காரணமாக 1938 ஆம் ஆண்டு நிறைவேற்ற நேர்ந்தது.

ஆசிரியர் தான் நூலைச் செம்மையாக இயற்றி விட்டோம் என்ற மனநிறைவுடன் சித்திபானு ஆண்டு புரட்டாசி மாதம் 11-ஆம் நாள் (27-9-1942) ஞாயிற்றுக்

கிழமை இவ்வையக வாழ்வு நீத்து இறைவன் திருவடி சேர்ந்தார்.

இரவீச மரபினர் காதை மிக்க நயம் வாய்ந்தது. மூல நூலாசிரியர் தம் நூலுக்கு வைத்த பெயரில் சிலேடையில்லை. ஆனால் நம் புலவர்பெருமான் இயற்றிய நூலின் பெயர் இருபொருள் தந்து சொல்லின்பம் பயக்கின்றது. இந் நூல், 'இரவு + ஈசன்' = சந்திரன் என்னும் பொருள் கொண்டு சந்திரன் மரபினரான பாண்டவர் கதை-(பாரதம்) எனவும், இரவி + ஈசன் = சூரியன் எனப்பொருள் கொண்டு சூரியகுலத்தவரான இராமகாதை (இராமாயணம்) எனவும் இரு பொருள் கொள்ளக்கிடக்கின்றது.

இரவீச மரபினர் கானக பாயிரமுட்பட எழுநூறு விருத்தப்பாக்கள் கொண்டது. தமிழ் மரபிற்கேற்ப நாட்டுப் படலம், நகரப் படலம் உள்ளன தெலுங்கு நூல் மரபிற்கிணங்க ஆசிரியர் தம் குலம், கோத்திரம், சூத்திரம். பாட்டன் பாட்டி, தாய் தந்தை. உடன் பிறந்தார் ஆகியனவும் தன் பெயர், புலமை ஆகியவற்றையும் பாயிரத்திலமைத்திருக்கிறார். கடவுள் வணக்கப் பாடலிலிருந்து ஆசிரியர் சைவவைணவ வேறுபாடில்லாதவரெனத் தெளியலாம்

இந்நூல் இயற்றத் தொடங்கியது முதல் இறுதி வரையில் இதனை ஏடுபடுத்திவைக்கும் பணியில் ஆசிரியர் என்னை ஈடுபடுத்தியதோடு இதற்கொரு குறிப்புரையும் எழுதி வைக்குமாறு பணித்தார். அவரது கட்டளையை யேற்று என் சிற்றறிவுக்கு எட்டியவகையில் இதன் முதல் நூலை ஆதாரமாகக்கொண்டு விளக்கவுரை குறிக்கலானேன்.

இந் நூலை அச்சிட்டு புத்தக வடிவமாக்கிக் காண வேண்டுமென்று ஆசிரியரோடு நாங்கள் செய்த முயற்சி அப்பொழுது கைகூடவில்லை. ஆசிரியர் மறைந்த பல ஆண்டுகளுக்கப்பால், ஓர் பெரிய வள்ளல் பெருமானின் உதவியால் இந் நூல் இப்போது புத்தக வடிவமாக வெளி வருகின்றது. இக்கொடைவள்ளல் திருச்சிராப்பள்ளியில் வாழ்பவர்; பெருந்தகையர்; செல்வமிக்கவர்; கல்வி கேள்வி களில் ஈடுபாடுடையவர்; சென்னை ஆட்சி மன்றத்தின் உறுப்பினர்; போக்குவரத்துத் தாமியங்கி வண்டிகளின் அதிபர்; திரு. R. கிருஷ்ணசாமி ரெட்டியாரென்னும் திருநாம முடையவர். இப்பெரியார் இந் நூல் வெளிவருவதற்கு நிறைந்த பொருள் கொடுத்துதவினர்கள். இதற்குக் காரணமாக இருந்தவர்கள் என் அன்பிற்கும் மதிப்புக்கும் உரிபவர்களான வித்துவான் சிரஞ்சீவி மு. இராமசாமி ரெட்டியார் அவர்களும், வித்துவான் சிரஞ்சீவி ப. சுந்தரராச ரெட்டியார் அவர்களும், வித்துவான் சிறஞ்சீவி S.K இராம ராச ரெட்டியார் அவர்களும் ஆவார்கள்

இந் நூல் வெளிவருவதற்கு முக்கிய காரணமான வரும், தனித்துப் பொருளுதவி புரிந்தவரும், தமிழார்வ மிக்கவருமாகிய திருவாளர் R. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் இராமபிரானது அருளுக்கும், கண்ணபிரானது கருணைக்கும் பாத்திரராகிக் குன்றாப் பெருஞ் செல்வமும், நீண்ட ஆயுளும், நோயற்ற வாழ்வும், சீரும், சிறப்பும், பேரும், பெருமையும் வாய்ந்து திகழவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

இந்நூல் வெளிவருவதற்குப் பலவிதத்தால் உதவி புரிந்த அன்பர்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

பிழை பார்த்துதவிய வித்துவான். சிரஞ்சீவி பெ. சண்முகம் அவர்கட்கும், வித்துவான். சிரஞ்சீவி. N குப்புரத்தினம் அவர்கட்கும், இந்நூலை அழகாக அச்சிட்டுத் தந்த கருணாநிதி பிரஸ் அதிபர் திரு. குமரேசன் அவர்கட்கும் திருமகள் கொழுநன் திருவருள்வழங்குமாறு பிரார்த்திக்கின்றேன் அடியேனை இந்த உயரிய தொண்டில் ஈடுபடுத்திய எல்லாம்வல்ல இறைவன் திருவருளை மன மொழி மெய்களால் வழுத்துகிறேன்.

இங்ஙனம்,

இராசிபுரம்,
12—6—64.

ஆ. இராமசாமி அய்யா,
திருவேங்கட விலாஸ்.

பொருளடக்கம்

பொருள்	பக்கம்
1. பாயிரம்	1
2. நாட்டுச் சிறப்பு	15
3. நகரச் சிறப்பு	19
4. அரசியற் சிறப்பு	29
5. மாதிரவென்றி	35
6. வேட்டை இயல்	42
7. மன்னன் சாபமுறுதல்	53
8. மக்களில்லாக்குறையிரத்தல்	61
9. மக்கள் தோன்றும் மாண்பிற்கு உவத்தல் ...	69
10. இரவீச மரபின் மக்கள் தோற்றம் ...	79
11. மக்களின் மாட்சி	86
12. வசந்தகால வளப்பம்	88
13. மந்தமாருத மாண்பு	89
14. தந்தையைப் பிரிந்த தனயரின் நிலைமை ...	101
15. பகைத் தகர்ப்பு	109
16. குருகுலவாசம்	117
17. நல்லோர் துணையால் நலிவு தீர்தல் ...	128
18. காதல் கருத்து	137
19. மன்றலை நாடும் மாண்பு	143
20. தேவியின் நிலை	147
21. விரக வேதனை	149
22. மதியுதய வருணனை	151
23. மணம் நாடிய மன்னர்	152
24. கார்முகத் தகர்ப்பு	154
25. மன்றல் மாட்சி	156

ஓம்

கம்பன் புகழ் வாழ்க! கன்னித் தமிழ் வாழ்க

பாயிரம்.

காஞ்சமலர்த் தேவியொளிர் மார்பன் தெய்வக்
கவின் வாய்ந்த பொன்வரதன் கரஞ்சேராழி
விஞ்சியநல் வெயில் காட்டக் கைலை நாதன்
விரிசடையார் திங்களிள நிலவு காட்டச்
செஞ்சவே யழகுபெறு மிராசையின் கண்
தென்னாடு புரிந்ததவ வடிவே போலக்
கொஞ்சுநறுந் தமிழ்வளர விஸ்வ கர்ம
குலத்தினிலே மாரய்ய னவத ரித்தான்

வண்ணமுறு மிளம்பிறைபோல் வளர்ந்தான்; தேர்ந்து
வடமொழியும் ஆந்திரமுந் தமிழுங் கற்றான்;
கண்ணனைய அன்பருளம் உவப்பின் மூழ்கக்
கவின் வாய்ந்த இரவீச மரபோர் காதை
தண்ணமுதாய் இசைத்திட்டான்: அதனைநோக்கித்
தனியமிழ்தும் தலைகுனிந்த; தறிஞர் எல்லாம்
எண்ணியதைப் பயின்று பெரு மிதத்தைப் பெற்றார்
ஈடற்ற பேரின்ப வாழ்வையுற்றார்.

அத்தகைய நன்னூற்கு ஞாலம் போற்றும்
அச்சுதனே மறவாதான்; சீலம் மிக்கான்;
வித்தகன்நற் பண்புடையான்; இராமசாமி
வேள் எழிலார் உறைவகுத்தான்:பூமியுள்ளே
வைத்திருந்த புதையலினைப் பெற்றோர் போல
மாகலைஞர் பூரித்தார்; இந்நம்பிக்குப்
பத்தியுடன் தலைவணங்கிப் பணிவ தல்லால்
பாரினிலே கைம்மாறு செயவல் லோமோ!

பொய்ம்மயக்கில் மறைப்புண்ட ஆன்மா வைப்போல்
பொழிவின்றிச் சுவடிக்குள் மறைந்து நின்ற
இம்மகா காவியத்தை யச்சில் ஏற்றி
இயலறிஞர் உள்ளத்தில் உலவும் வண்ணம்
நன்மையா ரருள் புரிந்தோன்; வேங்கடத்து
நாயகனை மறவாத அன்பன் பண்பன்
செம்மைசேர் நாமக்கல் பாங்கர் ஓங்கும்
சீர்சான்ற நல்லிநகர் சிறக்க வந்தோன்.

மன்னுபுகழ் அமைச்சர்கள்தம் மதிப்பைப் பெற்றோன்;
வரையாமற் பொருள் வழங்கும் வன்மைகோன்
பன்னரிய அறநிலையக் காவ லாளன்;
பண்புடனே நூலகத்தை யாட்சி செய்வோன்
தன்னிகரில் பண்டகுல திலக மொப்பான்;
தகவார்ந்த வள்ளல்கள்தம் மரபைக் காப்போன்
நன்னயமார் தில்லைநகர் விளக்கம் போல்வான்
நலம்வாய்ந்த திரு-கிருஷ்ணசாமி யம்மா!

மங்கமாய் மாரய்யன் ஞாலம் போற்றும்
மாண்புடைய கலைசெல்வி தன்னை பெற்றான்;
துங்கமுற வளர்திட்டான் இராம சாமித்
தோன்றல்; உயர் கிருட்டினவேள் பரிவினோடு
நங்கையெழிற் பொலிவெய்த மலரைச் சூட்டி
நலம்வாய்ந்த ஆபரணம் பலவும் பூட்டிச்
செங்கயல்நேர் விழிகளிலே மையைத் தீட்டிச்
சீரறிஞர் உள்ளத்தில் ஆர்வமூட்டி

பொங்கியநற் பரிவுடனே யலங்கரித்துப்
பொலிவார்ந்த அரங்கத்தில் உலவச் செய்தான்
துங்கமுறு கலைஞர்களே! வம்மின்! வம்மின்!
சுந்தரியின் இருநோக்கத் தெழிலைக் காண்மின்!
பங்கமிலா அவள்பதத்தில் நீவீர் நோற்ற
பழந்தவத்தைக் காணிக்கை யாக வைம்மின்!
கங்கைநிகர் பேரழகில் உங்கள் நெஞ்சக்
கயல்பிறழச் செய்திடுமின் வாழ்வீர்! வாழ்வீர்!

இங்கனம்,

S. K. இராமராசன்

'கம்பராமன்'

கம்ப நிலையம்
வேலூர் (சேலம்)
12—6—64

ஓம்

திருமகள் கேள்வன் திருவடி துணை.

இரவீச மரபினர் காதை

என்னும்

இராமாயண, பாரதச் சிலேடைக் காப்பியம்

பாயிரம்

அவதாரிகை:- இருபேரிதிகாசங்களை யிணைத்து ஒவ்வொரு கவியிலும் இராமாயணக் கதைப் பொருளும், பாரதக் கதைப் பொருளும் அமையும்படி சிலேடையாகக் காப்பிய மியற்றப் புகுந்த ஆசிரியர் தாம் துவக்கிய காரியம் முட்டின்றி முடியும் பொருட்டு திருமால், சிவபிரான் ஆகிய இருமூர்த்திகளையும் சிலேடையில் அமைத்துத் துதிக்கிருர்.

அரி, அரன் துதி

முழுமுதற் கடவுளாகி முச்சுடர் மேவிப் பூஞ்சீர்
தழுவுநற் கலையிஞேடு தகுமரும் பணிமா மாலை
வழுவறத் தரிக்குமேக வடிவுதி கழுமா காந்தன்
செழுமலர்த் தாளெஞ்ஞான்றும் சிந்தனை செய்து வாழ்வாம்.

அரி:–முழுமுதற் கடவுள் = உலகம் முழுவதும் தோன்றுதற்கு மூலகாரணமாக விளங்கும் பரம்பொருள். முச்சுடர் = மூன்று சுடர், (அதாவது, சூரியன், சந்திரன், அக்கினி என்ற பூதம்) பூம், சீர், தழுவும், நல், கலை = ஆடை, (பீதாம்பரம் என்பதாம்) தகும் = தனக்கே தகுந்ததாகி, அரும்பு = மல்லிகை துளபம் முதலியவற்ருல், அணி = அழகு செய்யப்பட்டு விளங்கும், மா, மாலை = பெருமையுடைய தொடை, தரிக்கும் = அணிந்து கொண்டுள்ளவனும், மேகவடிவு = நீலமேகம் போன்ற சியாமளவர்ணம், திகழும் மா = திருமகளுடைய, காந்தன் = நாயகன், செழுமலர்த்தாள் = அழகிய தாமரைபோன்ற திருவடிகளை, சிந்தனை செய்து வாழ்வாம்.

அரன்:- முழுமுதற் கடவுள், கீழ்க்கூறப்பட்ட பொருளே இதற்கும் குறிப்பிடுக, முச்சுடர்-மூன்று கண்கள், நல்=நல்ல தாகிய, கலை=மான்=மழுவு. தகும்=தனக்கே தகுந்து விளங்குகிறது, அரும்=பிறரால் ஏற்கமுடியாததுமான, பணி=பாம்புகளையே, மா=பெருமையுடைய மாலை=மலர்மாலை யென்னும்படி, தரிக்கும்=அணிந்து விளங்கும்படி யானவனும். ஏகவடிவு=அவதாரம் முதலானவையின்றி ஒன்றேயான, (அல்லது நிகரற்று விளங்கும்) வடிவர், திகழும், உமா காந்தன்=பார்வதீ பதி. பிற. இருதரத்துக்கும் சமம்.

அவதரிகை:- கீழ்ச் செய்யுளில் பிரதிபாதிக்கப்பட்ட மூர்த்திகளின் தேவிகளை வழிபடுவதனுலாகும் பயனைப் புகல்கிருர்

அலை மலைமகள் வணக்கம்

கலைமரை நோக்குமந்த காசவதனமும் பூங்கன்
னலைநிகர் புயமுநேர்மை நண்ணுமென் மொழியுமேவு
மலைமக ளடியார்க்கின்ப மருளுமா மடந்தைசேவை
நிலைபெறும் வென்றிசெல்வம் நிலத்தினி தீந்துகாக்கும்

அலைமகள்:- கலைமரை நோக்கும், மந்தகாச வதனமும், பூம், கன்னலை நிகர் புயமும், மொழியும், மேவும்+அலைமகள்= மேவுமலைமகள்=கடலிற்பிறந்த திருமகள் என்றபடி, இன்பம், அருளும்+மா=அருளுமா=கொடுக்கக்கூடிய இலக்குமி யென்னும், மடந்தை=தெய்வப்பெண், பிற எளிது.

மலைமகள்:- மேவும்+மலைமகள்=மேவு மலைமகள்=மலை அரசன் புத்திரி (பார்வதிதேவி யென்பதாம்) இன்பம், அருள்+ உமா=அருளுமா=கொடுக்கக்கூடிய உமாதேவி, பிற இருதரத்துக்கும் பொதுவாம்.

அவதாரிகை:- அவர்தம் மைந்தர் வணக்கத்தாலாகும் பயன் கூறப்படுகிறது.

அயன், தும்பிமுகன், துதி

பங்கய நறும்போதன்ன பதமமைந் திலகுந்தேவப்
புங்கவ னருண்மாமாரி பொழிந்துநீத் தவரைக்காக்கு
மங்குசா யுதந்தன்செங்கை யணிந்தநான் முகன்றுட்சிந்தை
நங்குறை யனைத்தும்போக்கி நலிவுறு வாழ்வைநல்கும்.

அயன் துதி:- பங்கயநறும்போது = தாமரை என்னும் மணம் உள்ள மலர் அன்னம் = அன்னப்பறவை(கடைக்குறை)தாமரையின் பேரிலும், அன்னத்தின் முதுகின்மீதும், அமைந்து இலகும், பதம் = பாதங்களையுடைய, தேவப்புங்கவன் = தேவர்களிற் சிறந்தவன் (பிரம்மன் என்பதாம்) நீத்தவர் = துறவிகள், அம் + குச + ஆயுதம் = அங்குசாயுதம், அழகிய தருப்பைப் புல்லையே படையாக உடையவன் குச + ஆயுதம் = குசாயுதம், வடமொழிச்சந்தி. நான்முகன் = சதுர்முகன். பிற எளிது.

தும்பிமுகன் துதி:- பங்கயநறும்போது அன்ன = தாமரை மலரைப் போன்ற. (அன்ன; உவமையுருபு) நீத்தவர் = துறவிகள், திக்கற்றவர் முதலியோர். அங்குச + ஆயுதம் = அங்குசம் என்றும் ஆயுதம், நால் + முகன் = நான்முகன், அதாவது தொங்குகின்ற வாயிதழையுடையவன், (கணபதி என்பதாம்) பிற இரண்டுக்கும் பொது.

அவதாரிகை:- பிரம்மா, கணபதி ஆகியவர்களின் தேவிகளைத் துதிப்பதருளாகும் பயன் கூறப்படுகிறது.

பாரதி, வல்லபை துதி

சீரிய கலைகளார்ந்த செல்விசெங் கமலபாணி
வாரிச முகத்தைமேவும் வல்லபி யுரகவேணி
பாரதி யெழில் பெற்றோங்கும்பைங்கிளி யமுதவாணி
பேரருந் துதிசொல்வன்மை பேணிபா ரிலங்கச்செய்யும்.

பாரதி துதி:- கலைகள் = வேதங்கள். ஆர்ந்த செல்வி = தனக்கு அணியாக நிறைந்து விளங்கும் தேவி, வாரிசமுகம் = தாமரையை யொத்தமுகம், வாரிச என்பதை வாரிசன் என்றதன்

கடைக்குறையாகக் கொண்டு பிரம்மா என்று பொருள் கொள்ளு மிடத்து முகத்தை, மேவுர், வல்லபி, முகம்=வாய் (வடமொழி) இலக்கணையால் "நாக்கு" என்பதாம். அதாவது, பிரம்மாவின் நாவை இருப்பிடமாகவுடையதிறத்தாள் எனக் கொள்ளுதலும் பொருந்தும். உரகவேணி=பாம்புபோன்ற நீண்ட மயிர்ப்பின்னலை யுடையவள். பாரதி=நாமகள்=சரஸ்வதி அமுதவாணி= இனிமையாக வாக்குடையவள், பேர்+அரும்+துதி=துதியானது சொல்வன்மை பேணி இலங்கச்செய்யும்.

வல்லபை துதி:- சீரிய கலைகள்=அழகிய ஆடைகள், வல்லபி=வல்லபை யென்னும் பெயருடைய தேவி, பார்+அதி= பாரதி பார்=உலகத்தில், அதி=மிகுந்த எழில் பெற்று ஓங்கும் பைங்கிளி=பசுமையான கிளிமொழியைப் போல் பேசுந்தன்மை வாய்ந்த அமுதவாணி=இனிய சொல்லையுடையவள். பிறகு பொது, எளிது.

அவதாரிகை:- அரி அரன் ஆகியவர்களுடைய இளைய குமாரர்களைத் துதிப்பதனலாகும் பயன் கூறப்படுகிறது

வேள், முருகன் துதி

நிகழுமெய்ஞ் ஞானவாழ்வி னிலைவழுவா தெஞ்ஞான்று
மகிழகம் பங்கயன்சீர் மருவிய சத்திமேவித்
திகழுமங் கயனுதாரன் செழுந்திரு விளங்குமாரன்
புகழுறு நினைவுமாண்பும் பொலிவுமீந் தாதரிக்கும்

வேள் துதி:- மெய்நிகழும்=உடல்கள் தோன்றுவதற்குரிய, ஞான=அறிவோடு கூடிய, வாழ்வின் நிலை=சீவர்களுடைய சிற்றின்பமென்னும் வாழ்வினுடைய நிலையைக்கண்டே, மகிழத் தக்க, ஆக,+பங்கயன்=உள்ளக் கமலத்தையுடையவன். (எல்லா சீவர்களையும் சிற்றின்பத்திலாழ்த்தி மகிழ்பவன் என்பதாம்) சீர்=அழகு,மருவிய,சத்திமேவி=சீவர்களின் தேகவலிமையையே இடமாகக்கொண்டு, திகழும்=விளங்கும்படி யானவனும், அங்கயன்=மன்மதன், அங்கஜ=என்றும் வடசொல்லின் சிதைவு அங்கயன், உதாரன்=சீவர்களைக் காமத்திலாழ்த்தியபோதிலும்

தான் அதில் பற்றில்லாதவன். செழும்=மிக்க அழகுவாய்ந்த, திரு=திருமகளுடைய இளங்குமாரன்=இளைய புதல்வன். திருமாலின் நாபிக்கமலத்திற்றோன்றிய நான்முகன் மூத்த பிள்ளையாகவும், மன்மதன் இளைய புதல்வனாகவும் வருணிக்கப்பட்டபோது திருமகளுக்கும் அவ்விருவரும் மைந்தர்களேயாமென்பது கருத்ததக்கது. புகழுறும் நினைவு= இவ்வாறுய புகழ்வாய்ந்த மன்மதனுடைய சிந்தனையானது மாண்பும், பொலிவும் ஈந்து ஆதரிக்கும் என்பதாம். செழும்+ திருவிளங்குமாரன், என்பதனை செழும்=மிகப்பொலிவோடு கூடியும், திரு=இணையற்ற அழகுடனும், விளங்கும்= பொலிபவனுகிய, மாரன்=மன்மதன் எனினும் ஒக்கும்.

முருகன் துதி:- நிகழும்=சாஸ்வதமாகவுள்ள,மெய்ஞ்ஞான வாழ்வின் நிலை=பேரின்பத்திற்குரிய உண்மையான ஞான வாழ்க்கையின் நிலைமையினின்று, வழுவாது=பிறழாமல், மகிழ்= ஆனந்திக்கும், அகப்பங்கயன்=உள்ளக் கமலமுடையவன், (பேரின்ப நாட்டமுடைய ஞானகாரியன் என்பதாம்) சீர்மருவிய= அழகிய, சத்தி=சத்தியென்னும் வேலாயுத்தை, மேவி=பொருந்தி திகழும்படியான அம்+கயன்=அங்கயன்,=அழகிய கரம் உடையவன், உதாரன்=தாக்கற்றவன் அல்லது பற்றற்றவன். செழும், திரு=அழகும், இளம்=இளமையும் வாய்ந்த குமாரன்= குமாரக் கடவுள், முருகபிரான் என்பதாம். பிறபொது.

அவதாரிகை:- மன்மதனுடைய தேவியாகிய, இரதியினுடையவும், முருகனுடைய தேவிகளாகிய தெய்வயானை, வள்ளியம்மை யாகியவர்களினுடையவும் சிந்தனையினலாகும் பயன் கூறப்படுகிறது.

இரதி, சுரகுஞ்சரி, வள்ளியம்மைகளின் துதி

மெய்பவ விருத்திநேர்மை மேவுமித் தரையின் மீதி
யைபவர்க் களிக்குந் தெய்வ யானையி னடையாள் தூய
வைபவ ரதிவிவேக வள்ளியங் கோதை சிந்த
னைபவ ரோகநீக்கி நன்மையுஞ் சிறப்புஞ் சேர்க்கும்.

இரதியின் துதி:- இங்கு இரதியென்பது "ரதி" என்றும் வடசொல்லின் திரிபு, "ரதி" என்பதற்கு சிற்றின்ப விருப்பம் என்று பொருள். அதற்குரிய தேவதை. இரதி எனப்பட்டாள். இவள் மன்மதனுடைய மனைவியாம்

மெய்=உடல்கள் பல=பிறப்பதற்குரிய, விருத்தி=செய்கையினது, நேர்மையை, இத்தரையின்மீது, இயைபவர்க்கு=காப்பவர்களுக்கு, அளிக்கும் தெய்வம். (மக்கட்பேறு வேண்டுபவர்க்கு சிற்றின்பத்தில் விருப்பமுண்டாக்குந் தெய்வமென்பதாம்) யானையின் நடையாள்=யானை நடைபோன்ற கம்பீரமான நடையையுடையவள். தூய, வைபவம்=பெருமைவாய்தவள், ரதி=இரதியென்னும் பெயருடையவள். விவேகவள்ளி=அறிவுப்பிரகாசமுடையவள். அல்லது ஞானவளம் உடையவள் என்பதாம். வள்=வளம், வலி, நெருக்கும் முதலியன. அம்=அழகிய, கோதை=பெண்ணாகிய தெய்வம். சிந்தனையானது, பவரோகம்=பறவிப்பிணி.

சுரகுஞ்சரி துதி:- நேர்மைமேவும் இத்தரையின்மீது. மெய்பவவிருத்தி இயைபவர்க்கு=மெய்=சத்தியத்தன்மை, பவ=தோன்றி. விருத்தி=அந்த வளர்ச்சியையே, இயைபவர்க்கு=அடையவேண்டுபவர்க்கு, (அதாவது ஆத்ம, அனாத்மாக்களைப் பகுத்தறிந்து சத்தியத்தன்மையுடைய ஆத்மீகஞான வளர்ச்சியை அடைய விருப்பமுடையவர்களுக்கு என்பதாம்) அளிக்கும்=அந்த ஆத்ம ஞானத்தையருளக்கூடிய, தெய்வயானை=தெய்வயானையென்னும் திருநாமமுடைய பிராட்டி. முருகப்பிரானுடைய தேவி. தெய்வயானை எனினும் சுரகுஞ்சரி எனினும் ஒன்றேயாம். இன் = கண்ணுக்கு இனிய அல்லது, அழகிய, நடையாள்=நடையையுடையவள், தூய வைபவ, தூய=களங்கமற்ற அதாவது மாயையென்னும் மாசற்ற என்பதாம். வைபவம்=செல்வம்=ஞானமாகிய அழியாச் செல்வத்திலேயே. ரதி=மிக்க விருப்பமுடையவள். (ஞானப்பிழம்பாகிய முருகப்பிரானிடத்தே அளவற்ற விருப்பமுடையவள் என்பதாம்) விவேக=ஆத்ம அனாத்மாக்களைப் பகுத்தறியும் தன்மையினையே, வள்ளி=ஆபரணமாகவுடையவள், பிற எளிது, பொது.

வள்ளியம்மை துதி:- மெய்=உடல்களினுல், பவ=ஏற்படக்கூடிய விருத்தி=தொழில்களினுடைய, நேர்மை = ஒழுங்கினை, இயைபவர்க்கு=அடைய விருப்பமுடையார்க்கு (கிருஷித்தொழில் அல்லது விவசாயத்தொழிலில் விருப்பமுடையவர்களுக்கு) அளிக்கும் தெய்வம்=அத்தொழிலில் விருப்பத்தையும், பயனையும் கொடுக்கக்கூடிய தெய்வம், தெய்வயானை=ஐராவதமென்னும் தேவலோகத்து யானையானது, மேவும்=பொருந்தியுள்ள, இன்= அழகான நடையாள்=நடையைப்போன்ற நடையையுடையவள். தூய=பரிசுத்தமான, அதாவது சுய உழைப்பினுலாகிய, வைபவ= செல்வத்திலேயே, ரதி=இச்சையுடையவள். (சுயமாகக் கிருஷித் தொழில் செய்து அர்ப்பணம் பண்ணும் நைவேத்தியத்திலேயே விருப்பமுடையவள் என்பதாம்) விவேக=அறிவுப் பெருக்குடைய வள்ளி=வள்ளிநாயகி; பிற எளிது.

அவதாரிகை:- இச்செய்யுளில் திருமாலின் ஊர்தியாகிய கருடனையும், சிவபிராது வாகனமாகிய நந்திகேசுரனையும் வழி படுவதனுலாகும் பயன் பகரப்படுகிறது.

புள். ஏற்றிறைவன் வணக்கம்

இந்திரன் முதலோ ரேத்து மெழில்மிகு சரணும் போய
னந்திசை வன்னெடுஞ் சீர் நற்கள மமைந்தோன் றூயன்
செந்திரு வைந தேயன் றிருப்பணி மடமை நீத்துப்
புந்தியி லறிவு மாற்றல் பூமிசை யுவந்த ளிக்கும்.

புள்ளிறைவன்:- சரண + அம்போயன் = சரணும்போயன் (வடமொழிச் சந்தி) அம்போஜன் என்பது அம்போயன் எனத் திரிந்தது. அம்போஜன்=தாமரையுடையவள், (தாமரை மலரைப் போன்ற பாதங்களையுடையவன் என்பதாம்) அன்றியும் சரணம்= பாதங்களாவை, அம்பு=அம்புகளைப்போன்றுநீண்ட விரல்களோடு கூடிய ஓயன்=ஓஜன்=காந்தியையுடையவன். எனினும் ஒக்கும் ஓஜஃ என்பது ஒளி காந்தி எனப் பொருள்படும்; அதாவது நீண்ட விரல்களும் அதிலமைந்துள்ள நகங்களும் கூரிய அம்புகளை யொத்தனவாயுள்ளன என்பதாம்; நந்து=சங்கு, இசை=போன்ற, வல், நெடும், சீர்=அழகிய நல்களம்=நல்ல கழுத்தினை. அமைந் தோன்=உடையவன் தூயன்=புண்ணியமே வடிவானவன்,

செம்+திரு=செவ்விய அழகுடையவனுகிய, வைநதேயன்= கருடன், விந்தையன் புதல்வன் ஆனதால் வைநதேயன் எனப் பட்டான், (தத்திதாந்தம்) பிற எளிது.

ஏற்றிறைவன்:- சரணும்போயன்=தாமரையை யொத்த அழகிய மாதங்களையுடையவன், நந்தி=நந்திகேசுவரன், சைவன்=சிவ பிரானுக்கே அடிமை செய்பவன், நெடும்=கனத்த சீர்=அழகான, நற்களம்=நல்ல கழுத்தினை, அமைந்தோன், தூயன்=வெண்ணிற மும், புண்ணியமும் உடையவன், செம்+திரு=களங்கமற்றதும், அழகுடையதுமான, ஐ ந=இனன் சம்பந்தமான, (சூரியனைப் போன்ற என்பதாம்) தேயன்=தேஜஸ், உடையவன்=ஒளி பொருந்தியவன் என்பதாம்; பிற பொது, எளிது. இங்கு, கருடன் இடபம் இவர்களின் பாதங்கள் தாமரை மலர் போன்றவையென வருணிக்கப்பட்டிருப்பது அவர்கள் முறையே திருமால், சிவபிரான் ஆகியவர்களின் முதன்மையான அடியார்களானபடியால் விலங்கு இனத்தினின்றும் மாறி சிறப்புற்று தேவத்தன்மை பொருந்தியவர் களாயிருந்தபடியா லென்க.

அவதாரிகை:- இச்செய்யுளில் திருமாலடியாராகிய அனு மானையும், உருத்திராம்சம்பொருந்திய வீரபத்திரனையும் இணைத்துத் துதிக்கிருர்.

அனுமான், வீரபத்திரன் துதி

மித்திர னெடும்போர் வென்று விளங்குமுக் கிரச்சொ ரூபன்
சத்தியப் பிரதா பன்றூய் சரித்திரன் றிகழும் வீர
பத்திர னசுர யுத்தோ பாயனவ் வராஞ்சு நேயன்
பத்திவல் லமையுஞ் சீரும் பார்மிசை யினிதுண் டாக்கும்.

அனுமான்:- மித்திரன் நெடும் போர்வென்று, விளங்கும், உக்கிரசொருபன்=அனுமான் குழந்தைப் பருவத்தில் செஞ் சூரியனைப் பார்த்தவுடன் அதை உண்ணக்கூடிய கனியெனக் கருதி மேலேதாவிக் கவ்வியபோது இந்திரனுடைய வச்சிரப் படையால் தாடையில் அடிபெற்றும் பொன்ருதுமிக்க பயங்கர மான தோற்றத்தோடு மீண்டு விளங்கியவன் என்பதாம். மித்திரன் =சூரியன், உக்கிரம்=பயங்கரம், சத்திய=அழியாத,

பிரதாபன்=வலிய புகழுடையவன், தூய்=தூய்மையான, (அற வழியிலேயே என்பதாம்) சரித்திரன்=நடத்தையுடையவன், சரிதம்=நடத்தை. (வடசொல்) வீர=ஆண்மையையே, பத்திரன் =தனக்குரிய நன்னலமாகக் கொண்டவன். பத்திரம்=க்ஷேமம். (வடமொழி) அசுர, யுத்த+உபாயன் யுத்தோபாயன், (வடமொழிச் சந்தி) அசுரர்களோடு போர்புரியும் வழிகளையெல்லாம் நன்கறிந்தவன் என்பதாம். அ=அப்படிப்பட்ட, வர=மேன்மை பொருந்திய, ஆஞ்சநேயன்=அனுமான், அஞ்சனாதேவியின் புதல்வன் ஆதலால் ஆஞ்சநேயன் எனப்பட்டான் (தத்திதாந்தம்) பத்தி = அவன்பேரில் கொள்ளும் பக்தியானது, பார்மிசை, வல்லமையும், சீரும் உண்டாக்கும்.

வீரபத்திரன்:- மித்திரன்=தனக்கு நெருங்கிய சுற்றத்தானாகிய தக்ஷப்பிரஜாபதியினுடைய வேள்வியில் ஏற்பட்ட, நெடும்போர்வென்று=பெரிய யுத்தத்தில் வெற்றி பெற்று, விளங்குபவனாகிய, உக்கிரமான, சொரூபன்=தோற்றத்தை உடையவன் சத்தியப்பிரதாபனும், தூய் சரித்திரனும், ஆக திகழும்படியான, வீரபத்திரன் = வீரபத்திரக் கடவுள். அசுர, யுத்த உபாயனும், அ=அந்த தன்மைப்போருக்கு ஏவியவனாகிய, அர=உருத்திரமூர்த்தியினுடைய, அஞ்ச=அமிசமுடைய; அம்ஸம் என்பது அஞ்சம் எனத்திரிந்தது, நேயன்=பக்தர்களுக்கு நேசமுடையவன். ஹராம்ஸநேய: என்பது அராஞ்ச நேயன் எனத்திரிந்தது. பிற பொது.

அவதாரிகை:- ஆசிரியர் தாம் கொண்ட சிந்தனையையும், தாம் இன்னாரென்பதையும் நூல் தோன்றுவதற்குரிய காரணத்தையும், நூலுக்கு ஆதாரமான விடத்தையும் இது முதல் ஐந்து கவிகளால் விளக்குகிறார்.

எனநிலத் தெழுந்தருள் வாய்ந் திலகுதெய் வங்களின்னருள்
விநயபத்தியினே டேத்தி விளங்குமி ராசை தன்னில்
நினைவுறில் காலை மாலை நெடுங்கவித் திரளெந் நூலை
தனதரு மனப்பூஞ் சோலை தழைக்கு மென்றுணருங்காலை.

உரை:- பொது எளிது உண்டாக்கும், என என்று கீழ்ச்செய்யுளோடு தொடர்பு. காலை மாலை எந்நாலை நினைவுறில் நெடுங்கவித்திரள் தனது அரும் மனப்பூஞ்சோலை தழைக்கும் என்று அன்வயம், உணரும்காலை என்பதனை அடுத்த செய்யுளில் கூறப்பட்ட சேயன் உணருங்காலை என்று கூட்டுக.

விற்பனர் மகிழ்ந்து போற்றும் விசுவகுலத்தன் பாரில்
நற்புக முறுமேல் கோட்டை நரசிம்மாச் சாரிபேரன்
கற்பனைச் சத்தி வாய்ந்த கவிவரன் முனியாச்சாரி
பொற்புறு மனைவியாம் புட்டம்மை பாற்போந்த சேயன்.

குறிப்பு:- குலம் வெளிப்படை, மேல் கோட்டை என்னும் ஊர் இஃது மைசூர் இராச்சியத்தில் உள்ளது. இங்கு 'கவிவரன் முனியாச்சாரி' என்பதனால் நூலாசிரியருடைய தந்தையாரும் தெலுங்கு வடமொழிகளில் சிறந்த புலவர் என்பதும் அறியத்தக்கது. பிற எளிது.

மாரய்யாச் சாரியென்று வயங்குமும் மொழிக் கவிஞ்ஞா
பேரறி வாளராசி பெற்றினி தமருஞ் சீலா
சீரமைந் தொழுகற் கேற்ற சிந்தனை செயுமிராம
பாரதக் கதைச்சி லேடைப் பாக்களாங் கமைந்திலங்கும்.

குறிப்பு:- கவிஞா, சீலா, என்றவிளி, சாற்றுக என்று மேல் செய்யுளோடு தொடர்புடையது. மும்மொழி = வடமொழி, தெலுங்கு, தமிழ் என்னும் மூன்று மொழிகள். இலங்கும் என்பது, அடுத்த செய்யுளோடு அன்வயமுடையது.

இராகவ பாண்டவீய மெனுநெடுங் காப்பியத்தைத்
தராதல மிலகும் வண்ணம் சாற்றுக மகிழ்வினென்றே
ரிராக்கன விடைப்போந் தீசனியம்பலாய்ந் துடல் சிலிர்த்தப்
பராபரன் திருநாமத்தைப் பன்முறை நினைந்து மாதோ.

குறிப்பு:- இராகவ பாண்டவீயம் = இரகு குலத்திற்ரேன்றிய இராமபிரானுடையவும், பாண்டுமன்னன் மக்களுடையவும். வரலாறுகளைக் கூறும் நூல், (இது வடமொழித் தொடர்) உரை வெளிப்படை.

முன்மொழியால் வான்மீகி வியாதரியற்றிய
கதைகண் முழுதுந் தெலுங்க
ரின்மொழியாற் பிங்கள சூரனகவிஞன்
சிலேடையுற விழைத்த நூலைத்
தென்மொழியாற் செயத்துணிந் தேனரும் புலவோ
ரெனதுரையாஞ் செயுட்களியாவும்
புன்மொழியாயினுமி ராமகிருட்டினர் தம்
பெயர் கருதிப் பொறுப்பாரென்றே.

குறிப்பு:- கீழ்ச் செய்யுளில் உள்ள 'நினைந்து' என்பது இச் செய்யுளில் 'செயத் துணிந்தேன்' என்பதனேடு அன்வயம். 'பிங்கள சூரன்ன' என்ற பெரும் புலவர் தெலுங்கில் இச் சிலேடைக் காப்பியத்தை யியற்றி உள்ளார். தெலுங்கரின் மொழி என்பதனை, தெலுங் கருடைய இனிய மொழி என்பது சாலப்பொருத்த முடையது "தெலுகு தேட" என்றபடி மொழிக்கேற்ப அஃதமையும், அஃதே போல, தென் மொழி என்பதை தேன்போன்ற சுவைமிக்க மொழி என்பது தமிழுக்கு மிகப் பொருத்தமுடையது.

அவதாரிகை:- இராமாயண. பாரதங்களைத் தமிழ்ப்பாக்களிலமைத்த பெரும் புலவர் இருவரையும் இச்செய்யுளில் வணங்குகிருர்.

தராதலத்திற் செந்தமிழின் சுவைததும்புங்
கற்பனைகள் தவழும் வண்ணம்
இராமகதை விரித்துரைத்த கம்பநாட்டாழ்
வான்மலர்த்தா ளிறைஞ்சி நாளும்
வராகமபா ரதக்கதையாய்ந் திசைத்த
வில்லி புத்தூராழ்வான் பொற்பாதங்
கராம்புயங்கொண் டேத்துவனிவ் விரவீச
மரபினர்தங் கதையாய்ந் தோத.

குறிப்பு:- வர + ஆகம = வராகம (வடமொழிச் சந்தி) வர = சிறந்த தான ஆகமம் = வேதம், வராகமபாரதக் கதை = சிறந்த வேதமென்று உரைக்கத்தக்க பாரதக் கதை என்பதாம். பாரதத்தை ஐந்தாம் வேதம் என்பர் பெரியோர். ''மறைநாலொடைந்தென்று நிலை நிற்க'' என்றார் வில்லியும். இரவீசமரபினர் என்பது இரவி + ஈச, சூரியனென்னும் இறைவனுடைய மரபினர் என்று இராமாயணக் கதைக்கும் இரவு + ஈச = இரவீச, இராக் காலத்திற்கு ஈசனாகிய சந்திரனுடைய மரபினர் என்று பாரதக்கதைக்கும் பொருளாதல் காண்க

அவதாரிகை:- இச்செய்யுளில் புன் புலவரை மறுத்து, நற்புலவரைப் போற்றுகிறார்.

மாம்பழத்தின் சுவைநுகரும் வகையுணரா
தகஞ்சால வருந்திப் போந்து
வேம்பினையக் காக்கையினம் விரும்புதல்போ
லரும்பெருநூல் விரித்து நோக்கிப்
பூம்பதத்தின் பொருளாயும் புலமையின்றிப்
புரை நூலைப் புகழ்ந்து போற்றித்
தீம்பிழைக்குஞ் செயல்விடுத்துத் திகழறிஞர்
நெடும் புகழைச் சிந்தை செய்வாம்

குறிப்பு:- உரை வெளிப்படை, ஆயின் ''மாம்பழத்தின்'' என்று தொடங்கியபடியால் 19வது நூற்றாண்டில் கொங்கு நாட்டில் தோன்றிப் பாண்டிய நாடுவரையில் புகழ் பெற்று விளங்கிய பெரும் புலவராய மாம்பழக் கவிச் சிங்க நாவலரை ஞாபகப்படுத்துவதாகவுள்ளது. அதாவது:—மாம்பழத்தின் = மாம்பழக் கவிராயருடைய சுவை = கவிச்சுவையை அரும்பெரும் நூல் = அருமையும் பெருமையும் வாய்ந்த ''சந்திரவிலாசம்'' என்னும் சிலேடையும், கற்பனையும் மிக்க, சிறந்தநூல் என்பதாம்.

ஒருகதையின் பொருளுணருங் கான்மற்றோர்
கதைப்பொருளை யுணர்வோ ருள்ளத்
திருகதையும் பொருளறியா திடருறுவ
ரொருகதைபோ லிதனையாய்ந்து
வருபவருக் கெளிதாகப் புலனாகு
மெனக்கருதி வாசகத்தென்
பொருவறுமந் நெறியொழுகு வீரெனவீங்
கெடுத்தினிது புகல லுற்றேன்

குறிப்பு:- என்வாசகத்து=நான் எடுத்துக்காட்டியபடி, பொருவறும் நெறி=குற்றமற்ற வழியில், ஒழுகுவீர்=கதைப் பொருளையுணர்ந்து நடப்பீராக, என்பதாம், உரை வெளிப்படை.

ஒருபதத்திற் கிரண்டுபொருள் தனித்தியங்கும்
வடபாடைக் குரியதாகும்
மருவுதமிழ்க் குரியதா வன்றியுமிவ்
விரவீச மரபோர் காதை
யரிதியம்ப லெனினுமிறை யுரைகடத்தன்
முறையன்றென் றகத்திந் நூலிற்
பரவுகவி யாற்றலையாற் றலையாற்ற
லைப்போலப் பழுதுறாமல்

குறிப்பு:- கவியாற்றலாவது, ஐயாற்று=ஐந்து நதிகள் ஒன்றாகச் சேர்ந்து பெருகும், அலை=பிரவாகத்தின், ஆற்றலைப் போல=கம்பீரமான தோற்றம்போல இந்நூற் கவிகளும் சிறந்து விளங்கும் என்பதாம். இங்கு ஐந்து ஆறுகளை ஒப்பிட்டதானது, தமிழ் இலக்கணங்கள் ஐந்தாகிய, எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென்னும் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு ஆறாகக்காட்டி அவ்வைந்திலக்கணங்களும் பொருந்தியதொரு பெரு நதியாக, அதாவது,பஞ்சலக்ஷணங்களும் பொருந்தியது இக்காப்பியம் எனக் கூறியவாறும். மற்றும், ஐந்து நதிகளும் ஒன்றாகச் சேர்ந்து பெருகும் நதி 'சிந்துநதி' யென்பதும் அஃது புண்ணிய நதிகள் ஏழனுள் ஒன்று தலானும், அதில்படிந்தோர் பாவந் தீருமென்பது நூற்றுணிபாதலானும், அதைப்போல் இந்த நூலைக்

கற்பதனுலும் கேட்பதனுலும், புண்ணியம் பயக்கு மென்பதும் ஒன்று. ''பழுதூருமல்'' என்றவினையெச்சம், ''சாற்றுவேன்'' என்ற அடுத்த செய்யுளோடு இணையும்.

தொழுமறிஞ ராய்ந்தியம்பும் பெயர்வினையின்
றெடர்மொழியுந் துகடீர் வையம்
முழுதிலகும் வடபுனைத்தென் புனைவடத்தென்
புனைமொழியும் முறைமையாக
வொழுகுநெடும் வடபிரித்தென் பிரிவடத்தென்
பிரிமொழியு மொளிரும் பாவிற்
றழுவிவருஞ் சிலேடையுரை யெண்வகையா
மெனவகுத்துச் சாற்றுவேனுல்

குறிப்பு:- இந்நூலிற் கூறப்படும் சிலேடை எட்டுவகையாமென்பன அவை; பெயர்த்தொடர் மொழிச்சிலேடை, வினைத் தொடர் மொழிச்சிலேடை, வடபுனைச் சிலேடை, தென் புனைச் சிலேடை, வடத்தென்புனைச் சிலேடை, வட பிரிச் சிலேடை, தென்பிரிச் சிலேடை, வடத்தென்பிரிச் சிலேடை என்பனவாம்.

அவதாரிகை:- அவையடக்கம் கூறப்படுகிறது.

பாற்கடலி னமுதனைத்து மோரறுகாற்
சிறுபறவை பருகு மார்வத்
தாற்கவலை யடைதலைப்போல் யானுருவ
னெனினுமிக வரியதாமிந்
நூற்கனிவி னுதரிப்போர் கழைவளைவு
கருதாம னுகரு மாங்கென்
மேற்கருணை கூர்ந்துபிழை பொறுத்தருள்வ
ரெனவியம்பு வேனீங் கின்றே.

உரை, வெளிப்படை.

பாயிரம் முற்றிற்று.

ஓம்.

நாட்டுச் சிறப்பு.

அருளார்ங் திலகுங் கவிஞர்துதி
யாற்றிப் புகழிங் நூலினின்று

பொருளாய்ங் தொழுகற் கேற்றநெறி
புகன்று நெடுவெண் டிரைபுனைந்த

விருமா நிலத்துட் கோசலநா
டெனும்பே ரெழில்வாய்ங் தினிதமருங்

குருதே சவளப் பியலையுளங்
கூர்ந்திங் கெடுத்துக் கூறுவமால்

இராமாயணப் பொருள்:- இரும், மாநிலத்துள், கோசல நாடு என்னும் பெயரும் அழகும் வாய்ந்துள்ளதாகிய, (குருதேச வளப்பியலை) (குரு+தேசு+அ+வளப்பு+இயல்) அ=அந்த குரு =மேன்மையும், தேசு=பொலிவும் பொருந்திய வளப்பு=செழிப் பான, இயல்=தன்மையை உளங் கூர்ந்து.....கூறுவம், என்பதாம்

பாரதம்:- கோசலநாடு=குசலம் நிறைந்த தேசம், குசலம் என்னும் வடசொல்லுக்கு, சௌக்கியம், திறமை, கல்விச்சிறப்பு முதலிய பொருள்களுண்டு, அவையனைத்தும் நிறைந்துள்ள நாடு கோசல நாடு, குசலம் உடையது கோசலம் (தத்திதாந்தம்) என்னும் எழில்வாய்ந்து அமரும் குருதேசம்=குரு என்னும் மன்னவனால் சிறப்பாக ஆளப்பட்ட தேசம். இவன் சந்திர வம்சத்தில் பிரசித்திபெற்ற பண்டைய மன்னர்களில் ஒருவன், இவனுடைய வழியில் தோன்றியவர்கள் தாம் பிற்காலத்தில் கௌரவர் எனப்பட்டனர். பிற இருகாதைக்கும் பொது.

காரார் முகிற்சா லேமருவக்
கவின்சேர் மின்னல் விளக்கொளிரச்
சீரார் திமிரத் திரையடரத்
திகழ்காற் றருஞ்சு ருதிபரவப்
பேரா ரிடிமு ரசமுழங்கப்
பிறங்கு மயில்நடிகர் நடிக்கு
மேரார் நெடுமா மழைக்கால
மியல்நா டகம்போ லினிதிலங்கும்

குறிப்பு:— இதுமுதற் பதினோராவது செய்யுள் வரையில் நாட்டுப் படலம், இப்படலத்திற் கூறப்படுகிற வருணனைகள் இருகாதை கட்கும் பொதுவானவையாம். திமிரம்=இருள்.

விரைவா கவெழுந் தகன்றுமிக
விளங்கு மீனத் திரள்மேவி
வரைமேல் மருவு நெறிவாய்ந்து
வயங்கு நீள்கோட் டிடங் தழுவித்
திரைசூழ் தரைமீ தமைந்தருநற்
றிருப ராவிப் பெருகிவரும்
புரைதீர் வானூற் றருவிப்புனற்
போலாங் கருமா மழைபொழியும்

வரை=மூங்கில் மரங்கள்.

நிலமா மடந்தை தனத்தினிடை
நிலைபெற் றோங்குந் தரளநெடுங்
கலமா மெனவே வரைசிகரங்
களிலூர்ந் துவரு மழையருவி
பலமா வகிற்ப லாச்சந்து
பணில மணியி னத்தினொடே
புலமா தரிக்க வெழுந்துலகிற்
போந்த கடவு ளெனத்துலங்கும்

தரளம்=முத்து, நெடுங்கலம்=பெரிய ஆபரணம், வரை=மலை, பலா=பலாமரம், மா=மாமரம், அகில்=மணந்தரும் ஒரு மரம். சந்து=சந்தன மரம், பணிலம்=முத்து, மணியினம்=ரத்தினங்கள்.

தாவு மருவிக் கடலிடைபூ
தரமத் துரகக் காற்கயிருல்
ஏவும் மகலாஞ் சுரருமிர
வெனுந்தா னவருங் கடைந்தவந்நாள்
மேவும் நதிமான் மடந்தை திரை
மென்பூங் கரத்தா லவ்வமுதைக்
காவும் வயலும் காக்கவெண்ணிக்
களிப்போ டூர்ந்தாங் களிப்பதொக்கும்

பூதரம்=மலை; மால்+மடந்தை=மோகினி.

மான்ருேற் சடையும் புனைந்தமுனி
வருக்கம் போல வுயர்தருக்கள்
கான்ருேன் றிநெடு முரிவிழுது
கனைத்தாங் கிதரை மிகத்தழைக்கு
மான்ருே ரமுத மொழிபோல
வமைந்த மாசி லாக்கனியின்
றேன்ருேய்ந் துவள ருங்கமுகு
தென்னை வாழை கரும்புசெந்நெல்.

சிரந்தாழ்ந் தமுத மொழிமடவார்
சேர்ந்து பைங்கூழ் நடுங்காலை
பரந்தோங் குவிழி நிழல்மீனைப்
பார்த்துக் கவர்தற் கின்றியரு
கிருந்தேக் கமுறு நாரையைக்கண்
டெழிற்ரு மரைதன் கண்கலங்கி
யிருந்தேன் சொரித லாய்ந்துநந்து
நகைத்தற் போன்முத் தினமுதிர்க்கும்

பலமா மணிக ளிடையூர்ந்து
பாயு மாற்றின் புனலேந்தி
வலமார்ந் திலகு நெடியதரு
வருக்கந் தாங்கித் துலங்குமகா
சலமீ துயர்வ ரையுதிர்க்குந்
தரள வொளியை நோக்கிமுழு
நிலவா மெனவே நினைந்துலவும்
நெடுஞ்ச கோரப் புள்ளினங்கள்

வேரை மருவா தரும்புற்கண்
மேய்ந்து நிதம்ப டிகமணிக்கற்
பாரை யிடங்கண் படுங்காராம்
பசுக்க ளீட்டம் பொழிதரும்பாற்
றூரை யருவி யாற்றினிடை
தழுவுங் கால தனையருந்தும்
நாரை யினத்தை நோக்குநரன்
னங்க ளோவென் றையுறுவர்.

திருமே வியபுற் றரைப் பாயற்
றிகழச் சுரும்பு சுதிகூட்ட
வருகோ டுமது கைமுரச
மார்ப்பக்குயில்பின் பாட்டி சைப்பத்
தருமீத மர்ந்த கிளியதனைத்
தழுவிப் பகரா நிற்கும்பொழி
லொருமா புனிதக் கதையியற்றற்
குரிய தலமோ வெனவிலங்கும்

படமார் நெடிய பணிவேணி
பரவு முததி மென்றுகிற்பூங்
தடமார் கமல முகந்தளிர்க்கைத்
தலங்க ளாற்ற மூவித்தரள
வடமார் வரைத்த னங்கழைத்தோள்
வாழைத் துடைமா தங்கநடை
திடமா ரங்நா டெழில்பருவத்
தேவாங் கனையோ வெனத்திகழும்

நகரச் சிறப்பு.

என்றுமிந் நெறியுறு நாட்டியல் பெடுத்தினி துரைத்து
நின்றிலகும் பெய ரெழில்படை நிலையொடு நிகழும்
வென்றிமுறை மையு மாந்தரின் விருத்தியு நலனு
மொன்றி விளங்குமந் நகரிய லுலகினுக் குரைப்பாம்

உரை பொது.

மலைய ருந்தனத் தருவிமுத் தாரமு மருங்கி
லலைநெ டுங்கட லாடையு மழகுற வணிந்த
நிலம டந்தைவா ணுதன்மிசை நிலைபெற நிகழ்பூந்
திலகமா மயோத்தி நாகநந் நகரெனத் திகழும்

இராமாயணப் பொருள்:- அயோத்தி (நகரமானது) நாக= தேவர்களுடைய, நல் நகர் எனத்திகழும்=சிறந்த அமராவதி பட்டணம் என்று சொல்லும்படியாக விளங்கும் என்பதாம்.

பாரதப் பொருள்:- நாக=யானையின் பெயரைக் கொண்ட. நல் நகர்=அந்த அழகிய பட்டணம், (அஸ்தினுபுரம் என்பதாம்) அயோத்தி எனத்திகழும், (யுத்த சம்மந்தமான செயலுக்குரியது ''யுத்தி'' அதற்கு அல்லாதது ''அயோத்தி'' அ+யுத்தி= அயோத்தி என்பது வடமொழி) அதாவது; எவராலும் எதிர்த்துப் போர்புரிதற்கு இயலாத படைவலிமை வாய்ந்த நகரம் என்பதாம், பிறபொது.

வாழு நெடுங் கிரகத்திரட் சாயலை மறைத்துச்
சூழு நவமணிச் சுடர்மதிட் சுவரினைக் கடத்த
லூழி நாள்வரை முயலினு மரிதென வொற்றை
யாழி யாகத்தன் னிரதம தமைத்தன னருக்கன்

இக்கவி முதல் நகரச் சிறப்பின் இறுதிக் கவிவரையிலும் புகலப்பட்ட வருணனைகள் இருகாதைக்கும் பொது; இதில் மதிலின் பெருமை கூறப்பட்டது.

விரவி நிறைந்தெழு மகழியி னரும்புனல் விரைந்தே
சரவ விருத்தி கொண்டதலஞ் செய்திடத் தரைதலத்தை
சரணத் தொழிலினி யவர்க்கிய லாதெனச் சலச
னுரக ராக்கின னுகரை யுலவி யின்புறவே

உரை:- சரவ விருத்தி=ஒழுக்கல் என்னும் காரியம், சரவம் என்பது "ஸ்ரவம்" என்னும் வடசொல்லின் திரிபு. ஸ்ரவம்=ஒழுகுதல் அல்லது கசிதல், தலம்=நிலம், அதலம்= நிலமில்லாமை, இங்கு அகழியின் நீரானது நீரின் அடிப்புறத்து நிலத்திற் கசிந்து, கசிந்து பெருகி அந்நிலத்தைக் கரைத்து அடிப் புறத்தில் நிலமே இல்லாதபடி செய்துவிட்டது என்பதாம். அதுதான் "அகழியின்" அரும்புனல் விரைந்து சரவ விருத்தி கொண்டு தரைதலத்தை அதலஞ் செய்திட" எனப்பட்டது. இவ்வாறு அகழியின் அடிப்பாகத்தில் நிலமில்லாது போகவே கீழுலகம் முழுதும் ஜலமே நிறைந்து அக்கீழுலகமும் அகழியும் எல்லாம் ஒரே நீர்மயமாக ஆகிவிட்டபடியால், அவ்வுலகத்தில் வாழுபவர்க்குக் கால்களிருந்தாற் பயன்படாதெனக் கருதி அவர் களெல்லாம் மார்பினுலேயே ஊர்ந்து வாழுமாறு பிரமன் செய்து விட்டான் என்பது கருத்து. இதைத்தான் "சலசன்" அவர்க்கு இனி சரணத்தொழில் இயலாதென நாகரை உலவி இன்புற உரகர் ஆக்கினன்" என்று மேலிரண்டடிகளில் கூறப்பட்டது.

சலசன்=பிரமன், சலசம்=தாமரை. அதில் தோன்றிய வனுதலால் சலசன் ஆனுன். உரகர்=மார்பினுல் நகர்பவர். உரம் என்பது மார்பு, "கம்" என்பது நகர்தல், அதனுல் உரகர் என்பது மார்பினுல் நகர்பவர் என்று ஆயிற்று; உரகம்=பாம்பு, மார்பினுல் ஊர்வது ஆனபடியால் பாம்புக்கு உகரமென்னும் பெயராயிற்று. நாகர்=பாம்பு வடிவமுள்ளவர்கள். இடைக்குமேல் மானிட வடிவமும் இடைக்குக்கீழ் பாம்பின் வடிவமும் கொண்ட ஓர் தேவஜாதியர். கீழ் ஏழுலகங்களில் பூமிக்கு அடுத்திருக்கும் கீழுலகத்துக்கு அதலம் என்று புராணம் கூறும். இதனுல் அகழியானது பூலோகத்தோடு கீலோகத்தையும் சேர்த்து ஒன்ருக்கிவிட்டது என்பதாம்.

வழுவ கன்றுயர் நாடகச் சாலையின் வளப்பர்
தழுவு நெடுமு ரசத்தொனி சார்ந்துநர்த் தனங்கள்
பழகு மங்கையர் நடிக்குமுன் மயிலினம் பாரி
லழக மைந்ததன் றோகையை விரித்தினி தாடும்

குறிப்பு:— முரசத்தொனியை மேககர்ச்சனையென மயங்கி மயிலினம் ஆடும் என்பதாம்.

குதுக லத்தொடு குயின்மொழி கோதையர் பாடும்
மதுரத் தொனிமறைந் துணர்ந்து வான்மங்கையர் செல்லும்
புதுமை கண்டுளம் வியப்பரம் பொன்மய மாடப்
பதுமை கட்குயிர் வந்தனவோ வெனப் பாரில்

விளங்கும் நன்மணித் தேரினஞ் செலும்பொலன் வீதி
வளைந்த சகடநின் றெழுந்துகள் வானிடை பரவிக்
களங்க மற்றகங் கையின்புனல் கலக்கலா லதன்கண்
விளைந்த லருமா வரியபொற் றாமரை விரிகள்

விரிகள் = மலர்கள்.

ஏத மற்றுயர் கிரித்திர ளெனுங்கரி யினத்தின்
காத கன்றெழுங் காற்றிடை கலைந்துளங் கலங்கி
வேத னையுறு முகிலினம் விரைந்ததன் விரிந்த
பாத வெம்மதப் பெயரொடு பார்மிசை யலையும்

குறிப்பு:— முகிலுக்கு, 'பாதோதரம்,' பாதோதி'' என்னும் வடமொழிப் பெயர்களுண்டு அதையனுசரித்து ''முகிலினம் பாத வெம்மதப் பெயரொடு அலையும்' எனப்பட்டது.

அச்சத் தினைவிளைத் தருஞ்சம ராற்றியொன் னலரின்
வச்சத் தலஞ்சிதைத் திலங்குமவ் வாசிகள் வன்மை
மெச்சற் குரியதென் றுரைப்பதைக் கேட்டுடல் வெளுத்தே
யுச்சச் சிரவமென் றுலவுமவ் வும்பரின் புரவி

குறிப்பு:— வச்சத்தலம், "வக்ஷஸ்தலம்" என்பதன் திரிபு. 'மார்பு' என்பதாம். உச்சச்சிரவம், "உச்சைஸ்ரவம்" என்னும் குதிரை = உச்ச = நிமிர்ந்த, சிரவம்= காதுகளையுடையது. இதனால் தேவலோகக்குதிரை வெளுத்திருப்பதற்கும், பெயர் வந்ததற்கும் காரணம் கற்பிக்கப்பட்டது.

மெய்வலங் கொடு பொரும்பகை வேந்தரின் செருக்கைக்
கைவலங் கொடு சிதைத்துதம் மிறைவனைக் களிக்கச்
செய்வ மெனத்திகழ் வீரரின் செயலைக்கண் டயர்ந்து
மைவடிவி னெம கிங்கரர் மறைந்துல வுவரால்.

குறிப்பு:— இதில் எமதூதர்கள் கண்ணிற்படாமல்உலவுங்காரணம் கூறப்பட்டது.

சங்கு சக்கரத் தொடுதிகழ் சாரச நயனன்
பொங்கு மவனியை வளர்ப்பது போலகத் தினனி
சங்கு சக்கரத் தொடுதிகழ் தராமரர் விரைந்தே
பொங்கு மவனியை வளர்ப்பரப் புரத்திடை யினிதே.

குறிப்பு:— அந்தணர்தம்இல்லங்களில்முத்தீவளர்ப்பதற்குதிருமால் உலகம் புரத்தலை உவமையாக இதில் கூறப்பட்டது. அதாவது "அகத்தினனிசங்குசக்கரத்தொடு திகழ் தராமரர்" என்பதை அகத்தின் + அனிசம் = எப்போதும், குச= தருப்பையையுடைய, கரத்தொடு= கைகளோடு, திகழ், தர + அமரர் = பூமியில் வாழும் + தேவர்கள் என்றும், "பொங்குமவனியை வளர்ப்பர்" என்பதை பொங்கும் = அவியாமல் எரிந்துகொண்டே இருக்கும், அ + வனியை அந்த ஆகவனீயம், காருகபத்தியம், தக்கிணாக்கினி என்னும் மூன்றாகிய, வனியை = வன்னியை = ஓமத்தீயை, வளர்ப்பார் எனப் பிரித்துப் பொருள்கொள்ளத்தக்கது.

போற்றற் குரியநீள் படைக்கரம் புனைந்துவெந் தணலைப்
போற்றற் குரியவல் லமைகொடு போருமெம னையும்
மாற்றற் குரியதோ ருருத்திர வடிவொடு சமர
மாற்றற் குரியரென் றிலங்குவ ரரசிள மைந்தர்,

குறிப்பு:— அரசிள மைந்தரானவர் போற்றற்கு, உரிய, படை, கரம் தன்+கு புனைந்து, தணலைப்போல்+தற்கு= தன்தனக்கு, உரிய வல்லமை கொண்டவராகி, எமனையும். மாற்றற்கு + உரியது = அழித்தற்கு உரியதாகிய, ஓர்=ஒப்பற்ற, உருத்திர=உருத்திர மூர்த்தியையொத்த, வடிவொடு, சமரம்+ஆற்றற்கு+ உரியர் என்பதாம்.

கனவ னகத்திருத் திரணிலை கலைதலை நோக்கிக்
கனவ னகத்திருத் திரள்கொடு காசினிக் களித்துத்
தனதன் மதத்துவச் செயலொடு சரித்தலை வெறுத்துத்
தனதன் மதத்துவச் செயலொடு சரிப்பரவ் வணிகர்

குறிப்பு:— முதலாமடிப் பொருள்; கன+வல்+நக+திரு+திரள். கன = பெரியதும், வல் = வலிமையுடையதுமான, நக=மலையைப்போற் குவிந்து கிடக்கும், திரு= செல்வத்தின், திரள்=குவியலானது, நிலைகலைதலை= நாளடைவில் அழிவுறுவதை, நோக்கி=உற்றறிந்து;

இரண்டாமடிப் பொருள்; கன+அனக+திருத்திரள்+ கொடு, அனக=பாவமற்ற தன்மையோடு ஈட்டிய, திருத்திரள் = செல்வத்தை யெல்லாம், கொண்டு கன=மேகம் போல கைம்மாறு கருதாமல், காசினிக்கு+ அளித்து = உலகத்திலுள்ள சற்சனர்களுக்குக் கொடுத்து,

மூன்றுமடிப் பொருள்; தனதன்=குபேரன், மதத்துவச் செயலொடு=பெருஞ் செல்வம் படைத்துள்ளோம் என்னும் செருக்குடன், சரித்தலை=வாழ்ந்துவருவதை (அவனுடைய வாழ்வை) வெறுத்து.

நான்காமடிப் பொருள்; அவ்வணிகர்=அந்நகர வணிகர் (ஒவ்வொருவரும்), தன=தத்தமக்குரிய, தன்ம=நல்லறத்தின், தத்துவச்செயலொடு=செல்வம் படைத்ததன்பயன் ஈத்துவக்கும் தன்மையேயாம் என்னும் உண்மையான கொடைச் செயலோடு, சரிப்பர்=நடந்துகொள்வார்கள் என்பதாம், கன= பெரிய, கனம்=மேகம், அகம்=பாவம், அனகம்= பாவமின்மை, தனதன்=பெருஞ்செல்வம் படைத்தவன்=குபேரன் இவை வடசொற்கள்

மாத்தி ருக்கொடு பயிரினம் வளர்க்குமவ் வுழவர்
மாத்தி ருக்கொடு சனபது மைத்திரள் வாழ்வாஞ்
சூத்தி ரந்தெரிந் ததனிடர் துடைப்பதற் குரிய
சூத்தி ரக்குலத் தினரெனத் துலங்குவர் மாதோ

குறிப்பு:— மாத்திருக்கொடு, பயிரினம், என்பதை மா+திருக் கொடு என்று பிரிக்க மா=மிக்க, திருக்கொடு= கண்காணிப்பொடு "திருக்கு" என்பது "த்ருக்" என்ற வடசொல்லின் திரிபு த்ருக்=பார்வை.

இரண்டாமடிப் பொருள்; மாத்திருக்கொடு என்பதை, மா+திரு+கொடு எனப்பிரிக்க மா=ஏராளமான, திரு=உழவுப்பொருள்களாகிய தானியம் முதலிய செல்வத்தை, கொடு=கொண்டு, சன=மானிடர் என்னும், பதுமை=பிரதிமைகளினுடைய, வாழ்வாம்= உயிர் வாழ்க்கை யென்னும்,

மூன்றுமடிப் பொருள்; சூத்திரம் தெரிந்து= இரகசியத்தையறிந்து ("உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்றபடி உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாததாகிய உணவுப்பொருளைக்கொண்டு) அதன் இடர்= மக்கட் கூட்டத்தினுடைய பசியாகிய துன்பத்தை துடைப்பதற்கு உரிய, சூத்திரக் குலத்தினர்=இரகசியத்தை அறிந்த குலத்தார், எனத் துலங்குவர் அல்லது சூத்திரம்=கயிறு என்பதாகக் கொண்டு, மக்கட்கூட்டம் என்னும் பொம்மைகளை உணவுப்பொருளென்னும் கயிற்றினூற் பிணித்து ஆட்டக்கூடியவர்களெனத் துலங்குவர் எனினும் ஒக்கும்

தவரு மொழிதனைக் கைக்கொடு தருமமாற் றுபவ
ரெவரா யினுமவர் நீதியாய்ந் தீங்கெடுத் தியம்புஞ்
சுவிசே டகுணத்தொ டறிஞர் துலங்கலா லலைசூழ்
புவிசே டனென வப்புயக்கு லேசனைப் புகல்வார்

குறுப்பு:— தவறு + ஆம் + மொழி + கொண்டு தருமம் ஆற்றுபவர்களுடைய அநீதியை, எடுத்து இயம்பும் துணிவாகிய, சு = நல்ல, விசேட = மிகச்சிறந்த, குணத்தோடு அறிஞர் (அந்நகரில்) துலங்குவதனுல், புயக்குலேசனை = சர்ப்பராசனை, ஆதிசேடனை என்பதாம் சேடன் எனப்புகல்வார். சேடன்=குறைவு பட்டவன் அல்லது தாழ்ந்த தன்மையுடையவன். சேஷ- என்பதன் திரிபு. திருமாலின் படுக்கையாகிய ஆயிரந்தலைகளையுடைய ஆதிசேஷன் அறிவிலும், சொல்லாற்றலிலும், கல்வியிலும் வல்லவன். அத்தகைய ஆதிசேஷனுக்குச் சேஷன் என்றுபெயர்வரக்காரணம்: அந்நகரத்தில் வாழும் பேரறிஞருடைய ஆற்றலுக்கு ஈடாகாமையால் என்பதாம்.

நாவி லுரந்தனில் மேனியில் நாதரைப் பெண்கள்
மேவி யிடருறச் செயன்முறை யன்றென விளங்கும்
பூவி லீருட லோருயி ரெனுநெறி புருடர்
ஆவி யொடுகலந் திலங்குவ ரந்நகர் மடவார்

குறிப்பு:— இதனுல் அந்நகரத்துப் பத்தினிப் பெண்டிர்; நாமகள், பூமகள், மலைமகள் ஆகிய மூவரினும் சிறந்த பண்பு வாய்ந்தவர்களென்பது கூறப்பட்டது.

திடமமைந்த மேதியின் பயஞ் செழுங் கடத்தாயர்
மடவரிருத்தி தம்நெடுங் கரமலர் களால் விரைந்து
கடையுந் ததிநறும் வெண்ணெயைக் களிப்பினோ டளிக்கு
மிடருறினு மறிந்தோர் நலமிழைப்ப ரென்பது போல்

குறிப்பு:— பயம்=பால், கடம்=பானை, ததி=தயிர், (தயிருக்கு அறிஞர்கள் உவமையாக்கப்பட்டனர் இதனுல்)

ஆய்ந்து கணவரா லெறியுநீர்க் கமலேக ளுள்ளங்
காய்ந்து நோக்குழிப் பொய்கையில் கமலம் வாய்விள்ளும்
தோய்ந்த வநிதையர் கணவர் மேற்றொடர் புனற்றெளிக்க
வாய்ந்த முறுவலா லருங்கருங் குவளேகள் மலரும்

குறிப்பு:— இச்செய்யுளில் பெண்களின் கோபக்கனற்பார்வையைக் கதிரவனுக்கும், ஆடவர்களின் இன்ப நகைப்பைச் சந்திரனுக்கும் உவமையாக்கப்பட்டது

நகைய முதநனே பன்முகை காட்டென நவிலும்
வகைய கத்துணர்ந் தந்நகர் வாலிப னேடு
தகையு றும்மலர் னிற்குமத் தருணியா னனேப்பன்
முகைவி ரைந்துகாட் டுதன்முறை யோவென மொழிவாள்

குறிப்பு:— இதில் மலர்வாணிபம் செய்யும் ஒருத்திக்கும், ஒருவாலிபனுக்குமிடையே நிகழும் வாணிபப் பேச்சுக்கள் சிங்கார ரசம் பொருந்திய பேச்சுக்களாகச் சிலேடைப் பொருள் விளங்க உரைக்கப்பட்டது.

அதாவது; நகை=பற்களேப்போல் வெண்மை நிறம் உடையனவும், அமுதம்நனே = தேனினுல் நனேயப் பெற்றதும் அல்லது தேனெழுகப் பெற்றதும் ஆன, பல்=பல வகையான (மல்லிகை, முல்லே, இருவாட்சி முதலியன) முகை=மலர் மொட்டுக்களே, காட்டு என நவிலும் வகை உணர்ந்து, அத்தருணியானவள் நனே= ஈரம்புலராத அத்தகைய, பல் முகை=பலவித பூ மொட்டுக்களே, விரைந்து காட்டுதல் முறையோ= கேட்டவுடனே தாமதியாமல் அதைக் கொண்டுவந்து காட்டுதல் வர்த்தகத்துக்கு அழகோ என்பது ஒன்று, மற்றும், நகை+அமுதம்+நனே+பல்+முகை=சிரிப்பு என்னும் அமுதத்தினுல் தோய்க்கப்பெற்ற பற்களின் குறிப்பை (புன்முறுவலே என்பது குறிப்பு) அத்தருணி யானவள், யான், அனே=உனக்குத் தாய்போன்றவள். அப்படியிருக்க, பல் முகை=புன்முறுவலே, காட்டுதல் முறையோ என்பதும் ஒன்று.

இலங்கு மாதுளங் கனிந்ததோ வியம்புக வெனலாய்ந்
தலங்க லணியிளங் காளையோ டறைகுவா ளின்றேற்
றுலங்கும் பல்விரைப் பொலிவொடு துலங்குமோ வென்றே
நலங்கு லவுங்கனி விற்குமீர்ங் கோதையந் நகரில்

குறிப்பு:— இதுவும் கீழ்ச்செய்யுளைப்போல் இரு பொருட்கொண்ட கனி வணிகையுடன் பேசும் பேச்சுக்கள். அதாவது; இலங்கும் மாதுளம்=இங்கே காணப்படுகிற மாதுளங் கனி கனிந்ததோ இயம்புக என்றும், அலங்கல், அணிந்து உள்ள, இளங்காளையோடு, இன்றேல்=நன்கு கனிந்து இரா விடில், துலங்கும் பல் விரை=கனிக்குள்ளிருக்கும் படியான பல செந்நிறமான விதைகள் பொலிவொடு துலங்குமோ என்று அறைகுவாள் என்பதொன்று. ஈர்ங்கோதை=குளிர்ந்த மலர் மாலையணிந்த கூந்தலை உடையவள், மற்றொன்று, மாது=பெண்ணே, உளங் கனிந்ததோ = உன் மனமானது என்னிடத்துக் கனிந்ததோ இயம்புக எனல் ஆய்ந்து, இன்றேல்= கனிந்திராவிட்டால், பல்விரை = எனது பற்களின் வரிசைப்பொலிவொடுதுலங்குமோ=வெளிப்படையாக விளங்குமோ, ''நகை முகங்காட்டுவேனோ'' என்பது கருத்து.

உலகி னனிசந் தனந்தர வியலுமோ வெனக்கேட்
டலகி னனிசந் தனமெனக் களிப்பவர்க் களிப்பி
னலனெ ழுகுமண மடைவரெந் நாளுமென் றுரைப்பா
ளிலகுங் கலவையை விற்குமவ் வேந்திழை யிசைந்தே

குறிப்பு:— உலகு, இன்=மனதுக்கினிய, நனி=மிகுந்த, சந்தனம் தர இயலுமோ, என=என்று வாலிபன் கேட்க, அதற்கு அலகு இல்=தடையில்லாமல், அனிசம்=எப்போதும், தனம்=பணத்தை, எனக்கு அளிப்பவர்களுக்கு, அளிப்பின்=நான் சந்தனம் கொடுத்தால். மணம் அடைகுவர் = வாசனையைப் பெற்றின்புறுவர், கலவையை=சந்தனம் முதலிய நறுமணப்பொருள்களை, இஃது ஒரு பொருள். மற்றும் அனிசம்+தனம்+தர

இயலுமோ, என அனிசம், தனம்+எனக்கு, அளிப்பவர்க்கு + அளிப்பின், மணம் = திருமணம் அடைகுவர் என்பது சிங்கார ரசப் பொருள்.

திகழிளங் கொடிக் காலிடை சனித்தவெற் றிலையை
மகிழ்வி ஞேடருள் கெனுமொழி யாய்ந்திள மங்கை
நிகழும தன்விலை வரிக்குநன் னேர்மைநிற் குளதோ
புகலு கெனவெதிர் மொழிகுவாள் விடஞெடப் புரத்தில்

குறிப்பு:— இச்செய்யுள் வெற்றிலை வணிகத்தின்பாற்பட்டது. இதுவும் இருபொருளுடையது. இளம்+கொடிக்கால்= செழித்த வெற்றிலைத்தோட்டம் என்றும், அதன்+விலை என்றும் வணிக முறைப்பொருள், ''இளங்கொடி'' என விளித்து, நிகழும் + மதன் + விலை = வில்லை என்று உரை கொள்ளுவது மற்ரெருவகை.

கேளொ ஞுதவை கொடியர்கோள் கிளர்ச்சிவீண் புரளி
நீளொ ஞுதவை வெகுளியின் நிகழ்ச்சி பொருமை
மீளொ ஞுதவை கைத்தொழில் விருத்தி வேளாண்மை
மாளொ ஞுதவை செழுந்திரு வளர்ச்சிநல் வாழ்வு

(உரை வெளிப்படை).

வாழொ ஞுதவை களவுபொய் வஞ்சனை சூழ்ச்சி
சூழொ ஞுதவை வறுமைநோய் துயரகச் சோர்வு
வீழொ ஞுதவை யறம்பொறை மெய்ந்நெறி யுணர்வு
தாழொ ஞுதவை யருள்கொடை சாகதம் வென்றி

(உரை வெளிப்படை).

எனவி ளங்குமந் நகரியல் பியம்பியவ் விறைவன்
றனது பெயரொடு மரபையுஞ் சாற்ரெஞுத் திறனும்
வினையில் நெடும்படை வீரரோடேகி யெண்டிசைப் போர்
தனைநிகழ்த்திய செயலு மித் தரைமிசை புகல்வாம்.

(உரை வெளிப்படை).

ஓம்.

அரசியற் சிறப்பு.

அருமெய் வளமுற வந்நக ராண்டிடு மிறைவன்
புருவ சினக்குறிப் பியல்பினுற் போர்க்களத் தொன்னுர்
அருகு வரவொணு தகற்றுவோ ணுற்றல்பந் திரதன்
றிருவி னயகுண திரிதராட் டிரனெனும் செம்மல்

குறிப்பு:— இது முதல் ஆறு செய்யுட்கள் தசரத சக்கரவர்த்தி அரசாண்ட சிறப்பையும், பாரதப்பொருளில் திருதராட்டிரமன்னன் அரசாட்சிசெய்த தன்மையையும் கூறும்.

இராமாயணப் பொருள்; அன்வயம்:—

அந்நகர், மெய் வளமுற, ஆண்டிடும், இறைவன், அரும், ஆற்றல், பந்திரதன், திரு, வில், நய, குண, திரிதர், ஆள், திரன், எனும், செம்மல், போர்க்களத்து, ஒன்னுர், கருகு, வரவொணுது, புருவ, சின, குறிப்பு, இயல்பினுல், அகற்றுவோன்.

குறிப்புரை:- மெய்வளமுற=சத்தியம் செழித்தோங்கும்படி, பந்திரதன்=தசரதன், திரு=அழகிய, வில்=வில்தொழிலிலும், நய=நீதிமிக்க, குண=பண்புகளையும், திரிதர்=மேற்கொண்டவர்கள். அல்லது திரு இல்=செல்வங்களுக்கு இருப்பிடம் என்றுரைக்கத்தக்க, நயகுண திரிதர்=நேர்மையான சிறந்த பண்புகளுக்கு உறைவிடமானவர்கள். மற்றும் திரு இல்=அழகு இல்லாவிடினும், நயகுண திரிதர்=நல்லொழுக்கம் முதலிய பண்புகளை மேற்கொண்டவர்கள். ஆள்=(ஆகியவர்களின் துணைகொண்டு உலகத்தை) ஆளுவதில், திரன்=நிலையுற்றவன்,

சற்றும் பிசகாதவன் என்றபடியாம். எனும், செம்மல்=என்ற பெருமை வாய்ந்த மன்னனுனவன், ஒன்ஞர்=பகைவர், புருவ சினக் குறிப்பு இயல்பினுல்=புருவத்தைச் சினங்கொண்டு சுளித்து நோக்கும் தன்மையினுலேயே, அகற்றுவோன்=பகைவர்களைக் கருகியோடும்படி செய்பவன் என்பதாம். "பந்தி" "பங்க்தி" என்றும் வடசொற்றிரிபு பங்க்தி=பத்து "திரிதர்" "த்ருதர்" என்னும் வடசொற்றிரிபு, த்ருதர்=மேற்கொண்டவர், சுமப்போர், தாங்குவோர் முதலிய பொருள்களாக நிற்கும், திரன்=ஸ்திரன் என்பதன் பிரிவு, ஸ்திரன்=நிலையாகவுள்ளவன்.

பாரதப்பொருள்: அன்வயம்:-

அந்நகர், மெய் வளமுற, ஆண்டிடும், இறைவன், திரு, வில், நய, குண, ஆற்றல், பந்திரன்=திரிதராட்டிரன், எனும், செம்மல், ஒன்ஞர், போர்களத்து, அருகு, வரவொணுது, கரும், புருவ, சினக்குறிப்பு இயல்பினுல், அகற்றுவோன்.

குறிப்புரை:- அந்நகர்=அந்த அத்தினுபுரம், மெய்வளம் உற=உடல் வலிமை சிறந்து விளங்கும்படியாக, திரு=வீரம்பொலிவுடைய, வில்=விற்றொழிலினுயாகும், நய=நேர்மையான, குண=பண்புகளையும், ஆற்றல்=அளவற்ற வலிமையையும் கொண்ட, பந்திரதன்=வரிசை வரிசையாகவுள்ள தேர்ப்படைகளையுடையவன், அரும்=அரிதாகிய, புருவ=கட்புருவத்தில் காட்டும், சினக்குறிப்பு=கோபக்குறி அதாவது, இருகண்களும் இல்லாத பிறவி குருடனுதலால் பகைவர் மீது உண்டான சினத்தை தனது குருட்டுக்கண்ணின் புருவத்தை நெறித்து அதன் மூலமாகத் தனது சினத்தை வெளிப்படுத்துவான் என்பதாம்.

தேற்ற நோக்கொணு திருக்கொடு வீட்டுமச் சிலையி
ஞற்றன் மேவிய வரசம ராரிவெஞ் செருக்கை
மாற்றுஞ் சூரன்மா மதயினன் மரபின ஞண்டா
னேற்றப் பவுரவ சுசந்ததி யிறைவரிற் சிறந்தே. 2

இராமாயண பொருள்: அன்வயம்:-

வீட்டும, சிலையின், ஆற்றல், மேவிய, அரசு, அமராரி, வெம், செருக்கை, மாற்றும், சூரன், மா, மதி, இனன், மரபினன், ஏற்று, அ, பவுர, வசு, சிந்தநி, இறைவரில், சிறந்து, தோற்றம், நோக்க, ஒண்ணு, திரு, கொடு, ஆண்டான்.

குறிப்புரை:— வீட்டும=அச்சுறுத்துந்தன்மை வாய்ந்த, சிலே=வில், அமராரி=அசுரர், அமராரி.........சூரன் என்பது சம்பராசுரனை வென்றவரலாற்றைக் குறிக்கும், மா=சிறந்த; அழகிய, மதி=புத்தியுள்ளவன், இனன்=சூரியன், ஏற்று=இடபத்தை ஒத்து விளங்கும் ஆண்மைமிக்க, அ=அந்த, பவுர=நகர மக்களுடைய, வசு=செல்வத்தின், சந்ததி=குவியல் (எடுக்குந் தோறும் குறையாது பெருகுந் தன்மை யுள்ளதென்பதாம்) இறைவரில் சிறந்து=மற்ற சிற்றரசர்களுடைய செல்வத்தினும் மேம்பட்டு விளங்கவும் தேற்றம்=முடிவு, நோக்க ஒணு=காண முடியாத, திரு=செல்வத்தை, கொடு=கொண்டு, ஆண்டான்= கோசல நாட்டை மிகச்சிறப்புற ஆட்சி புரிந்தான் என்பதாம். ''வீட்டும'' என்பது ''பீஷ்ம'' என்பதன் திரிபு, பீஷ்மம்=பயங்கரம் ''பவுர'' என்பது ''பௌர'' என்பதன் திரிபு, இஃது ''புர'' என்பதன் தத்திதாந்தம், புரம்=பட்டிணம், பௌர என்பது பட்டிணத்திலுள்ள மக்களைக்குறித்து நின்றது.

பாரதப் பொருள்: அன்வயம்:-

தேற்றம், நோக்கொணு, திருக்கொடு, வீட்டுமச்சிலையின், ஆற்றல் மேவி, அ, வர, சமராரி, வெம், செருக்கை, மாற்றும், சூரன், மா, மதியின், நன் மரபினன், ஏற்ற, பவுரவ, சு, சந்தரி, இறைவரில், சிறந்து, ஆண்டான்.

குறிப்புரை:- தேற்றம்=முற்றிலும், நோக்கொணு=பார்க்க முடியாத; பார்வையென்பதே இல்லாதொழிந்த என்பதாம், திருக்கு + ஒடு = கண்களோடு, வீட்டுமச்சிலையின் ஆற்றல்= வீட்டுமர் கரத்திற்றுங்கிய வில்லினது திறமையையே, தான் தன்னதாக அபிமானித்து, அ=அந்த, வீட்டுமருடைய வெற்றியைத் தான் பொருந்தியவனுகி, வர=சிறந்த, சமராரி= போர்க்களத்திலெதிர்க்கும் பகைவர்களது, செருக்கை, மாற்றும், சூரன், மா=இலக்குமி (யுடன் பாற்கடலிற்றேன்றிய) மதியின்= சந்திரனை ஆதியாகக்கொண்ட, நல்=சிறந்த, மரபினன்=குலத்தில் பிறந்தவன் (ஆகிய திருதராட்டிரன்) ஏற்ற=தமது குலத்தின் பெருமைக்குத்தக்க, பவுரவ=பூருமன்னனது வழிவந்தவர்களாகிய, சு=நல்ல, சந்ததி=பரம்பரையான, இறைவரில் சிறந்து= அரசர்களைக்காட்டிலும் சிறப்பாக, ஆண்டான்.

"திருக்கு" என்பது "த்ருக்" என்பதன் திரிபு, த்ருக்=பார்வை அல்லது கண், "பவுரவ" அல்லது "பௌரவ" பூரு சம்பந்தமான அல்லது பூருவின் வழிவந்த என்பதாம். கீழ் இராமாயணப் பொருளில்"புர" என்பது "பௌர" எனவும், இதில் "பூரு" என்பதும் "பௌர" எனவும் வந்த தத்திதாந்தங்களாம்.

கனசு பலனரு மங்கையின் கற்பகச் செயலா
லனவ ரதமுநல் லிசைநிலத் தமைவுறப் பெற்ருேன்
வினய விதரணக் கோனென விபுதரவ் விறைவன்
றனது நெடுஞ்சிறப் பினைநிதஞ் சாற்றுவ ரினிதே. 3

இராமாயணப் பொருள்: அன்வயம்:-

அ, இறைவன், கன, சு, பலன், அரும், அம், கையின், கற்பக, செயலால், நிலத்து, அனவரதமும், நல், இசை, அமைவுறப் பெற்ருேன், தனது, நெடும், சிறப்பினை, விபுதர், வினய, விதரண, கோன், என நிதம், இனிதே, சாற்றுவர்.

குறிப்புரை:- அ, இறைவன்=அந்த தயரதன், கன= மேகத்தையொத்த, சு=நல்ல, பலன்=பயனை உலகுக்கு விளைவிப்பவன் (பின்னும்), அரும்=பிறர் எவரிடத்துங் காண முடியாத, அம்=ஈந்து அழகினைப் பெற்ற, கையின்=தனது கரத்தினுல், கற்பக=கற்பக மரத்தை யொத்த (அதாவது ஏற்பவருடைய கருத்தறிந்து ஈயும் தன்மைவாய்ந்த) செயலால், அனவரதமும்=சதாகாலமும், விபுதர்=சான்ருேர், வினய= பணிவும், பண்பும், விதரண=திறமை, இங்கு, வில்+நய= விற்போர் புரியும் நேர்மையில், எனலும் ஆம்.

பாரதப் பொருள்: அன்வயம்:-

அவ்விறைவன், கன, சுபலன், அரும், மங்கையின், கற்பு, அகச்செயலால், நிலத்து, வினய, விதரண, கோன், என, அனவரதமும், நல், இசை, அமைவுறப்பெற்ருேன், விபுதர், தனது, நெடும், சிறப்பினை இனிதே நிதம் சாற்றுவர்.

குறிப்புரை:- அவ்விறைவன்=அந்த திருதராட்டிரன்,கன= பெருமைவாய்ந்த, சுபலன்=சுபலனென்னும் பெயருடைய மன்னனது, அரும்=சிறந்த பண்புவாய்ந்த, மங்கையின்=

பெண்ணாகிய காந்தாரியின். அக=உள்ளத்தே கொண்ட, கற்பு செயலால்=சற்றும் வழுவாத கற்பின் தன்மையால், தனது= காந்தாரியாகிய தன்னுடைய (மன்னன் பிறவிக்குருடனாயினும் அவனைத் தெய்வமெனவே கருதி சீரிய பண்புடன் பணியாற்றிய கற்பரசி காந்தாரி யென்பதும், அவளுடைய சிறந்த கற்பைச் சான்றோர் பாராட்டுவரென்பதும் கருத்து) சுபலன்=காந்தாரியின் தந்தை, சகுனியின் தந்தையும் இவனேயாம்.

அமரர் புகழுநல் லாண்மையுற்
றவனரு மனுசோத்
தமனன் னெடும்பொலன் குன்றினைத்
தகர்க்குந்திண் டோளன்
மமதை கொண்டுழ லரசரின்
மதவிரு ளனைத்து
மிமைசெய் முனமகன் றிடச்செயு
மிராசமார்த் தாண்டன். 4

இராமாயணப் பொருள். அன்வயம்:—

அரும், மனுச. உத்தமன். அமரர், புகழும், நல், ஆண்மை, உற்றவன், நல், நெடும், பொலன், குன்றினை, தகர்க்கும், திண், தோளன், மமதை, கொண்டு, உழல், அரசரின், மத, இருள், அனைத்தும், இமை செயும் முன்னம், அகன்றிடச் செய்யும், இராச, மார்த்தாண்டன்.

குறிப்புரை:- மனுச = மனுகுலத்தில் தோன்றியவர்களில், உத்தமன் = சிறந்தவன், அகன்றிடச்செயும் = அழியச்செய்யும், மார்த்தாண்டன்=சூரியன், இராசமார்த்தாண்டன் = சக்ரவர்த்திகளில் சிறந்தவன் என்பதாம். (இதில் தசரத சக்ரவர்த்தியின் சிறப்பு கூறப்பட்டது.)

பாரதப் பொருள், அன்வயம்:—

அவன், அரும், அனுச, உத்தமன், நல், நெடும், பொலன், குன்றினை, தகர்க்கும், திண், தோளன், மமதை, கொண்டு, உழல், அரசரின், மத, இருள், அனைத்தும், அமரர், புகழும், நல், ஆண்மை, உற்று, இமை, செய்முனம், அகன்றிட, செயும், இராச, மார்த்தாண்டன்

குறிப்புரை:— அவன் = அந்த திருதராட்டிரனுடைய, அனுச=உடன் பிறந்த தம்பியரில், உத்தமன்=சிறந்தவன், மூத்தவன் என்றபடி; திருதராட்டிரனுக்குப் பின் பிறந்த, பாண்டு, விதுரன், ஆகிய இருவரில் மூத்தவனாகிய பாண்டுவைக் குறித்து நின்றது "அனுசோத்தமன்" என்னும் சொற்றொடர். இச்செய்யுளில் பாண்டு மன்னனுடைய சிறப்பு புகலப்பட்டது. "அனுச + உத்தமன் = அனுசோத்தமன்" என்பது வடசொற் புணரியல்.

தமையன் வாய்மலர்ந் தருளுமத் தருமநன் னெறிக்குச்
சமன னேனுமோர் சிறிதுளத் தவறுசெய் குவனே
லமரி ழைத்தவ னாற்றலை யழித்திடு மாண்மை
யமைவுற் றெண்டிசை வென்றுல காளுதற் கிசைந்தான். 5

இராமாயணப் பொருள், அன்வயம்:—

தம்+ஐயன், வாய்மலர்ந்து, அருளும் அ, தரும, நல் நெறிக்கு, சமனன், ஏனும், உளத்து, ஓர், சிறிது, தவறு, செய்குவனேல், அவன், ஆற்றலை, அமர், இழைத்து, அழித்திடும், ஆண்மை, அமைவுற்று, எண், திசை, வென்று, உலகு, ஆளுதற்கு, இசைந்தான்.

குறிப்புரை:- தம்=தம்மைப் போன்ற சூரிய குலத்தில் தோன்றிய மன்னர் யாவருக்கும், ஐயன்=தலைவனாகிய மனுச் சக்ரவர்த்தி, மனுவுக்குப்பின்னர் தசரதன் வரையில் தோன்றி மறைந்த மன்னர் யாவரையும் குறித்து நின்றது "தம்" என்னும் சொல்; அ=(உலகத்தார் யாவரும் மேற்கொண்டதாகிய) அந்த, தரும=நீதியின், சமனன் = இயமன் (மனு நீதியைக் காக்கும் பொருட்டு திக்விஜயம் செய்யத்தலைப் பட்டான் தசரதன் என்பதாம்).

பாரதப் பொருள், அன்வயம்:—

தமையன், வாய்மலர்ந்து, அருளும், அ, தரும, நல், நெறிக்கு, சமனன், ஏனும், உளத்து, ஓர், சிறிது, தவறு, செய்குவனேல், அவன், ஆற்றலை, அமர், இழைத்து, அழித்திடும், ஆண்மை, அமைவுற்று, எண், திசையும், வென்று, உலகு, ஆளுதற்கு, இசைந்தான்.

குறிப்புரை:- தமையன் = தனக்கு முன் பிறந்தவன் (திருதராட்டிரன்) அ=(அவன் என்ன சொல்லுகிருனே) அந்த, தரும நல், நெறிக்கு= நடு நிலைமையான நல்ல நீதிமார்க்கத்திற்கு (மாருது) அமைவுற்று = பொருந்தி, (திருதராட்டிரனுடைய ஆணையைக் காத்தற்பொருட்டு திக்குவிஜயம் செய்யத் தலைப்பட்டான் பாண்டுமன்னன் என்பதாம்.)

இரதக் கொடிகளின் கரிச்செவி யினத்தினின் றெழுந்தே
மருவுங் காற்றினுன் முகிலினம் மலைமுழை யடைந்த
புரவித் திரளொடு மாட்படை பூமிசைச் செலவே
யரவி ணுப்பிளப் படைந்தன வாயிரஞ் சிரத்தே. 6

குறிப்பு:— செய்யுள் ஆற்ருெழுக்கு; ஆதலால் அன்வயம் வெளிப்படை. இரதக் கொடியினின்றும், கரியின் செவிகளினின்றும், எழுந்து, மருவும், காற்று எனக் கொள்க. நால்வகைப் படைவெள்ளம் புறப்பட்ட பளுவினுல் பூமியைச் சுமந்திருந்த ஆதிசேடன் சுமை தாங்க முடியாமல் நாக்கினை கடித்துக்கொண்டு சமாளித்த காரணத்தால் அந்நாக்குகள் இரு பிளவுகளாகப் பிளவுண்டன என்பதாம். (உரை இரு காதைக்கும் பொது.)

மரதிர வென்றி

சிந்து மாளவ மராட நாடகரு ணுட
சிங்கள நரேசரின்
மந்த ராசல நிகர்த்த தோள்வலிமை
மாற்றியுள்ளுவகை பூத்தனன்
குந்தி மத்திர தராதி போத்தமரின்
கோதிலாதழகு வாய்ந்தரும்
விந்தை யுற்ருெளிரு மாதரை விரைவின்
மேவிமாண்புற வரித்தனன். 7

இராமாயணப் பெருள்:- செய்யுள் ஆற்ருெழுக்கு, அன்வயம் அவசியமில்லை. மராட=மகாராட்டிரம், நாட=சோழ தேயம், தராதிப + உத்தமர் = தராதிபோத்தமர் (வட சொற் புணரியல்) மா=விசாலமான, தரை=பூமியை, வரித்தனன்= வயப்படுத்திக்கொண்டான், பிற எளிது (இதனுல் தயரதனுடைய ஆண்மை புகழப்பட்டது)

பாரதப் பொருள்:- கீழ் இரண்டடிகளில் பாண்டு மன்னனுடைய ஆண்மையும், அடுத்த இரண்டடிகளில் அவனது திருமணமும் உரைக்கப்பட்டன. குந்தி, மத்திர, தரா, அதிப, உத்தமரின் என்பதை குந்தி தரா அதிப; மத்திர தரா அதிப எனக் கூட்டுக. குந்தி தரா அதிப=குந்தி தேயத் தலைவனுடையவும், மத்திர தரா அதிப = மத்திர நாட்டுத் தலைவனுடையவும், மாதரை=பெண்களை, வரித்தனன்=திருமணம் புரிந்தனன், குந்தி தேயத் தலைவனுடைய மகள் = குந்திதேவி, மத்திரநாட்டுத் தலைவனுடைய மகள்=மாத்திரிதேவி, தரா + அதிப = தராதிப (வட சொற்புணரியல்)

கோசலா வனிப ஞேடு கேகயனு மகத
மன்னவனுங் குறுகியே
மாசறத் தொழுது நல்கு மாவொளிர
மணிக ளைக்கர மலர்க்கொடே
தேச மாண்புற விழைத்து வன்குகுர
சேர கேரள விதர்ப்பபூ
மீசவீரரொ டெதிர்த்து வென்றிமுர
சார்ப்ப வெஞ்சம ரியற்றவே 8

இராமாயணப் பொருள், அன்வயம்:-

கோசல, அவனிபனோடு, கேகயனும், மகத மன்னவனும், குறுகி, மாசு,அற,தொழுது நல்கும், மா, ஒள், இரமணிகளை, கரம், மலர், கொடு, மாண்புற, தேசம், இழைத்து, குகுர, சேர, கேரள, விதர்ப்ப, வன், பூமி,ஈசரொடு எதித்து, வென்றி, முரசு, ஆர்ப்ப, வெம், சமர், இயற்ற, (ஓடினர் என மேல் செய்யுளில் வினை முடியும்).

குறிப்பு:— கீழ் இரண்டடிகளில் தசரத மன்னனுடைய திருமணங்களும், அடுத்த இரண்டடிகளில் அவனது வீரமும் உரைக்கப்பட்டன, அவனிபன் = அரசன், அவனி+ப:=அவனிப: என்பதுதமிழில் "அவனிபன்" எனவாயிற்று. அவனி=பூமி. ப=பதி அல்லது தலைவன், ஒள் = அழகிய, இரமணிகள் = பருவ மங்கையர், கர, மலர், கொடு = மலர் போன்ற கரங்களால் பிடித்து (பாணிக்கிரகணம் செய்துகொண்டு என்பதாம்), தேசம்=தேஜம் பொலிவு என்பதாம்.

(திருமணத்தால் அப்பெண்களைப் பொலிவுறச் செய்து என்பது), குகுரம் = கூர்ச்சரம். இதனுல், கோசல அவனிபனுடைய மகள், கௌசலையையும், கேகய தேசத்தலைவனுடைய புதல்வி கைகேயியையும், மகத மன்னனுடைய செல்வி சுமித்திரையையும் தயரதன் திருமணம் செய்துகொண்டமை புகழப்பட்டது.

பாரதப்பொருள்:- அன்வயம்;

கீழ்க்காட்டியதே இக்காதைக்கும் பொருந்தும். ஆயின், ''மா வொளிர மணிகளை'' என்பதை மா + ஒளிர் + அம் + மணிகளை எனப் பகுத்துப் பொருள் கொளல் வேண்டும். மா = ஈடிலாத சிறப்புடன், ஒளிர் = ஒளியை வீசத்தக்க பெருமை வாய்ந்த, அம் = அழகான, மணிகளை = நவமணிகளை, கரமலர்கொடு = தனது கரங்களால் பெற்றுக்கொண்டு. மாண்புற = அந்த, கோசல, கேகய, மகத நாட்டு மன்னர்கள் தங்களுக்கு நேர்ந்த ஆபத்து தவிர்ந்ததே என்று பெருமையடையும்படியாக, தேசம் = அவர்களுக்கு முகப் பொலிவுண்டாகும்படி இழைத்து என்பதாம். பிற எளிது.

ஓடினர்சிலர் விரைந்து மேல்வரலை
 யுற்று நோக்கிநனி நீள்குகை
நாடினர்சிலர் அதிர்ந் தெழும் முரசி
 னுற்றயங்கி யடர்காட்டிடை
கூடினர்சிலர் உயர்ந்த தேரினுறு
 கொடியினத் தசைவினுலுளம்
வாடினர்சிலர் அமர்க்களத் திலுயிர்
 வாழுதற்கு வழிதேடினர். 9

அன்வயம்:-

மேல்வரலை, சிலர், நனி, உற்று, நோக்கி. ஓடினர், நீள் குகை நாடினர், அதிர்ந்து எழும், முரசினுல் சிலர் தயங்கி அடர் காட்டிடை கூடினர், உயர்ந்த தேரில் உறும் கொடியினது அசைவினுல் சிலர் உளம் வாடினர். அமர்க்களத்தில் உயிர் வாழுதற்கு சிலர், வழி தேடினர்.

குறிப்புரை:- மேல்வரலே=மேன்மேலும் பெருகி தம்மைப்பின் தொடர்ந்து வருவதை, முரசினுல்=பேரிகையின் பேரொலியினுல், அமர்க்களம் = போர்க்களம், ஓடி ஒளிந்தவர்கள் போக எஞ்சியவர்கள் ஆண்மையுடன் எதிர்த்துப்பொருது தோல்வியுற்று உயிர் வாழ வழி தேடிக்கொண்டனர் என்பதாம். 'ஓடினர்' முற்றெச்சம்.

இதில் சிலேடை கிடையாது. உரை இருகாதைக்கும் பொது.

ஒய்ந்த னர்சிலர்த னுக்குணத்தினெழு
    மோதை யான்மருளு மானெனப்
பாய்ந்த னர்சிலர்வெகுண்டு வீரர்தமை
    பயமுறுத்ததுமுழி பார்மிசைச்
சாய்ந்த னர்சிலர்விடுத்த கூர்ம்பகழி
    சார்ந்து மார்பிடைபு காமுனம்
மாய்ந்த னர்சிலர் மதிக்கு மன்னனது
    வன்மை யாற்படு களத்தரோ. 10

அன்வயம்:—

மதிக்கும், மன்னனது வன்மையால் படுகளத்து சிலர் ஒய்ந்தனர். தனு, குணத்தின் எழும், ஓசையால், மருளும், மான் என, சிலர், பாய்ந்தனர், வீரர்தமை வெகுண்டு, பயமுறுத்துமுழி சிலர் பார்மிசை சாய்ந்தனர், விடுத்த, கூர்ம்பகழி, சார்ந்து, மார்பிடை புகாமுனம் சிலர் மாய்ந்தனர்.

உரை தெளிவு, இருகாதைக்கும் பொது.

போரி டையதிக வேக மோடுசது
    ரங்க சேனைநனி போகலால்
பாரிடைவலிய கற்க ளும்பொடிக
    ளாயெழும்புழுதி பரவியே
காரி டையிடியி னுர்க்கும் வன்முரசு
    வான்பிளக்கசுர கங்கையி
னீரிடைவடிய நேரி டாதளறு
    போன்றுறைந்ததனை நீக்குமே 11

குறிப்பு:— செய்யுள் ஆற்ரெழுக்கு அன்வயம் தேவைப்படாது. உரை இருகாதைக்கும் பொது. "கங்கையின் நீர்" என்பதை கங்கை + இன் + நீர் (இன் = இனிமையான) எனக்கொள்ளின் சிறப்புறும். வான் பிளக்க அதனை நீக்கும் = பிளவுண்ட வானத்தினுடைய அப்பிளவை அடைக்கும் என்பதாம்.

புரவி வன்குரம டர்ந்து தாக்குறலும்
பூதலத்தினெழு மென்றுகள்
பரவி நின்றவெளி யோடு யர்ந்திலகு
படுக ளக்கரிக ணோக்குமோர்
திரவி யல்புறுதி சைக்க ரித்திரள்செ
ருக்கை மாற்றியுயர் சென்னியில்
விரவி நின்றதரை யைத்த ரித்ததனை
வென்ற வோவெனவியப்பரே 12

அன்வயம்:-

புரவி வன் குரம் அடர்ந்து தாக்குறலும், பூ, தலத்தின் நின்று எழும், மென் துகள், அ, வெளியோடு, பரவி, உயர்ந்து, இலகும், (அதைக் கண்டு) படுகளக்கரிகள் (தமது) உயர், சென்னியில், விரவி நின்ற, தரையை, தரித்து, திர, இயல்பு, உறும் திசை, கரித்திரள், செருக்கை, மாற்றி, அதனை வென்றவோ, என, நோக்குவோர், வியப்பர்.

குறிப்பு:— உரை இருகாதைக்கும் பொது. வன் = உறுதியான, குரம் = குளம்பு, அடர்த்து = வலிமையாக, பூ = பூமியாகிய, தலம் = இடம், தரித்து = சுமந்துகொண்டு, திர = நிலையான, இயல்பு = சுபாவம் (எட்டுத்திக்கிலும் தன் தனக்கு ஏற்பட்ட திசையினின்று சிறிதும்பிசகாமல் நிற்கும் இயல்புடைய என்பதாம்) அதனை = அந்த யானையினத்தை, இதனல் புரவிகள் பாய்ந்தேடும் வேகத்தால் தாக்குற்ற நிலப்புழுதி வானத்திற் கிளம்பி அடர்ந்து படர்ந்து நின்றமையும், போர்க்களத்துக் களிறுகளின் தலைகளுக்கு மேல் படர்ந்த அப்புழுதியை நோக்குவோர் நிலத்தைத் தாங்கும் திக்குயானைகளின் வலிமையென்னும் செருக்கைப்போக்கி நிலத்தைத் தாங்குவதில் அவற்றை வென்றனவோ எனப் பார்ப்போர் வியப்பரென்பதுவும் கூறப்பட்டது.

திரமை பூண்டதுர கக்குரம்புழுதி
சேர்த லாலிறுகு சிந்துவைக்
கருமை போன்றமர் களத்து நின்றுலவு
களிறி னந்தமது கைகளா
லருமை மாமத மழைசொ ரிந்து விரைவாக
மீண்டுநிறை விப்பதாற்
பெருமை வாய்ந்திலகு சிந்து ரங்களெனும்
பேர்வ கித்துலகி லோங்குமே. 13

குறிப்பு:— சிந்து=கடல், குதிரைப் படையின் குளம்படி பட்டுக் கிளப்பிய புழுதி பரவி இறுகிப்போன கடலிடத்தே யானைகள் தமது மதநீரைக்கொண்டு நிரப்பிய காரணத்தால் யானைக்கு ''சிந்துரம்'' என்ெருரு பெயருண்டாயிற்று என்பது கருத்து, திரமை=திறமை எதுகை நோக்கி வல்லினம் இடையினமாயிற்று. இது இருகாதைக்கும் பொது.

அவதாரிகை:- இனி, மேல் மூன்று செய்யுட்களில் மன்னன் வெற்றியுடன் நகர் புகுந்தமை கூறப்படுகிறது

கம்பீர வேதியிலக் கணஞ்செறிந்து
துலங்குமதக் கரிக ளோடும்
பம்பாரு மாரட்டக் காந்தாரச்
சிந்துபவப் பரிகளோடும்
வெம்போரி னின்றெதிர்ந்த வேந்தரைவென்
றிலகுபடை வீரரோடும்
வம்பாரும் பூங்குழலார் நிலஞன்கு
சாதியெழில் மாதரோடும். 14

குறிப்பு:— உரை இருகாதைக்கும் பொது. ''கம்பீரவேதி'' என்னும் இலக்கணங்கள் முற்றிலும் அமைந்து விளங்கும் மத யானைகள், ''கம்பீரவேதியிலக்கணம்'' என்பதாவது; தோல் உரிக்கப்படினும், குருதி பெருகினும், தசை சிதைவுறினும், துன்பத்தைப் பொருட்படுத்தாது உயிர் பிரியுந்தனையும் போரிடும்குணமுடைமை 'கம்பீரவேதி' எனப்படுமென்று 'மிருகசர்மியம்' என்னும் வடநூலும்,

யானைகள் தமக்குக் கொடுக்கும் பயிற்சியை விரைவில் தெரிந்துகொள்ளும் தன்மை உடைமையும் ''கம்பீர வேதி''யே என்றறியத்தக்கதென்று ''இராசபுத்திரீயம்'' என்னும் வடநூலும் சாற்றும் என்பர். பம்பு+ஆர்+ உம் = பம்பாரும் = பாய்ந்தோடுந்தன்மை வாய்ந்த, மாரட்ட =மகாராட்டிர தேயம், காந்தார=காந்தாரம் என்னும் தேயம், சிந்து = சிந்துவென்னும் தேயம், பவ = (இவற்றில்) பிறந்து வளர்ந்த பரிகளோடும், நில ஞன்கு = நான்குவித நிலத்தில் வாழ்ந்த, சாதி யெழில் மாதர் = உத்தமமான ''பத்மினி'' சாதியில் தோன்றியழகுவாய்ந்த பெண்கள், ஆகிய இவற்ருேடும் ''ஊர் திரும்பும் உவகை உரைக்கொணுது'' என மேற் செய்யுளோடு விஞமுடியும்.

ஆங்கரச ரனைவரும்போந் தகமகிழ்வோ
டவ்விறைவர்க் கரஞு யேகப்
பூங்கமலப் பூவையொடு பொலிவார்ந்த
புனிதனெனப் புகுந்து போரில்
வீங்குநெடு வீரமத வெம்ப கையை
வென்றுமிக விளங்கும் வேந்தன்
ஓங்குபு கழோடுதன தூர் திரும்பு
முவகையுணர்ந் துரைக்கொணுதால். 15

குறிப்பு:— அரசர் அனைவரும் = சக்ரவர்த்தியாகிய தன்ஞல் வெல்லப்பட்டுக் கீழ்படிந்த மன்னர்களனைவரும். பிற பொது, எளிது.

நீணிலத்திவ் வாறிரத கயதுரகப்
படைத்திரளு நிகரி லாக்கட்
டாணிமுத்தா ரமுமணிகுண் டலமகுட
கடககணை யாழி யும்பொன்
ஞணயமுந் திறையாய்மன் னவரிடங்கைக்
கொடுபாண்டு நற்பே ரென்னும்
பூணரசோத் தமனெனக்கற் ருேர்புகலத்
தனதுபுரம் போந்துய் தானல். 16

இராமாயணப் பொருள்:- இரதம், கயம், துரகம், படை, திரளும், கட்டு = மிகுதியான, ஆணி=உறுதி படைத்த, முத்து ஆரமும், மணிகளும், குண்டலமும் = காதணிகளும், மகுடமும், கடகமும், கணையாழியும், கைக்கொண்டு, கற்ருேர் உத்தமன் எனப்புகழ, பாண்டு = வெண்மை, நல்பேர் = நல்லபுகழ் (தூய்மையான புகழ் என்பதாம்) பூண் + அரசு = மேற்கொண்ட தயரதன் என்னும் மன்னன் தனது வுரம் போந்து உய்தான்= உய்ந்தான்.

பாரதப் பொருள்:- பாண்டு என்னும் நல் பேர் பூண் அரசு =தான் கொண்ட புகழுக்கேற்ப இயல்பாகவே வெண்மை யென்னும் பொருள் தரத்தக்க பாண்டு என்னும் பெயர் பூண்ட மன்னன்என்பதாம். பிற இரு காதைக்கும் பொது.

வேட்டை இயல்.

அவதாரிகை:- தயரத மன்னனும், பாண்டு மன்னனும், வேட்டையாடுங்கால் நிகழ்ந்தவை கூறப்படுன்றன.

குன்ருத புகழுறுமந் நகர்வாசன்
சாலவிளங் குந்தி நேசன்
என்ருர்வத் தறிஞருரை நெடுஞ்சுமித்தி
ரோல்லாச னெதிர்ப்போர் தம்மை
வென்ருத ரிப்போரற் றயர்வோரைக்
காக்கு நெறிமேலு நீதி
நின்ருட்சி புரிநாளில் வனவேட்டைக்
கெழுந்துசெலும் நினைவு கொண்டான் 17

இராமாயணப் பொருள்:- அந்நகர் வாசன்=அந்த அயோத்தி மா நகரில் வசித்துவரும் தயரதன், சாலவிளங்கும்= மிக்க பேரொளியோடு திகழும், திநேகன்=சூரியனைப் பேரன்ற புகழொளியுடையவன்; அல்லது சூரிய குலத்தவன். திநம்=நாள், (அதற்கு) ஈசன்=தலைவன் தினங்களை உண்டாக்கும் தலைவன்

ஆதலால்திநேகன்எனப்பட்டான்சூரியன், ஆர்வத்து = அன்பினுல் அறிஞர் உரை = அறிஞர்களால் புகழப்படுபவனும். சுமித்திர + உல்லாசன் = சுமித்திரோல்லாசன் = சுமித்திராதேவியின் மனம் மகிழும்படியான தன்மை வாய்ந்தவன், பிற எளிது

பாரதப் பொருள்:- அந்நகர் வாசன் = அந்த அத்திஞபுரம் என்னும் நகரில் வாழும் பாண்டு மன்னன், சால இளம் = மிக்க இளமைவாய்ந்த (அழகு வாய்ந்த என்பதாம்) குந்திநேசன் = குந்திதேவியின்மணுளனும், நெடும் = வழிவழிவந்த, சு = நற்குணம் மிக்க, மித்திர = நண்பர்களது உள்ளத்திற்கு, உல்லாசன் = களிப்பையுண்டாக்குபவன். பிற இரண்டுக்கும் பொது, எளிது.

மனச்சோர் வகலும் தினவொழியும்
மலேகள் சூழும்
வனச்சீர் பலனம் புலஞகும்
மதவி லங்கை
யினத்தோ டழிப்ப தானகருக்
கின்ப மேவு
மெனத்தேர்ந் திறைவன் வேட்டைதனக்
கெழுந்தான் மன்னே. 18

குறிப்பு: — உரை இரு காதைக்கும் பொது. எளிது. "மன் ஓ" அசைகள்.

வளஞ்சேர் கான மிசைபுகுந்தி மாத்திரிக் கண்
விளங்கா நிற்கு மஞ்செழுஞ்சீர் விருத்தி யாற்ற
னுளஞ்சோர் வகல வெயினர்குழா முகந்து சூழ
விளங்கோ ளரிபோற் சிலேயொன்றை யேந்தி நின்றே
19

இராமாயணப் பொருள்:- கானமிசை, புகுந்து, இமாத்திரிக் கண், இம + அத்திரி = இமாத்திரி இமம் = பனி, அத்திரி = மலே, (பனிமலேயினிடத்து என்பதாம்) அம் + செழும் + சீர் + விருத்தியால் = அழகிய, செழிப்புற்ற, ஸ்தாவரங்களது அணியோடு கூடிய, வளர்ச்சியினுல்; அல்லது, மஞ்சு + எழும் + சீர் + விருத்தியால் எனலும் ஆம், அகல = நீங்க, ஏந்திநின்று, "எய்யும் கணே" என்று கருத்து செய்யுளோடு தொடரும் "ஏ" அசை. பிற எளிது.

பாரதப் பொருள்:- கானம் + இசைபு = காட்டில் தன்னைத் தொடர்ந்து வருகிற குந்தி, மாத்திரிக்கண் = குந்தியிடத்தும், மாத்திரியினிடத்தும், விளங்காநிற்கும் அம் + செழும் + சீர் = வனப்பு + மிகுந்த + ஒழுங்குமிக்க, விருத்தியால் = காரியங்களினுல், பிற பொது.

எய்யுங் கணைகண் டஞ்சாம லெதிர்த்து வெம்போர்
செய்யுங் களிருே டெண்குசெந்நாய் சிறுத்தை சீயம்
நய்யும் படிசெய் தயர்வடைந்தந் நலிவு தீர
வய்யந் திகழும் வளநதிமா வரைசேர்ந் தானுல் 20

இராமாயணப் பொருள்:- நலிவு தீர = அயர்ச்சி நீங்கும் பொருட்டு, வையம் = உலகத்தில், வளம்திகழும் = நீர்வளத்தோடு என்றும் விளங்கும்படியான, மா நதி = பெருமையுற்ற "தமசை" என்னும் ஆறு, வரை = கரையை, சேர்ந்தான். பிற எளிது.

பாரதப் பொருள்:- வளநதி = வளப்பம் மிக்க நதிகள் பெருகும் தன்மை வாய்ந்ததாகிய, மா = அழகியதான (ஒரு) வரை சேர்ந்தான் = மலைச் சாரலை அடைந்தான். "ஆல்" அசை. பிற பொது.

தலஞ்சேர் நெடிய வெளிமயமா மலையைச் சார்ந்தே
நலஞ்சேர் மருத மசைவனச்சீர் நயந்து சொல்லும்
வலஞ்சேர் மாவில் வனப்புறுமங் கையரின் மாற்றங்
கலஞ்சேர் மார்பன் கேட்டுவகைக் கடலிலாழ்ந்தான் 21

இராமாயணப் பொருள்:- வெளி = வெள்ளி, வெள்ளி மயம் ஆம் அலை = வெண்ணிறத்தோடு கூடிய அலைகளையுடைய நதி, அதனைக்காத்து, நலம் சேர் = உடலுக்கு இன்பம் பயக்கத்தக்க, மரு = நறுமணமுடைய பூண்டுகளாலும், மலர்களையுடைய மரங் கொடிகளாலும் மறைக்கப்பட்டு விளங்கும், தமசை = தமசை ஆற்றினுடைய வனச்சீர் = நீரின் சிறப்புகளை. (வனம் = நீர்) நயந்து = சிறப்பித்து, சொல்லுகிற வலம் சேர் = வலிமையுடைய

மா=பெரிய, வில் வனப்பு உறும்=வில்லைத்தாங்கிய எழிலோடு கூடிய, அம்=சிறந்த, கையரின்=கைகளையுடைய எயினர்களின், மாற்றம்=சொற்கள், கலம் சேர் = அணிகலன்களோடு கூடிய, மார்வன் = மார்புடைய தயரதன், கேட்டு, உவகை கடலில் ஆழ்ந்தான்.

பாரதப் பொருள்:- வெள் = வெண்ணிறமுடைய, இமய மா மலையைச் சார்ந்து=இமயமலைச்சாரலை யடைந்து, மருதம்= காற்று, வேட்டையாடிய களைப்பு தீரும்படி மெதுவாகவீசும்காற்று ஆனதால், நலம் சேர் மருதம் எனப்பட்டது. (அந்தக் காற்றினால்) அசை வனச்சீர்=அசைந்தாடுகிற வனத்திலுள்ள தாவரங்களினது சிறப்புகளைக் கண்டு, நயந்து = அனுபவித்து, சொல்லும் வலம் சேர் = திறமை வாய்ந்தவர்களான மங்கையரின், மாற்றம்= பெண்களாகிய, குந்தி, மாத்திரிதேவிகளது சொற்கள், மா + இல்= மாவில், மா = திருமகளுக்கு, இல் = இருப்பிடமான தாமரை மலர்களையொத்த, வனப்பு=முகத்தின் அழகு, உறும்=வாய்ந்த மங்கையரின் மாற்றம் கேட்டு உவகைக் கடலில் ஆழ்ந்தான் பாண்டு மன்னன்.

சீரா ரருஞ்சூ லனப்பேடை தெளிந்தி லங்கும்
நீரார் பொய்கைக் கமலமதை நினைந்துறல் போ
லேரார் மாரன் றேராக வியங்குந் தென்ற
லூரார் தொழுங்கோன் றூர்புனைமார் பூர்ந்த தன்றே 22

குறிப்பு:— ஊரார் தொழும் கோன்=தயரதன், பாண்டு மன்னன் பிற எளிது.

விரைவா யப்போ தருங்கணையான் மிருக வேட்கை
தரைசேர் முனிவ ரன்ருகத் தாபந் தீர்க்க
வருகோர் கடத்திற் சுகமுகக்கு மகப்பெட் போரா
தொருநீள் கணைசா ரங்கமென்றே யுகைத்தா னந்தோ 23

இராமாயணப் பொருள்:- அன்வயம்:-

அப்போது, தரை சேர், முனிவரன், தாகத்தாபம், தீர்க்க அருகு, ஓர், கடத்தில், சுகம், உகக்கும், மகப்பெட்பு, ஓராது, அரும், கணையான், மிருக, வேட்கை, சாரங்கம், என்று, ஒரு, நீள்,

கணை, விரைவாய், உகைத்தான், அந்தோ; அப்போது=தென்றற் காற்றின் இன்பத்தில் திளைத்திருந்த போது, தரை சேர்=அந்த தயரதன் வேட்டையாடுங் காட்டை அடைந்த, முனிவரன்= ஒருதவச்சிரேட்டனுடைய, தாகத்தாபம்=நீர்விடாயை, தீர்க்கும் பொருட்டு, அருகு=அந்த தயரதன் இருந்த இடத்திற்கு அருகே அந்தத் தமசை நதியினிடத்து, கடத்தில்=பாத்திரத்தில், சுகம்= தண்ணீர் ('சுகம்' வடசொல்) உகக்கும் = மொண்டுகொண்டு இருக்கும், மகபெட்பு=அந்தமுனிகுமாரனுடைய சிறந்தபண்பினை, ஓராது, அரும் கணையான்=சிறந்த அம்புகளை உடைய அத் தயரதன், மிருக வேட்கை=விளங்குகளை வேட்டையாடும் விருப்ப மிகுதியினால், சாரங்கம்=யானை (தானோ) என்று, உகைத்தான்= பிரயோகித்தான். நீர் மொள்ளும் ஓசை பிறந்த இடத்தையுன்னி தான் இருந்தபடியே அம்பு எய்தான் என்பது.

பாரதப் பொருள்:- அன்வயம்:

அன்று, தரை சேர், முனிவர், அ, வேள், கை, அரும், போது, கணையால் (ஏற்பட்ட) ஆக, தாபம், தீர்க்க, அருகு, ஓர், கடத்தில், மிருக, சுகம், உகக்கும், அகப் பெட்பு,ஓராது, சாரங்கம், என்று (எண்ணி) ஒரு நீள், கணை, விரைவாய், உகைத்தான், அந்தோ.

அன்று = (பாண்டு மன்னன் இளைப்பாறியிருந்த) அன்று, தரைசேர் = அந்தக் காட்டையடைந்த, முனிவர் = தம்பதிகள் (கணவனும், மனைவியுமாக வாழும் முனிவர்கள்) அ=எவ் உலகத்தாரையும் காமத்திலாழ்த்தும் திறமை வாய்ந்த) அந்த, வேள் = மன்மதனுடைய, கை = கரத்திலுள்ள, அரும் = சக்தி வாய்ந்த, போது=மலர் (என்னும்), கணையால் = அம்புகளால், (ஏற்பட்ட) ஆக=உடலில் (தோன்றிய). தாபம்=காமவெப்பத்தை தீர்க்க=தனித்துக்கொள்ளும் பொருட்டு, அருகு=அம்மன்னன் இருந்த இடத்திற்கருகில், ஓர் = தனிமையான, மலைச்சாரலில், மிருக=மான் (வடிவங்கொண்டு), சுகம் = (காம) இன்பத்தை, உகக்கும் = அனுபவித்துக்கொண்டிருந்த, அகப் பெட்பு = (அம் முனி தம்பதிகளுடைய) உள்ளக் களிப்பினை, ஓராது=சிந்தித்துப் பாராமல், சாரங்கம்=மான் (தானே என்று எண்ணி), ஒரு நீள், கணை உகைத்தான்=தானிருந்தபடியே அம்பை பிரயோகித்தான்.

வந்தே பகழி தைக்கமுனி மகிமேல் வீழ்ந்தீங்
கந்தோ! எந்தாய்! இறந்தேனென் றரற்று மோதை
செந்தேன் மலர்த்தார் புனைமார்பன் செவிதாக் குறவே
நைந்தோ ளுகி யுளம்பதைத்து நாட லுற்றான் 24

இராமாயணப் பொருள்:- முனி = முனிகுமாரன், மகிமேல் = நிலத்தில் மஹி என்பது மகி எனவாயிற்று, மஹி = பூமி, எந்தாய் = "அம்மா" என்னும் துன்பக் குறிப்பு, தார்புனைமார்பன் = தயரதன், நைந்தோன் ஆகி = இரக்கமும், கவலையுமுடையவனாகி, நாடல் உற்றான் = ஆற்றுமணலில் வீழ்ந்து அரற்றும் முனிகுமாரனிடம் சொல்லத் தொடங்கினான். செய்யுள் ஆற்றொழுக்கு; அன்வயம் தேவைப்படாது.

பாரதப் பொருள்:- முனி = முனிதம்பதிகள், வீழ்ந்து = உண்மையுருவத்தோடு விழுந்து, தார்புனைமார்பன் = பாண்டு மன்னன், பிற பொது.

தற்பிழை யுணர்ந் திரங்கல்.

மேவுஞ் சலத்தின் மௌனியுகம் வீழ்தற் கேது
தாவுங் கணையின் கொடுஞ்செயலோ தபன னீன்ற
தேவன் கருத்தோ, விதிப்பயனோ தெரியே னென்றே
சீவன் றுறப்பான் றுயருறுவா ரருகிற் சென்றான் 25

இராமாயணப் பொருள்:- சலத்தின், மேவும் = தண்ணீரின் பொருட்டு அங்கு அடைந்த, மொனி = முனிகுமாரனது, யுகம் = உயிரானது வீழ்தற்கு, ஏது = காரணம், கணையின் கொடும் செயலோ, தபனன் ஈன்ற தேவன் = இயமதருமன், (தபனன் = சூரியன்), சீவன் துறப்பான் துயர் உரும் = உயிர்பிரிதலால் துன்பப் படுகின்ற முனிகுமாரனுள்ள, வார் = தண்ணீரின் அருகில், சென்றான்.

பாரதப் பொருள்:- மேவும் = அங்குற்ற, மௌனியுகம் = இரு முனிவர்களும், (யுகம் = இரண்டு) சலத்தில் = சஞ்சலத்தினுல், (துன்புற்று என்பதாம்) வீழ்தற்கு ஏது = அம்பினுல் தாக்குற்று விழ காரணம், கொடுஞ் செயலோ, கருத்தோ, விதிப்பயனே என்று, துயர் உறுவார் = துன்பப்படுகின்றவர்களின், அருகில், சென்றுன்.

சென்றே தமிலா முனிவன்மொழி செவியுற் றங்தோ
வின்றேன் வேட்டைக் கிசைந்தனமென் றேங்கி வேந்த
னன்றே வியவெங் கணைத்தணறன் னகன்ற மார்பி
னின்றே யாவி குலைப்பதுபோ னிலை தவிர்ந்தே 26

இராமாயணப் பொருள்:- ஏதம் இலா = மனத்திற் களங்கம இல்லாத, முனிவன் மொழி = முனிகுமாரன் கூறியதை (தான் நீருக்காக ஆங்குப் போந்த காரணத்தை), செவியுற்று. வேந்தன் = தயரதன், ஏவிய, வெம், கணை, தணல், தன், அகன்ற, மார்பினின்று = நெஞ்சில் தைத்து, ஆவி = (தன்னுடைய) உயிரை, குலைப்பதுபோல் (எண்ணி) நிலைதவிர்த்து 'அயர்வுற்றுன்' என மேல் செய்யுளில் வினை முடியும்.

பாரதப் பொருள்:- வன்மொழி = கடுஞ்சொற்களை. வேந்தன் = பாண்டு மன்னன். பிற இரண்டுக்கும் பொது.

மானெறி யுறும ருங்கு
மாரனம் பெடுப்ப வேகித்
தானினி தாகத் தாபங்
தணிப்பதற் கணுகுங் காலை
யானையோ வென்று நன்காய்ந்
தறிகிலா தெய்த வாளி
யூனமின் முனிவ ராயு
ளொழித்ததென் றயர்வு ற்றுனல் 27

இராமாயணப் பொருள்: அன்வயம்:-

மால், நெறி, உறும், அரும், குமாரன், அம்பு, எடுப்ப, ஏகி, இனி, தான், தாக, தாபம், தணிப்பதற்கு, அணுகும் கால், நன்கு, ஆய்ந்து, அறிகிலாது, யானையோ, என்று எய்த, வாளி, ஊனம், இல், முனி, வர, ஆயுள் ஒழித்தது, என்று, அயர்வுற்றுன்.

மால் = பெருமை தங்கிய, நெறி = சன்மார்க்கம், அரும் குமாரன் = தவத்தாற்றேன்றிய மகன், அம்பு = தண்ணீர், எடுப்ப = கொண்டுவரும் பொருட்டு, ஏகி = (ஆங்கு) சென்று, இனி = இனிமேல் திரும்பிச்சென்று, தாபம் = விடாய் (பெற்றேர்களுடைய நீர்விடாய் தீர்ப்பதற்காக), அணுகுங் கால் = அந்தத் தமசைநதி யருகில் சேர்ந்தபோது, எய்தவாளி = நான் பிரயோகித்த அம்பு, வர = சிறப்புற்ற, ஆயுள் = உயிரை. பிற எளிது.

பாரதப் பொருள்: அன்வயம்:-

மான், நெறி, உறும், மருங்கு, மாரன், அம்பெடுப்ப, வேகி, தான், இனிதாக, தாபம், தணிப்பதற்கு, அணுகுங்காலை, யான், ஐயோவென்று, நல்கு, ஆய்ந்து அறிகிலாது, எய்த வாளி, ஊனம், இல், முனிவர், ஆயுள் ஒழித்தது என்று அயர்வுற்ருன்.

மான்நெறி = மானினது வழியைக் கடைப்பிடித்து. அம்பு எடுப்ப = கணைகளை பிரவேசிக்க (ஆதலால்), வேகி = வெந்து (தாபமுற்று என்பதாம்), தாபம் = காமத்தாபத்தை, அணுகுங்கால் = ஒருவரையொருவர் கூடியிருந்த சமயத்தில், வென்று = பல தேயங்களைச் செயித்தும், பிற எளிது.

தரணிபன் பகழிவாதை தரிக்கொணு
    தகன்ற கானத்
திருவர மைந்தன் றேற்றுஞ் செயலிதென்
    றுணரா ஞகிப்
பெருகிட ரினங்கண் மேவப் பெற்றவர்
    பசும்பொற் ருளி
னருகெனை யமையச் செய்வ தறமென
    வயர்ந்து நின்ருன் 28

இராமாயணப் பொருள்: அன்வயம்:-

திரு, வர, மைந்தன், பகழிவாதை, தரிக்கொணுது அகன்ற, கானத்தில், கண், பெருகு, இடர், இனம், மேவ, பெற்றவர், பசும், பொன், தாளின் அருகு, என்னை, அமையச் செய்வது, அறம், என்ன, தரணிபன், தேற்றும் செயல், இது என்று உணராஞகி, அயர்ந்து நின்ருன்.

திரு=அழகுமிக்கவனும், வர=வரத்திஞல் தோன்றியவனு மான, மைந்தன்=அந்தமுனிகுமாரன், (தயரதனைப்பார்த்து சொல்லுகிருன்) கண்=கண்களிடத்தே, பெருகு, இடர், இனம் மேவ=மிகுந்த துன்பங்களெல்லாம் ஏற்பட்ட காரணத்தால் பார்வையற்ற (பார்வையே யில்லாத குருட்டுத்தனங்கொண்ட என்பதாம்) பெற்றவர்=தன்னை யீன்றவர்களான வயது சென்ற முனிவர்களின் அமையச்செய்வது=கொண்டுபோய்ச் சேர்ப்பது அறம் என=உனக்கு தர்மமாகும் என்று கூற தரணிபன்=தய ரதன் தேற்றும் செயல்=அச்சிறுவனுக்குத் தேறுதல் கூறுவது உணரான் ஆகி, அயர்ந்து=ஏங்கி, நின்ருன்.

பாரதப் பொருள்:- இருவர்=முனி தம்பதிகளிருவரும், பகழி வாதை=அம்பு தைத்தபடியாலேற்படும் துன்பத்தையனுபவிப் பதைக் கண்டு, தரணிபன்=பாண்டு மன்னன். தரிக்கொணுது= கண்ணுல் கண்டு சகிக்கமாட்டாதவஞகியும், தேற்றும் செயல்= அவர்களைச் சாந்தப்படுத்துங்காரியம், இன்னதுதான் என்று உணராதவஞகியும், பெருகு=வளர்ந்துவரும், இடர் இனம்= துன்பப் பெருக்கினை, கண்மேவப் பெற்று=தன் கண்களில் பொருந்தியவஞகி, (இரக்கமான பார்வையும், கவலையும், அச்சமும், துன்பமும், நீர்ப்பெருக்குமுடைய கண்களுடையவனாய் என்பதாம்) அவர்=இம் முனிவர்களுடைய, தாளின் அருகு= பாதங்களுக்கருகில், அமையச் செய்வது=இனி இதற்குச் செய்ய வேண்டிய பரிகாரம் எனை=என்ன (என யோசித்து) அயர்ந்து நின்ருன்.

நிகழுறு மகவை வேந்தன் நேர்மையா
    மெனமேற் ருங்கித்
திகழுதம் மருங்கை யொன்றச்
    சேர்த்துமெய் நடுங்கப் பேசும்
வகையுண ராது சிந்தை வருந்தவாய்
    குழரக் கண்ணீர்
மிகமலிந் துதிர வாங்கு விளைந்தவை
    விளம்ப லுற்ருன் 29


இராமாயணப் பொருள்:- வேந்தன்=தயரதன். நேர்மையாம் என=(கீழ்ச் செய்யுளில் முனிகுமாரன் "பெற்றவர் பசும் பொற்றாளின் அருகெனை அமையச்செய்வது அறம்" ஆகும் என்று இறைஞ்சியதைச் சிந்தித்து) அதுவும் நேர்மைதான் என்று தனக்குள் தீர்மானித்தவனாகி, நிகழுறு மகவை=அந்தத் தமசைநதிமணற் பரப்பில் உயிர் துடித்துக்கொண்டு விழுந்து கிடக்கும் முனிபுத்திரனை. மேல் தாங்கி=எடுத்துத் தோளில் சுமந்துசென்று, திகழும்=அவ்வனத்தில் மகனை எதிர்பார்த்துக் கொண்டு விளங்குகிற, தம்=அம்முதிய முனிதம்பதிகளின், மருங்கை=அருகினில், ஒன்றச் சேர்த்து=அவர்கள் தடவிப் பார்க்கும்படியாக மிகச் சமீபத்தில் படுக்கவைத்து, ஆங்கு= அத்தமசை நதியினிடத்து, விளைந்தவை=அக்குமாரனுக்கு ஏற் பட்ட துயரங்களை, விளம்பலுற்றான்.

பாரதப் பொருள்:- ஏந்தல்=பெருந்தகையாகிய பாண்டு மன்னன், நிகழ் உறும்=நிரபராதிகளாகிய முனி தம்பதிகளின்மீது அம்பு எய்ததனால் தனக்கு ஏற்பட்டதாகிய, அக, வைவு= அங்குள்ளவர்கள் வெளிப்படையாக நிந்திப்பதற்கு அஞ்சி உள்ளுக்குள்ளேயே தன்னை நிந்திக்கும்படியான வசைச் சொற்கள், நேர்மையாம் என=பிறர் தம்மை நிந்திப்பது மிகவும் தக்கதே யென்று கருதி, மேல் தாங்கி=அந்த நிந்தனைகளை ஏற்றுக்கொண்டு திகழும்=வில்லும் அம்பும் தாங்கிய தழும்புகளோடு விளங்கத் தக்க, தம்=அரசனாகிய தமது, அரும் கை=சிறந்த கரங்களை, ஒன்றச் சேர்த்து=கூப்பிக்கொண்டு (வணங்கிய வண்ணம் என்பதாம்) அங்கு விளைந்தவை=அவ்வனத்தில் தன்னுடைய மதிமயக்கத்தால் ஏற்பட்டவைகளை, விளம்பலுற்றான். அக, வைவு, என்பவற்றை, அகம்=பாவம், வைவு=நிந்தனை, எனப் பொருள் கொள்ளுதலும் தகும்.

அநகநின் பாலகற்றீ தாற்றினேன்
கொடியே னனத்
திநகர னிறைகுலத்த தீசன
யோத்தி மன்னன்
எனலுமத் தவக்கோன் காதுற்
றெரிகனல் மெழுகு போலத்
தனதுள முருகி வீழ்ந்தான்
சகிக்கொணுத் துயரத் தம்மா 30

இராமாயணப் பொருள்:- அநக=பாவமற்ற புண்ணிய சுரூபியே, (தயரதன் கண்ணற்ற முனிவரைவிளித்தல்) நின் பாலகன்=உம்முடைய அருங்குமாரனுக்கு, தீது ஆற்றினேன்= கொடுமை செய்துவிட்டேன், நான்=நான் (யாரெனில்), அத்தி நகரன்=வானத்தில் விளங்கும் அந்த சூரியனுடைய, இறை குலத்து=அரச பரம்பரையில் தோன்றிய, அதீசன்=ஒரு தலைவன், அயோத்தி மன்னன்=இப்போது அயோத்தி நகரத்துக்கு மன்னனாயிருக்கிறேன், எனலும்=என்று சொல்லியவுடனே, அத்தவக்கோன் = பிறவிக்குருடனாகிய அந்தத்தவச் சிரேட்டன். உருகி வீழ்ந்தான், ஈங்கு தவக்கோன் என்றும், உருகி வீழ்ந்தான் என்றும் முனிவனை மட்டும் குறிக்கப்பட்டிருப்பினும், உபலக்ஷணத்தால் முனி பத்தினியையும் கொள்ளத்தக்கதாம்.

பாரதப் பொருள்:- அநக=புண்ணியவானே (பாண்டு மன்னன் தனதம்பினால் துன்பப்படும் முனிவனை விளித்தல்) நின்பால் = உன்னிடத்தில், அகல் = மிகப் பரந்ததாகிய, தீது ஆற்றினேன் = கொடுமையைச் செய்துவிட்டேன். நான், கொடியேன்=நான் மகாபாவி (நான் யாரென்னில்) அத்தி நகரன்= அத்தினாபுரியில் வாழ்பவன், இறைகுலத்து அதீசன்=மன்னர் குலத்தில் தோன்றிய ஒருதலைவன், அயோத்தி=பிறரால் வெல்ல முடியாத வலிமைவாய்ந்த, மன்னன்=பாண்டு மன்னனாவேன். எனலும்=என்றுரைத்ததும், பிற பொது, இதிலும், 'அநக' 'தவக்கோன்' 'வீழ்ந்தான்' என்னும் சொற்களை முனிவனை மட்டும் குறிப்பதாயிருப்பினும் உபலக்ஷணத்தால் முனிபத்தினியையும் கொள்ளத்தக்கதாம்.



ஓம்

மன்னன் சாபமுறுதல்

நெஞ்சினில் தைத்த வாளி
நிருபன்கைப் பெயர்த்த லோடும்
அஞ்சுதன் பிராண வாதை
யம்முனி சகிக்கொ ணுது
விஞ்சுமிவ் விளங்கு மார
வேட்கையை யழிப்பச் சீர்த்தி
துஞ்சிய தயவி ராச
தூய்குலத் துதித்த வேந்தே 31

இராமாயணப் பொருள்:- நிருபன்=தயரதன், அம்முனி= அந்தக் கண்ணிழந்த முனிவன், அம்+சுதன்=அழகிய தனது மைந்தன் படுகிற, பிராணவாதை=பிராணஹிம்ஸையை. சகிக் கொணுது=மைந்தன் அலறுவதைக்கேட்டு சகிக்கமாட்டாமல், (கதறுகிருன் முனிவன்) அயவிராச=அஜமகாராஜனுடைய, தூய்குலத்து=களங்கமற்ற வமிசத்தில், உதித்த வேந்தே=பிறந்த தயரதமன்னனே, விஞ்சும்=எங்களுக்குப் பிறகு உயிர்த்திருக்கக் கூடிய, இவ்விளங்குமார=இந்த இளமை வாய்ந்த எங்கள் குமாரனுலடையக்கூடிய, வேட்கையை=ஆவலே, அழிப்ப=நீ அழிக்கிறபடியால், கீர்த்தி=உனது புகழெல்லாம், துஞ்சியது= அழிந்துவிட்டதே, இங்கு தமது புதல்வன் இறந்து படுகிருனே என்ற துயரத்தோடு மன்னனுடைய புகழும் அழிந்ததேயென்று இரங்கியவாறும் புலப்படுகின்றது.

பாரதப் பொருள்:- அம்முனி=அந்த மான் வடிவங் கொண்டிருந்து அம்புபட்டமாத்திரத்தில் ஆகிய துன்பத்தால் உண்மை வடிவத்தோடு அலறுகிற அந்த முனிவனுனவன் அஞ்சு=உயிர் பிரிவதற்கு அஞ்சும்படியான, தன்=அம்முனிவன், பிராணவாதை=பிராண சங்கடத்தை, சகிக்கொணுது=தாங்க

முடியாதவனாய், இராச=சந்திரனை முதலாகக்கொண்ட தூய் குலத்து=பரிசுத்தமான குலத்தில் உதித்த, வேந்தே=பாண்டு மன்னனே விஞ்சும்=அதிகரித்திருந்த, இ=இந்த, விளங்கும்= வெளிப்படையாக உனக்குத் தெரியும்படியாக இருந்த, மார= மன்மதனுடைய, வேட்கையை=ஆவலை அழிப்ப=நீ கெடுத்த படியினால், கீர்த்தி துஞ்சியது=உனது சிறப்பெல்லாம் அழிந்த விட்டதன்றோ!

வனமிசை வைகு மெங்கள் மாதவ மைந்த னேவா
மனமகி ழுறவி யற்று மங்கையா தரவை மாற்றி
கனவர தசர,தேசா கவுரவ குணவி லாசா
இனகுல பாண்டு ராச விசையற வசையுற் றாயே 32

இராமாயணப் பொருள்:- கன=பெருமையும், வர=மேன் மையும் பொருந்திய, தசரத=தசரதன் என்னும் பெயர் பூண்ட ஈசா=தலைவனே, கவுரவ குணவிலாசா=சிறந்த குணங்களால் பொலிபவனே, வனமிசை வைகும்=வனத்தில் வசித்துக் கொண்டிருக்கும் தன்மை வாய்ந்தவர்களாகிய, எங்கள், மாதவ= மிக்க தவத்தால் உதித்த, மைந்தன்=குமாரன், மனமகிழுற= எங்கள் மனம் மகிழும்படியாக, ஏவா=எங்கள் ஏவுதலில்லாமலே குறிப்பறிந்து, இயற்றும்=எங்களுக்குத் தொண்டு செய்யக்கூடிய, அம்=அழகிய, கை ஆதரவை மாற்றி=எங்கள் கைத்துணையைக் கெடுத்து அதனால், இனகுல=சூரியகுலத்துதித்த, அச=உன் தந்தையாகிய அஜமகாராஜன் அசைந்த, பாண்டுரா=தூய்மை யான, இசை=புகழெல்லாம், அற=உன்னால் அழிந்ததென்று சொல்லும்படி, வசையுற்றாய்=பழியை யடைந்தவனானாய்.

பாரதப் பொருள்:- கன, வர=பெருமையும், மேன்மையும், த=தரத்தக்க, சர=அம்புகளால், தேசா = பொலிபவனே, கவுரவ=குருவமிசத்தார்க்குரிய, குணவிலாசா=சிறந்த குணங்கள் படைத்தவனே, இனகுல=சந்திர குலத்தவனே, நீ வனமிசை வைகும் எம்கண்=இவ்வனத்தில் வாழும் எம்மிடத்தில், மாதவ= திருமாலின், மைந்தன்=குமாரனாகிய மன்மதன், ஏவா=மலர்க் கணைகளைப் பிரயோகிக்க (அதனால்) மனம் மகிழுற இயற்றும்= உளங்களிக்க இன்பந்துய்ப்பதற்குக் காரணமாயிருந்த மங்கை= பெண்ணின் (மனைவியின்) ஆதரவை, மாற்றி=கெடுத்து, பாண்டு ராச=ஏ பாண்டுமன்னனே, நீ இசையற வசையுற்றாய்=புகழ்கெட நிந்தனையை யடையலானாய்.

செகத்தினி லுனைப்போற் றீமை
செயமனந் துணிந்தோர்க் கெந்த
யுகத்தினி லேனுஞ் சீர்பெற்
றுய்ந்நெறி யுணரே னென்று
மிகத்துடி துடிப்புற் றுவி
விடும்பொழு தயர்ந்து சோரு
மகத்துயர் சகிக்கோ ணுதம்
மாமுனி சினந்து ரைப்பான் 33

இராமாயணப் பொருள்:- ஆவி விடும்பொழுது மிகத் துடிப்புற்று அயர்ந்து சோரும், மகத்துயர்=மகனுடைய பிராண வாதனையை, சகிக்கொணுது அம்மாமுனி=அந்தக் கண்ணிழந்த பெருமுனிவன், செகத்தினின்......உணரேன் என்று, சினந்து உரைப்பானுயினுன்.

பாரதப் பொருள்:- அம்மாமுனி=கணையால் தாக்குண்ட அந்த பெருமுனிவன், அகத்துயர்=மனோவேதனையை சகிக் கொணுது, சினந்து உரைப்பானுயினுன்.

அம்மருங்கு மாரனினை மாதுயரம்
பகமணுக வாற்றுங் காலை
யெம்முயிரை விடுவதுபோற் குவலயமித்
திரகுலத்தோய் இயல்புற் றேங்கும்
உம்முயிரன் றிழந்திடுக வெனச்சபித்துச்
சதியொடுவிண் ணுலகஞ் சேர்ந்தான்
தம்முளத்தாய்ந் தறிந்தியற்ருச் செயலிலுறு
மிடுக்கணெவர் தடுக்க வல்லார் 34

இராமாயணப் பொருள்:- குவலய=உலகத்துக்கு, மித்திர= நண்பனுகியொளிர்கிற சூரியனுடைய, குலத்தோய், அம்= அழகிய குணங்களோடு கூடிய, அரும்=அருமையான, குமாரன்= உன்னுடைய மைந்தன், நினை=உனக்கு, மா=மிக்க, துயர்= துக்கமென்னும், அம்பு=பாணத்தை, அகம் அணுக = உள் உள்ளத்தைத் தைக்கும்படியாக, ஆற்றுங்காலே=செய்யக்கூடிய காலத்தில், உம் உயிர் எம் உயிரை (யாம்) விடுவதுபோல் அன்று இழந்திடுக=இழக்கக்கடவாய் என, சபித்து, விண்ணுலம் சேர்ந் தான், ஈற்றடி கவிக்கூற்ரும், மித்திரன் என்று சூரியனுக்கும் பொருளாதலால், குவலயத்தில் அரசனுக விளங்கும் சூரிய குலத் தவனே என்பதும் ஒக்கும்.

பாரதப் பொருள்:- குவலய = நீலோற்பல மலருக்கு, மித்திர = நன்பனுகிய சந்திரனுடைய, குலத்தோய் = வமிசத்தில் தோன்றியவனே, மாரன் = மன்மதனுனவன், நினை = உன்னை, மாது = பெண்ணினுடைய, உயர் = சிறந்த, அம் = அழகிய, பகம் = நிதம்பத்தை அணுக ஆற்றுங்காலை = சேரும்படி தூண்டுங் காலத்தில், அம்மருங்கு = அதே செயலில் ஈடுபட்டுள்ள சமயத்திலேயே, உம்முயிர் இழந்திடுக, எனச்சபித்து விண்ணுலகம் சேர்ந்தான், பிற எளிது, பொது.

ஏங்கிமனங் தளர்வடைந்தஞ் சுதன்ருபங்
தரிக்காம லிவ்வா ருவி
நீங்கமுனி சபித்தமொழி மகப்பேரற்
ருழலுங்கால் நேர்ந்த தென்பால்
ஈங்கிதினி துயர்விளேப்ப வியங்தோங்கு
மெமதுடலை யிகழ்ந்து நீத்தல்
ஆங்கியலு மாவுளத்தென் ருகுலமவ்
வேல்வெந்தன் றணிந்து சென்ருன் 35

இராமாயணப் பொருள்:- முனி = முனிவன், அம் = குணங்களில் சிறந்த, அதன் = மகனுலேற்பட்ட, தாமம் = துயரத்தை, சகிக்காமல், இவ்வாறு மனம், ஏங்கி, தளர்வு அடைந்து, ஆவி = எனது உயிர், நீங்க = பிரியவேண்டியதென்று, சபித்த மொழி, மகப் பேறு அற்று = புத்திரபாக்கியமில்லாமல், உழலுங்கால் = அதற்காக நான் வருந்திக்கொண்டிருக்கும் இச்சமயத்தில், என்பால், நேர்ந்தது = எனக்கு வாய்த்தது, இது = இந்த சாபமானது, இனி = இனிமேல், ஈங்கு = இவ்வுலகத்தில், உயர் விளேப்ப = சிறப்பைத் தருதலாயிருதலால், ஆங்கு = எனது உயிர் நீங்கப்போகிற அக்காலத்தில், எமதுஉடலை,இ கழ்ந்து, நீத்தல் = விட்டுவிடுதல், இயலும் = சாலப் பொருத்தமுடையதாகும், ஆ! = ஆஹா! (என மகிழ்ந்து) அவ் வேல் வேந்தன் = தயரதன், ஆகுலம் = மக்கட்பேறு இல்லையேயென்ற துயரமானது தணிந்து சென்ருன் = அடக்கம் பெற்றவனுகி நகரத்துக்கேகினுன். (முனிவருடைய சாபத்தின்படி தனதுயிர் நீங்குதற்கு மகன் காரணமாதல் வேண்டும், இப்போது மகப்பேறில்லை. மகப்பேறின்றி நமதுயிர் நீங்கப்போவதில்லை. ஆகவே, இறப்பதற்கு மகன் தோன்றியே தீர வேண்டும். இச்சாபமொழி நமக்கு நன்மைபயத்தது என்று மகிழ்ந்தான். தயரதன், என்பதாம்).

பாரதப் பொருள்:- இவ்வாறு, முனி, அஞ்சு = மரண பயத்தினுல், தாபம் (ஏற்பட்ட) துன்பத்தை, தரிக்காமல்= சகிக்கமாட்டாமல், ஆவி நீங்க=(என்னை) ஆவி நீங்கக் கடவதென்று சபித்த மொழி, மகப்பேறு அற்று, உழலுங்கால் என்பால் நேர்ந்தது, ஈங்கு=இவ்வுலகத்தில், இது=இந்தச் சாபமானது.இனி=மகப்பேறுக்காக மனைவியைக் கூடுங்காலத்தில் துயர்விளைப்ப=பெருந்துக்கத்தைத் தருவதாயிருப்பதால், அங்கு= மனைவியைக் கூடும் அக்காலத்தே எமது உடலை இகழ்ந்து நீத்தல்=சரீரத்தைவிட்டுப் பிரிதல், இயலுமா=முடியுமா? என்று (துக்கித்துக் கொண்டு) அவ்வேல்வேந்து = அந்தப்பாண்டு மன்னன், ஆகுலம்=மிக்க துயரத்தை, அன்று=சாபம் பெற்ற அன்று, உளத்து அணிந்து சென்ருன்=மனத்தே கொண்டவனுகி நகரத்துக்குச்சென்ருன்.

மன்னனது நிலை.

புரமேகிப் பவமகலப் புரவலன்கற்
ருக்களிறு புரவி யீட்டந்
திரமேவு மமுதொடுநற் றிரவியமு
மாடையணித் திரளுங் கொண்டே
பரமோத்த மாசிரியர் பரவசமுற்
றகமகிழப் பரவச் செய்த
பிரமாதக் கொடைச்செயலாற் பிரமாச்சு
தேசுரரும் பிரமித் தாரே 36

உரை இருகாதைக்கும் பொது, புரம்=நகரம், பவம்=பாவம், கன்று+ஆ=கற்ரு, திரம்=ஸ்திரம், பரம+உத்தம+ஆசிரியர்= பரமோத்தமாசிரியர் = மிகச்சிறந்த குருமார்கள், பிரமாதக் கொடை=அளவிறந்த ஈகை, பிரம+அச்சுத+ஈசுரர் = பிரமாச்சு தேசுரர் =திருமூர்த்திகள்.

பரமோத்தமாசிரியர், பிரமாச்சுதேசுரர் இவை வடமொழிப் புணரியல்.

அன்றுமுத லாடையணி கலனகமு
    கந்தணன்பா லளித்த தன்றி
யொன்றிநிகழ் மாதரைவா ழரண்மனைநீத்
    தரணியத்தி லுழல்விப் பானேன்
என்றினிதங் கரிபுரத்தோ ரிசைந்துவந்து
    தொழவரச னிறுத்தி மிக்க
நன்றியுறு மாட்சியுற்றான் மானுகர்வாய்ந்
    தகத்தொழுக னலமா மென்றே 37

இராமாயணப் பொருள்:- அரசன் = தயரதன், அன்று முதல், ஆடை, உயர்ந்த ஆடைகளையும், அணிகலன் முதலான வைகளையெல்லாம், அகம் உகந்து=மனச் சம்மதத்தோடு, அந்தணன்பால் அளித்து=தனது குலகுருவாகிய வசிட்டனிடம் ஒப்படைத்து, அது அன்றி=அச்செயல் மட்டுமல்லாமல், அரி= திக்குவிசயகாலத்தில் பகைவர்களாகி எதிர்த்த, புரத்தோர்= நகரவாசிகளாகிய சிற்றரசர்கள் (பால் இரக்கங்கொண்டு) மா= செல்வம் மிக்க, தரை=அவரவர் நாட்டில், வாழ் அரண்மனை= சுகமாக வாழத்தக்க அரண்மனையை, நீத்து=தனியேவிட்டு ஓடிப் பதுங்கி வாழும்படி,அவர்களை,அரணியத்தில் உழல்விப்பானேன்= காட்டில் ஏன் உழலும்படி செய்யவேண்டுமெனக்கருதி, ஒன்றி= நல்லாட்கள் மூலமாக அவர்கள் தன்னையணுகும்படி செய்து, (அச்சிற்றரசர்கள்) இசைந்து = சம்மதித்து வந்து தொழ = தன் இடத்தே வந்து வணங்கி நிற்க, இனிது=மகிழ்ச்சியோடு, மால்= பெருமையுடன், நுகர் = புசிப்புகள் (போக்கியங்கள் என்பதாம்) வாய்ந்து = அனுபவித்துக்கொண்டு, அகத்து = அவரவர் இருப்பிடத்தில், ஒழுகல்=சௌக்கியமாக வாழ்ந்து வருதல் நலம் ஆம் என்று=இன்பம் பயக்குமென்று, நிறுத்தி=அவர்களை, அவரவரிருப்பிடத்தில்வசிக்கச்செய்து, நன்றியுறும்=செம்மையான ஆட்சியுற்றான்=அரசாட்சியை நடத்தினான்.

பாரதப்பொருள்:- அரசன் = பாண்டுமன்னன், அன்று முதல் ஆடை அணிகலன்களை யெல்லாம், அகம்உகந்து = மனச் சம்மதத்தோடு, அணன் பால் = தனது அண்ணனாகிய திருதராட்டிரன் வசம், அளித்து =ஒப்புவித்து, (தான் தவஞ்செய்யக்கருதி) அது அன்றி = அவ்வாறு எல்லாச் செல்வங்களையும் தமையனிடம் சேர்ப்பித்ததோடு நில்லாமல், ஒன்றுநிகழ்=தன்னை

விட்டு பிரியாமலிருக்கிற மாதரை = மனைவியராகிய, குந்திதேவி யையும், மாத்திரிதேவியையும், அரண்மனை நீத்து = அரண்மனையி னின்றும் பிரிந்து, அரணியத்தில் உழல்விப்பானேன் என்று = காட்டில் உழலும்படி ஏன் செய்யவேண்டும் எனக் கருதி அவர்களை அரண்மனையிலேயே தங்கும்படி சொல்லிக்கொண்டிருந்த சமயத்தில், தம் + கரிபுரத்தோர் = தமது அஸ்தினபுரவாசிகளான பெரியோர் சிலர், இசைந்து வந்து தொழ = மன்னனது மொழிகளின் படி தாமும் உடன்பட்டு ஆங்குப்போது அத்தேவிகளை நகரத்திலேயே தங்கும்படி வணங்க, நிறுத்தி = மனைவியரை அப்பெரியோர் சார்பில் நிறுத்திவிட்டு, மிக்க = மிகுந்த, நன்றி யுறும் = நன்மைமட்டும் பயப்பதான, மாட்சியுற்று = பெருமையுடன், ஆன்மா நுகர் = ஆத்மானுபவத்தை, ஆய்ந்து = விசாரித்துக் கொண்டு, ஒழுகல் நலம் ஆம் என்று = சான்றோருடன் வசித்து இருப்பது நன்மையாகுமென்று கருதி "புகன்று" என அடுத்த செய்யுளுடன் தொடரும்.

புகன்றமைந்த வரவாழ்வை யடையகிலா
தயர்வுறுந்தன் பூவை மாரோ
டகன்றொளிரம் புவனமிசை மாதவன்பா
லகவிருத்தி யமையச் செய்தே
யிகழ்ந்துரைக்கு முட்பகைமை யகலசமா
திகரணத்தி னிறைமை பூண்டாங்
குகந்தெழும்பி ரணிதியொடு பிரதான
புருடவியல் புணர்ந்தோங் கினனால் 38

இரமாயணப் பொருள்:- புகன்ற = மைந்தனில்லார்க்குச் சுவர்க்கம் இல்லை என்று பெரியோர்களால் சொல்லப்பட்ட, மைந்த = மக்களோடு கூடிய, வர = சிறந்த, வாழ்வை அடைய இலாது, அயவு உறும் = கவலைப்படுகின்ற, தன் = தனது. பூவை மாரோடு = மனைவியரோடு, மாதவன் = திருமாலினுடைய, பாலக = மைந்தனாகிய மன்மதனுடைய, விருத்தி = செயல்களை, அமையச் செய்து = பொருந்தும்படி செய்துகொண்டும் (இல்லற இன்பம் துய்த்து என்பதாம்), இகழ்ந்து = தன்னை இகழ்ந்து, உரைக்கும் = பேசுதற்குரிய, உட்பகைமை = மனதில் பகை உடையவர்கள், அகல = ஒழியும்படியாக, சம = சமமானதும்,

அதிக=மேம்பட்டதுமான, ரணத்தின்=யுத்தத்திற்கு, இறைமை பூண்டு = தலைமை வகித்து, ஆங்கு = அப்போது, உகந்து= சம்மதித்து, எழும்=உற்சாகத்தோடுகிளம்புகிற, பிரணிதியொடு= தூதுவரோடும், பிரதான புருடர் = முக்கிய அமைச்சற்குழுவினுடைய, இயல்பு = கருத்துக்களை, உணர்ந்து = அறிந்து, ஓங்கினன்=சிறந்து விளங்கினான்.

பாரதப் பொருள்:- புகன்று=அத்தினாபுரத்துபெரியோர்க்கும் தன் மனைவியர்க்கும் சொல்லியும், (அம்மனைவியர் கணவனைப் பிரியச் சகியாதவர்களாகி) அமைந்த=உத்தமப் பெண்களுக்கு உகந்ததாகிய, வர=கணவனோடு (இருக்கும்) வாழ்வை இல்லற வாழ்க்கையை, அடையகிலாது = அடைவதற்கில்லையென்று, அயர்வு உறும் = கவலைப்பட்ட, தன்=தனது, பூவைமாரோடு= மனைவியரோடு(சென்று) அகன்று=பரந்து, ஒளிர் =விளங்குவதும், அம்பு = நீர்ச்சுனைகளும் யாறுகளுமுடையதுமான, வனமிசை= மரங்கள்டர்ந்த காட்டினிடத்தே, அகவிருத்தி = தனது மனோ விருத்தியை, மாதவன்பால் = திருமாலினிடத்தில், அமையச் செய்து = ஈடுபடும்படியாக நிறுத்தி, இகழ்ந்து உரைக்கும்= சான்றோர்களால் இழிவாகப் பேசப்படுவனவான, உட்பகைமை= மனத்தின் விரோதிகள் அதாவது: காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னும் ஆறுவகை மனப்பகைகள், அகல=உள்ளத்தைவிட்டு நீங்கும்படியாக, சமாதி= நிட்டையில் படிந்த, கரணத்தின் = புலன்களினது, இறைமை=தலைமையை, பூண்டு = வகித்து (ஐம்புலன்களை அடக்கி மனத்தைச் சமாதி நிலையில் சேர்த்து என்பது கருத்து) ஆங்கு=அந்த நிட்டையில், உகந்து எழும்=படிந்து தோன்றுகிற, பிரணிதியொடு=ஆனந்தத் தோடு, பிரதான புருட இயல்பு, உணர்ந்து = பிரதான = மாயையினுடையவும், புருட = பரப்பிரம்மத்தினுடையவும், இயல்பு=தன்மைகளை, உணர்ந்து=நன்கறிந்து, ஓங்கினன்= நிட்டையிற்சிறந்து விளங்கினான், மாயையின் இயல்பாவது, உலகத்தின் தோற்ற ஒடுக்கங்களுக்குக் காரணமாகியும், பரம் பொருளை அறியவொட்டாமல் மறைத்து நின்று உலகியலையே சாசுவதமெனக்காட்டி நிற்குந்தன்மையது; பரப்பிரம்மத்தினுடைய இயல்பாவது, மாயையைக் கடந்து, சுயம் பிரகாசமாய் சித்து உருவமாய், ஆனந்தமே வடிவாய், காலாதீதமானதாய், அழியாத தன்மை முதலியவுடைத்தாயிருப்பது,

ஓம்

மக்களில்லாக் குறை யிரத்தல்

ஏற்றும் புகழவ் விறைவானம்
பிரத்த வியல்பி னரிவருக்கம்
மாற்றுந் திறமை வாய்ந்திடினும்
மகப்பே றற்ரு ரகிலமெலாம்
போற்றுஞ் சுவர்க்க நகர்வாயில்
புகப்பெ ருரென் றறமு ணர்ந்தோர்
சாற்றுஞ் சுருதி யாய்ந்துமனந்
தளர்வுற் றயர்ந்து வருந்துமந்நாள் 39

இராமாயணப் பொருள்:- ஏற்றும் புகழ் = இயற்றும் புகழ், புகழுக்குரிய செயல்களையே செய்பவன் என்பதாம். அ+இறை = அந்த தயரதன், வான்+அம்பு+இரத்த+இயல்பின் = வான்= சிறந்ததாம், அப்பு = அம்புகளைப் பிரயோகிக்கும் செயலால், இரத்த=குருதிப்பெருக்குடைய, இயல்பின்= தன்மை வாய்ந்தவர் களாக, அரிவருக்கம் = பகைக்கூட்டத்தை, மாற்றும் திறமை= அழிக்கும் திறமை, வாய்ந்ததிடினும் = வாய்க்கப் பெற்றவனுய் இருந்தும், அந்நாள்=தான் அரசாட்சி புரிந்த நாட்களில், மகப் பேறு அற்ருர், அகிலம் எல்லாம் போற்றும், சுவர்க்க நகர் வாயில் புகப்பெருர் என்று அறம் உணர்ந்தோர் சாற்றும் சுருதிஆய்ந்து, வருந்தும்=கவலைப்படுவானுயினுன்.

பாரதப்பொருள்:- அ + இறை = அந்த பாண்டு மன்னன், வானப்பிரத்த இயல்பின்=வனத்தே நிலை கொண்டு வாழுந் தன்மையினுல் = வானப்பிரஸ்த ஆஸ்ரமத்தை மேற்கொண்ட காரணத்தால் என்பதாம், வானப்பிரஸ்த ஆஸ்ரமம் என்பது பிரம்மசரியம், கிரஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் நான்கு வித வாழ்க்கையில் மூன்ருவது தன்மையுடைய வாழ்க்கை என்பதாம், அரிவருக்கம்=பகைக்கூட்டம் இங்கு பகையென்பது உட்பகை அதாவது: காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் ஆறுவகையுட்பகை(இவை மனத்தின் மாறுபாடான வடிவங்கள்) வனத்தில் முனிவரோடு தானும் ஒரு

முனிவனென்றெண்ணும்படி தியானம், தவம் முதலியவற்றின் வலிமையால் மனவிகாரமாகிய தீய குணங்களையழிக்கும் திறமை பெற்றவனாக விளங்கினாலும் அந்நாள். வருந்தும்=வருந்துவானான், பிற இருகாதைக்கும் பொது.

தாரார் குருவ ரோத்துங்கன்
    றனது தார மதிசீலப்
பேரார் விரதம் பூண்டொழுகும்
    பெட்பு நோக்கி யிசைந்தவன்பால்
தீரா மிடிதீர்த் தருளுகெனச்
    செழுங்கற் பகஞ்சேர்ந் திரப்பவன்போல்
ஏரார் மைந்த ரிலாதுமன
    மேங்குஞ் செயலை யெடுத்துரைப்பான் 40

இராமாயணப் பொருள்:- தனது தாரமதி குருவரோத்துங்கன், தனது உதாரமதி=நடுநிலைக் குணமுடையவனான, குருவர+உத்துங்கன் = பெரியோர்களில் மிகச்சிறந்து விளங்குபவனான வசிட்டன், குரு=பெரிய, பெரியோன், ஆசாரியன் என்னும் பொருள்களிருத்தலால் ஏற்றபடி கொள்ளத்தகும். வர=மேன்மையாக, உத்துங்கன்=சிறந்தவன், வர+உத்துங்கன்=வரோத்துங்கன் வட சொற்புணரியல், சீலப்பேர் ஆர்=ஒழுக்கமிக்க புகழ் மலிந்த, விரதம் பூண்டு ஒழுகும் பெட்பு=வைராக்கியத்தோடு வாழும் பெருந்தன்மையை, நோக்கி, இசைந்தவன் பால்,அவன்பால்=அந்த வசிட்டனிடம்,இசைந்து=சேர்ந்து, செழும் கற்பகம் சேர்ந்து தீராமிடி, தீர்த்து அருளுக என இரப்பவனைப் போல, (தனக்கு) மைந்தரிலாமையால் மனம் ஏங்கும் செயலை எடுத்து உரைப்பான் (ஆயினான்)

பாரதப் பொருள்:- குரு=குருகுலத்தில் தோன்றிய, வர=சிறந்த (பண்புவாய்ந்த மன்னர்களில்,) உத்துங்கன் = மிக மேம்பட்டு விளங்கும்படியானவன், பாண்டுமன்னன் என்றபடி தனது = தன்னுடைய, தாரம்=மனைவியராகிய குந்தி, மாத்திரி தேவிகள். அதி=மிக்க, சீலப்பேர் ஆர்=தவத்திற்குரிய சிறந்த பண்பு நிறைந்தவர்களாகி, விரதம் பூண்டு=அதற்கேற்ற (புலன் அடக்கம், நிட்டை, ஈசுவர தியானம் முதலியவற்றில் மிக்க பற்றுடைய தன்மையராய்) ஒழுகும், பெட்பு நோக்கி (சிறந்த

கற்புடைய மங்கையராதலால் குந்தி, மாத்திரியாகிய இருவரும் கணவனது தவவொழுக்கத்துக்குக் கேடுண்டாகாதவாறு தாங் களும் தவவொழுக்கத்தை மிகவும் மேற்கொண்டு விளங்கினர்கள். அந்தத்தன்மையைக் கூர்ந்து கவனித்தவனுன, மன்னன்) இசைந்த = அவரிடத்துக் கொண்டிருந்த அன்பினுல் மைந்தர் இலாது மனம் ஏங்கும் செயலே எடுத்து உரைப்பான் (ஆயினுன்)

உற்றே னரசின் வாழ்வறிஞர்
உரைத்த நீதி நூலனைத்துங்
கற்றேன் கொடிய பகைவரொடு
கடும்போர் புரிந்தெண் டிசையும்பேர்
பெற்றே னுலகிற் கோர்மகவைப்
பெறுதற் கின்றி மனக்களிப்பீங்
கற்றேன் இனியக் கவலையறற்
கறைகுவாய் நல் லறமுனியே 41

இராமாயணப் பொருள்:- நல்+அறம்+முனியே=சிறந்த அறங்களையெல்லாம் தவருதுணர்ந்த முனிவரே, (யான்) அரசின் வாழ்வு உற்றேன், ... கற்றேன், ... பேர்பெற்றேன் ... (ஆ னு ல்) ஈங்கு மனக்களிப்பு அற்றேன் (என்ருன் தயரதன்).

பாரதப் பொருள்:- பாண்டுமன்னன் ம னை வி யா கி ய குந்தியினிடம் கூறும் மொழிகள் இச்செய்யுளில் கூறப்படுகின்றன. (பெண்ணே) நான், உற்றேன், ... கற்றேன்...பே ர் பெ ற் றே ன். ஈங்கு மனக்களிப்பு அற்றேன், அக்கவலையறற்கு நல் அறம்= சிறந்த அறவழியை, உனி=உன்னி=நன்கு சிந்தித்தாராய்ந்து அறைகுவாய் (என்ருன்). (முனிவன் சபித்தபடியால், மக்கட் பொருட்டு மனைவியைக் கூடின் மரணம் நேருமாதலால், அவ்வாறு நேராதவாறு மக்கட்பேறடைதற்குரிய நல்ல அற வழியை யுன்னிப்புகலுவாயாக என்றனன்.)

செழுமா தேசி காமணியே
திரமா ரசர மெய்வினையால்
எழுமோர் குழவி பெறுந்தன்மை
யின்றிக் குலேந்தே னம்மதலே
வழுவா மொழிதே னருவிசெவி
வழியே யிதய வயலதனில்
ஒருகா நிற்க நெடும்புளகப்
பைங்கூ ழோங்கி வளர்வதென்ருே 42

இராமாயணப் பொருள்:- செழும்=பரமான்ம யோகத்தில் திளைத்த, மா=பெருமைவாய்ந்த, தேசிகாமணியே=ஆசார்ய சிரேஷ்டரே, திரம்ஆர் = உறுதி வாய்ந்த, அசர = கிழத் தன்மையற்ற மெய்வினையால் = உடற் செயலால், அஜர என்பது அசர எனத்திரிந்தது. ஜரா=கிழத்தனம், அஜரா=அஃதில்லாமை பிற எளிது.

பாரதப் பொருள்:- செழும் = (நல்ல பருவகாலத்தில் கடுந்தவத்தால்) மனச்செழிப்போடு திகழும், மாதே=பெண்ணே, சிகாமணியே=என் தலைக்கணியான இரத்தினம்போன்றவளே, மார, சர = மன்மதபாணத்தினுல் ஏற்படக்கூடிய, திர = உறுதி வாய்ந்த, மெய்வினையால்=உடற்காரியத்தால், பிற பொது எளிது.

குலத்தைப் பெருக்குங் குழவியிலான்
குடிசீ_வனமே வனமாமுட்
புலத்தைப் புலர்த்தும் புதல்வரிலான்
புகுந்த விடமே விடமாம்பூ
தலத்தைப் புரக்குந் தனயரிலான்
றனிவை பவமே பவமாம்வா
னலத்தைப் பயக்கு மதலேயிலா
னயனேற் சவமே சவமாமால் 43

உரை:- இருகாதைக்கும் பொது. சீவனமே, வனம், இடமே, விடம், வைபவமே பவம், நயனேற்சவமே சவம் எனக் கொள்க.

அன்பார் மதிமா னேயிவ்வா
றகிலங் கிலமா வதுமெய்ம்மை
யென்பார் அறிஞர் இவையாய்ந்த
திலேயோ நினது பேருளத்தே
இன்பார் மரபுக் கோரருஞ்சே
யில்லா தயர்வோன் மதத்திலுறுந்
துன்பார் உரைக்க வலார்பணிவேந்
துங்கூர்ந் தியம்ப லரிதெனுங்கால் 44

இராமாயணப் பொருள்:- மதிமானே = அறிவிற் சிறந்த ஆசார்யனே, அகிலம்=முழுவதும், கிலம் ஆவது=நாசமுறுவது, பிற பொது.

பாரதப் பொருள்:- மதி = புத்திவாய்ந்த, மானே = பெண்ணே; மானின் நோக்கையொத்த நோக்குடைய பெண்ணே என்பதனல் யௌவனத்தை உணர்த்தியவாறும். பிற பொது எளிது.

(வேறு)

ஆயிர மெடுத்துச் சாற்றுவதெவனோ
வருஞ்செய லியற்றினு மீன்ற
சேயிலா ரடைதற் கியலுமோ
சுவர்க்கஞ் செய்யவா னதனை யுற்றெளிர
மாயிரு ஞாலத் தேவரநியாயம்
வயங்குமா றுரைகுரு பதிநன்
நேயசிந் தனையாற் றுலங்கின
குலத்தி னேருமித் துயரறவினிதே 45

இராமாயணப் பொருள்:- குருபதி=குருநாதரே, இன (ன்) குலத்தில்=சூரிய குலத்தில் நேரும், இத்துயர், அற = நீங்குவதற்குரிய, வர=சிறந்த, நியாயம்=வழி, வயங்குமாறு = ஏற்படும்படியாக, உரை = சொல்லவேண்டும், பிற பொது, எளிது.

பாரதப் பொருள்:- குரு = குரு என்னும் பெயர்வாய்ந்த, பதி = மன்னனுடைய, நல் = தீங்கற்ற, நேய சிந்தனையால் = அன்பான நல்லெண்ணத்தால், துலங்கு=விளங்கி வருகிற, இனன் குலத்தில்=சந்திரவமிசத்தில், நேரும்=ஏற்படக்கூடிய, இத்துயர் அற, தேவர நியாயம் = கொழுந்தனையேற்கும் தன்மைபோன்ற ஒரு நியாயம், வயங்குமாறு = ஏற்படும்படியாக, உரை = ஒரு யோசனையை நீ சொல்லுவாயாக (தேவர நியாயம் என்பது கணவனற்ற அரசகுலத்து மடந்தையர் மரபு கெடாதிருக்கும் பொருட்டு கணவனுடன் பிறந்தானுடன் கூடி மக்களைப் பெறுதல்; இங்கு தேவரநியாயம் என்பது கொழுந்தனோடுகூடி மகவைப் பெறுவது போன்றதொரு நியாயத்தை என்று கொள்ளத்தக்கது. இதனால் கொழுந்தனில்லாதவிடத்து சான்றோர் விருப்பத்திற் கேற்ப வேறொருவரையுங் குறித்து நின்றது கருதத்தக்கது. இதன்படியே திருதராஷ்டிரன், பாண்டு, விதுரன் ஆகியோர் பிறப்பும் வியாசரால் உண்டானவை கருதத்தக்கது.)

அருகினுஞ் சால வருந்ததி
பதிக்காங் கறையுமவ் விறைப்பெருமா னுன்
னருளைப்பெற் றெழுகும் யான்மகப்
பேறுக் கயர்ந்தயல் பேதைபோன்றழியிற்
பெருமிசை வாய்ந்த வரசுக்கு
மந்நாள் பெற்றநின் பெருமைக்குமின்றிவ்
வரும் இரவீச மரபிற்கும்
அகலா வசைமொழி வாய்ந்திடுமன்றே 46

இராமாயணப் பொருள்:- அ + இறைபெருமான் = அந்த தசரத சக்ரவர்த்தியானவன், அருந்ததி பதிக்கு= அருந்ததி தேவி யின் நாயகனான வசிட்ட முனிவருக்கு, இன்னும் அறையும்= மேலும் சொல்லுவானாயினன், உன் கருணைப்பெற்று ஒழுகும் யான்...அழியின், பெரும்=சிறந்த, இசை=புகழ், அந்நாள்= பண்டைக்காலந் தொடங்கி உன்னை, பெற்ற = ஆசாரியனாகப் பெற்றிருக்கும் நின் பெருமைக்கும், இன்று, இ=இந்த, அரும்= அரிதாகிய, இரவீச = இரவி + ஈச = சூரியதேவனின், மரபுக்கும் வசை மொழிவாய்ந்திடும் அன்றோ.

பாரதப் பொருள்:- அருகு = நெருங்கியிருந்து, இனும்= மேலும், சால=மிகவும், வருந்தும்=துயரப்படுகிற, அதிபதிக்கு= சிறந்த தலைவனாகிய நாயகனுக்கு, அவ் = அந்த, இறை = அரச னுடைய, பெரும் = பெரியவளாகிய, மான்=பெண் = மனைவி 'பெரும் மான்' என்பது குந்திதேவியை யுணர்த்தி நின்றது (இங்கு மன்னனுடைய கவலை தரத்தக்க மொழிகளைச் செவியுற்ற குந்தியும் மனம் வேறுபட்டு மக்களில்லாக் கவலையைத் தானும் மேற் கொண்டவளாகி உரைப்பாளாயினள்) உன் கருணை பெற்று ஒழுகும் யான், மகப்பேறுக்கு, அயர்ந்து அயல் பேதைபோன்று, அழியின், இசைவாய்ந்த அரசுக்கும், பெருமைக்கும், இரவு+ஈச, மரபிற்கும் வசைமொழி... அன்றோ.

சேவைசே ருமது தாரமா மகிமைச்
செயல்புரிந் துதவுதலன்றி
மேவிய விமல விரதசு சீல
விருத்தியைப் பூண்டுநீ ரியம்பும்
ஏவலைப் புரிந்தொ ளிருமருங் கற்பி
னியல்புகை யிழந்திட லாமோ
பாவன மதிய திபதிய தனினும்
பழிப்புரை வேறுமொன் றுளதோ 47

இராமாயணப் பொருள்:- பாவன = புண்ணியத்தோடு கூடிய, மதி = புத்தியைப் படைத்து விளங்குகிற, யதி பதி = முனிவர் தலைவரே = வசிட்டரே. விமலம் மேவிய = தூய்மையோடு கூடிய, விரத = விரதங்களையுடையவரே, (நான்) சு = நல்ல, சீல = ஒழுக்கம் மிக்க, விருத்தியைப் பூண்டு = செயல்களைக் கைக்கொண்டு, நீர், இயம்புகிற, ஏவலை = ஏவுதலை, புரிந்து = செய்து ஒளிரும், மருங்கு, உமது, சேவைசேர் = உமது தரிசனத்துக்கு ஏற்ற உதாரம், ஆம் = தாராளமாகிய, மகிமைச் செயல் = பெருமையுடைய செயல்களை, புரிந்து, உதவுதல் (சிறந்தது) அன்றி (அதைவிடுத்து) நீர் அன்பின் இயல்பு = அன்பின் தன்மை, கையிழந்திடல் ஆமோ? அதனினும் பழிப்புரை வேறு உளதோ?

பாரதப் பொருள்:- அதிபாவன மதி = மிகுந்த தூய்மையான மதியையுடைய, பதி = நாயகனே, உமது = தவத்திலீடு பட்டுள்ள உம்முடைய, சேவை = பணிவிடையின் பொருட்டு சேர் = உம்மைச் சேர்ந்தொழுகுகிற (யான்) தாரம் ஆம் = மனைவிக்கு உரியது ஆகிய, மகிமைச் செயல் = பெருமையுடைய காரியங்களை புரிந்து, உதவுதல் (நன்று) அஃது. அன்றி = அப்படிச் செய்யாமல், விமலம், மேவிய விரதமும், சு, சீலமும் (உடைய) விருத்தியைப் பூண்டு = காரியங்களை மேற்கொண்டிருந்தும், நீர் இயம்பும், ஏவலைப் புரிந்துகொண்டு ஒளிரும் அரும் = அரிதான, கற்பின் இயல்பு = பதிவிரதா தன்மையினை கை இழந்திடலாமோ = (நீர் புகன்ற) = தேவரநியாயத்தின்படி விட்டு விடலாமோ? (அப்படி கற்பையிழந்தால்) அதனினும் பழிப்புரை வேறு ஒன்று உளதோ?

நேமனம் படைத்தே யிலகுமென் பூம
    னேயுளங் கலங்குவ தென்னே
நாமவேல் வேந்தர்க் கிம்முறை புதிதோ
    நவையுரை நண்ணிய துண்டோ
சேமமுற் றவர்சேய் வாழ்ந்தது மிலேயோ
    சீர்பெறும் புத்திர விருத்தி
யாமக மகிழ வுரைக்குமா றியற்றி
    லாயினுங் கடைகுவா யினிதே 48

இராமாயணப் பொருள்:- வசிட்டன் கூற்று; நேமனம் படைத்து=ஒழுக்கம் வாய்ந்துள்ள, என்=எனது பூமானே= அரசனே, என்னே, உளம் கலங்குவது=எதற்காக மனக்கவலே படுவது? யாம்=நான், உரைக்குமாறு=கூறுவதுபோல, மகிழ= சந்தோஷமாக, மகம் = புத்திரகாமேஷ்டியாகத்தை, இயற்ற லாயின்=செய்வாயானல், ஆங்கு=அந்த யாகத்தின் பலனுக, சீர்பெறும் புத்திர விருத்தி இனிதே, அடைகுவாய், இம்முறை= இந்த வழக்கம், நாமவேல் வேந்தர்க்குப் புதிதோ? (அதனுல் அவர்கள்) நவையுரை நண்ணியது உண்டோ, அவர்சேய்= யாகம் புரிந்ததனுல் தோன்றிய அவர்தம் குழந்தைகள், சேமம் உற்று வாழ்ந்ததும் இல்லேயோ.

பாரதப் பொருள்:- பாண்டுவின் மொழி, நேமனம் படைத்து இலகும் என், பூ=அழகிய, மானே=பெண்ணே, உளம் கலங்குவது, என்னே=எதற்காக யாம், அகம் மகிழ=மன மகிழ்ச்சி யோடு, உரைக்கும்=கூறுகிற, ஆறு=வழியில் இயற்றல் ஆயின்= (தேவர நியாயப்படி) செய்வாயானல் ஆங்கு = அதனுல், சீர்பெறும் புத்திர விருத்தி இனிதே அடைகுவாய், பிற பொது.

குலவுமென் பூவை யேகுரு வரன்சொல்
    கொண்டுசெய் காரிய மனேத்துஞ்
சலமிலாப் புகழை யளித்திடு மன்றே
    சாற்றுமிச் செயலியற் றிடினே
பொலிவமர் வேள்வி யனற்றெழில் மிசைசேர்
    புருடனுற் றேன்றிடும் புதல்வர்
உலகமோர் குடைக்கீ ழமைவுறச் செங்கோல்
    ஓச்சுவர் உயிர்களின் புறவே. 49

இராமாயணப் பொருள்:-குலவும்=மகிழ்ந்திருக்கும்சுபாவம் வாய்ந்த, என்னுடைய, பூ+ஐயே=பூவையே, பூ=புவிக்கு, ஐயே=நாயகனே, பூபதியே என்றபடி, குருவரன்=ஆசிரியன், சாற்றும்=நான் சொல்லுகிற, இச்செயல் = இந்த வேள்வித் தொழில், இயற்றிடின், வேள்வி தொழில்=யாக காரியத்தினால், பொலிவு அமர்=தேசு பொருந்திய, அனல்மிசை = வேள்வித்தி யினிடத்து, சேர்=தோன்றுகிற புருடனால்=தெய்வீக வடிவு கொண்டவனால், தோன்றிடும் புதல்வர் செங்கோல், ஓச்சுவர்.

பாரதப் பொருள்:- என், பூவையே=அழகிய பெண்ணே குரு = பெருமைவாய்ந்த, நாயகன் சொல் = கணவனுடைய சொற்களை. சலம்=அசைவு, பொலிவு அமர்=அழகு பொருந்திய வனை, வேள் = மன்மதனுடைய, வியன் = தடையற்ற, நல் தொழில்மிசை=இன்பகரமான காரியத்தின், காரணமாக, சேர்= வந்து கூடுகிற, புருட னால்=ஆடவனால் தோன்றிடும் புதல்வர் செங்கோல் ஓச்சுவர்.

மக்கள் தோன்றும் மாண்பிற்கு உவத்தல்.

நிகழ்ந்தகலைக் கோட்டொடுநன் னீதிநெறி நின்றே
புகழ்ந்துலகு போற்றுமருள் பூண்டவனைக் கொண்டே
திகழ்ந்தெழும கோற்சவநற் செயல்புரியின் மேலோர்
மகிழ்ந்துதொழு சந்ததியாம் மாமரபிற் றோன்றும். 50

இராமாயணப் பொருள்:- நிகழ்ந்த = (தன் தவவலிமை யால் தனக்கு) நேர்ந்த, கலை=மானினது கோடு+ஒடு = கொம்பு போன்ற கொம்பினைத் தலையிலுடையனாகியும், நல் + நீதி நெறி நின்று=சிறந்த நல்லொழுக்க மார்க்கத்தினின்று தவறாதவனாகி, உலகு, புகழ்ந்து போற்றும் அருள் பூண்டவனைக்கொண்டு (கலைக் கோட்டு முனிவனை முன்னிட்டுக் கொண்டு என்பதாம்) மக=யாக மாகிற, உற்சவச்செயல்=விழாக்காரியத்தை, மக + உற்சவம் = மகோற்சவம் வடசொற்புணரியல்புரியின், இம்மாமரபில் சந்ததி= மகவு, தோன்றும்.

பாரதப் பொருள்:- நிகழ்ந்த=(இறைவனது கட்டளையாக) விளங்காநின்ற. கலை=வேதம், கோடு+ஒடு=சிகரத்துடன், கலை+கோடு + ஒடு = கலைக்கோட்டொடு = வேதங்களையெல்லாம் ஆதியோடந்தமாய் நன்கு அறிந்தவனாகியும், நல் = சிறிதும் தவறாத, நீதிநெறி = நியாயமான மார்க்கத்தில், நின்று = நிலைத்திருந்து வாழ்பவனாகியும், (அப்படி நடுநிலைதவறாதிருத்தலால்) உலகு புகழ்ந்து போற்றும் அருள்பூண்டவனைக்கொண்டு (அருள்மிக்க ஒருமகனை கொண்டு என்பதாம்)மகா=சிறந்ததான, உற்சவச் செயல் = மகிழ்ச்சி தரத்தக்க காரியத்தை புரிந்தால், இம் மரபில் சந்ததி தோன்றும், மகா + உற்சவம் = மகோற்சவம் இதுவும் வடசொற் சந்தி.

என்றவனி யம்புதலு மிறைவனிதை யோதும்
என்றனய ருணையின்மு னீசனருண் மேவ
ஒன்றியசு மந்திரவ ரோச்சரணை யுள்ளத்
தொன்றினிது மேவியுள துமதுமொழிக் கேற்ப 51

இராமாயணப் பொருள்:- என்று=இந்தவிதமாக அவன்= அந்த வசிட்ட முனிவன், இறைவன்=தயரதன் இதை ஓதும் = மேற்கூறப்படுவதைச் சொல்லத் தொடங்கினன் ஒன்றன் = எனக்கு விதிக்கப்பட்ட, அயன்ஆணையின்=பிரம்மனதுகட்டளைப் படி, முனீசன் = கலைக்கோட்டு முனிவனுடைய, அருள் மேவ = கருணைப் பெறுவதற்காக, ஒன்றிய = ஏற்கெனவே (என் உள்ளத்தைப்) பொருந்தியுள்ள, சு மந்திர, வர, உச்சரணை = சுமந்திரமந்திரியினுடைய சிறந்த வார்த்தையானது, உள்ளத்து= என் சிந்தையில், உமது மொழிக்கு ஏற்ப = நீர் புகன்ற சொல்லுக் கேற்றபடி, இனிது மேவியுளது=நன்கு பதிந்திருக்கிறது.

பாரதப் பொருள்:- என்று=கீழ்ச் செய்யுளிற் கூறியபடி, அவன்=அப்பாண்டு மன்னன் இயம்புதலும், இறை வனிதை = அரசனது மனைவியான குந்தீதேவி ஓதும் = கூறத்தொடங்கினள், என்றன் அயன்=என் தந்தையான குந்திபோசமகாராஜனுடைய, ஆணையின் = ஏவுதலின்படி (யான்) முனீசன் = தூர்வாச மகா முனிவருக்கு (பணிவிடை செய்து கொண்டிருந்த காரணத்தால்) அருள் மேவ=(அம்முனிவருடைய) அருளின் பெருக்கத்தால், ஒன்றிய=யான்பெற்ற, சு=நல்ல, மந்திர=மந்திரமென்னும்,வர=

சிறந்த, உச்சரணை = வார்த்தையானது, ஒன்று = ஒப்பற்றதாகி உள்ளத்து இனிது மேவியுளது = என் மனத்தில் நன்கு பதிந்திருக்கிறது.

விரைவினத ஞலிலகும் விற்பனரை யாய்ந்தே
தரையதனின் மதலைநனி சார்வுறுசு யேட்டம்
புரையறநி கழ்த்துநெறி புகன்றருளு கென்ஞ
வரைபுயக்கற் பகத்தொளிரு மனைமருவிக் கூறும். 52

இராமாயணப்பொருள்:- அதனுல் = ஆதலால் விரைவின் = உடனே, இலகும் விற்பனரை = கலைக்கோட்டு முனிவரின் தன்மையறிந்து அவரையழைத்து வரக்கூடிய அறிவு படைத்த திறமையாளரை, ஆய்ந்து = தேர்ந்தெடுத்தனுப்பி, தரையதனில், நனி = சிறந்த, மதலை = குழந்தை, சார்வுறு = ஏற்படத்தக்க, சுயேட்டம் = தனது யாகம். ஸ்ஸ + இஷ்டி = ஸ்வயேஷ்டி, என்பது சுயேஷ்டி என்று மாறி இஷ்டி என்பது இட்டம் எனத்திரிந்து, சுயேட்டம், என்றும் வடிவேற்றது. ஸ்வ = தன்னுடைய. இஷ்டி = யாகம். நிகழ்த்தும் நெறி புகன்றருளுக. என்ஞ = என்று (மன்னன்) விண்ணப்பஞ்செய்ய வசிட்டன், மனை = மன்னனை, மருவி = புல்லி கூறுவாருயினன்.

பாரதப்பொருள்:- அதனுல் = ஆகையால், இலகும் விற்பனரை = இலக்ஷிய புருஷராக விளங்கும் மேன்மையாளரை, ஆய்ந்து = சீர்தூக்கி, நனி, மதலை, சார்வுறும், சுய + இட்டம் = உமது உள்ளத்தே சுயமாகத் தோன்றிய விருப்பத்தின்படி சுய = சுயமான இஷ்டம் என்பது இட்டம் எனத்திரிந்தது. இஷ்டம் = விருப்பம் நிகழ்த்தும், நெறி = நடத்தும் வழியை புகன்றருளுக, என்ஞ = என்று (குந்திதேவி) கூற (உடனே மன்னன்) மனை = மனையாளாகியகுந்தியை, மருவிக்கூறும் = (மகிழ்ச்சியால்) தழுவிக் கூறுவானுயினன்.

கனதரும வானியமன் கலையுணர்ந்த மேலோன்
எனவிபுத சீலர்தொழு தேத்தவருள் வோனை
மனமகிழ்ந்து தாரமொடிம் மந்திரத்தி னின்று
வினயமொட ழைப்பினிறை வேறுமென வாய்ந்தே. 53

இராமாயணப் பொருள்:- கன = சிறந்த, தருமவான் = அறங்களை நன்குணர்ந்தவன். நியமன் = புலனடக்கம் வாய்ந்தவன் அல்லது ஒழுக்கமுடையவன் கலையுணர்ந்த மேலோன் = வேதங்களைக் கற்றபெரியோன், என = என்று விபுதசீலர் = ஒழுக்க மிக்க சான்றோர்கள் தொழுது, ஏத்த (அவர்கட்கு) அருள்வோனை = அருள்புரியும்தன்மைவாய்ந்தகலைகோட்டுமுனிவனை தாரமொடு = அவனுடையமனைவியாகியசாந்தாதேவியோடு இம்மந்திரத்தில் = இந்த அரண்மனைக்கு (மந்திரம் = இல்லம்) இன்று அழைப்பின் நிறைவு ஏறும் = காரிய சித்தியாகும், என = என்று வசிட்டன் கூற (தயரதன் அதை) ஆய்ந்து "அழைத்து" "உரைத்தான்" என்று மேல் செய்யுளில் வினை முடியும்

பாரதப் பொருள்:- கன = மிக்க தருமவான் — நடுநிலைமையுடையவன், இயமன் = தென்றிசைக்காவலன் (அப்படிப்பட்ட எமதருமனை) உதாரமொடு = சிறப்போடு இம் மந்திரத்தின் = நீ கற்றுள்ள இந்த மந்திர ஜபத்தினல் அழைப்பின், நிறைவேறும், என = என்று (மன்னன்) ஆய்ந்து, "உரைத்தான்" என அடுத்த செய்யுளில் வினை முடியும்.

நேசமுறு மாமனைவி நேரிழையி னேடே
மாசறவ ழைத்தவனை மண்ணுலகை யாளத்
தேசுபெறு சேயருள் செய்கைபுரி கென்றக்
காசறும னத்தனுங்க ளித்தினிது ரைத்தான். 54

இராமாயணப் பொருள்:- அவனை = கந்தக் கலைக்கோட்டு முனிவனை நேசம் உறும் மா, மனைவி நேரிழையினேடு = சாந்தா தேவியோடு, மாசு கற அழைத்து சேயர் = குழந்தைகள். அருள் செய்கை = தோன்றக்கூடிய வேள்விக் காரியத்தை புரிக என்று அ = அந்த, காசு அறு = களங்கமற்ற, மனத்தனும் = தயரதனும் இனிது, உரைத்தான்.

பாரதப் பொருள்:- மாமனைவி = மூத்தமனைவியாகிய குந்தீ தேவியோடு அவனை = அந்தயமனை, அழைத்து = மந்திரஜபத்தால் வருவித்து, சேயர் = மக்களை அருள் செய்கை புரிக என்று அக்காசு அறுமனத்தன் = அந்தக் களங்கமற்ற சிந்தையுடைய மன்னன், களித்து உரைத்தான்.

நிகழுமறை யோர்மெய்வழி யறவி யல்புன்
னியமனங்கண் முறைபிறழா நிலைநி றுத்திப்
புகழுறுத சேந்திரியச் சேட்டை நீத்துப்
பூரணச மாதிபுரி முனிவ ரோடே
மிகவமல சந்தான மாம கத்தின்
மேவுசெய லாய்ந்தமர ருளங்க ளிப்ப
முகமலர்ந்தவ் விறைவனொரு குறைவு மின்றி
முறையாக நிறைவேற்ற முயன்று னன்றே 55

இராமாயணப் பொருள்:- அவ்விறைவன்=அந்தத் தசரத மன்னன் மனம், கண், முறைபிறழா, நிலை நிறுத்தி தசேந்திரியச் சேட்டை=பத்து இந்திரியங்களினாலேற்படக் கூடிய விகாரச் செயல், நீத்து=நீக்கி, பூரணசமாதிபுரி முனிவரோடு=நிறைவுற்ற நிட்டைபுரியும் தன்மைவாய்ந்த முனிவர்களோடு கூட, நிகழும்= சேர்ந்திருந்து, மெய்வழி=சத்தியமார்க்கத்தையும், அறவியல்பு= அறத்தின் தன்மைகளையும், உன்னிய = சிந்தித்துத் தெளிந்த, மறையோர்=அந்தணர்கள் (செய்கிற) மிக அமர=மிக்க தூய்மை வாய்ந்த, சந்தானம் = குலவளர்ச்சி = புத்திரப்பேறு, ஆம்= ஆவதற்குரிய, புகழ் + உறும், மகத்தின் = வேள்வியின் (பொருட்டு) மேவுசெயல்= ஆகவேண்டிய காரியங்களை, ஆய்ந்து முகம்மலர்ந்து, அமரர் உளம், களிப்ப = களிக்கும்படியாக முறையாக = ஒழுங்கு தவறாமல், நிறைவேற்ற முயன்றான்.

பாரதப் பொருள்:— நிகழும்மறை = சிறந்து என்றும், உள்ளதாகிய வேதத்தினால் ஓர் = உறுதிபடுத்தப்பட்ட, மெய் வழி=உண்மை நெறியினையும், அற இயல்பு=தர்மத்தின் தன்மை களையும், உன்னிய=சிந்தித்துத் தெளிந்த, அவ் + இறைவன் அந்தப் பாண்டுமன்னன் மிக மேம்பட்ட, சுமல = தூய்மையான, சந்தானம்=சந்திப்பு, ஆம்= ஆகக்கூடிய விதமாக, அகத்தில்= உள்ளத்தே மேவு=மேற்கொள்ளத்தக்க, செயல்=வழிமுறைகளை பூரண சமாதிபுரி முனிவரோடு, ஆய்ந்து=ஆராய்ச்சி செய்து, மனம்=சலனமே இயல்பாகவுடைய மனத்தையும், கண் = வெளித்தோற்றங்களை விரைந்து பற்றுத்தன்மைவாய்ந்த கண்ணின் பார்வையையும், முறைபிறழா=தான் குறித்தவிடத் தன்றி வேறிடத்திற்குப் பெயர்ந்து செல்லவொட்டாதபடி

நிலைநிறுத்தி = அசையாதிருக்கும்படி செய்து, தச + இந்திரிய சேட்டை = பத்து இந்திரியங்களின் சேஷ்டைகள், நீத்து ஒரு குறைவும் இன்றி = சமாதிக்கு உரிய புலனடக்கமின்மை, சஞ்சலம் முதலிய குறைபாடுகள் ஒன்றும் இல்லாமல் அமரர் உளம் களிப்ப, முகமலர்ந்து முறையாக = முனிவரிடம் சமாதி புரியும் தன்மையைக் கற்றறிந்த முறைப்படி, நிறைவேற்ற முயன்ருன் = தன் பிரமானந்த சுகத்தையனுபவிக்கத் தொடங்கினன். இதில், சந்தானம் என்பதற்கு சந்திப்பு, சம்மந்தம் அல்லது தொடர்பு என்றும் பொருள்களுள்ளமை வெளிப்படை, ஆதலால் இங்கு "சந்தானம்" என்பது ஜீவாத்மாவானது, பரமாத்மாவோடு தொடர்புகொள்ளும் தன்மை கூறப்பட்டது இத்தகைய தொடர்பு மிகமிகத் தூய தன்மையானது ஆதலால் மிக. அமல என்று இரண்டு அடை மொழிகளோடு கூடி நின்றது மற்றும், இந்திரியம், என்பது பொறிபுலன்கள். அவற்றில் மெய், வாய், கண், மூக்கு. செவி ஆகிய ஐந்தும் ஞான இந்திரியங்களென்றும். வாய், கை, கால் மலக் கழிவு, நீர்க் கழிவு உறுப்புகளிரண்டுங்கூடிய ஐந்தும் கன்மேந்திரியங்களென்றும், கூறப்படும் ஆக பத்துவித இந்திரியங்களாம். இவையே, தசேந்திரியங்கள் எனப்பட்டன. இவற்றில் ஞானேந்திரியங்கள் அறிகருவிகளானதால். இந்த வரிசையில் "வாய்" என்பது சுவையறியும் கருவியாகிய 'நாக்கு' என்று கொள்ளத்தக்கது.

திருநெறிக ளுணர்முனிவ ராக மத்தின்
    றிகழ்மந்தி ரோச்சரணை செயலுந் தேவ
தருநிகர்ம கானலமுற் றிலகுங் கீர்த்தி
    தருமனம லாகாரம் அணிகலத்தோ
டொருபுனித னெழுந்தருள வவன்மா மேனி
    யொளியினைக்கண் டருகிலுளோர் செயலு மின்றி
வெருவிமிக வியந்துபிர மதைமங் தாக்க
    வினைமருவி மகிழ்வொடுகை கூப்பி நின்ருர் 56

இராமாயணப் பொருள்:- திருநெறிகளை, உணர், முனிவர், ஆகமத்தின் = வேத விதியின்படி, திகழ் = அந்த வேள்விக்காக என்று எறிபட்ட, மந்திரங்களை, உச்சரணை = சொல்லுதல், செயலும் = செய்தபோது, தேவதரு நிகர் = எண்ணியதைக் கொடுக்கும் கற்பகத்தையொத்த, மகா + அனலம், மகாபெருமை

வாய்ந்த அனலம்=வேள்வித் தீ, உற்று=அதினின்றும் இலகும், கீர்த்தி, தரும்=புகழ், வாய்ந்த, மன்=பெருமை வாய்ந்ததும், அமல + தூய்மையானதும் (ஆன), ஆகாரம்=உணவு ஆஹாரம் என்பது ஆகாரம் எனத்திரிந்தது (புகழ்வாய்ந்ததும் பெருமையும், தூய்மையுமுடையபாயசம்என்பதாம்) தன்னிடத்தேகொண்டுள்ள கலத்தோடு=ஒரு பாத்திரந்தாங்கியவனுய், ஒரு புனிதன் = ஒப்பற்ற தேவதையான ஒரு மகாபுருடன், எழுந்தருள=கிளம்ப, அருகில்உலோர், மந்த+அக்க=மந்தாக்க, மந்த=ஒளிகுறைந்த, அக்க=கண்களினது, விழி மருவி, மகிழ்வொடுகைகூப்பிநின்ருன், (முனிவர்கள் வேத விதிப்படி வேள்வியை நடத்திக்கொண்டிருந்த போது அந்தப் பெருமை வாய்ந்த வேள்வித்தீயினின்று புகழும், பெருமையும், தூய்மையும் வாய்ந்த பாயசமடங்கப் பெற்ற ஒரு பாத்திரத்துடன் ஒரு தேவன் தோன்றவே; ஆங்கிருந்தவர்கள் அவனது உடல் ஒளியைக் காணச் சக்தியற்றவர்களாகி மங்கிய பார்வையுடையவர்களாயும், அச்சமும், வியப்பும் உடையவராகியும், மகிழ்ச்சிதோன்ற வணங்கி நின்றனர் என்பதாம்)

பாரதப் பொருள்:- திருநெறிகள் = நல்ல அறவழிகளை, உணர்=நன்கறிந்த, முனி=துர்வாச முனிவர் (உபதேசித்ததும்) வர=சிறந்த, ஆகமத்தின்=வேத மந்திரம்போல, வர+ஆகமம்= வராகமம், திகழ் = விளங்குவதுமான மந்திர = மந்திரத்தை உச்சரணை செயலும் = (குந்திதேவி) ஜபித்தவுடனே, தேவ தருநிகர் மகான்=எண்ணியதை உடனே அளிக்கத்தக்க ஒரு பெரியோனும், அமல=தூய்மையான அல்லது புண்ணியமேயான, ஆகாரம் = வடிவுடையவனும், அணிகலத்தோடு = அணிகலன் களைப் பூண்டவனுகியும், நலம் உற்று = நன்மையான பண்பும், செயல்களும் பொருந்தியவனுகி, அதனுல் இலகும் = ஏற்பட்ட, கீர்த்தி (யுடையவனும் ஆன) தருமன் = எமதருமன், எழுந் தருள=(ஆங்கு) தோன்றவே, அவன் மா, மேனி, ஒளியினை, கண்டு, அருகில் உள்ளோர்......... கைகூப்பி நின்றுர், (அருகில் உளோர் என்பது மன்னன் மனைவியர்க்கு ஏவல் புரிதற்பொருட்டு அவ்வனத்தே கூடியிருந்த தாதிப்பெண்களைக் குறிக்கும்).

வளப்பமுறு இரவீச குலஞ்செ ழிப்ப
வையகமெல் லாமோர்வெண் குடைக்கீ ழோங்க
விளக்கமுறு மகவிருத்தி யடைதற் கேற்ற
விமலசுதா காரவரம் வேந்த னங்கை
துளக்கமற வீந்தருளி ஞன்வி பாவ
சூற்பவனு தரத்திெெடு சுருதி யாய்ந்தோர்
களக்கமற வறிந்தியற்றும் பயனன் றேதன்
கையுறுமென் றுரைப்பரது கண்டா மன்றே 57

இராமாயணப் பொருள்:- இரவீச குலம் = சூரியகுலம், விபாவசு + உற்பவன் = விபாவ சூற்பவன், ''விபாவசு'' என்பது கொழுந்துவிட்டெரியும்தீ. 'உற்பவன்' அதினின்று தோன்றியவன், மக = மக்கள். விருத்தி = வளர்ச்சி, மகவு + விருத்தி என்பது மக விருத்தியாயிற்று, சுதா + ஆஹாரம் = சுதாஹாரம் அது சுதாகாரம் எனத்திரிந்தது. சுதா = அமிழ்தம் (என்றும்) ஆகாரம் = உணவு, சுதாகாரவம் = சிறந்த அமிழ்தவுணவு என்பதாம், வேந்தன் = தயரதனுடைய, அம் + கை = அங்கை = அழகிய கரத்தில், ஆதரத்திெடு = அன்போடு. ஈந்தருளினுன். ஈற்றடிகவிக் கூற்று.

பாரதப் பொருள்:- இரவீசகுலம் = சந்திரகுலம், விபாவசு = சூரியன், உற்பவன் = (அவனுல்) தோன்றியவன் கூற்றுவன் என்பதாம், சுதா + ஆகாரம் = சுதாகாரம், சுதா = மகவு என்றும், ஆகாரம் = வடிவம், (தோன்றுவற்குரிய) வரம் = வரத்தை, வேந்தன் = பாண்டுவினுடைய, தங்கை = மனைவியான குந்திக்கு ஈந்தருளினுன். பிற பொது.

எண்டிசையோர் புகழவன்றவ் வாறத் தூயோன்
எழுந்தருளி வரமீந்து சென்ற காட்சி
கண்டிசையுற் றிலகுமிறை முதற்றே விக்குக்
கவினனங்கை கைக்குபகுத் தறிவு வாய்ந்தங்
வண்டிசைபூங் கருங்குழலி சுமித்தி ரைக்கு
மாகருப்ப நிலையுறுதற் குகந்த வாஞ்சை
கொண்டிசையு முணவனைத்தும் பாகஞ் செய்து
கொடுமினென்றவ் வியல்மணிப்பெண் டீரையேவ
58

இராமாயணப்பொருள்:- அன்று, அவ்வாறு, அத்தூயோன் = அந்தத்தீயிற்றேன்றி தேவன், வரம் = மேன்மை, இச்சொல் இங்கு அமிழ்தினைக்குறித்து நின்றது, இறை = தயரதன், முதல்தேவிக்கும் = கோசலைக்கும் கைகேகிக்கும், கவின் = சிறந்ததான, அனம் = அன்னம் (அமிழ்தை), பகுத்து = பிரித்துக்கொடுத்துவிட்டு (பிறகு) அறிவு வாய்ந்து = ஞாபகங்கொண்டு, கருப்ப, நிலை, உறுதற்கு, உகந்த, வாஞ்சை கொண்டு, சுமித்திரைக்கும், உணவு அனைத்தும் = இருவருக்கும் கொடுக்கப்பட்ட உணவையெல்லாம் (ஒவ்வொருவரும்), பாகம் செய்து = பிரிவினை செய்து (பாதிப்பாதியாக்கி) கொடுமின் என்று, அ + இயல்பு = சுமித்திரையின் அடக்கம் முதலிய இயல்புகளை, அணி = அணிந்து விளங்குகிற பெண்டிரை = கௌசலை, கைகேயி ஆகிய இருவரையும் ஏவ = ஏவுதல் செய்ய (கட்டளையிட என்றபடி)

பாரதப் பொருள்:- அத்தூயோன் = அந்த எமதருமன், வரம், ஈந்து, சென்ற, காட்சி, கண்டு, இறை = பாண்டுமன்னனவன், முதல் தேவிக்கு = மூத்த மனைவியான குந்திதேவிக்கு சு = நல்ல, மித்திரைக்கு = நேசப்பான்மையுடைய (அவளுக்கு) இச்சொல் குந்தியின் குணத்தை உணர்த்தி நின்றது, மா, கருப்பம் = கருவுநிலை, உறுதற்கு, உகந்த, வாஞ்சை கொண்டவனாகி, கவின் = நல்லதான, அனம் = அன்னம் = உணவுங்கூட, கைகைக்கு = கசந்திருப்பதற்கு, (காரணம் இன்னதென) பகுத்து அறிவு வாய்ந்து = பகுத்தறியும் தன்மையுடையவனாகி, இசையும் = கற்பவதி விரும்புபிள்ள, உணவு அனைத்தும், பாகம் செய்து = பக்குவப்படுத்தி, கொடுமின் என்று, அவ்வியல் = பக்குவம் செய்யும் திறமை வாய்ந்துள்ள பணிப்பெண்டிரை ஏவ = தாதிகளை ஏவுதல் செய்ய.

அரிவையரவ் வாறியற்றி யளித்த காலை
யம்மருங்கு விபுதரக மகிழ்ந்து போற்றும்
அரியிடைநன் னிலம்புரக்கும் பொருட்டு வாய்ந்த
வற்புதமாங் கருப்பமுறு மான்மி யத்தைத்
தெரியவிரண் டாயிரநா படைத்த வாதி
சேடனுமங் நான்முகனு மவன்பால் வைகுந்
தெரிவையுமாய்ந் தியம்பலரி தென்று லதனைத்
தெளிவுறவீங் கெடுத்துரைத்தற் கார்வல் லாரே

இராமாயணப் பொருள்:- அரியிடை (யுடைய) அறிவையர் = கோசலை, கைகேயிகள்.

பாரதப் பொருள்:- அறிவையர் = பணிப்பெண்டீர், அரியிடை = குந்திதேவி. பிற பொது எளிது.

திறமையோடு மன்னுயிர்தன் னுயிர்போற் காக்குந்
திருவருள்கை யுறப்பெறுதற் குகந்த வாஞ்சை
முறைமையறு பகைவனத்துப் பகழி வன்னி
முட்டுஞ்செய லினையுறுதற் கியைந்த வாற்றல்
அறநெறிவ ழாதுலக மொருகு டைக்கீழ்
அனைத்துயிருங் காத்தருளற் கமைந்த வூகை
யிறைமனைவி யாரமுத வுளத்தே யொன்றி
யிலகுகரு வோங்குமிசை வளர்ந்த தந்நாள். 60

இராமாயணப் பொருள்:- இறைமனைவியார் = கோசலை, கைகேயி, சுமித்திரைகள் (இவர்களுடைய) உளத்தே......உகந்த வாஞ்சை,...... இயைந்த ஆற்றல் ...... அமைந்தவூகை, ஒன்றி வளர்ந்தது.

பாரதப் பொருள்:- இறைமனைவி = குந்திதேவி, ஆர் அமுதவுளம் = மிக்க இனிமைவாய்ந்த உள்ளம். பிற பொது எளிது.

ஓம்

இரவீச மரபின் மக்கள் தோற்றம்.

வரமேவுந் திதிவார கரணயோகம்
　　வாய்ந்தவுடுக் கிரகமிலக் கினம தொன்றத்
தரணீசன் மனையாட்கோ சலையென் ருேதுந்
　　தாழ்குழலாட் குந்திமலர்த் திருமே னிக்கு
பிரமாம ரேந்திரரன் றினிது,திப்பப்
　　பெறவரிய நீடுபுகழ் தரும ஞேங்கும்
இரவீச மரபிலரி விரிந்த பங்க
　　யானனவி ராமனென வவத ரித்தான் 61

இராமாயணப் பொருள்:- வரம் = மேன்மை, தரணீசன் = தயரதன், மனையாளாகிய கோசலைக்கு, தாழ்குழலாள் + கு = நீண்ட கூந்தலையுடையவளுக்கு மலர், உந்தி = தாமரைமலரை யொத்த உந்தியுடையாள், திருமேனிக்கு = அழகிய தேகமுடையாளுக்கு, அன்று = இராமபிரான் அவதரிக்க விருந்த காலத்தில்' இனிது = மகிழ்ச்சியோடு பிரம = நான்முகன் (ஜாம்புவனுகவும்) அமரேந்திரர் = தேவேந்திரன் முதலிய தேவர் கூட்டம் (வாலி முதலிய வானர வீரர்களாகவும்) உதிப்ப = (இல்வுலகிலே வந்து) பிறந்திட, புகழ்தரும், மன் = மன்னர்களால், ஓங்கும் = சிறப்புற்ற, இரவீச மரபில் = சூரிய குலத்தில், அரி = திருமால், பங்கிய + ஆனன = தாமரை போன்ற திருமுகமுடைய இராமன் என = இராமன், அவதரித்தான்.

பாரதப் பொருள்:- தரணீசன் = பாண்டு மன்னன், மனையாள், கோசலை = எல்லா நலன்களும் அமைந்தவள் = குசலம் = சௌக்கியம். ''குசலம்'' என்பது தத்தி தாந்தத்தில், கோசலம், கௌசலம் எனமாறும். எனவே குசலம் என்பது நலம் என்பதானல், கோசலம் என்பது எல்லா நலன்களும் வாய்ந்தவள்

என்பதாயிற்று. குந்தி (என்றும் இயற்பெயருடைய) மலர் திரு மேனிக்கு = மலர்போன்ற அழகிய உடலுடையவளுக்கு, பிரம அமரேந்திரர்கள், அன்று = அவன் பிறந்தநாளிலும், இனி = அதன்பிறகு தனது வாழ்நாளிலும் துதிப்ப = புகழத்தக்க தன்மை யுடன், இரவிசமரபு = சந்திரகுலம். தருமன் = எமதருமன், அரி = பகைவருடைய பங்கையானன = தாமரையையொத்த முகத்திற்கு, இரா + மன் என = சந்திரன் என்று சொல்லும் படியாக அவதரித்தான் அல்லது, அரி = கூற்றுவன், பங்க யானம் (உடைய) இராமன் = அழகு வாய்ந்தவன். என = என்று புகழும்படியாக. தருமன் = உதிட்டிரனுக அவதரித்தான் = பிறந்தான், என்பதும் ஒக்கும்.

(வேறு)

கழிந்தது மரபின் மாசு கரவிலாத் தீம்பாற் ருனுய்
வழிந்தது கொடுமை யார்ந்த வஞ்சக ரீட்டம் வேரோ
டழிந்தது புலவ ருள்ளத் தடைவுறு கவலை யாவு
மொழிந்ததங் வெழில்சீ ராம னுதித்தனுன் றுலகில் மாதோ 62

இராமாயணப் பொருள்:- சீராமன் = ஸ்ரீ ராமன் புலவர் = தேவர்கள்.

பாரதப் பொருள்:- புலவர் = அறிவுடையோர், சீர் + ஆம் + மன் = நேர்மையுடையவனுக, விளங்கக்கூடிய. அரசக் குழந்தை உதித்த ஞான்று, பிற எளிது.

உளங்களிப் பளித்த தங்ந ரோத்தமப் பெருமாட் டிக்கு
வளம்பெறு மந்திரத்தில் வாய்த்தவா யுவினி யல்பால்
விளங்கிய மைந்தன் றீங்கு ளுவகை விரிமா மாரிக்
களங்கமி லாது வானங் கமழ்தரச் சொரிந்த காட்சி 63

இராமாயணப் பொருள்:- அ + நரோத்தமப் பெருமாட்டி = கோசலை, மந்திரத்தில் = இல்லத்தில், வாயு = இளங்காற்று, விரி = மலர்கள், சொரிந்த காட்சி உளங்களிப்பளித்தது.

பாரதப் பொருள்:- நரோத்தமப் பெருமாட்டி = குந்தி தேவி, மந்திரத்தில் = ஜெபித்த மந்திர சக்தியால், வாய்த்த = ஆங்கு தோன்றிய, வாயுவின் இயல்பால் = வாயுதேவனுடைய இயல்பாக, மைந்தன் = வீமன். பிற பொது.

திகழுமச் சுதன்றேள் வன்மை தீதற நோக்கி யன்று
நிகழுவெம் படையை யேந்தா நிற்கும்வெம் பகையை வென்று
புகழுறும் வீம சேனப் புரவல னுமென் றுய்ந்தோர்
மகிழுற நிகழ்த்த லாய்ந்து மாநிலங் களித்த தம்மா 64

இராமாயணப் பொருள்:- அ + சுதன் = அந்தக் குழந்தையான இராமன், வீம = (பகைவர்கள்) அஞ்சத்தக்க, சேன = படைவலிமையுடைய, புரவலன் ஆம் = அரசனுக ஆவான், ஆய்ந்தோர் = சாமுத்திரிகா இலக்கணங்களையாராய்ந்தவர்கள், அல்லது சோதிடச் சாத்திரத்தையாராய்ந்தவர்கள்.

பாரதப் பொருள்:- அ + சுதன் = அந்த குழவியான வீமனுடைய, வீமசேன = வீமசேனன் (என்னும்) பிற பொது.

(வேறு)

சீற்றமுறும் புருவநெறிப் பாலகற்று நெடும்பகைபங்
திரத னேயென்
றேற்றுமதி நயதிரித ராட்டிரனுக் கம்மாமு
னீசன் சொற்போற்
சாற்றுமற வடிவமைந்த நூற்றுவருங் குழவியொன்று
தனதி னுள்ளத்
தாற்றலுறத் தோன்றியதை யங்நாகப் புரத்தோர்கண்
டதிச யித்தார் 65

இராமாயணப் பொருள்:- பந்திரதனே = தசரதனே (அல்லது) தயரதன் ஒருவனே சீற்றம் உறும்புருவ (த்தை) நெறிப் பால் = நெளிப்பதனுலேயே நெடும்பகை (யை) அகற்றும் = புறமுதுகிட்டு ஓடச்செய்வான் என்று, ஏற்றும் = புகழ்ந்து பேசுகிற,

மதி = அறிவும், நய = நேர்மையும் அல்லது நீதி முறைமையும், திரிதர் = படைத்தவர்கள் (ஆகிய அமைச்சர் முதலியோரின் துணையால்) "த்ருத" என்னும் வட சொல்லுக்கு தரித்தவர்கள் என்பது பொருள். அச்சொல் ஈங்கு "திரிதர்" எனத்திரிந்தது. ஆள் = உலகத்தையாளுவதில், திரன் = திறமையுடையவன், அ + மா + முனிகள் = வசிட்டன். சாற்றும் = புகழ்ந்துரைக்கத் தக்க, அறவடிவு = தர்ம சொரூபம், அமைந்த = வாய்ந்தவனும், நூல் = வேதம், தொடரும் = தேடிச்செல்லும் தன்மை வாய்ந்த வனும் (ஆன), அ = அந்த, நாகம்புரத்தோர் = தேவலோகத் தார், கண்டு அதிசயித்தார்.

பாரதப் பொருள்:- புருவ நெறிப்பால் = கண்ணிரண்டும் இல்லாதபடியால் புருவத்தை மட்டும் சீற்றத்தினுல் நெளித்துக் காட்டி. அகற்றும் = ஒழிக்கத்தக்க, பகை = விரோதிகளின், பந்திரதன், = வரிசை வரிசையான தேர்ப்படைகளையுடையவன் (வரிசைக்கிரமமாக தேர்ப்படைகளோடு வந்து எதிர்க்கும் பகைவர்களை தனது புருவக் குறடம்பாலேயே ஓடும்படி செய்யக் கூடிய திறமையாளன் என்றபடி) மதிநய = அறிவின் நேர்மை படைத்த, திரிதராட்டிரனுக்கு = திருதராட்டிர மன்னனுக்கு, அ+மா+முனிகள் = வியாழன் மறவடிவு = பாவமே உருப்பெற்ற தென, நூறெடு = நூற்றெடு = நூறு குழந்தைகளோடு, அருங் குழவி = அருமையாக அமைந்த = (பெண்) குழந்தை ஒன்று, அ, நாகம்புரத்தோர் = அந்த அத்தினபுரவாசிகள் கண்டு அதிசயித்தார். (முனிகள் சொற்போர் என்பது குந்திக்குப் புதல் வன் பிறந்ததைக் கேள்விப்பட்ட திரிதராட்டிரன் மனைவியாகிய காந்தாரியானவள் பொறுமைகொண்டு கருவுற்றிருந்த தன் வயிற்றை அறையவே கருக்குலைந்து சிதறித் தரையில் ஒழுகியதைக் கேள்விப்பட்ட வியாச முனிவர் அதை நூற்றொரு பாண்டவர்களில் சேர்த்துவைக்கும்படியும் அதனுல் நூற்றொரு புதல்வர் தோன்றுவர் என்றும் புகன்றதைக் குறிக்கும்).

தரைமீதி ராவணகு ணுதமரென் றறநெறியோர்
சாற்றுங் கோர
தரபாவக் கிருத்தியராங் துரியோத ஞதியரத்
தரும வீம
வரவீர ராகவப ராக்கிரம சரச் செயலால்
மாய்வ ரென்றவ்
வருயோக சாதகத்தி னியல்புணர்ந்தோர் மனத்திகழ்வன்
றணுக லுற்ருர் 66

இராமாயணப் பொருள்:- அ = அந்த தரும = அற வடிவமானவனும், வீம = பகைவர் அஞ்சத்தக்க தோற்றமுடைய வனும், வர = சிறந்த, வீர = வீரத்தன்மையுள்ள, ராகவ = இராமபிரானது, பராக்கிரம (முடைய) சரச் செயலால் = பாணப் பிரயோகத்தால், குணுதமர் = குண + அதர்ம = குணுதமர் = கீழ்த்தரமான குணமுடை யவர் என்றும், கோரதர = மிகக்கொடிய, பாவக்கிருத்தியர் = பாவகாரியங் களையே செய்பவர் ஆம் = ஆகவுள்ள, இராவணன் (முதலிய) துரியோதனுதியர் = தீய வுண்டியைக் கைக்கொண்டவர். (துः = கொடிதான, (இறைச்சி முதலானவை) ஓதனம் = உணவு, அதம் = உண்ணுதல்) மாய்வர், என்று, மனத்திகழ்வு = மன நிம்மதியை, அணுக லுற்ருர்.

பாரதப் பொருள்:- தரும, வீம = தருமனுடையவும், வீம னுடையவும், சரச் செயலால். இரா = இரவுபோன்ற (கருத்த) குண = தாமத குணமுடைய, அதமர் = கீழ்த்தரமானவர் என்று, பாவ = கொள்கை (யின்படி) கிருத்தியர் = செயலுடையவர், (''பாவ'' என்பது ''பாவம்'' என்பது இங்கும் பொருந்தும்) துரியோதனுதியர் = துரியோதனன் முதலானவர்கள், மாய்வர் என்று, மனத்து, இகழ்வு = இகழ்ச்சியான தன்மையை அணுகல் உற்ருர்.

நனிப்பூம்பொன் னனங்கைகை மாநகரத் தறிஞரெலாம்
நயந்து போற்றுங்
கனபாண்டு ரமணியொளிர் பணிலமென வரியளாற்
கருப்ப மாகி
கனகாவ னீதரம்போற் றிகழ்புயத்தோன் கம்பீர
காட்சி யுற்றோன்
எனுநீதி யருச்சுனனும் பரதசுத வரதனமீன்
றிலகுங் காலை 67

இராமாயணப் பொருள்:- பொன் = பொன்னின் நிறம் வாய்ந்த, கைகை = கைகேயியானவள். கன = பெருமை வாய்ந்த, பாண்டுர = வெண்மைநிறமுடைய, மணி = முத்து, ஒளிர் = விளங்குதல், பணிலம் = சிப்பி, என = என்றுரைக்கும் படி, அரி அருளால் = திருமாலருளினால், கனகம் = பொன், அவனீதரம் = மலை, நீதி அருச்சுனன் = நீர்மை யென்னும் ஒளியை யுடையவன், ஆம் = ஆகிய, பரத = பரதன் (என்னும்) சுத = மகவு, வர = சிறந்த, தனம் = செல்வம்.

பாரதப் பொருள்:- பொன் + அந் + நங்கை = குந்தி தேவி, கைமாநகர் = அத்தினாபுரி, பாண்டு ரமணி = பாண்டு வின் மனைவி அரி = இந்திரன், அருச்சுனன், ஆகிய, பரத = பரதகுலத்திற்கு உரிய, சுத = மகவு என்னும், வரதனம் = சிறந்த செல்வத்தை ஈன்று இலகும்.

செழுமரிவை சுமித்திரையாஞ் சீலமகி மாத்திரிக்குத்
தேச மன்னர்
தொழுமனுப வத்தமர வைத்தியவ ராகாரத்
தொடும கிபன்
வழுவகல விலக்குவன் சத் துருக்கினனு மென்றுரையின்
மைந்தர் நீதி
யொழுகுமதி மானகுல சகதேவ ரென்றிருவர்
உதித்தார் மன்னே 68

இராமாயணப் பொருள்:- சுமித்திரையாகிய, சீல = ஒழுக்கத்திலும், மகிமா = பெருந்தன்மையிலும், அத்திரிக்கு = மலை போன்ற கம்பீரமுடையவளுக்கு (அத்திரி = மலை, அத்ரி என்பது அத்திரி எனத் திரிந்தது) அனு = உடன்; பவத்து = பிறவியில், அமர வைத்திய = அசுவினி தேவர்களின், வர = மேன்மையான, ஆகாரத்தொடு = வடிவத்தோடு நீதி ஒழுகும் = நேர்மைப் பெருக்குடைய, அதி = மிகுந்த, மான = பெருமைவாய்ந்த, குல = சூரியகுலத்துக்கு, சக = துணைபுரியத்தக்க தேவர் என்று = தெய்வர்களே யென்றுரைக்கும்படியாக, இலக்குவன், சத்துருக்கினன், ஆம் = ஆவார்கள், என்று உரை = புகழத்தக்க, இன் மைந்தர் = அழகிய மக்கள் தேச மன்னர் தொழும் மகீபன் = தயரதன், வழு, அகல = களங்கம் நீங்கியதென்னும்படி இருவர் உதித்தார்.

பாரதப் பொருள்:- சு = நற்குணமுடையாரிடத்து, மித்திரை = நேசம் பான்மையுடையவள், ஆம் = ஆவள். சீல = நல்லொழுக்கத்துக்கு, மகி = பூமிபோன்றவள், (இருப்பிடமானவள் என்பதாம்) மாத்திரிக்கு = பாண்டுவின் இளைய மனைவிக்கு, அனு + பவத்து = தொடர்ந்தே (சேர்ந்தே) தோன்றுந்தன்மைவாய்ந்த, (அல்லது, மனு = மந்திரத்தால், பவத்து = தோன்றிய) அமர வைத்திய = அசுவினி தேவர்களுடைய, வர = வரத்தினல் (பிறந்த) ஆகாரத்தொடு = அத்தேவரைப்போன்ற வடிவத்துடன், விலக்குவன் = பகைவர்களை நீக்குவான், சத்து = பகைவர் தம் வலிமையை, உருக்கினன் = அழித்துவிட்டவன் ஆம் என்று, உரை = புகழத்தக்க இன் = அழகிய, மைந்தர். மகீபன் = பாண்டுமன்னன். மதிமான் = அறிவுடையோன் ஆகிய மன்னனுக்கு நகுல, சகதேவர் என்று இருவர் உதித்தார்.

ஓம்

மக்களின் மாட்சி.

வானவ ரமிசமாய் வாய்த்த மைந்தரை
மானவர் பதிமன மகிழ்வுற் ரேம்பினன்
தானவர் தமதுளர் தளர்வுற் ரேங்கநன்
மோனவர்த் தனரற முயற்சி யோங்கவே 69

உரை:- மானவர்பதி = தயரதன். பாண்டுமன்னன் பிற பொது.

நிதநித மோங்குமெய் நேர்ந்திலங் கொளி
கதியுறு மிளநிலாக் கற்றை யென்னவே
யிதமுற வளர்தரும் ஏந்தல் அம்புகழ்
துதிபெறு மிளங்கதிர் தோற்ற மொப்பவே 70

குறிப்பு:- இச்செய்யுள் குழந்தைகளின் வளர்ச்சியைக் குறிக்கும். மெய், இலங்கு ஒளி நேர்ந்து கதியுறும் இளம் நிலாக் கற்றையென்ன இதம் உற வளர்தரும், ஏந்தல் = மன்னனது புகழாகிய கதிர் தோற்றம் என்ன இருகாதைக்கும் பொது.

நவநவ மாய்வளர் நாகிளஞ்சவி
கவையெயிற் றுமிழ்மதக் கன்றி னம்மென
வினிதநல் லிசைகொளும் வீர சௌரியங்
குவடுறை கோளரிக் குருளை யாமென 71

உரை பொது.

விளங்குமத் தருமச வீம விசயரென்
றுளங்களிப் புறவுல கோங்கி யாசிலா
வளங்கொளி ராமலக் குமணர் வாழ்ந்தனர்
களங்கமில் கனிசுவை கலந்த தென்னவே 72

இராமாயணப் பொருள்:- ''தர்மஜ'' என்னும் சொல் ''தருமச'' எனத்திரிந்தது, தர்மம்=வில் ஜ=(அதினின்றும்) பிறப்பது (வில்லினின்று கிளம்பத்தக்க அம்புகள் என்பதாம்) வீம=பயங்கரமான (செய்கையால்), ''விஜயா''= என்பது ''விசயர்'' எனத்திரிந்தது, விஜயர்=ஜெயமடையக்கூடியவர்கள் என்று அங்+இராம; லக்குமணர் வாழ்ந்தனர்.

பாரதப் பொருள்:- வளம், கொள், இராம=மனத்தைக் கவரத்தக்க அழகு, 'லக்ஷ்மண:' என்பது 'லக்குமணன்' எனத் திரிந்தது, லக்ஷ்மண: என்பதற்கு லக்ஷ்மீவான், லக்ஷ்மண:, ஸ்ரீ: என்னும் பொருள்கள் உள்ளமையால் ''செல்வம்'' என்னும் பொருளை இங்கு ஏற்பது தகுதியாம். அதாவது:— இராம லக்குமணர் என்பதற்கு உள்ளத்தைக் கவரத்தக்க பேரழகென்னும் செல்வமுடையவர்கள் என்பது கருத்து, என்று, அ+தருமச= உதிட்டிரனும், வீம=வீமனும், விசய=அருச்சுனனும், கனி, சுவை கலந்தது என்ன வாழ்ந்தனர்.

அலமறும் பரதன்சத் துருக்க ஞமெஞ
நிலமிசை புகழ்நிலை நிறுத்து நேர்மையோ
டலகின குலசக தேவ ராங்கிசைந்
துலவினர் மலர்மண மியைந்த தொப்பவே 73

இராமாயணப் பொருள்:- பரதனும், சத்துருக்கனும், (ஆகிய இருவராலேயே) அலம் ஆறும் ஆம் எஞ=சஞ்சலம் அற்றுப்போகும் என்று, இனகுல=சூரியகுலத்தில் சக=ஒரே தன்மையாக விளங்கும், தேவர் ஆங்கு=தேவப்பிரவிகளைப் போல, இசைந்து உலவினர்.

பாரதப் பொருள்:- நகுல, சகதேவர் (இருவரும்) பரதன், சத்துருக்கன் ஆம் எஞ=முன்பு சூரியகுலத்தில் தோன்றிய பரதனும், சத்துருக்கனும் இவர்களேயாக்கும் என்று, அலகில்= தடையற்ற புகழ் நிறுத்தும் நேர்மையோடு உலவினர்.

இத்தகை வேந்தர்வேந் திளைஞர்க் கீடிலா
வித்தையு மாண்மையும் வீறு கொண்டெழக்
கத்துமங் கடற்புவி களிப்ப வந்ததவ்
வித்தக வேளுடை வேனிற் காலமே 74

உரை:- பொது.

ஓம்

வசந்தகால வளப்பம்.

மற்றுள பருவமா மன்னர் சூழ்தர
கற்றையம் பூம்புதர் கரியி னீர்ங்கவு
ளூற்றுகு தேன்மத முண்டு டன்றிசை
சுற்றிலும் பரவுமச் சுரும்ப ரோதையே 75

குறிப்பு:- இதுமுதல் "சுவைபடு கருப்புவில்" என்றும் ஐந்து செய்யுட்களும் இளவேனிற் காலத்துப் பொழிவின் தோற்றத்தை விளக்குவன இவற்றில் சிலேடை கிடையா, இருகாதைக்கும் பொது இயல்புடையன

சிலபல வாய்திகழ் செவ்வி, ளந்தளிர்ப்
புலவுமெய் சிந்துரப் பூழி யாகவே
குலமுத லாய்வளர் கொடிய ரும்பினம்
விலயமா மேனியின் வியர்வை யொக்கவே 76

ஏடவிழ் பூந்துண ரேந்தி நிற்பதோர்
பீடுறு பொற்கலன் பெய்த தாமெனு
தேடுறு தீஞ்சுவைத் தேன்பி லிற்றுதல்
மாடுகு மதம்பெரு மாரி மானுமே 77

சுருண்டுதிர் பூவிதழ்த் தூசி யாடலின்
உரம்படு மட்டுக ளுதிர்வ தொக்கவே
முரன்றதன் மேற்படர் மூசு வண்டினங்
கருங்கொலி ஞற்புனே கலனே யேய்ப்பவே 78

சுவைபடு கருப்புவிற் சுரும்பர் நாணியுங்
கவிகையொள் வெண்மதி கடிய பூங்கணே
யிவையுடை மாரவே ளிவரும் யானேபோற்
புவனியி னெங்கனும் பொலிய நின்றவே 79

ஓம்

மந்த மாருத மாண்பு.

திசையோங்கி வளர்வசந்த காலமிவ்வா றகுலமெல்லாந்
திகழுங் காலை
யசமான வன்மைமிகு வேட்கையியல் மனைமருவு
மார்வ முற்றே
விசுவாமித் திரமுனிவன் மாதரும சுகுணசர
விருத்தி பூமன்
விசயோற்ச வாந்தரங்க மேவுதலிப் பார்மிசையோர்
விந்தை யாமோ 80

அவதாரிகை:- இனி விசுவாமித்திரன் வேள்வியியற்ற விருப்பங்கொள்ளுவதும் பாண்டுமன்னன் சிற்றின்பத்தில் ஈடுபட விரும்புவதும் மேற் செய்யுளில் கூறப்படுகின்றது.

இராமாயணப் பொருள்:- மா=பெருமைமிக்க, தருமம= வேள்வியியற்றுதற்குரிய, சுகுண=சிறந்த பண்புக்கும், சர= நடத்தையின், விருத்தி=மேம்பாட்டுக்கும், பூமன்=உலகாதிபன், அரசன், அல்லது பிரமன் (என்று விளங்கக்கூடிய) விசுவாமித்திர முனிவன் யசமான=வேள்வி சம்பந்தமான, ''யஜம்'' என்பது ''யசம்'' எனத் திரிந்தது, யஜம்=வேள்வி, யாகம், மகம் வன்மை மிகும் வேட்கை=உறுதிமிக்க ஆவலின், இயல்=தன்மையினால், மனை=தயரத மன்னனை, மருவும் ஆர்வம்=சந்திக்க வேண்டு மென்னும் மிகுந்த விருப்பமும், உற்று, (அதனால்) விசய=வெற்றி பெறுவோம் (என்னும்) உற்சவம்=பெகிமகிழ்ச்சியும் அந்தரங்கம் மேவுதல்=உள்ளத்தே கொள்ளுவது, ஒரு விந்தை ஆமோ.

பாரதப் பொருள்:- மா தருமம=பெருமைதரத்தக்க நடு நிலைமையும், சுகுண=நற்குணமும், சரவிருத்தி= (அதற்கேற்ற) நடத்தையின் மேம்பாடும் (உடையவனும்) விசுவ+சுமித்திர+ முனி+அன், விசுவ=உலகத்திலுள்ள, சுமித்திர=பகைவர்களை,

முனி + அன் = சினந்து ஒழிக்கத்தக்கவள், (ஆகிய) பூமன = அரசன், அசமான = ஒப்பற்ற, வன்மைமிகு = வலிமை மிகுந்த, வேள் = மன்மதனுடைய, கை இயல் = கரத்தின் செய்கையால், மனே = மனேவியை, உற்று = சார்ந்து, அந்தரங்கம் = உள்ளத்தில், மருவும் = கூடவேண்டும் (என்றும்) விசய = விஷய அகத்தின், உற்சவம் = மகிழ்ச்சியைப் பெறுதலில், ஆர்வம் = பேராவல், மேவுதல் = அடைதல், விந்தை ஆயோ, மூன்ருவதடியில் ''மாதருமசுகுண சரவிருத்தி'' என்பதற்கு மாதரும = பெரிய வில்லினது, சு = சிறந்த, குண = நாணியினின்றும் வெளிப்படுகிற, சர = அம்புகளின், விருத்தி = பெருக்கினல், என்று பொருள் கொள்ளுவதும் தகும்.

தெளிவார்ந்த புனல்மிசையோர் தாளுன்றி யரியதவஞ்
செயும லர்க்கு
வளமேவுந் திருவருளேப் புரிந்திலகு மிணேயடியின்
வனப்பும் பூமாந்
தளிரோங்கு மியல்பகற்று மிளமங்கை வடிவழகுந்
தளர்வு றுத்தண்
ணெளிராமச் சந்திரன்மா வெழின்முறுவல் புரிமுகமு
முற்று நோக்கி ‌ ்1

இராமாயணப் பொருள்:- தெளிவார்ந்த .... மலர் = தாமரை மலர். இளம் + அம் + கை (யினது) அழகும், தண் + ஒள் = குளிர்ந்த ஒளியுடைய, எழில் முறுவல் = அழகிய நகைப்பு. புரியும்படியான, இராமச்சந்திரன், முகமும் நோக்கி, ''மகிழ்வடையும், மகிபன், இலகும்'' என அடுத்த செய்யுளின் வினே முடியும்.

பாரதப் பொருள்:- இளமங்கை = மாத்திரிதேவி, தண் + ஒளிர் + ஆம் + அ + சந்திரன், முகமும் நோக்கி ''இலகும்'' என அடுத்த செய்யுளின் வினேமுடியும்.

மகிழ்வடையு மியல்பாண்டு மாவேந்தர் வேந்தனென
மாநி லத்திற்
புகழ்பரவி தயரதம கிபனுயர் மேருவரை
புயத்தோன் மிக்க
திகழ்தரும தனபோக வரசுவிப வாதிசயத்
திறமை நண்ணி
யிகழ்வறவெண் டிசைமேவு நெடுங்கடற்சூ ழரும்புவியி
லிலகும் போழ்தில் 82

இராமாயணப் பொருள்;- மகிழ்வடையும் இயல்பு = மகிழ்ச்சியடையுங் குணமுடையவனும், உயர்மேருவரை புயத்தோனும் (ஆகிய) தயரதமகிபன், ஆண்டு = அப்போது, மாவேந்தர்வேந்தன் என புகழ் பரவி திகழ்தரும், அதன = மிகுந்த, போக = மகிழ்ச்சி யென்றும் அல்லது ஆனந்தமென்றும், வர = சிறந்த சு = நல்ல, விபவ + அதிசயத்திறமை நண்ணி = செல்வப் பொருக்கின் பலத்தைக் கொண்டவனாய், இலகும்

பாரதப் பொருள்:- மகிழ்வடையும் இயல் (உடைய) பாண்டு = பாண்டு என்னும் மாவேந்தர் வேந்தன் என இகழ்வு அற புகழ்பரவும் மகீபன், உயர்மேரு வரையுயத்தோன் இதய ரத = மனத்து இச்சையின்படி, திகழ்தரு = தனக்கு தென்பு உண்டாக்கத்தக்க, மதனபோகம், (என்னும்) சுவிபவ அதிசய திறமை நண்ணி = மிகுந்த இன்பப் பெருக்கிணையடைய வேண்டு மென்னும் மனவுறுதி கொண்டவனாகி, இலகும்.

வீரமொடு சீறியெழுந் தாடகியாவ் கனற்றனுச
விருத்தி யோங்குந்
தாரணிமன் னுயிர்வாழ வியற்றுமகச் செயறடுப்பத்
தான்மு யன்று
வேரறத்து ணிப்பவிய லாதவ்வருஞ் செயல்புரிய
விரும்பி சால
தீரமகி மாத்திரியென் றிசையுறுமப் பூமானின்
றிசைமே வுங்கால். 83

இராமாயணப் பொருள்:- "தான்" என்பது கௌசிக முனிவனைக் குறித்து நின்றது, தாரணி=உலகத்திலுள்ள, மன் உயிர்வாழ இயற்றும், மகச்செயல்=வேள்விக் காரியத்தை தாடகையாகிய, கனல்=தீயையொத்தி கொடிய, தனுச=அரக்கியின். விருத்தி=செய்கைகள், தடுப்ப=தடை செய்ய, (அதை) வேர் அற=அடியோடு, துணிப்ப இயலாது, அவ் தருஞ்செயல்= தாடகையையொழிக்கும் செயல், தீர=தைரியத்திற்கு, மஹி= மகி=பூமி, இருப்பிடமானவன் என்பதாம். மற்றும், மா=பெரிய, அத்திரி = அத்ரி=மலைபோன்றவன் ஆகிய பூமானின் = சக்ரவர்த்தியின், திசை=இருப்பிடத்தை நோக்கி, மேவுங்கால்= சென்றபோது, "வரவேற்று" "இதை ஓதும்" என மேல் செய்யுளில் வினைமுடியும்.

பாரதப் பொருள்:- (மன்மதனுடைய கரத்தின் வேகத்திற்கேற்ப) வீரமொடு, சீறி எழுந்து+ஆடு+அகி=ஆம்=சீற்றத்தோடு நிமிர்ந்து ஆடுகிற பாம்பு என்றுரைக்கும்படியான, கனல்= கன்னல் (ஆகிய) தனு=வில், "ஜ" என்பது "ச" என நின்றது, ஜ= (அதினின்று) கிளம்பிச்செல்லும் அம்புகள், விருத்தி= (அதன்) பெருக்கம், தாரணிமன்=உலகையாளும் மன்னன் அல்லது மாலையணிந்த மன்னன, (தான்) உயிர் வாழும்பொருட்டு இயற்றி வருகிற, அகச்செயல்=சித்தத்தின் காரியங்கள் (புலனடக்கம், வைராக்கியம், உபரதி திதீசை முதலியனவற்றால்) தடுப்ப முயன்றும், துணிப்ப இயலாது=மன்மதபாணக் கொடுஞ்செயலை அழிக்கத்திறமையிற்றி, அவ்=அந்த மலர்க்கணைக்கேற்ற, அரும் செயல் புரிய விரும்பி=போககாரியஞ்செய்யக் கருதி, தீர= மதிவலிமைக்கு, மகி=இருப்பிடமாணவள் (என்றுரைக்கத்தக்க) மாத்திரி என்று இசை உறும் அ, பூ=அழகிய, மானின் திசை= பெண்ணாகிய இளமனைவியினிருப்பிடத்திற்கு, மேவும் கால், "வரவேற்று" "ஓதும்" என்று மேற் செய்யுளில் வினை முடியும்,

வரவேற்று மகிழ்ந்துநனி யதிபதிதா டொழுதவ்விறை
வனிதை யோதும்
திரமேவுஞ் சுரதருவே புகழ்பரவுஞ் செழுந்திருவே
திகழ்மெய்ஞ் ஞானத்
துருவேயென் பெரியோர்முன் னிழைத்தவருந் தவத்தினன்றே
வுததி சூழ்ந்த
தரைமீதுன் னருட்கதிரென் மேற்பரவி மயக்கவிருள்
தணித்த தின்றே 84

இராமாயணப் பொருள்:- அவ்விறைவன் = தயரதன், மகிழ்ந்து, வரவேற்று, யதிபதி=முனிவர் தலைவன் (கௌசிகன்) தாள், தொழுது, இதை ஓதும்=மேற்கூறப்படும் மொழி பகரத் தொடங்கினன். திரம் மேவும்=நிலை பிறழாத, சுரதருவே= கற்பகம் போன்றவனே. செழுந்திருவே= (எனது) பெருஞ் செல்வமே. மெய்ஞ்ஞானத்து, உருவே = ஞானஸ்வரூபியே, பிற எளிது.

பாரதப் பொருள்:- அவ்விறை வனிதை=அந்த மன்னன் மனைவி, அதி=சிறந்த, பதி=கணவன், தாள்தொழுது, வர வேற்று இதை ஓதும்=மேற்கூறுவதைச் செப்பத்தொடங்கினள். பிற இருகாதைக்கும் பொது.

பன்முறையிவ் வாறியம்பும் மொழியாய்ந்தவ் வனகன்மிகப்
பரிவு கூர்ந்து
மென்மொழிசு மதியேநற் குணநிதியே விரைந்துநித
மிடைய ருது
மன்மதக ரோத்துங்க தனுசவிய லெம்மகத்தை
மாய்ப்ப தாலின்
றுன்மருங்கு சேர்ந்திடினப் பெருமிடர்கள் தீர்ந்திடுமென்
றுணர்ந்து வந்தேன் 85

இராமாயணப் பொருள்:- அவ் + அனகன் = அந்தப் புண்ணிய வடிவினன் ஆன விசுவாமித்திரன், இவ்வாறு பன் முறை இயம்பும் மொழி ஆய்ந்து, (அரசன்பால்) பரிவு கூர்ந்து, சுமதியே, குணநிதியே (என்று விளித்து) தனுச = தானவர் களுடைய மன் = அசைக்க முடியாததாகி, மத = கர்வங்கொண்டு கர = செய்துவருகிற உத்துங்க = அளவுகடந்த, இயல் = சேட் டைகள், எம், மகத்தை மாய்ப்பதால் = யாம் இயற்றும் வேள் வியைக் கெடுத்து வருவதனுல் உன், மருங்கு, சேர்ந்திடின், அப் பெரும், இடர்கள் தீர்ந்திடும் என்று உணர்ந்து, வந்தேன்.

பாரதப் பொருள்:- இவ்வாறு இயம்பும் மொழி ஆய்ந்து, அவ் + கன கன் = அந்தப்பாவமற்ற அரசன் "மதியே" "நிதியே" என விளித்து, மன்மத = மதனனுடைய கர = கையிலுள்ள, தனு = கரும்பு வில்லினின்றும், ச = புறப்பட்டு வருகிற மலர்க்கணைகளின், உத்துங்க = அளவு கடந்த, இயல் = செயல்கள், எம் + அகத்தை = ("சம தமாதி குணங்களால் பண்பட்ட") எமது உள்ளத்தை மாய்ப்பதால் = கெடுத்து வருகிறபடியால், இன்று = இப்போது பிற பொது எளிது,

(வேறு)

உரிய கட்செவி முடிமிசை யொளிர்நெடுங் கடல்சூழ்
தரணி நிகழுமென் றனயர்வுன் ஞல்வரி னுமருங்
கரிய செம்மலைப் பொருந்தநங் கரத்தளித் துயர்வா
னிரதி சயசுக வாழ்க்கையி னிதமுறச் செய்தி 86

இராமாயணப் பொருள்:- உன் = உனது, மென் = மிருது வான உடற்படைத்துள்ள, தனயர் = புதல்வர்கள், நால்வரினும் கரிய செம்மலை = இராமபிரானை, நம் கரத்து பொருந்த அளித்து = நம் கையில் ஒப்புவித்து, வான் = சிறந்த, நிரதிசய = அளவு கடந்த, சுகவாழ்க்கையின் = இன்ப வாழ்வினது, இதம் உறச் செய்தி = நன்மையடையும்படி செய்வாயாக.

பாரதப் பொருள்:- என்றன் அயர் = எனது உடல் தளர்ச்சியானது, உன்னுல், வரினும் = வரக்கூடியதோயாயினும், மருங்கு = ஒன்றற்கொன்று நெருங்கி, அரிய = அரிதான, செம் = அழகான மலை பொருந்தனம் = மலைகளையொத்து விளங்குகிற தனங்களை. கரத்து = என் கைகளுக்கு அளித்து, வான் = உயர்ந்த, இரதி = காம இச்சையின், சய = வெற்றியாகிய, சுக வாழ்க்கையின் = இன்பவாழ்வின், இதம் = நன்மையை, உறச் செய்தி, இதில் "சய" என்னும் பதம், "ஜய" "கூடிய" ஆகிய இரு சொற்களின் திரிபாகவுள்ளது, "ஜய" என்பதற்குண்டான பொருளே இங்கு கூறப்பட்டது, இனி "கூடிய" என்பது "தேய்வு" என்னும் பொருளை உணர்த்துகிறபடியால் "இரதி சய சுகம்" என்பதற்கு காம இச்சையானது அனுபவத்தால் தேய்ந்து குறையக்கூடிய இன்பம் எனக்கொள்வதும் பொருந்தும்.

என்று கூறிய வனகன் சொல் லெரிகணை பாய்ந்து
சென்ற தாமென தனதிரு செவிப்புகத் தளர்வுற்
றின்று மேவுமென் மாலவி யோகமா மிடரி
னின்று சோர்தனன் னீதியோ நிலத்தின்மு னீசா 87

இராமாயணப் பொருள்:- அனகன் = பாவமற்றவனுன கோகிகன், முனீசா = முனிச்சிரேட்டரே, என்பாலவியோகம் = எனது புத்திரப் பிரிவு பிற எளிது.

பாரதப்பொருள்:- அனகன் = மன்னன். இன்று, என்பால் மேவும் = இப்போது எனது காரணமாக வந்தடையக்கூடிய தான, அ = அந்த முனிசாபத்தின்படி, வியோகம் ஆம் இடரினின்று = உமக்கேற்படக்கூடிய மரணமாகிய துன்பத்திலிருந்து, சோர்தல் = நான் கலங்குதல், நிலத்தின்முன் = மக்களுக்கெதிரில், இது நீதியோ, ஈசா = பகவானே.

தான்மு யன்றிடு தீங்கனற் றனுசச ரவியல்
ஆன்ம சத்தியான் மாற்றிட லரிதல வல்லோய்
ஏன்ம லைந்தளர்ந் தலமுற லென்றுமா தவன்றன்
பான்ம றுத்திட வுளமிகப் பதைத்தெழும் பான்மை 88

இராமாயணப் பொருள்:- தனுச = அரக்கருடைய, தீங்கு அனல் = கொடுந்தீயையொத்த, சர இயல் = செயல்களை, தான் = தானாக ஆன்ம சத்தியால் மாற்றிடல் அரிது அல்ல. வல்லோய் = எல்லா சக்திகளும்வாய்ந்த முனிவரே, ஏன், அலமுறல் என்று, மாதவன்பால் = முனிவன்பால், மறுத்திட, பதைத்தெழும் = துடிப்புற்று திரும்பிச் செல்ல எழுந்த, பான்மை = தன்மையை, "உணர்ந்து" என்று அடுத்த செய்யுளோடு தொடரும்.

பாரதப் பொருள்:- தான் = அந்த மன்மதன், முயன்று இடும் = வலிமை கொண்டு செய்துவருகிற, தீம் = இனிமையுடைய, கனல் = கன்னலலாகிய, தனுச = வில்லினின்றும் கிளம்புகிற, சர இயல் = மலர்க்கணைகளின் தன்மையை, மாது = மாத்திரியாகிய பெண். அவன்றல்பால் மறுத்திட = அரசனுடைய இச்சைக்கு மாறாக மறுத்துக்கூற, (அரசன்) (தனது) உள்ளம், பதைத்து எழும் பான்மையை "உணர்ந்து" என்று மேற்செய்யுயோடு இயையும்.

உணர்ந்தக் குருவரன் பகருநல் லுரைகளாற் பூவில்
லணிந்தவ் விளங்குமா ரனைமகிழ்ந் தனுப்பின னிறைமா
குணக்குன் றெடுநிகழ் சுமித்திரோ தயமணி கூடி
வணக்க முறவர தனுபவ வாஞ்சையை மாற்றி 89

இராமாயணப்பொருள்:-அ + குருவரன் = அச்சபையிலிருந்த குலகுருவாகிய வசிட்டன், உணர்ந்து, பகரும் = (அரசனுக்குக்) கூறிய, நல் உரைகளால், பூ = அழகான, வில் அணிந்த = வில்லைத் தோளில் தாங்கிய, அவ் + இளங்குமாரனை = அந்த இளமை

வாய்ந்த மைந்தனை (இராமனை) குணக்குன்றெடு = நற்குணக் குன்றமாகி விளங்குகிற, சுமித்திர = சுமித்திரையினிடத்து, உதய = பிறந்தவனுன, மணி = மதிப்பொலிவுடைய இலக்குமணன் வணக்கமுற = பணிவோடு, கூடி, வர = தன்னேடு சேர்ந்து வரவே, இறை = தயரதன், தனுபவ = மைந்தன் (தன்னருகிலேயே இருக்க வேண்டும்.) வாஞ்சையை மாற்றி = காதலை விலக்கிக்கொண்டு, அனுப்பினன்.

பாரதப் பொருள்:- அக் + குருவரன் = அந்தக் குரு குலாதிபன், உணர்ந்து = தன் உள்ளப்பாங்கை யுணர்ந்தவனுகி, மா = மாண்புடைய, குண = சிறந்த பண்புகளில், குன்றெடு = குன்றம் என்றுரைக்கத்தக்க மாத்திரி தேவியோடு, பகரும் = தான் கூறும், நல் = இதமான, உரைகளால் = சொற்களால் (இணங்கிய) சு = நல்ல, மித்திர = நட்புக்குரியதாக, உதய = தோன்றிய, மணி = மதிப்பொலிவுடைய மாத்திரியை, கூடி = சேர்ந்து, அ = அந்த பூ வில் அணிந்து = அழகிய இரும்பு வில்லணிந்து, விளங்கும், மாரனை = மன்மதனை, வர தனு = மேன்மையுற்ற உடலினிடத்து, பவ = உண்டாகியிருந்த, வாஞ்சையை = விருப்பத்தை, மாற்றி = புறக்கணித்து, மகிழ்ந்து = இன்பத்திற்றிளைத்து வணக்கமுற = பணிவோடு, அனுப்பினன்.

விளக்க முறநிகழ்ந் திலகுமூழ் வினைப்பயன் மேவி
வளப்ப முறமகிழ்ந் தொழுகுச மாகம லீலை
துளக்க மறச்செய நோக்கிமா தவன்றனைத் தொடர்ந்தே
களக்க மறவரு குதற்குளங் களிப்புற மாதோ 90

இராமாயணப் பொருள்:- ஊழ்வினை = பூர்வ புண்ணிய மானது, விளக்கம் உற நிகழ்ந்து = மிகத்தெளிவாக தன்னிடத்தி லிருந்து, இலகும் பயன் மேவி = விளங்கும் பயனேடு கூடியதனல், விளப்பம் உற = மனத்தில் ஒரு செழிப்பையுண்டாக்க, (அதனல்) மகிழ்ந்து, மாதவன் = கௌசிகன், சமாகம = (இராம லக்குமணர் களனை) ஒன்றுகூடி, ஒழுகும் = நடந்துகொள்ளுகிற, லீலை = திரு

விளையாடலானது, துளக்கம் அற செய=தனக்கு (அரக்கர்களா லான) நடுக்கத்தை நீங்கச் செய்ததை, நோக்கி=கவனித்தவனாகி, அவன் = அந்தக்கௌசிகன்; களக்கம் அற = கபடமில்லாமல், தனைத் தொடர்ந்து அருகுதற்கு = நடந்துவரக்கண்டு. உளம் களிப்புற, "இறைபெருமானொடு புகலும்" என மேற் செய்யுளில் வினை முடியும்.

பாரதப் பொருள்:- நிகழ்ந்து இலகும்=முன்பு முனிவன் காமத்தால் எறியப்பட்டக் காரணமாயிருந்த, ஊழ்வினை=பாவச் செயலின், பயன்மேவி=பிரயோசனத்தையடையத் தொடங்கி, மகிழ்ந்து, ஒழுகும் (படியான) சமாகமம்=கூடலென்றும், லீலை= களியாட்டத்தால், விளக்கம் உற= (முனிவனது சாபம்) வெளிப் படையாகத் மன்னனையடைய (மன்னனுக்கு மரணமுண்டாக்க என்பதாம்) மாது = மாத்திரிதேவி, நோக்கி = அச்செயலைக் கூர்ந்து சிந்தித்தவளாய், துளக்கமற=அச்சமில்லாமலும், களக்கம் அற=சஞ்சலமில்லாமலும், அவன்தனை=அந்தமரித்த மன்னனை, தொடர்ந்து=பின்பற்றி, அருகுதற்கு=உடன்கட்டையேறி மடி வதற்கு, களிப்பு உற இன்பத்தையுண்டாக்கவே, செய=அக் காரியத்தைச் செய்யத் தொடங்கினவளாய், "புகலும்" என மேற்செய்யுளில் வினை முடியும்

மேவி யருமக விருத்தியா மியல்பினை மீண்டுந்
தாவி றடக்கைவி டாதவ ரன்பினாற் றனித்தே
யாவ லுடனினி தொடர்ந்துவ ராதுவப் புறவப்
பூவ ரசர்தொழு மிறைப்பெரு மானொடு புகலும் 91

இராமாயணப் பொருள்:- அரும் = அரிதாகிய, அக விருத்தியாம்= (மக்கள் மேற்கொண்ட) மனோவிருத்தியென்றும், இயல்பினை=தன்மையை மீண்டும், மேவி அவர் அன்பினால்= அம்மக்களின்பாலுள்ள பிரியத்தால், கைவிடாது = அவர்களை விட்டுப்பிரிய மாட்டாவனாய், இனி=தான் வனத்துக்கு அழைத்துச்சென்ற பிறகு ஆவலுடன், தொடர்ந்து, தனித்து,

வராது = வராமலிருக்கும்படியாக, உவப்பு உற = மகிழ்ச்சி தோன்ற, இறை = மன்னர்கட்கு, பெருமான் ஒடு = மன்னனுன சக்கரவர்த்தியோடு, புகலுவான் ஆயினுன்.

பாரதப் பொருள்:- அரும், மகவு = குழந்தைகளாகிய நகுல சகதேவர்களின், விருத்தி ஆம் = வளர்ச்சியாகிய, இயல் பிணை மேவி = கருத்தைக்கொண்டு. (குழந்தைகள் வளர்ந்தோங்க வேண்டுமென்றும் நினைப்போடு) இனி = தான் தீயில் புகுந்து உயிர்நீத்தபிறகு. தனித்து = (குந்தி) தான் தனிமையாக, கை விடாத = தன்னை விட்டுப்பிரியாத குணமுடைய. வரன் = நாயகன், பின்னுல், ஆவலுடன். தொடர்ந்து = (உடன்கட்டையேறி மடிந்து) தொடர்ந்து, வராது = வராமலிருக்கும் பொருட்டு, இறை பெரும் மான் ஒடு = மன்னனது மூத்த மனைவியான மான் விழியையொத்த குந்தியோடு, உவப்பு உற புகலுவாள், ஆயினுள்.

ஈங்கு நிகழுமை வரைதிகழ் மைந்தரை யிதய
மேங்கி யின்தளர்ந் தயர்வுரு தின்புறக் காத்தி
யாங்கு மகிழ்ந்தவ ரன்பினு லடைவெனற் பயனை
யோங்கி வளர்தரு சுபர்னகா னகமிசை யுற்றே 92

இராமாயணப் பொருள்:- (மன்னனே) இனி = யான் சென்றபிறகு (நீ) இதயம் ஏங்கி, தளர்ந்து. அயர்வு உருது = கவலைப்படாமல் ஈங்கு = இந் நகரத்திலேயே, நிகழும், மை = கருத்த வரை திகழ் = மலைபோன்ற தோள்களோடு கூடிய, மைந்தரை = பரதனையும், சத்துருக்கனையும், இன்புற, காத்தி, (யான்) சு = செழிப்பான, பர்ன = இலைகளோடு கூடி ஓங்கி, வளர், தரு = மரங்களையுடைய, கானக மிசை, உற்று = சேர்ந்து, அவர் = அந்த இராம லக்குமணர்களுடைய, அன்பினுல், மகிழ்ந்து, ஆங்கு = அவ்வனத்தே, நல் பயனை அடைவேன்.

பாரதப் பொருள்:- (நான்), அவ் வரன் = (என்காரணமாக உயிர்நீத்தவருன) அந்த நாயகனுடைய, பின்ருல் = பின் சென்று (உடன்கட்டையேறிமடிந்து) ஓங்கி, வளர்தரு = வளர்ந்துள்ளதான, சுபர்ன கானகமிசை உற்று = கற்பகம் மந்தாரம் முதலிய மரங்களடர்ந்த தேவருலகப் பூங்காவையடைந்து, ஆங்கு நல்பயனை அடைவேன் = அடையக்கடவேன். (நீ) நிகழும் = இவ்வாறு, மன்னனும் நானும் பிரிந்த காரணத்தால், இனி = நானும் பிரிந்த பிறகு இதயம், ஏங்கி, தளர்ந்து, அயர்வுருது திகழ் மைந்தரை = உல்லாசமாய்த் திகழுகிற மக்கள், ஐவரை = தர்ம, பீம, அர்ச்சுன சர்க்கரை, நகுல, சகதேவர்களை இன்புறக் காத்தி.

எனவன் றியம்பிமா மணுளனு மிறைவனை யிலகும்
வினய முறுமிரா மனையிலக் குவன்றனை விளங்க
வனல மிசைபுகுர் திசைபெறும் வானெறி யழைத்து
மனம கிழச்செல நிகழ்ந்ததம் மந்தமா ருதமே 93

இராமாயணப் பொருள்:- என, இயம்பி, மா = திருமகளின், மணுளன் ஆம் இறைவனை = திருமா (அழகிய) இராமனை, இலக்குமன் தன்னை, அனலம் = சூரியனது வெப்பம் (அதனுடைய) இசைப்பு = சேர்க்கை (யை) உகுந்து = அப்புறப் புறப்படுத்தி (அதனுல்) இசைபெறும் = புகழப்பெற்றதான, வான் = சிறந்த, நெறி = வழியில் அழைத்து (க்கொண்டு) (கௌசிகன்) செல்ல = போகும்படியாக அம் மந்தமாருதம் நிகழ்ந்தது.

பாரதப் பொருள்:- என, இயம்பி, மா = பெருமைமிக்க, மணுளன் ஆம் இறைவனை = கணவனுகிய மன்னனை, இரா + மன் + ஐ = இரவுக்குத் தலைவனுன சந்திரனையொத்த வெண்மையான உடலுடையவனை (பாண்டுவை என்பதாம்) இலக்குவன் தனை = அழகானவனை, (மாத்திரிதேவி) அனலமிசை புகுந்து = தீயில் பிரவேசித்தவளாகி, வான்நெறி = அந்தரமார்க்கத்தில், அழைத்துச் செல = கணவனை உடன்கொண்டு சுவர்க்கத்திற்குச் செல்லும்படியாக, அம் மந்தமருதம் = அந்த இளவேனிற்காலத்து தென்றற் காற்று, நிகழ்ந்தது.

ஓம்

தந்தையைப் பிரிந்த தனயரின் நிலைமை.

சனநாதகு மாரோத்தமர் சனகன்றனை நீத்தே
யினிதாய்முனி வரகங்களித் தேகற்கிசை யும்நாள்
வனமேவிய யதிபுங்கவர் வாஞ்சைகொடு வாழ்த்த
நனிமேவின ரத்திநகர நயனோற்சவ முறவே 94

இராமாயணப் பொருள்:- சனநாத குமார உத்தமர் = இராம இலக்குமணர்கள், (சனநாத = மக்களுக்குத் தலைவனாகிய அரசன்) முனிவர் = விசுவாமித்திர முனிவரின் பின், இனிதாய் அதம் = உள்ளம் களித்து, ஏகற்கு இசையும் நாளில், வனம் = அவ்வனத்தில் வசித்தவர்களும், ஏவிய = (இராமனைத் தரிசிக்கும் பொருட்டு தம் தம் உள்ளத்தால்) தூண்டப்பட்டவர்களுமான யதி புங்கவர் = துறவிகளான சிறந்த முனிவர்கள், நனி, வாஞ்சை கொ(ண்)டு, நனி, வாழ்த்த = ஆசீர்வதிக்கவும், அத்தி நகரன் = வானத்தே விளங்கும் அந்தச் சூரியன், நயன + உற்சவம் + உற, = கண்கள் மகிழும்படியாக மேவினர் = அம்முனிவர்களின் ஆச்சிரமங்களையடைந்தனர்.

பாரதப் பொருள்:- சனநான குமாரோத்தமர் = குழந்தைகளான பாண்டவர்கள், சனகன்றனை நீத்து = தந்தையை விட்டுப் பிரிந்தவர்களாய், தாய் = தாயான குந்திதேவி இனி நகரத்திற்குச் செல்லும்பொருட்டுக் கூறிறதைக்கேட்ட, இவர் = இக்குழந்தைகள், இனி = அதன்பிறகு, ஏகற்கு = நகர் புகுதற்கு, அகம்களித்து = மன மகிழ்ந்து, இசையும் நாள் = சம்மதித்த காலத்தில் வனம் மேவிய யதிபுங்கவர் (இவர்களை) வாழ்த்த (வும்) அத்திநகரம் = அஸ்தினாபுர வாசிகளது, நயன = கண்கள், உற்சவம் உற = களிக்கும்படியாக, மேவினர் = நகரத்தை நோக்கி நடந்தனர்.

அத்தேவவ டிவினர்பரி வாய்ந்தந்நெறி யூடே
மத்தேபவ ரிசதாங்கவ லத்தாடகை மண்டு
ளித்தாரணி ககனம்பெற வெதிராகவ ருங்கால்
சித்தோத்தம வியமன்னகர் சேர்த்தற்கினி தேவ 95

இராமாயணப் பொருள்:- அ+தேவ=ஒளி பொருந்திய. வடிவினர்=அழகிய வடிவமுடைய இராம லக்குமணர்களின், அல்லது தெய்வ அம்சமுடையவர்கள் பரி=அடையாளத்தை, ஆய்ந்து= (மோப்பத்தால்) கண்டறிந்து.மத்தேப=மதயானைகளி னுடையவும். அரி = சிங்கங்களினுடையவும். சத = நூற்றுக் கணக்கான.அங்க=உடல்கலினுலுண்டாகக்கூடிய, வல=வலிமை வாய்ந்தவர்களான தாடகை=தாடகையென்னும் அரக்கி. அந் நெறியூடு=இவர்கள் சென்ற வழியினெதிரே. இத்தாணி=இந்த நிலத்தின் மண் தூள்=புழுதி. ககனம் பெற=வானத்திற் பரவும் படியான (அட்டகாசத்தோடு) வருங்கால். சித்த+உத்தமன்= சித்தோத்தமன் = கௌசிகன் (இச்சொல்லுக்கு சித்தர்களில் சிறந்தவன் என்றும். சிறந்த உள்ளம் படைத்தவன் என்றும் இருவிதப் பொருள் கொள்ளத்தகும்) இயமன்=நமனுடைய. நகர் சேர்த்தற்கு (இராமனை) ஏவ

பாரதப் பொருள்:- அத்தேவ வடிவினர்=அந்தத் தெய்வ அமிசம்பொருந்திய இளம் பாண்டவர்களினது, பரிவு ஆய்ந்து= துன்பத்தை யாராய்ந்தவனாகி, சித்த+உத்தமன்=நல்ல எண்ண முடையவனும், நியமன் = ஒழுக்கமுள்ளவனும் ஆன திருத ராட்டிரன், நகர் சேர்த்தற்கு = (அவர்களை) பட்டணத்திற்கு அழைத்து வரும்பொருட்டு, இனிது=மகிழ்ச்சிகொண்டு, ஏவ= மந்திரிபிரதானிகளை அனுப்ப (அவர்களோடு வந்து) மத்தேப= யானைப்படை, அரி = குதிரைப்படை, சதாங்க = தேர்ப்படை, தாள் தகை = காலாட்படை (வலம் என்பது படை) ஆகிய வற்றினுல் பிற பொது.

சீராகவப் பெருமான்மகிழ் தேவுஞ்செய லாய்ந்து
நேராரம ராடம்பர சரவாகினி நிகழும்
பேராற்றலி னம்மாதுயர் பெறமேவுமை வரைவான்
றேரூர்ந்தொளி ரந்நாகபு ரஞ்சேர்த்திட லோடும் 96

இராமாயணப் பொருள்:- ஏவும் = முனிவன் ஏவிய செயல் ஆய்ந்து, இராகவப் பெருமான் = ஸ்ரீ இராமபிரான். மகிழ்ந்து, பேர் ஆற்றலின், நேர் ஓர் = எதிரில் வருகிற, மைவரை = சூரியமலைபோன்ற வடிவுடைய, அம்மாது = அத்தாடகை, உயர் பெற = மேன்மையடையும்படியாக, அமர் = போர் என்னும். ஆடம்பர = விநோதச் செயலினால் பிரயோகித்த, சரவாகினி = அம்புக்கூட்டமானது, தேர் ஊர்ந்து = தாடகையை தேர் ஊர்ந்திடச்செய்து, அந்நாகபுரம், செர்த்திடலோடு = அந்த தேவலோகத்தையடையச் செய்யவே.

பாரதப் பொருள்:- அப்பெருமான் = அந்தத் திருதராட்டிரன், சீர் ஆக = நேர்மையாக, ஏவும் செயலை (அந்தப்படை) ஆய்ந்து, நேரார் = பகைவரிடத்து, அமர் = போர்புரியும், ஆடம்பர = கம்பீரச் செயல்களோடு கூடிய, சர = நடத்தையுடைய, வாகினி = அந்தச் சேனையானது, அம்மாதுயர், பெற மேவும் = துக்கமடைந்த பெற்ற தாயாரோடு நடந்து வருகிற, ஐவரை = பாண்டவர்களை வான் = சிறந்த, தேர் ஊர்ந்து. வரும்படி செய்து) நாகபுரம் = அத்தினாபுரம், சேர்த்திடவே.

புகழுற்றவ னெடுநன்னெறி புரியச்சுத ருடனே
யகமுற்றெழு பொருவிற்கலை யமர்ந்தோங்குச லத்தை
நிகரற்றெழு மாசிரமவி சாரத்திர ணீக்கி
மகிழுற்றிடு மாறக்குரு வரனற்செய வாற்ற 97

இராமாயணப் பொருள்:- அக்குருவரன் (ஆகிய) அவன் = கௌசிகன், புகழ் உற்று நல் நெறி புரி = அழகிய வழிகளையுடைய அயோத்தியில் வாழத்தக்கவர்களும், பொருவில் கணை அமர்ந்து, ஓங்கும் = சமானமற்ற நல்ல அத்திரங்களினால் மிகச் சிறந்து விளங்குபவர்களும் ஆன, அ + சுதருடனே = அந்த, அரசகுமாரர் களோடு, அகம் உற்று = உள்ளத்தினின்று, எழும், சலத்தை = ஆயாசத்தை, நிகர் அற்று, எழுகின்ற, ஆசிரம = முனிவர்தம் இல்லங்களில், விசாரத்திரள் = உசாவுகின்ற இனிய மொழிகள். நீக்கி, மகிழ் + உற்றிடுமாறு = சந்தோஷிக்கும்படி, நற்செயல், ஆற்ற.

பாரதப் பொருள்:- புகழ் + உற்ற (தும்) வல் = வலியதும் நெடு = நீண்டதும், நல் = ஒழுங்கானதும் ஆன, நெறி = வழிகளை யுடைய, புரி = அத்தினபுரியில், அக்குருவரன் = அந்தக் குருகுலாதிபன், அ + சுதருடனே = அந்த பாண்டு புத்திரர் களுடனே, அகம் உற்று = அரண்மனையையடைந்து, எழும் = உள்ளத்தினின்றெழுந்து, பொருவுகில் = சமானமற்ற (அழகிய என்பதும்) கணை = கண்ணை, அமர்ந்து ஓங்கும் சலத்தை = பொருந்தி வழியும் துக்க பாஷ்பத்தையும், நிகர் அற்று எழும் மா = மிக்க, சிரம = ஆயாசமும், விசாரம் = துயரமும் (ஆகிய) திரள் = துக்கப் பண்புகளையெல்லாம், நீக்கி = துடைத்து, மகிழ் உற்றிடுமாறு, நல் செயல், ஆற்ற = அம்மக்களுக்குச் செய்யவும்,

உரைதாபச மூகம்பரிந் தோதும்மொழி யாலித்
தரைமாந்தர்க ளேத்தும்மலர்த் தாள்வேந்தைப் பிரிந்து
வரைபோன்றம தேபத்திரள் வாழ்கானிடை நண்ணிக்
கரைநீத்தம னோவேதனைக் கடனீந்தின ரன்றே 98

இராமாயணம் பொருள்:- உரை = சொல் வல்லமை வாய்ந்த, தாமச = முனிவர்களின். மூகம் = கூட்டம், பரிந்து. ஓதும், மொழியில் கானிடை நண்ணி = கானகத்தையடைந் ததனால் (ஏற்பட்ட) மனோவேதனை (என்னும்) கரை நீத்த கடல், (அம்மக்கள்) நீந்தினர்.

பாரதப் பொருள்:- அந்தத் திருதராட்டிரன், பரிந்து= அன்புகொண்டு, ஓதும் = மொழியால் = தேற்றும் சொற்களால், கானிடை, தண்ணி = காட்டையடைந்து (வாழ்ந்த) வேந்தைப் பிரிந்து=பாண்டுராசனையிழந்து (அதனுல்) தாப=துன்பத்தின், சமூகம்=கூட்டமாகிய, மனோவேதனைக் கடல் (தனை) நீந்தினர்.

(வேறு)

கார்த்த வீரிய னெழுத விந்திரன்
காண சேட னியம்பொணு
சீர்த்தி வாய்ந்துயர் மான சாம்புரு
கத்திசைநனி சேர்ந்தொளிர்
தார்த்த ராட்டிர லீலை யின்புறச்
சார்ந்தி யற்றினர் சாலவும்
பராத்தி வோத்தம ரேத்து மவ்வியல்
பாண்டவர் புகழ் பூண்டவர் 99

இராமாயணப் பொருள்:- பார்த்திவ உத்தமர் ஏத்தும்= மன்னர்களால் புகழப்பட்டவர்களும். அவ் இயல்பு=அம்மன்னர்க் குரிய தன்மைகளென்றும், புகழ்பூண்டவர் (களும் ஆன) அவர்= இராம லக்குமணர்கள், ஆண்டு = அந்தத் தபோவனத்தை, சார்ந்து, மானச+அம்புகத்து+இசை, மானச=மானத சரோவர மென்னும் நீர் நிலையில் உள்ளதான, அம்புருகத்து + இசை = தாமரை மலர்மீது சேர்ந்து ஒளிரும், தார்த்தராட்டிர அன்னப் பறவைகளையொத்து லீலை இயற்றினர் = இணை பிரியாமல் விளையாட்டுகளைப் புரிந்தனர், பிற பொது, தார்த்தராஷ்ட்ர: என்ருல் அன்னப்பறவை என்பது வடமொழி.

பாரதப் பொருள்:- (திருதராட்டிரனுடைய) மானச= உள்ளம் (என்னும்) அம்புருகத்திசை=கமலத்தில்,சேர்ந்து ஒளிரும், தார்த்தராட்டிர=திருதராட்டிரனுடைய மக்களாகிய துரியோனன்

முதலிய நூற்றவர், அ+வியல்=அதே தன்மையுடைய (திருத ராட்டினுடைய விருப்பத்திற்கு இலக்கான என்பதாம்) பாண்டவர்=பாண்டு புத்திரர் ஐயர், சார்ந்து=நேசப்பான்மை யுடன், இன்புற, லீலை = விளையாட்டுகளை, இயற்றினர்' பிற பொது.

மான்மி யச்செய லோங்க வீட்டும
    ளுக்கை மேவிய மாவலத்
தான்ம கிழ்வுறு தரும சாத்திர
    முனிவ ராச்சரி யம்பெறத்
தேன்ம லர்த்தொடை பூண்ட கௌரவ
    சீல ளுதர வையடைந்
தான்ம ஞாதிசி நேகி தோத்தம
    ராகவர் விளை யாடினர் 100

இராமாயணப் பொருள்:- வீட்டு = நீங்குவதும், மன் = நிலைத்திருப்பதும் (ஆன தன்மையுடைய) ஆக்கை = உடல், அதாவது:- அழிவதும், தோன்றுவதுமான உடல், அல்லது, மன்+ஆக்கை+வீட்டும்=பொருந்திய உடலைவிட்டு, பரகாயப் பிரவேசம் பண்ணும் தன்மை, அல்லது, வீட்டு=வீடுபெறுதற்கு உரிய, மன் ஆக்கை=அழியாத சூக்கும உடல், மேவிய, மா= பெருமைமிக்க, வலத்தால்=தவத்தின் வலிமையால், மகிழ்வு உறுபவர்களும், தருமசாத்திர முனிவர்=அற நூல்களையாக்குந் தன்மை வாய்ந்தவர்களுமான, இருடியர்கள், ஆச்சரியம் பெறும் படியாக, கௌரவ=குருத்தன்மைவாய்ந்த, சீலன்=ஒழுக்கமிக்க கோசிகன், ஆன்ம=அன்ம சொரூபத்தை, ஞ=அறிந்தவர்களான முனி குமாரர்களோடு, அதி சிநேகித=மிக்க நட்பு பூண்டவர் களாகி, உத்தம=சிறந்த பண்புவாய்ந்த, ராகவர்=ரகுகுலத்துப் பிள்ளைகள் (இராம லக்குமணர்) விடியாடினர்.

பாரதப் பொருள்:- வீட்டுமன்=பீஷ்மருடைய, ஆக்கை மேவிய மாவலம்=உடலிற் பொருந்தியுள்ள மிக்க, பலத்தால், மகிழ்பவர்களும், தரும=அவனது வில்லினின்றும், ச=கிளம்புகிற, அத்திரம் = அம்புகளின் வேகத்தை, உன் = கவனிக்குந் தன்மை வாய்ந்தவர்களுமான, இவர்=இந்தப்பாண்டவர், ஆச்சரியம் பெற = வியப்புறுபவர்களாய், கௌரவ சீலன் = திருதராட்டிர னுடைய, ஆதரவையடைந்து, ஆன்ம=தமது, ஞாதி=பங்காளி களான துரியோதனுதியரோடு, சிநேகம் கொண்டு, உத்தமர்= நற்குணம் படைத்தவர் (ஆன), ஆகவர் = போர்த்திறமுற்ற பாண்டவர், விளையாடினர்.

சமர விசயவி துரக ரோந்த
சாக சத்திர ளான்மிக
விமல விசுவா மித்தி ரேசவி
தான விக்கின மின்றியக்
குமர வரரங் கண்ணி மையினெரு
குறையு ருமலி ழைத்தனர்
அமித சுயதரு மகுண சுசரவி
கார லீலைவி டாதரோ 101

இராமாயணப் பொருள்:- சமர = போரினுல் ஏற்படக் கூடிய, விசய=வெற்றியில், விதுர=அறிவு உடையராகி, கர= இயற்றுகிற, உந்நதமான சாகசத்திரளால்=மிக்க திறமையால், விசுவாமித்திர (னுடைய) ஈச=தலைமையான, விதானம்= வேள்வி, விக்கினம்=இடையூறு. அக்குமரவரர்=அந்த சிறப்புற்ற அரசமைந்தர்கள், அம்=அழகிய, கண் இமையின்=கண்ணைக் காக்கும் இமையைப்போல, சுய=தம்முடைய, தரும=வில்லினது. குண=நாணியினின்று இளம்புகிற சு=சிறந்த, சர=அம்புகளின் விகாரம் = விஹாரம் = தொழில்படுதல், லீலை = விளையாட்டு, (வேள்வியைக் காக்கும் தொழிலை இராம லக்ஷ்மணர்கள், ஒரு விளையாட்டாகவே செய்தனர் என்பதாம்)

பாரதப்பொருள் :- சமரவிசய=போரில் வெற்றியடையுந் தன்மைவாய்ந்த, விதுர மன்னனுடைய, கர=செய்கையென்னும், உந்நத சாகசத்திரளால்=சிறந்த திறமைகளினுல், மிகு + அவிமல=மிகுந்த, அவிமல=தூய்மையற்ற (அதாவது பொருமை வஞ்சகம் முதலிய தீக்குணங்கள்) விசுவ+சுமித்திர + ஈச + விதானம், விசுவ=உலகத்தில் சுமித்திர = பகைத்தன்மைக்கு உரிய, ஈச = தலைவர்களின், விதானம் = கூட்டங்களால், விக்கினம்=தீங்கு இன்றி, அக்குமரவரர்=அந்த கௌரவ, பாண்டவர்களாகிய சிறுவர்கள், அங்கண் = மிகப்பரந்துள்ள, இமையின் = இம்மையின் = இவ்வுலகத்தில், அமித = மிதமற்று, சுய=தத்தமக்குரிய, தருமகுண = இயல்பான குணங்களுக்கேற்ப, சு+சர=சிறந்க நடத்தையின், விகார லீலை=தன்மைக்குரிய லீலைகளை இழைத்தனர், இங்கு, 'தருமம்' என்பதற்கு 'சுபாவம்' அல்லது 'இயல்பு' என்னும், 'சர' என்பதற்கு நடத்தையென்னும், அம்பு என்னும் பொருள்களிருத்தல் பற்றி பாண்டவர் பரமாகக் கூறுமிடத்து, 'தரும குணம்' என்பதற்கு இயல்பாண நற்குணம் என்றும், 'சர' என்பதற்கு நடத்தையென்றும், துரியோதினுதியர் பரமாகச்சொல்லுமிடத்து, 'தரும குணம்' என்பதற்கு இயல்பாக அமைந்த பொருமைக் குணமென்றும், 'சர' என்பதற்கு அம்புகளையொத்த என்றும் பொருள்கொள்ளத் தகும், மற்றும், 'விகார லீலை' என்பது 'விஹார லீலா' என்னும் வடசொல் திரிபு ஆதலால், அதற்கு உற்சாகமான ஆட்டம் என்றும் பொருள் படுதலால், பாண்டவர் பரமாக, உற்சாகத்துடன் கூடிய ஆட்டம் என்றும், துரியோதனன் பரமாக தமிழ்ச் சொல்லை உள்ளபடியே கொண்டு 'விகாரம்' அதாவது நேர்மையற்ற என்னும் பொருள் படுத்துதல் பொருந்தும்

ஓம்

பகைத் தகர்ப்பு.

வம்பு லாமலர் தார்புனைந்து
வயங்கு மார்புறு மன்னவன்
றம்பி பாலக ரகமகிழ்வர
சவன பூமிசை யுற்றதோர்
செம்பொ ஞர்வரை போன்ற தோளுறு
செயலையாவு முணர்ந் துளத்
தும்பரேத்து மகீபரா மெனு
முணர்விலாம லெதிர்த்தனர் 102

இராமாயணப் பொருள்:- மன்னவன்=இராமன், தம்பி= இலக்குவன், பால்=ஆகிய இருவரிடத்தும், அக்ரகம்=நாள் தோறும், இஃது அஹ:+அஹ:=அஹரஹ: என்ற வட சொற்றிரிபு, 'அஹ:' என்பதற்குப் 'பகல்' என்பது பொருள். அதனுல் 'அகரகம்' என்பது நாள்தோறும் என ஆயிற்று, மகிழ்= சந்தோஷங்கொண்ட (கௌசிகனுடைய) வர=மிகச்சிறந்த சவன பூமி+இசை=யாக பூமியினிடத்து, உற்ற, செயல் யாவற்றையும் உணர்ந்தவர்களாய், வரைபோன்ற தோள் உறும் (மாரீசன் சுபாகு முதலான அரக்கர்கள்) உம்பர் ஏத்தும் மகீபர்=தேவரால் துதிக்கப்பட்ட அரசகுமரர்கள், எதிர்த்தனர், இதில் 'அரக்கர்' தோன்ரு எழுவாய்.

பாரதப் பொருள்:- மன்னவன் தம்பி பாலகர் = திருத ராட்டிரனுடைய தம்பியான பாண்டுவின் மக்கள், அகமகிழ்வு= உள்ளக் களிப்புக்கேற்ற, அரச = அரண்மனையைச் சார்ந்த,

வனபூமிசை=பூங்காவில், உற்றதாகிய = விளையாட்டினுல் கண்டறிந்ததான, வரைபோன்ற தோள் உறு (பாண்டவர்களுடைய) செயல் யாவற்றையும், உணர்ந்து (கௌரவர்) எதிர்த்தனர், இதில் கௌரவர் தோன்ரு எழுவாய்.

வளர்வுறும் பொரு விற்குணத்தினை
யறவிடுத்து மகிழ்வமைந்
தொளிரு மாவியல் பாண்டவர்க்
கிடரூட்டுமச்சர வினையெலாந்
தளர்வுறுப் பிரபாகரன் றிசைசார்ந்த
புற்பனி யாமெனு
விளைவுறுஞ் செயலாய்ந் தகிக்கொடி
யோனிராசி வெகுண்டதே 103

இராமாயணப் பொருள்:- பொருவு இல் குணம் = வேள்விச்சாலைக் காரியங்களுக்கு பொருத்தமில்லாத விளையாட்டுக் குணம், அறவிடுத்து = முற்றிலும் ஒழித்திட்டு, மகிழ்வு. அமைந்து= (பொழுதுபோக்குக்காக) மற்ற முனிவர்களால் பேசப் படுகிற சன்மார்க்கம், பத்திநெறி முதலியவற்றைக் கேட்டு) மகிழ்ந்து, ஒளிரும், மா இயல்பு = பெருமையோடு கூடிய தன்மையைக் கொண்டிருக்கும், ஆண்டு = அச்சமயத்தில், அவர்க்கு=அந்த இராம லக்குமணர் முதலிய யாவர்க்கும், இடர் ஊட்டும்=ஊறு விளைவிக்கும்படியான, அ=அந்த அரக்கரின், சரவினையெலாம் = நடத்தையினுலாகிய காரியங்களெல்லாம், பிரபாகரன்=சூரியன், ‘அகி’ ‘அணி’ என்பதன் திரிபு, அஹி= பாம்பு, அதைப்போன்ற கொடியோன்=மாரீசன், இராசி= கூட்டம், வெகுண்டது, (இராமனைக் கண்டு சீறியெழுந்தது என்பதாம்.)

பாரதப் பொருள்:- மகிழ்வமைந்து ஒளிரும், மா இயல்பு= கண்ணியமான பண்பும், செயலும் வாய்ந்த, பாண்டவர்க்கு, பொருவு இல் குணத்தினை அறவிடுத்து = (துரியோதனுதியர்) குற்றமற்ற குணத்தை யறவே விட்டொழித்து, இடர் ஊட்டும், மச்சரவினை = பொருமைச் செயல், எல்லாமும், அகிக் கொடியோன் = சர்ப்பக்கொடியையுடைய துரியோதனன், பிற பொது.

(வேறு)

இந்நியதி யாகவிதி மார்க்கபரி பாலனமி
யற்றுதல கற்றி டவகத்
துன்னியவ ரக்கவினை கட்கிருதயந் தளர்வு
ருதுமிக வாற்றலி ஞடே
வின்னமறு தன்மநெறி யாலிலகு வீமசர
வீரியப் பாங்க நிலைமைக்
கிந்நிலமிசைப் பிரதி கூலகரு மச்செய
லிழைப்ப துணிவுற்றனரரோ 104

இராமாயணப் பொருள்:- இந்நியதி = அரக்கர்தம் எதிர்ப்புச் செயலாகி இந்த இறையானது, யாக = வேள்விக்கு, விதிமார்க்கம் = ஏற்பட்ட சன்மார்க்க சம்பாஷணை, வேத விசாரணை, இறைவனது பெருமை முதலிய அளவளாவும் தன்மைகள், அகற்றிட, அகத்து உள்ளிய அரக்கரது வினை களுக்கு, தன்மநெறி=வில்லின் வழியால், வீம=அஞ்சத்தக்க, சர=அம்புகளினுல், வீரிய பல=வீரங்கொண்ட சேனையினது, அங்கநிலைமை=பகுதிகளின் நிலைமைக்கு (யாகத்தை யழிக்க அவர்கள் மேற்கொண்ட படைவியூபங்களின் காரியத்திற்கு என் பதாம்) பிரதி கூலக்கருமம்=இடையூருன காரியம், வியூகங்கள் சிதருண்டு போகும்படியான, காரியத்திற்கேற்ற, செயல் இழைப்ப = பாணப் பிரயோகமென்னும் தொழிலைச் செய்ய இராம லக்குமணர் துணிவுற்றனர்.

பாரதப் பொருள்:- இந்நியதியாக = இந்த விதமாக, விதிமார்க்கம்=விளையாட்டுக்காக தாங்கள் ஏற்படுத்திககொண்ட, வழிகளை பரிபாலனம்=கடைப்பிடிக்கும் தன்மை, இயற்றுல்= செய்யும் கருத்தை, அகற்றிட = விட்டொழித்திட அகத்து உன்னி = உள்ளத்தே தீர்மானித்துக்கொண்டு, அ = அந்த துரியோதனுதியர், அரக்க வினைகட்கு=அசுரக்கிருத்தியர்களுக்கு, தளர்வுருது = பின்னடையாதவர்களாய், தன்ம நெறியால்= உதிட்டிரன் சொல்லும் வழியின்படி, இலகும்=நடந்துகொள்ளும் தன்மைவாய்ந்த, வீமனுடைய, சர=நடத்தைக்கும். வீரிய பல= ஆண்மைமிக்க வலிமையையுடைய, அங்க நிலைமைக்கு = உடலின் தன்மைக்கு பிரதிகூலக் கருமம்=கொன்றுவிடும்படியான காரியத்துக்குரிய, செயல் இழைப்ப = கொடிய ஆட்டங்களைப் புரிய, துணிவு உற்றனர்.

ஆயிடைக டுஞ்சினமு கத்தொடுவி ரோதிக
ளனைவர் முறையோடு தொடரத்
தூயபொலி வாரிரண லீலைகளி யற்றுழி
துலங்குமடல் வீம னமல
காயசய ராமனதி யாற்றலி னிசைத்தகன
காண்ட பிரயோக வியல்பின்
நேயமில்சு வாகுபுக ழோங்குபர லோகமிசை
நேர்மையுற வாழ்ந்திடவரோ 105

இராமாயணப் பொருள்:- கடுஞ்சினமுகத்தொடு, அ= அந்த, விரோதிகள் அனைவரும் முறையோடு = தங்களுக்குள் முறை ஏற்படுத்திக்கொண்டு, தொடர்=போருக்குத் தொடர்ந்த, அ+தூ=அந்தப் பகைமைக்குரிய, பொலிவு ஆர்=ஆரவாரம் நிறைந்த, இரண லீலே=போர்க்காரியங்கள், அடல் துலங்கும் வீமன் = வலிமையோடு விளங்குதலால் பகைவர்க்கு அச்சமூட்டும் தோற்றமுடையவன் (வீமன்=பயங்கரமானவன்)

அமலகாயன் = தூய சரீரமுடையவன், சயராமன் = வெற்றி இராமன்; இசைத்த = பிரயோகித்த, கன = வலிமையான, காண்ட = அம்புகளினது, நேயம் இல் = பகைக்குணமுடைய, சுவாகு ஆனவன் புகழ் பரலோக மிசை = கீர்த்திபெற்ற, சுவர்க் கத்தில் வாழ்ந்திட (செய்தான்) (சுபாகுவைக்கொன்றெழித் தான் என்பதாம்.)

பாரதப் பொருள்:- முறையோடு = விளையாட்டின் பொருட்டு தங்களுக்குள் முறைப்படி யேற்படுத்திக்கொண்டு, அ + தூய பொலி = ஆங்கு தெளிவாகப் பொலியும் (நீர் நிலையின் கண்; வாரி = நீரில், ரண லீலைகள் = போருக்குரிய விளையாட்டுகள்; இயற்றுமி, அடல் வீமன், அமலகாயன், சயராமன் = வெற்றியில் ஆனந்தமடைபவன், காண்ட பிரயோக இயல்பின் நேயம் = துரியோதனுதியர் பேரில், தண்ணீரை உதைந்து செலுத்துந் தன்மையில் அவனது கருத்துக்கு ஒத்தபடி இயங்கும் நட்புக்கு, இல் = இருப்பிடமென்றுரைக்கத்தக்க, சு = நல்ல, (வலிய என் பதாம்) வாகு = தோள்களின், புகழ் ஆனது, பரலோக மிசை = மேலுலகம் வரையில், வாழ்ந்திட = பரவிச் சென்று நிலைத்திட, (செய்தான்)

நீசபிர வர்த்தனை விடாதுபுரி தற்குரிய
    நெஞ்சகனை தீயகுணமா
ரீசனென சாற்றுதுரி யோதனகு ரூரனை
    சொரிந்தசர மாரியதனுல்
தேசறவி ழைத்தவினை யாற்றிகில டைந்துபுரி
    செய்கையிது வென்றுணர்கிலா
தூசலுற வேமிகவி டர்க்கடல மிழ்த்தின
    னுயர்வரை புயத்தினனரோ. 106

இராமாயணப் பொருள்:- பிரவர்த்தனை = நடத்தை, மாரீசன் என சாற்றும் துரியோதன, இது, துஃ + யோதன = துர்யோதன என்பதன் திரிபு, ஆகவே துஃ = தகாத முறையில், யோதன = யுத்தம் புரியும் தன்மை, உடையவன் என்பதாம், குரூரனை = (அத்தகைய) கொடியவனை, சரமாரி = அம்பு மழை, தேசு = பொலிவு இடர்க்கடல் = துன்பமிக்க கடல், வரை புயத் தினன் = இராமபிரான்.

பாரதப் பொருள்:- தீயகுணம் ஆர்=கொடுங் குணங்கள் நிறைந்த ஈசன் என=தலைவன் என்று துரியோதனன் (ஆகிய) குருராஜ, சரமாரி=தண்ணீர்ப் பிரயோகம், இடர்க்கடல்=துன்பமாகிய கடல், வரை புயத்தினன்=வீமசேனன், பிற பொது.

தரைதனிலித் ததியிளமை தனிலெவரு நோக்கரிய
 சாகசம மைந்த புயனே
பொருவிறன தூக்கநிலை மைதளர்வு ருதொழுகும்
 போதுபடை வீரருடனே
வெருவறவெ திர்த்தினிச யிப்பவிய லாதெனும்
 விசாரமதி யாய்ந்து விரைவிற்
பெருகியெழு மாற்றலையு ளாண்மையுட ஞமினி
 பிணித்திடுத லொக்கு மெனவே. 107

இராமாயணப் பொருள்:- பொரு=பொருதற்குரிய, வில்=சிலையினுல், தனது, ஊக்கநிலைமை தளர்வு உருது ஒழுகும் போது (மாரீசன்) (தனது), மதியில் இனி (இராமனை) எதிர்த்து சயிப்ப இயலாது என்னும், விசாரம்=துக்கத்தோடு, ஆய்ந்து=தீர ஆலோசித்தவனுகி(தன் சகோதரனைக்கொன்ற பழிதீர்க்கவேண்டுமென்று) பெருகி யெழுகின்ற, மாற்றலை=பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்றும் எண்ணத்தை, இனி நாம், உள் = மனத்திலேயே, உடன் = இப்போதே பிணித்திடுதல் = அந்த எண்ணத்தைக் கட்டிப்போட்டு விடுதல் (அடக்கிக் கொள்ளுதல் என்பதாம்) ஆண்மை ஒக்கும்=அதுவே திறமையென்றுரைக்கத் தகும், என=எனக்கருதும்படியாக (செய்தான்) இராமன், இச்செய்யுளின் முதலாவதடி முழுதும் இராமனைக் குறிப்பதாகும்.

பாரதப் பொருள்:- இதிலும் முதலாவதடி வீமனைக் குறித்து நிற்பதாகும் தனது, பொருவு இல்=சமானமற்ற. தூக்க நிலைமை=நித்திரையில், தளர்வுருது ஒழுகும்போது=ஆழ்ந்திருக்கும்போது, ஆய்ந்து=துரியோதனன் முதலியோர் சிந்தித்து இனி, நாம், பிணித்து=வீமனை இறுகக்கட்டி; பெருகி எழும்

ஆற்று அலையுள்=பிரவாகமுடைய கங்காநதிக்குள் இடுதல்= வீசியெறிந்து விடுதல், ஆண்மை ஒக்கும்=நமது ஆண்மை யாகும், அதுவேதான் சரி, என=எனத் தீர்மானித்து; (குளகம்)

அவ்வகை யிழைத்தசெய லன்றுதனு வன்மையி
னகற்றிசர வாகினியினின்
றிவ்வுலகு ளோர்மனவி யப்புற விளங்கின
னிராமனடல் வீமனநகன்
எவ்வகை தணிப்பவிய லாக்கொடிய காரிரு
ளினந்தளர வந்தரமிசை
திவ்வியசொ ருபமொடு தோன்றியுயிர்கட் குவகை
செய்தருளு வாமதியென 108

இராமாயணப் பொருள்:- அன்று = அப்போது, தனு வன்மையின்=வில்லின் திறத்தால் எழுப்பப்பட்ட, சரவாகினியி னின்றும்=அம்புப் பெருக்கத்தினால் அகற்றி=பகையைப் போக்கி அவ்வகை=மாரீசன் ஒடுங்கும்படியான வகையாக, இழைத்த, செயல்=காரியத்தினால், இவ் உலகுள்ளோர் மனம் வியப்பு உற விளங்கினன், இராமன், அடல் வீமன்=வெற்றிவலிமிக்கவன், இதனை, அடலில், வீ+மன்=கருடனுக்குத் தலைவனாகிய திருமால்; எனக்கொள்ளுதலும் பொருந்தும், அனகன் = பாவமற்றவன், உவாமதி=பூர்ண சுந்திரன், பிற எளிது.

பாரதப் பொருள்:- அவ்வகை=துரியோதனாதியர் நினைத்த வாறு, இழைத்த செயல், தனுவன்மை=உடல் வலிமை, சர வாகினி=ஜலப்பிரவாகம், இராமன்=அழகன் (ஆகிய) கடல் வீமன், விளங்கினன், பிற பொது.

(வேறு)

வெகு வெஞ்சர நாகவி டப்பிர
யோக நீசரி டுக்கஒ றுத்துமே
யாக மோங்கவி யற்றின னாற்றலின்
சோக மின்றித் துலங்குந் துணேயோடே. 109

இராமாயணப் பொருள்:- வேகு=எரிக்கத்தக்க, வெம்= வெப்பமுடைய சர=அம்புகள் என்னும், நாகவிடப் பிரயோக= நாகவிடத்தை யேவிக்கொண்டிருந்த, நீசர்=அரக்கர், (புரிந்த) இடுக்கண், ஒறுத்து யாகம்=வேள்வி, ஓங்க=தடையருது நிகழும்படியாக, சோகமின்றி = மகிழ்ச்சியோடு இராமன் இயற்றினன்.

பாரதப் பொருள்:- வேகு வெம் சர=வேகமுடனும், பயங் கரமாகவும் சஞ்சரிக்சத்தக்க; நாகவிட பிரயோகம்=கருநாகப் பாம்புகளை விட்டுக் கடிக்கும்படி செய்த, நீசர்=இழிகுணமுடை யவர் (துரியோதனாதியர்) இடுக்கண் ஒறுத்து=துன்பங்களை யொழித்து, ஆற்றலின், சோகம் இன்றி ஆகம் ஓங்க=உடலின் வலிமையதிகரித்து விளங்கும்படியாக வீமன் இயற்றினன்.

தானவன் வினை மாற்றியித் தாரணி
மானவாதிப ரேத்தும் பூ மானிகழ்
வானவர் தொழு மாவிசு வாமித்தி
ரான னப்பரி வாற்றிட லாயினன். 110

இராமாயணப் பொருள்:- தானவன்வினை = அரக்கனது செயல்கள், மானவாதிபர் ஏத்தும் பூமான்=இராமபிரான், நிகழ்= அந்தரத்தே விளங்குகிற, மா=பெருமைமிக்க விசுவாமித்திர (ருக்கு) ஆனப்பரிவு=முகமலர்ச்சி, ஆற்றிடலாயினன்.

பாரதப் பொருள்:- தான்=வீமன், அவன் வினை= துரியோதனனுல் செய்யப்பட்ட தீங்குகளையெல்லாம், மாற்றி= ஒழித்து, பூமான்=வீமனுனவன், இகழ்வு ஆனவர்கள்=பிறரது இகழ்ச்சிக்கு, இலக்கானவர்களால், தொழும்=வணங்கப்பட்ட, விசுவ=உலகத்திற்கு, அமித்திர=நட்பற்ற முறையில் வாழ்கிற, துரியோதனனுடைய, ஆனன=முகத்தில், பரிவு ஆற்றினன்= கவலை தோன்றும்படி செய்தனன்.

சித்தி வாய்ந்தொழி ரக்குரு சீலனற்
சத்தி மேவுஞ் சருவசு ராதிப
ரத்தி ரங்கரம் பெற்றமைக் கார்வமுற்
றெத்தி சைம்புக ழோங்க விலங்கினன். 111

இராமாயணப் பொருள்:— சித்தி வாய்ந்து ஒளிர் = தவத்தின் வரிமையால் எல்லாவிதமான சித்திகளும் கை கூடப் பெற்று விளங்குகிற அக்குருசீலன் = அந்த ஆசிரியனாகிய விசுவாமித்திரனிடமிருந்து சருவ = சகலமான, சுர அதிபர் = தேவர்களுடைய, சத்திமேவும் = சக்திகளைப் பொருந்திய, அத்திரம் = அம்புகளை, கரம்பெற்றமைக்கு = கரத்தால் வாங்கிக் கொண்ட காரணத்தால், ஆர்வம் உற்று இலங்கினன் = இராம பிரான் மிக்க மகிழ்ச்சியோடு விளங்கினன்.

பாரதப் பொருள்.— சித்தி = காரியசித்தி, குரு = குரு குலத்தில் தோன்றிய, சீலன் = ஒழுக்கமுடையவன் (வீமன்) நல் சத்தி = சிறந்த வலிமை, சருவ சுராதி = சகலமான தேவர் முதலியவர்களுக்கு சமமானதும் பர = மேன்மையானதும் ஆன திரம் = பலத்தை, கரம் பெற்று = மிகவும் வாய்ந்தவனாகி, அமைக்கு = அம்மைக்கு, அதாவது பெற்றதாயாகிய குந்திக்கு. ஆர்வம் + உற்று = மகிழ்ச்சியையுண்டாகும்படி செய்து. இலங்கினன்.

குருகுல வாசம்.

பூந்த ணன்மிசை மெல்லிய புள்ளினம்
போந்த யர்வுற வீழ்வன போன்றகச்
சாந்த மின்றிய புன்னெழிற் சந்துரு
வேந்த னையிடர் மேவுறு நாளரோ. 112

இராமாயண பொருள்:- சத்துருவேந்தன் = இராவணன்.
பாரதப் பொருள்:- சத்துருவேந்தன் = துரியோதனன்.
(பிறபொது).

கிருப ஞமமு னீசன்கி ளர்த்திடுந்
தரும சாத்திரங் கள்பயின் ருர்மிக
வரசு ராகவ நந்தக மான்மியத்
திருவி ழைத்ததம் மாதவத் தேசுவால். 113

இராமாயணப் பொருள்:- கிருபன் ஆம் = கருணையுடைய வனுகிய, அம்முனீசன் = அம்பெருமுனிவனுகிய கௌசிகன், தரும = வில்வித்தைக்கு உரிய, சாத்திரங்கள் = வேதங்களை யெல்லாம் (தனுர்வேதங்களையென்பதாம்) வர + ச, வர = உலகத்தின் மேன்மைக்காகவே, ச = பிறந்தவர்கள். ('ஜ'' என்பதன் திரிபு ''ச'' என்பது. ''ஜ'' என்னும் வட சொல்லுக்கு உதித்தல் தோன்றுதல் என்றும் பொருள்கள் உள்ளன.) ஆன. ராகவர் = ரகு குலத்தினர்களாக இராமலக்குமணர்கள். பயின்ருர். அம் மாதவத் தேசுவால் = அந்தப் பெருந்தவச்சிரேட்டனுடைய அறிவு ஆற்றல் களினுல், அ = அந்த அரசிளங்குமரர்களுக்கு நவமான்மியத்திரு = புதிதான பெருமையென்னும் செல்வத்தை அளித்தது.

பாரதப் பொருள்:- கிருபன் நாம = கிருபன் என்னும் பெயருடைய, முனீசன் = பிராமணேத்தமன், வர = சிறந்த, சர = அம்புகளைக் கொண்ட ஆகவர் = போர் வீரர்கள் ஆன கௌரவ பாண்டவச் சிறுவர்கள் தருமசாத்திரங்கள் பயின்ருர். மாதவன் = கிருபாச்சாரியன். பிற பொது இங்கு தருமசாத்திரங்கள் என்பதில் உள்ள ''தருமம்'' என்பதற்கு, புண்ணியம், இயமம் நியாயம், ஆசாரம், வேள்வி, அஹிம்ஸை, வில், உபநிடதம் என்று பல பொருள்கள் வடமொழி நிகண்டில் காணப்படுகிறபடியால் இவை அனைத்தையும் பயின்ருர் என்பதும் இரு காதைக்கும் பொருந்தும்.

(வேறு)

நனிப்பர மார்த்த செயல்புரி யதிவி
நயகுண தேசுவி னருளால்
தனிக்கட னின்றன் றவதரித் திலகுந்
தரைதள மீண்டுவந் திசைந்த
வனப்புறுந் திருவி னெடுந்திகழ் வாய்ந்த
வன்மைமே னியனிடஞ் சேர்ப்ப
மனத்திரந் தருமா வனமுனி வேந்தன்
மைந்தரிற் சிறந்தவர்க்கென்றே. 114

இராமாயணப் பொருள்:-நனி பரமார்த்த செயல் புரி யதி= பரம்பொருளையடைவதற்குரிய செயல்களையே மிகவும் புரியா நின்ற துறவியும் வன முனி = வனத்தில் வாழும் முனிவனும் ஆகிய கோசிகன்; விநய = மிக்க நேர்மையும், குண = கல்யாண குணங்களும், தேசு = ஞான தெளியுமுடைய திருமாலின், அருளால், தனி = ஒப்பற்ற கடல் நின்று = பாற்கடலினின்று. அன்று = அதைக்கடைந்த காலத்தில், அவதரித்து = தோன்றி, மீண்டும் தரைதலம் இசைந்த = பூமியில் வந்து தோன்றிய திருவின் = இலக்குமியான சீதாபிராட்டியின், திகழ்வு, ஆய்ந்து. (அப்பிராயுயை) அவ்வன் = அந்தவலிய, மைமேனியனிடம் = இராமனிடம் சேர்ப்ப (எண்ணினன்).

பாரதப் பொருள்:- நனி பரமார்த்த செயல்புரியதி = பரத்துவாசமுனிவர், விநய = பணிவும், குண = சிறந்தகுணங் களும், தேசு = பொலிவும் உடைய அம்முனிவரின் அருள்ால், தனி கடம்நின்று = கும்பத்திலிருந்து, தரைதலம் = பூமியில். ஈண்டு = இந்த அத்தினபுரத்துக்கு. இசைந்த = சேர்ந்த திரு = அழகிய, வில் = வில் பயிற்சியில், நெடும் திகழ் = மிக்க தேர்ச்சி, வாய்ந்தவரும், ஆன வன்மை மேனியன் = துரோணர். மனத்திரம் = மனஉறுதியளிக்கத்தக்க, ஆவனம் = பாதுகாப்பு. உன்னி, சேர்ப்ப = (கிருபன்) சேர்த்திட.

ஆரமு தெனமா வருளுற வெழுந்தம்
மருங்குரு வாய்த்திர மேனங்

தாரணி யகணி தாற்புத சனக
தாமசம் பிரமபி ரபலோ

தாரச யகுண வீமது ரோண
சரபரி சீலனே நிகழும்

பேரெழி லகத்திற் கூட்டின னதனைப்
பெறமகிழ் வெய்தினர் சுதரும். 115

இராமாயணப் பொருள்:- மா அருள் உற ஆர் அமுது என = திருமகளின் அருளினுல் தெவிட்டாத அமுதம் என்று உரைக்கும் படியாக (திருமகளின் அமிசமாக என்பதாம்) எழுந்து =தோன்றி, உருவாய் = பெண் வடிவங்கொண்டு, திரம்மேவும் = நித்திய வாசம் பண்ணும் சீதையுள்ள சனக்கதாம = ஜனக மன்னனது இருப்பிடமாகிய அம்மருங்கு = அந்த இடத்தில் (மிதிலையில்) அகணித = கணிக்கமுடியாத, அற்புதமானதும் தாரணி = உலகத்தில், சம்பிரம = நிறைந்த, பிரபல = பிரசித்தி பெற்றதும் உதார = வீரம் பொலிவு உடையதும், சய = வெற்றிக்கு உரிய, குண = நாண் உடையதும், வீம = பெரிய வடிவுடையதும் (ஆண) துரோண = வில்லினுடைய, சர பரிசீலனே = பாரம்பிர யோகத்தணிக்கை (யைக்குறித்து) அகத்திற்கு = அரசிளங் குமாரருடைய உள்ளத்திற் பதியும்படி, ஊட்டிஞன் = அறிவித் தான். சுதர் = தசரத புத்திரர். மகிழ்வு எய்தினர்.

பாரதப் பொருள்:- ஆர் அமுது என = தெவிட்டாத அமுத மென்னும்படி மா அருள் உற = மிக்க அருளோடு, எழுந்து+தோன்றி, ('எழுந்து' கடைக்குறை) தம்+அரும்+குரு+ ஆய் = தமக்கு அரிய ஆசிரியன் ஆய், திரம் + மேவும் = உறுதியாக + அடைந்தவனும், அகணிதமான, அற்புதங்களே, சனக = வில் தொழிலில் தோன்றும்படி செய்யும் திறமைக்கு, தாம = இருப்பிடயானவனும், சயகுண = வெற்றியையே பெற்று வரத்தக்க குணத்தினுல், வீம = பகைவர்க்கு அச்சம் ஊட்டத் தக்க தோற்றமுடையவனும் (ஆன) துரோண = துரோணுச் சாரியை, சர=அம்புகளே, பரிசீலன்+ஐ=சோதித்து ஏற்கும் திறமைவாய்ந்த அவனே. பேர் எழில் (உடைய) அகத்தில்=அரண் மனையில் கூட்டினன் = அழைப்பித்தான் (வீட்டுமன்) சுதர் = கௌரவரும், பாண்டவரும்.

நேமமுற் றெழுகு முனிவர னருளி
னிகழ்ந்தசிந் தனேயகத் திருத்தி
பூமிசை மான வாற்புதச் செயலொப்
புறவுருத் திரதனு வளேப்பத்
தாமத மின்றி தோன்றிய மோக
சரவர மேவவெஞ் சமர்த்த
ஞமிளங் குமரன் விசயனி ராம
னயர்வுரு திலக்கினன் மிகவே 116

இராமாயணப் பொருள்:- முனிவரன் = விசுவாமித்திரன், சிந்தனை = சிந்திக்கத்தக்க செய்திகளை, அகத்து = உள்ளத்தே' இருத்தி மானவ = மனிதர்களுக்கு, அற்புதம் = அதிசயம் (உண்டாக்கத்தக்க) செயல், ஒப்பு உற = தன்னைப் பொருந்தும் படியாக, உருத்திர தனு = சிவபிரானது வில்லை, அமோக = மிகுதி யான, சரவரம் = சிறந்த பாணங்களை, ஏவ = பிரயோகிக்க, விசயன் = வெற்றியாளன் (ஆன) அரசிளங்குமரன் ஆம் இராமன் இலங்கினன்.

பாரதப் பொருள்:- முனிவரன் = துரோணன், அருளின் = உபதேசத்தினால், நிகழ்ந்த = ஏற்பட்ட, சிந்தனை அகத்து இருத்தி உரு = வடிவத்தில், திர = உறுதிவாய்ந்ததென விளங்குகிற, தனு = வில்லை, வளைப்பவும், ஏவவும், அரசிளங்குமரனும், இராமன் அழகியவனும் (ஆன) விசயன் = அருச்சுனன், இலங்கினன்.

பலமுறை யதனைப் பகர்வதென் மிகவ
　　பாரவல் லமையுறுந் தனுவின்
நிலைமொழித் திரள்மன் னவர்குழாங் காது
　　நிகழ்ந்தெழக் கனன்மனஞ் சகியா
தலமுறச் செயவச் செயலையு மவன
　　ராதிவெந் திறவிய லையுமிந்
நிலமிசை யதிய லட்சியமாக
　　நினைந்துசம் பிரமமுற் றனனால் 117

இராமாயணப் பொருள்:- அபார = அளவு கடந்த, தனுவின் நிலை = வில்லின் விஷயமாக உலகத்தில் நிலைத்துப் போன, மொழித்திரள் ஆனது, காது நிகழ்ந்து = செவியிற் படுந் தோறும், எழும் = கிளம்புகிற. அக்கனல் = அதைப்பற்றிய கோபக் கனல் அல்லது வெறுப்பாகிய தீயினால், மனம் சகியாது, அலம் உறச்செய = சஞ்சலத்தையுண்டாக்க, அச்செயலையும், அ = அந்த மன்னர்கட்கு, வன் = வலியதான, அராதி = பகைமையாக

விளங்குகிற வில்லினது, வெம், திற, இயலையும், அதி=மிக்க, அலட்சியமாக=இழிதகைமையானதாக நினைந்து, சம்பிரமம் உற்றுன்=மகிழ்ச்சியடைந்தான். (இராமன் தேசன்ரு எழுவாய்)

பாரதப் பொருள்:- தனுவின் நிலை மொழி=வில்லின் காரணமாக (விசயனிடத்து) நிலைத்துப்போன புகழ் மொழிகள், ("வில்லுக்கு விசயன்" என்னும் மொழி என்பதாம்) காது நிகழ்ந்து=காதிற்பட்டு, எழ=அவர் தம் வாயினுன்று புகழ்ச்சியாகக் கிளம்புகிறதை, கனன்=கர்னன் ஆனவன், மனம் சகியாத வனுகி அலம் உறச்செய்ய, அச்செயலையும்=தன்னுள்ளத்தே தோன்றிய மனக் கலக்கத்தையும், அவ்+வன்=அவன், அந்த வலிமைமிக்க, நர=நரனுடைய (அருச்சுனனுடைய) அதி=மிக்க, வெம்+திற இயலையும், 'அவனராதிவெந்திறவியல்' என்னும் சொற்ருெடரை அவ் + வன் + நர + அதி + வெம் + திற + இயல் எனப் பிரித்துக்கொண்டால் பாரதக் கதைக்கு ஆகும். பிற பொது.

புனிதமா முனிவன் கிருபையி னயனும்
போயனற் குணவர சனகன்
மனைமிசை திரும ணம்புரியா,முன்
மாசிலா தமரிள மங்கை
யினிதொடு சுசர மந்திர வியல்பின்
இனமர பவதரித் தொளிர்வோன்
னனிபெற வயலார்க் கயர்குவ னேயிங்
நானிலத் திசையசத் தனைப்போல் 118

இராமாயணப் பொருள்:- இன மரபு அவதரித்து ஒளிர்வோன், நயன் + அம்போயன் = தாமரைக் கண்ணன் (ஆகிய இராமனின்) நல் குணவர = நற்குணங்களிற் சிறந்த, சனகன் = சனக மன்னன், மனைமிசை அமர் இள மங்கை = சீதையை திருமணம் புரியாமுன் (னமே) முனிவன் = கௌசிகன் இனிதொடு = மகிழ்ச்சியாக, மந்திர இயல்பின் = மந்திர சக்தியோடு

கூடிய, சு + சர = நல்ல அம்புகளை, நனிபெற = மிகுதியாக அடைந்திருக்கும்போது, அசத்தனைப் போல், அயர்குவானே. இது கவிக்கூற்று.

பாரதப் பொருள்:— நற்குண அரசு. அனகன் = பாவ மற்றவன் ஆன அயன் ஆம் = தந்தையாகிய, போயன் = குந்தி சோபன் மணிமிசை = அரண்மனையில், மாசு இல்லாது' திருமணம் புரியாமுன் அமர், இளம், மங்கை = குந்தீதேவியான வள் புனிதன் ஆம், முனிவன் = தூர்வாச முனிவனது கிருபை யினுல் (அடைந்த) மந்திர (த்தை) இனிதோடும், சு = நல்ல, சர = ஆசாரத்தோடும் (ஜபித்த) இயல்பினுல் (கண் கூடாக எதிரில் வந்த) இன = சூரியனது மரபு = வமிசம் விளங்கும் படியாக, அவதரித்து = பிறந்து ஒளிர்வோன் (ஆகிய கர்னன்) நனிபெற = பெருமை பெறுவதிலும், சத்தனைப்போல் = வீரனைப் போல், இசைய = தன்னைக் காட்டிக் கொள்ளுவதிலும், அயர்குவனே.

(வேறு)

தகவுற நிகழும் மானு சந்ததி புகழின் சீர்மை
மகவியல் பாகப் பூவில் வளர்ந்துவந் தமையா லன்றே
துகளிலா தகுந்த தூய சூதகந் தான வாழ்வின்
மகிமைமா மரபின் வேந்தர் மாசுரப் பேசலுற்றார். 119

இராமாயணப் பொருள்:- பானுசந்ததி = சூரிய குலத்துக்கு ஏற்பட்ட, புகழின் சீர்மை = கீர்த்தியினது சிறப்பெல் லாம் ஒன்றாய்த் திரண்டு, மகஇயல்/ஆக = புத்திரவடிவம் பெற்று, பூவில் = பூமியில், வளர்ந்து வந்தமையால் அன்றே, துகள் இலாத = தூய்மையான (வெண்மையான என்பதாம்) குந்த = மல்லிகை, சூத = மாவின் மலர், சந்தான = கற்பகத் தருவின் மலர் ஆகியவற்றின் மகிமையை, மா = சிறந்த மரபின் வேந்தர் = குலத்துதித்த மன்னருங்கூட, மாசுஉற பேசல் உற்றார். (புகழே வடிவம் பெற்றுவந்ததெனத் திகழும் இராமனது பெருமை யால், புகழுக்கு எடுத்துக்காட்டாகப் புலவர்களால் பேசப்பட்ட, மல்லிகை, மாம்பூ, கற்பகப்பூ முதலியவற்றின் பொலிவு மல்கி விட்டது என்பது கருத்து இது கவிக்கூற்று.)

பாரதப் பொருள்:- புகழின் சீர்மை (வாய்ந்த) பானு சந்ததி = சூரிய குமாரன் (கர்னன்) சூத = தேர்ப்பாகனுடைய, மக இயல்பாக = மைந்தன் என்று கருதும்படியாக, பூ = அழகிய, இல் = (அவனுடைய இல்லத்தில், வளர்ந்து வந்தமையால் அன்றோ, குந்தம், சந்தானம் போல புகழுற்று விளங்கும் அவனது வாழ்வின் மகிமையை மாசு உறப் பேசலுற்ருர். இதுவும் கவிக் கூற்று

இவ்வகை நிகழுங் காலை
யிலகும்வி சயனி ராமன்
திவ்விய கணைக ளேந்திச்
செருக்களம் புகுவ னுயின்
எவ்வகை மீண்டு செல்வோ
மினியெனப் பயந்த யர்வார்
அவ்விகல் வினைக ளாற்ற
வகந்துணிந் துழலு மொன்ஞர். 120

இராமாயணப் பொருள்:- விசயன் இராமன் = வெற்றி யாளனுகிய இராமன்.

பாரதப் பொருள்:- இராமன் = அழகியவனுகிய, விசயன் = அருச்சுனன், பிற இருகாதைக்கும் பொது.

தகுசர வினத்தொடாழி யேந்தியக்
கதையைத் தாங்கி
யகமகிழ்ந் தொழுகுஞ் செம்ம லாமென
முனிவர் மூதோர்
நிகழுற நிகழ்ந்த லாய்ந்து நெஞ்சகந்
தளர்ந்த யர்வார்
பகைமையுற் றுழலுங் கோர பாவசிந்
தணையிலாழ்ந்தோர். 121

இராமாயணப் பொருள்:- சரம் தொழில் ஒற்றுமையுன்னி "சரம்" என்பது வாளாயுதத்தைக் குறித்து நின்றது. வில் + நந்து = சங்கு, ஆழி = சக்கரம், கதை யென்றும் படை இவற்றை தாங்கி, செம்மல் = திருமால், கோரபாவ சிந்தனையில் ஆழ்ந் தோர் = அரக்கர்கள்.

பாரதப் பொருள்:- தகு = ஏற்ற விதமாக, சர இனத் தொடு = அம்புகளை ஒன்றன்பின்ஒன்று தொடரும்படி எய்து. ஆழி ஏந்தி = கிணற்றில் வீழ்ந்திருந்த துரோணருடைய மோ திரத்தை வெளியே எடுத்தது ஆகிய அக்கதையைத் தாங்கி= அந்த வரலாற்றை மேற்கொண்டு. ஒழுகும் செம்மல் = அருச் சுனன், கோர = கொடிய, பாவ = பாதகம் செய்யும், சிந்தனை யில் ஆழ்ந்தோர் = எண்ணமுடையவர்கள், துரியோதனாதியர்.

உயர்வுறு முனிவன் சொற்போல் உடனல
மியற்று மங்கை
யுயர்தரு விலையம் பைக்கொண் டுள்ளுறத்
துளைத்த காலை
யயர்வறு மடல்ம கீப ராகவ
வீர னென்னும்
பெயர்வகித் தவனென் றுய்ந்த பெரியவர்
பேச லுற்றார். 122

இராமாயணப் பொருள்:- விசுவாமித்திரன், விலை = வில்லையும், அம்பை (யும்) கொண்டு, உடன் = உடனுக்குடன், அலம் = துன்பத்தை, இயற்றும், மங்கை= தாடகையை, உள்உற துளைத்த காலை, மகீப = பூபதியாகிய, ராகவன் அடல் வீரன் என்னும் பெயர் வகித்தான் என்று பேசலுற்றார்.

பாரதப் பொருள்:— முனிவன் = துரோணாச்சாரி,உடனே நலம் இயற்றும் = ஆசிரியனுக்கு நன்மை செய்யும், அம் + கை (யினால்) உயர் தரு = உயர்ந்த மரத்திலுள்ள, இலைகளை. அம்பைக் கொண்டு, உள் உற துளைத்த காலை. மகீபர் = அரசர்களுக்குள், ஆகவ = போர்த் திறமை வாய்ந்த, வீரன் என்றும், பெயர் வகித்தான் என்று பேசலுற்றார்.

வெம்மதத் தொடுக வர்ந்த விடங்கரை
விரைவில் வீழ்த்தி
யம்மருங் குருவி ழுக மழிவுரு
திலகும் வண்ணம்
இம்மகி தலத்தி ழைத்த விறைவனு
மெனவே யான்றோர்
தம்முளம் பூத்துச் சந்த தமுநனி
துதிக்க லுற்றார். 123

இராமாயணப் பொருள்:- விடங்கர் = முதலை, அம் மருங்கு=முதலையின் வாய்ப் பட்டுக் கதறிய விடத்தில், உரு இல்= வடிவம் தெளிவாய் உணரப் படாமல் மிக மெலிந்திருந்த, நாகம், = யானையானது இறைவன் ஆம் = திருமாலேயாவன் பிற எளிது.

பாரதப் பொருள்:- கவர்ந்த = தனது ஆசிரியரான துரோணரது காலைக் கவ்வியிழுத்த, விடங்கரை வீழ்த்தி, அம், அரும்=தனது அருமையான, குருவின் = ஆசாரியருடைய ஆகம்=உடல் இறைவன் ஆம் = அரசகுமாரன் ஆகும் பிற பொது.

அருநெறி வாய்ந்த வேந்த ரனைவரும்
கொடிய வைரி
துருபத மதம கற்றித் தூயசிந்
தனையோ டன்றாக்
குருசமர்ப் பணைசெய் தேத்துங் குமரனைச்
சனக ரனேக்கி
னிருதயத் துறுமாண் பென்னென் றியம்புவோ
மெனவி யந்தார். 124

இராமாயணப் பொருள்:- துருபதம் = தீய நடத்தை, துஃ+பதம்=துஷ்பதம் இது துருபதம் எனத்திரிந்தது, துஃ= தீமையான, பதம்=வழி அல்லது நடத்தை இதையுடைய, கொடிய வைரி=கடும் பகைவர் (அரக்கர் என்பதாம்) மதம்= செருக்கு, அகற்றி, குரு சமர்ப்பணை=குரு காணிக்கை, குமரன்= இராசன் சனகன் நோக்கின்=தந்தையான தயரதன் பார்த்தால் இங்கு ''சனகன்'' என்பதை சனக மன்னன் எனக்கொள்ளுவதும் ஏற்புடைத்தேயாம், பிற பொது.

பாரதப் பொருள்:- (துரோணருடைய) கொடிய வைரி யாகிய துருபத் மன்னனுடைய, மதம் அகற்றி, அந்தத் துரு பதனையே குரு (வுக்கு) காணிக்கையாகக் கொடுத்து, ஏத்தும், குமரன்=அருச்சுனன், சனகன் = தந்தையாகிய, பாண்டு மன்னன், பிற பொது.

விற்பன மறையோர் வெற்றி வேந்தர்மா
வணிகர் மற்றோர்
வெற்பெனத் திகழுந் திண்டோள் வீரரா
கவனை நோக்கிப்
பொற்புற நிகழ்த்துந் தூய புகழ்புவி
நிறைந்தெ ழுந்தக்
கற்பகப் பதியைச் சாலக் களிப்புறச்
செய்த தம்மா. 125

இராமாயணப் பொருள்:- வீரராகவனை = இராமபிரானை, கற்பகப்பதி=கற்பகமரங்களுடைய இடம், (சுவர்க்கலோகம் என் பதாம்) இங்கு ''பதி'' என்பது சுரர் உலகத்தைக் குறித்து நின்றது.

பாரதப் பொருள்:- வீரர் = போர் வீரர்களுக்குள்ளே, ஆகவன்=சிறந்த போர் வீரன், (அருச்சனன் என்பதாம்) கற்பகம் பதி = கற்பகநாட்டுத் தலைவன், ''இதில்'' பதி என்பது தேவேந்திரனைக் குறித்து நின்றது, பிற பொது.

ஓம்.

நல்லோர் துணையால் நலிவு தீர்தல்

கனவி னயகுண தரும பாலன
கண்ணியன்பர மோதயன்
தனயன் செய்யவி வேக மாநெறி
தக்கதாமென வுன்னியச்
சனவ ரன்சன கேசன் வாழ்நகர்
சார்ந் திலங்குத னன்கெனு
நலியி சைந்தவ ரக்குருத் திற
விற்ற னைப்பெற நாடினன். 126

இராமாயணப் பொருள்:- தரும = அறத்தை, பாலன = காம்பதில், கண்ணியன் = திறமை வாய்ந்தவன், பரம + உதயன் = பரமோதயன், பரம = மிகவுயர்ந்த சிறப்புகளோடு, உதயன் = பிறந்தவன், (ஆகிய) அ + சனவரன் = அந்த அரசகுமாரன், தன், அயன் = ஐயன் = குருவான, கௌசிகன், செய்ய = செம்மையான, விவேகம் ஆம், நெறி உன்னி. (எவனுய்) சனகேசன் = சனக மன்னன், இசைந்து, அவ் + அர = அந்த சிவபிரானுடைய, குரு = பெரிய, திற = வலிமையுடைய, வில்தனைப் பெற, நாடினன் = உள்ளத்தே தீர்மானித்தான்.

பாரதப் பொருள்:- அச் சனவரன் = அந்தத் திருதராட்டிரன், தனயன் செய் = தனது மகன் செய்யும்படியான, அவிவேகம் = அறிவற்றது ஆம் நெறி = விழியை, தக்கது ஆம் என உன்னி, சனக + ஈசன் = சனகேசன், சனக = பாண்டவர்களுடைய தந்தையான, ஈசன் = பாண்டுமன்னன், வாழ் நகர் = வசித்து வந்த வாரணவத பட்டினத்தை, சார்ந்து இலங்குதல் நன்று என,

கன, விநய, குணமுள்ள, தருமபாலன் = தரும புத்திரன், அகண்ணியன் = கணித்தற்கியலாத பெருந்தன்மையுடையவன், பரமோதயன், பரம் + ஓது + அயன் பரம் = பரத்துவத்தைப்பற்றியே, ஓதும் = போதிக்கும், அயன் = தலைவன் ஆன உதிட்டிரன், நனி இசைந்து, அ = அந்த அரக்கு = அரக்கினால், உரு = உருவாக்கப்பட்டு, திற = உறுதியானதாகக் காணப்படுகிற, இல் தனை பெற = மாளிகையை யடைவதற்கு, நாடினான்.

சீரகன் றருளிர் புனித மாஞ்செய
லேற்கும் குருகுல சேயனே
ஏர ரும்பெரு மண்ண லின்செய
லாகு மீதென நின்மலா
கார சோதர சகித மாய்த்திக
ழம்மனைக் குல மணியினைப்
பேரு தாரமு மாற்றலும் நனி
பெறவ ழைத்தினி தேகினான். 127

இராமாயணப் பொருள்:- ஏர் + ஆர் + அரும் + பெரும் + அண்ணல் = கௌசிக முனிவன், ஈது, இன், செயல் ஆகும், என, சீர், அகன்று = விரிந்து, புனிதம் ஆம் செயல் குருகுல சேயன் = குருகுல வாசம் பண்ணும் குமாரன் (இராமன்) நின் மலம் (ஆன) ஆகார = வடிவமுடைய சோதர சகிதமாய் = இலக்குமணனுடன், அம், மனை = மன்னனும், குலமணியினை = சூரியகுலத்து இரத்தினம் போன்றவனுமாகியவனை, அழைத்தேகினான்.

பாரதப் பொருள்:- குருகுல சேயன் = உதிட்டிரன், ஏர் + ஆர் + அரும், பெரும் அண்ணல் = பெரிய தந்தையான திருதராட்டிரன், அம்மனை = பெற்றதாயை, குலமணியினை = குலத்திற்கு இரத்தினம்போன்ற குந்திதேவியை, பிற பொது.

பரம முனிமா தவகு ணச்செய
லமரர் கோனனி பண்பிலா
விரதி பிரபா வாதி சயசுக
வேது வானிகழ் வினையினின்
றுருவ மறவோர் மாசி லாவடி
வுற்ற வாழ்வினை யோதுமத்
தரும நெறியாய்ந் தரச மைந்தர்ம
கிழ்வி னேகினர் கால்போடெ. 128

இராமாயணப் பொருள்:- அவகுணச் செயல் = தகாத குணமும் செயலும் புரிய முனைந்த, அமரர்கோன்=தேவேந்திரன், பண்பு இலா=மதிகெட்ட, இரதி=பெண்மோகம் என்னும், பிரபாவ = பெருமை, அதிசய = மிகுந்த, சுக ஏதுவால் = இன்பம் நுகர்ந்த காரணத்தால் நிகழ்=நேர்ந்த, வினையினின்று = காரியத்திலிருந்து, உருவம், அற, ஓர், மா=பெரிய, சிலாவடிவு உற்ற=கல்லுருவம் அடைந்த, பரமமுனி மாது=கௌதம முனிவருடைய மனைவியாகிய அகலிகையினது வாழ்வினை ஓதும் நெறி ஏகினர், அரசமைந்தர்=இராமலக்ஷுமணர்.

பாரதப் பொருள்:- அமரர்கோன் = தேவர்களுக்கெல்லாம் தலைவனும், மாதவன்=திருமகள் நாயகனுமான பகவானுடைய பரமன் = அதிர்ஷ்டமயமான கட்டளையை, உன்னி = சிந்தித்தவனுகி, பண்பிலாத தான, இரதி=விநோதத்தின், பிரபாவ அதிசய=பெருமைமிக்க சுக ஏதுவால்=இன்பமடைய வேண்டுமென்னும் காரணத்தால், நிகழ்ந்த, (துரியோதனுதியரின்) வினையினல், ஏற்பட்ட கவலை காரணமாக உருவம் அற=நமக்கெல்லாம் உடல் மெலிந்து வடிவம் கெட்டுவிட்டபடியால், (இனியேனும்) ஓர் மாசு இலாத வடிவு உற்ற வாழ்வினை= (வாழலாம் என்று) ஓதும், அத்தருமன்=அந்தத் தருமபுத்திரன் கூறும், நெறி ஆய்ந்து=நல்வழிகளைச் சிந்தித்துக்கொண்டு, அரச மைந்தர்= பாண்டு புத்திரர், ஏகினர்.

திருவ ழகுவாய்ந் திலகு சீர்புரி
சித்தி ரச்செய லெய்ததப்
புரையி லுருபாங் காய்நெ டும்பல
னுற்று பூவிலை யேந்தியித்
தரைநி கழுமா ராம பாதப
ராக லீலைத கைவுடன்
மருவி யமகா சாப வாரண
மான்மி யச்செய லாற்றவே. 129

இராமாயணப் பொருள்:- பூ = அழகிய, வில்லை ஏந்தி, நிகழும், மா, ராம = ஸ்ரீ ராமனுடைய, பாத = திருவடியின், பராக = துகளினால் ஆன, லீலை = திருவிளையாடலானது, தகைவுடன் மருவி = தக்கவிதமாகப் பொருந்தி, அம் மகா சாப = அந்த (கௌதமரால் ஏற்பட்ட) பெருஞ் சாபத்தை, வாரணம் = நீக்குதல் (என்னும்) மான்மியச் செயல் = மகத்துவமான காரியத்தை, ஆற்றவே, அப்புரை இல் உரு = அந்தக்களங்கமற்ற கல் வடிவம், பாங்காய் = ஒழுங்காக, நெடும்பலன் உற்று = பெரும் பயனடைந்து, அழகு வாய்ந்து இலகும்படியான சீர் புரிந்ததான, சித்திரச் செயல் = ஆச்சரியமான காரியத்தை எய்தியது. (பெண் வடிவம் பெற்றது என்பதாம்)

பாரதப் பொருள்:- இத்தரை, ஆராம = சோலையிலுள்ள, மாதப = மரங்கள், புரை இல், உருபு ஆம் = உருப்புகள் ஆகிய, காய், பலம் = பழம், பூ, இலை (ஆகியவற்றை) ஏந்தி நிகழும், ராக லீலை = காண்போரின் உள்ளத்தைக் கவரும் செயல், மருவி, அம் = அவ்விடத்தில், மகா = விசாலமாகத் தோன்றக் கூடிய, ஆசா = திசைகளை, அபவாரணம் = மனறத்து விடுதல் (ஆகிய) மான்மியச் செயல் ஆற்ற, அழகு வாய்ந்து இலகும் சீர், புரி = வாரணவத பட்டினம், சித்திரச் செயல் எய்தியது.

திகழு மாவெழி லகலி கைநெடு
மெயினி கழ்ந்தெழு சீர்மையும்
மகிமை சேர்பொலன் மணிவி காசமு
மாத ரணிகலன் நேர்மையும்
மிகவி ளங்குப யோத ரத்திசை
மேவு பூங்கலை கொள்கையும்
அகமகிழ்வுற வாங்கி லங்குத
லவர்க ணேக்குறு நாளரோ. 130

இராமாயணப் பொருள்:- அகலிகை (யினுடைய) மெய்யில், நிகழ்ந்து எழும் சீர்மையும், பொலன் = பொன் நிறம் வாய்ந்த உடற் பொலிவும். மணி விகாசமும் = இரத்தினங்களின் பொலிவும் அதாவது; முத்தனைய பற்கள், நீலமணியனைய கூந்தல், புட்பராகமனைய நகங்கள், பவளம் போன்ற உதடுகள், முதலியன வாம், மாதர் அணிகலன் நேர்மை=கற்புடைப் பெண்டிர்க்குரிய அச்சம், நாணம், மடம், பயிற்பு ஆகிய அணிகல்களின் தன்மை, பயோதரத்திசை = தனங்களின் மீது, மேவு = மூடி மறைத்திருக்கிற, பூங்கலை = அழகிய மேலாடை, அவர்கள் = முனிவரும் சிறுவரும், (பயோதரம், என்பது பயः + தரம் என்னும் இரு சொற்களின் தொடர். பயः = பால், தரம் = தன்னகத்தே கொண்டிருப்பது. இக்காரணத்தால் பயோதரம் என்பது "முலை" ஆயிற்று.)

பாரதப் பொருள்:- அகல் + இகை = விரிந்து கொடுக்கும் தோற்றமுடைய, எயில்மதில் (அதன் மீது) சேர் = பதிக்கப்பட்டுள்ள, பொலன், மணிகள் ஆகியவற்றின் பொலிவும், மா = பெரிய, தரணி = பூமிக்கு. அணிகலன் = ஆபரணம், (போல் விளங்கும்) நேர்மையும், பயோதரத்திசை = மேக மண்டலத்தை யளாவிய (மதிலின்மீது) மேவும், பூம் = அழகிய கலை = சந்திர கிரணங்களின் கொள்கையும் அவர்கள் = பாண்டவர்கள். இதில் 'பயோதரம்' என்றும் சொல்லில் உள்ள 'பயः' என்பதற்கு தண்ணீர் என்றும் பொருள் வாய்த்தது.

அமர ரிறைபுரி மோக சம்பிர
மாதி சயசுக வாழ்வினை
தமது மனமலர் மிசையு ணர்ந்ததை
சால மருவிய திதெனு
கமையொ முகநிக ழில்வு லகினவ
மான கரவியல் கண்ணுற
வமல கதியுற வவணெ டும்புக
ழாங்கி யம்பிட லாயினன். 131

இராமாயணப் பொருள்:- அமரர் இறை = தேவேந்திரன், புரி = செய்த ஈது = இந்த அகலிகையின் தோற்றம் உலகின் + அவமான கர இயல், கண்ணுற (வே) அவன் = அதேயிடத்தில், (அகலிகை) அமல = தூய்மையான, கதியுற, நெடும்புகழ் = அந்தக் கதிக்கு ஏற்ற மிக்க புகழ் மொழிகளை, இயம்பிடலாயினள். (இராமன்)

பாரதப் பொருள்:- புரி = பட்டினத்தின், போகம் = நுகர்வு, தேவர் கலகத்தில் பெறக்கூடிய சுக வாழ்வினை எண்ணிப் பார்த்து அதற்குச் சமானமாக இருக்கிறது ஈது = இந்த வாரணவத பட்டினம் என்று, இவ்வுலகில், கமை = பொறுமை, நவமான = நூதனமான, கர இயல் = கை வேலைப்பாடுகள், கண்ணுறவே, அமலகதி = தூய்மையான அமைப்புகள், உறும், அவ் வண் = அந்த வளம் பொருந்திய நகர அமைப்பின் புகழை (உதிட்டிரன்) இயம்பிடலாயினன்.

விவித ரத்தின காந்தி யுடனிகழ்
விஞ்சி யிலகுவி காசினி
நவிலு ருத்திர வாச் மேவிய
நகர மாமணி யென்றுறை
சுவின யோற்சவ கரவி லாசினி
சுகிர்த பூடனி நின்புகழ்
புவிய ணிந்தப ணீச னுயினும்
புகலு தற்கரி தென்றுமே. 132

இராமாயணப் பொருள்:- உடல் நிகழ்=தேகத்தில் பொலி கின்ற, விவித, ரத்தின, காந்தி, விஞ்சி இலகும், விகாசினியே, உரு=வடிவத்தில், திர=அசைவற்ற, வாசம் மேவி=வாழ்க்கையை யடைந்து (அதனால்) அநக=பாவமற்று விளங்குகிற, ரமாமணி= திரு மகளனையவள், என்று உறை=என்றும் உறைகின்ற, சு, வினய=நல்ல, அமைதியும், உற்சவ=மகிழ்வும்,கர=உண்டாக்கத் தக்க, விலாசினி=மதியொளி படைத்தவளே, சுகிர்த பூடணி= புண்ணியத்தையே அணியாகவுடையவளே, நின்புகழ்...புகலு தற்கு அரிது என்று 'இயம்பிடலாயினன்' என்று கீழ்ச்செய்யுளில் பயனிலை.

பாரதப் பொருள்:- காந்தியுடன் = பிரகாசத்துடன், நிகழ்வு=அமைந்துள்ள இஞ்சி=மதிள் சுவரோடு, இலகும், விகாசினி=பொலிவுடையது. நவில்=துதிக்கத்தக்க, உருத்திர வாசம்=சிவ சந்நிதானம், மேவிய, நகரமாமணி=சிறந்த பட்டினம் சு=நல்ல, இல்=வீடுகளும், நய=நேர்மையான, உற் சவ=திருவிழாக்களும், கர=புரியத்தக்க, விலாசினி=நேர்மை யுடையது. சுகிர்த=நன்கு தொழிற்படுத்தப்பட்ட, பூடணி = அணிகளையுடையது. (நகருக்கு அணிகலம், பூஞ்சோலை, தாமரைக்குளம், அழகியமாடம் முதலிய பல சிறப்புகள் ஈங்கு கொள்ளத்தக்கன.) புகலுதற்கு அரிது என்று இயம்பிடலாயினன் என கீழ்ச் செய்யுளோடு பயனிலையையும், இது வாரணுவத பட்டிணத்தை முன்னிலையாக்கி விளித்த புகழ் மொழிகள் ஆம்.

(வேறு)

நிலைகொ ணேக்கி லானீன்ற நெடுஞ்சேய்
தரும நெறிமுனிவன்
உலகி னிகழ்த்தீ மொழிமுகத்தன் ஒழுக்க
மாய்ந்த மனத்துரியன்
அகிலன் முன்ன னலமுட்டற் காங்கி
சைந்த நிலையாய்ந்தே
யிலகு மகிழ்வோ டணுகுமந்நா ளியற்றுஞ்
செயலி யாவுமுன்னி

இராமாயணப் பொருள்:- ஆன் ஈன்ற=பசுவினிடந்துப் பிறந்த, சேய்=மகவு (கௌதமன்) தரும நெறி (உணர்த்தும்) முனிவன், தீம்=இனிய, மொழி (களைப்பேசும்) முகத்தன்=வாயை யுடையவன். ஆய்ந்த, மனத்து, ஒழுக்கம், உரியன்=உடையவன் அந்நாள்=அகலிகையைச் சபிக்குங்காலத்தில், இயற்றும் செயல்= அகலிகையால் செய்யப்பட்ட தவருன செயல்களை, யாவும் உன்னி= சிந்திந்து (வருந்திக் கொண்டிருந்த கௌதமன்) நல் நலம் ஊட் டற்கு=சாபவி மோசனமான காரியத்தைச் செய்வதற்கு, ஆங்கு= அந்த ஆசிரமத்தினருகில், இசைந்த=இராமன் முதலியோர் வந்து சேர்ந்த. நிலை (மையை) நிலை கொள் நோக்கில்=இருந்த விடத்கிருந்த படியாகவே ஞானக் கண்ணால், ஆய்ந்து=அறிந்த வனுகி, அலகு=பரந்த நோக்குடைய, இல்முன்=மனையாளின் முன்பு, மகிழ்வோடு, அணுகும்=கூடிவாழலானுன்.

பாரதப் பொருள்:- நிலைகொள் = இயல்பாகவே, நோக்கு இலான்=கண்ணில்லாதவனுன திருதராட்டிரன். ஈன்ற நெடும் சேய்=பெற்றெடுத்த மூத்த குமாரன், தருமநெறி (களை) முனி வன்=சினந்து அகற்றுந் தன்மையுடையவன், உலகின்=உலகத் தாரில், இகழ்=பழிக்கத்தக்க, தீ=கொடிய, மொழி முகத்தன்= சொற்களைப் பேசும் வாயுடையவன், ஒழுக்கம், மாய்ந்த=கெட்ட, மனத்துரியன்=மதி படைத்த துரியோதனன், அலகு=விசால மான, இல்முன்= (பாண்டவர்கள் வசிக்கும்) அரக்கு மாளிகை யின் புறத்தில், அனலம் மூட்டற்கு=தீ வைப்பதற்கு இசைந்து= மனமொப்பி, ஆங்கு=அந்த வாரணுதபட்டினத்திற்கு, மகிழ் வோடு, அணுகும் அந்நாள்=போகத் துணிந்த தினத்தில், அ+ நிலை ஆய்ந்து=விதுர மன்னது ஏவலாளன் அந்த செய்தியை அறிந்தவனுய் (இனி) இயற்றும் செயல்=பாண்டவர்கள் தப்பிப் பிழைப்பதற்காக செய்யத்தக்க காரியங்கள், யாவும் உன்னின வனுய், தீதற்றெளிர்! என அடுத்த செய்யுளோடு இணையும்.

தீதற் ளிரவ் விதுரமனின் செழுஞ்சொல்
லியல்பி லத்திசையவ்
வேதத் தெழுமா வனலினெறி யியற்று
முனிவ ரனைமேவி
ஓதத் தகுகாற் றிளஞ்சேயி னுதவி
சாலப் பெற்றகன்றார்
நீதத் துறுநன் னட்பினெறி யிடையூ
றின்றி நிகழுமன்றே. 134

இராமாயணப் பொருள்:- அவ்வேதத்து எழும், மா, = அபௌருஷேயமான அந்த வேதத்திற் புகலப்பட்ட, பெருமை யுடையதும், வல் + இன் + நல் + நெறி வலிய + இனிய, நல்ல வழிகளை, இயற்றும், முனிவரனை மேவி = விசுவாமித்திரனைப் பின் தொடர்ந்து, அ + விதுரமனின் = அந்த ஞான வொளி படைத்த இராஜரிஷியின் தீது அற்று ஒளிர் செழும், சொல் இயல்பில், அத்திசை, (யாக) காற்று இளஞ்சேய் = மெல்லிய காற்று, உதவி பெற்று அகன்றார் = நடக்கலானார்கள். இதில் இராம இலக்குமணர் தோன்றா எழுவாய். ஈற்றடி கவிக் கூற்று.

பாரதப் பொருள்:- விதுரனுடைய, அ = அந்த, மனின் = மனிதனின் (இடைக்குறை) தீது அற்று ஒளிர் செழும் = தெளிவான, சொல் இயல் + வார்த்தையின்படி, அ = அத்துரியோதனனுடைய, ஏதத்து = பொருமைக் குற்றத்தினால், எழும் = ஏற்படவிருக்கும், மா அனலின் நெறி = பெருந் தீ மூட்டும் காரியம், இயற்றுவதற்கு முன்னமேயே, இவர் = இந்தப் பாண்டவர்கள், அனை மேவி = அன்னையாகிய குந்தியை யழைத்துக்கொண்டு, ஓதத்தகும் = புகழுக்குரிய, காற்று இளம் = சேயின் = வாயுவின் இளங் குமாரனான வீமனுடைய உதவிசாலப் பெற்று, அப்பிலத்திசை = (விதுரனுடைய சூழ்ச்சியின்படி ஏற்படுத்தப்பட்டிருந்த) அந்த சுரங்கத்தின் வழியே, அகன்றார், ஈற்றடி கவிக் கூற்று.

ஓம்

காதல் கருத்து,

ஏகும் பொழுதச் சீராம னியல்புற்
றேங்கும் பாவனிதன்
றேகப் பொலிவுந் திருமுகத்தின் றிகழ்வும்
நயனத் தருணோக்கும்
வாகுத் திறனு மாய்ந்தவுணர் மான்மா
மனத்தே கதித்தேங்கு
மோகத் திரையார் கலிநீந்த முயன்று
முடியா தியம்பிடுமால் 135

இராமாயணப் பொருள்:- ஏகும்பொழுது, சீராமன் (ஆனவன்) பாவனிதன்=சிறப்புடைய சீதையின்,...பொலிவும்..., திகழ்வும்...நோக்கும், வாகுத்திறமை=கைகள் அமைந்துள்ள தன்மையும், ஆய்ந்து=உள்ளுக்குள்ளே சிந்தித்து, அ + உணர் = அந்த உணர்ச்சியால், மால்=மயங்கிய, மாமனத்தே, ஓங்கும், மோகம் (என்னும்) திரை (கலையுடைய) ஆர்கலியை நீந்த முடியாது இயம்பிடும்.

பாரதப் பொருள்:- ஏகும்பொழுது=சுரங்கத்தைக் கடந்து அப்பாலுள்ள காட்டின் வழியே செல்லும்போது, அ+சீர்+ஆம்+மன்=அந்த சிறப்புவாய்ந்த மன்னனாகிய, பாவனி=பவன புத்திரனாகிய வீமனுடைய , பொலிவும் , திகழ்வும் , நோக்கும் . திறமை ஆய்ந்து = கவனித்து அவுணர்மான் = அரக்கியாகிய இடும்பி, பிற பொது.

வதனும் புயமா மதியினிகழ் மந்த
காச நிலவொளியால்

இதயா கதமா நன்னிலத்தே யிலகு
மோக விருளகற்றி

யதரா முதமா மருமருந்தை யன்போ
டூட்டி யகமுளைக்கு

மதனும் பகமாஞ் சுரநோயை மாற்று
வாயென் மாமணியே 136

இராமாயணப் பொருள்:- இதயம் (என்னும்) நல் நிலத்தில், ஆகதம் ஆய் = வந்து சேர்ந்து, இலகும் மோக இருள் ... நில வொளியால் அகற்றி, அகம் = உள்ளம், மதன + அம்பகம் = மன்மத பாணம், மாமணியே = சீதையைக் குறிக்கும் விளி, (சீதையை யுன்னி இராமன் உள்ளுக்குள்ளே பிதற்றுதல்.)

பாரதப் பொருள்:- இடும்பியென்னும் அசுரப் பெண் வீமனைக் கண்டு இறைஞ்சுதல், உரை இருகாதைக்கும் பொது.

எனவாங் கியம்பு மொழியாய்ந்தவ் வம்மை
கரிய வணன்மலர்க்கோ

னினமே விடும்பன் மதச்செருக்கை யியலு
மதிவன் மையினகற்றி

யினிதாய் தரும குருவினெறி யிசைந்த
தெனவாங் குவந்துநின்ற

வனிதோற் சவமுற் றெழுகுநிலை வாய்ந்து
பாரி லிலங்கினனால். 137

இராமாயணப் பொருள்:- அவ் + அம் + மை கரிய வண்ணன், (ஆன) அவன் = அந்த இராமன், என = கீழ்ச் செய்யுளில் காட்டப்பட்ட விதமாக, ஆங்கு = அந்த வழி நடையில், இயம்பும் மொழி ஆய்ந்து = தனத்குத்தானே பிதற்றிக் கொண்டிருந்த சொற்களைத் தானே சிந்தித்து, மலர்க்கோன் = மலர்க்கணைகளுக்குத் தலைவன் (மன்மதன்) பல் இனம் ஏவிடும் = பல மலர்க்கணைகளை தொகுதியாக பிரயோகிக்கும், மதச் செருக்கை = மன்மதனது இருப்பை இயலும் = இயல்பான, மதி வன்மையினால் அகற்றி, தரும குருவின் நெறி = அறங்களைக்கூறும் ஆசிரியன் கூறிக்கொண்டு வந்த (மிதிலைக்குச் செல்லும்) வழி யானது, இசைந்தது = கூடிவிட்டது, என உவந்து நின்று, ஆங்கு = அப்போது, இத + உற்சவம் + உற்று + ஒழுகும் நிலை = ஏற்ற மனமகிழ்ச்சியோடு நடந்துகொள்ளும் நிலைமையை வாய்ந்து...இலங்கினன்.

பாரதப் பொருள்:- என, ஆங்கு, இயம்பும், மொழி (களை) (வீமன்) ஆய்ந்து, இந்த 'ஆங்கு' என்பது அந்தவிதமாக எனக் கொள்ளத்தக்கது. அவ் + அம்மை = அந்த அசுர மங்கை (வீமனுக்கு மனைவியாக அமைபவள்) ஆதலால் 'அம்மை' என மரியாதைச் சொல்லால் குறிக்கப்பட்டாள்) அவளுடைய கரிய அண்ணன், மலர்க்கோன் = மல்லர்களின் தலைவன், இனம் மேவு = வருக்கத்தைச் சார்ந்த, இடும்பன், மதச்செருக்கை, இயலும், அதி = மிக்க, வன்மையின் அகற்றி (இடும்பனைக் கொன்று என்பதாம்) இனி = அதன்பிறகு, தாய் = தாயாகிய குந்தியும் தரும = தமையனாகிய உதிட்டிரனும், (வீமனுக்கு உரைத்த) குரு = சிறந்ததும், இன் = இனியதும் ஆன, நெறி = (தன்னைத் திருமணம் புரிந்துகொள்ளும்படி புகலும்) வழியாது, இசைந்தது என = கை கூடிவிட்டது என்று (அருகிருந்து கேட்டுக்கொண்டிருந்து) ஆங்கு = எதிரில், வந்து நின்ற வனித = பெண்ணாகிய இடும்பை யுடன், உற்சவம் உற்று = கூடி மகிழ்ந்து, ஒழுகும் நிலையை வாய்ந்து இலங்கினான், வீமன் தோன்று எழுவாய்.

வலியையுறு மஞ்சாக மகவினுத யத்தால்
உலகினய னுேற்சவமு ளத்துவகை யுற்றே
சலனமற சுரவியல்பு ரமணிமனே சால
விலகுநெறி மீதுவிழி யேற்றினனவ் வீரன் 138

இராமாயணப் பொருள்:- சநகமகவின் உதயம்=சீதையின் பிறப்பு, உலகு + இல் = உலகத்திலில்லாததான. நயன + உற்சவம்=கண்+களிப்பும், உள்ளத்து உவகையும் உற்று, சுர இயல்=தெய்வீகத்தன்மை, (பொருந்திய) புரமணி=சிறந்ததான மிதிலைப்பட்டினத்தின், மனே = அரண்மனே இலகும் நெறி மீது, சலனம் அற, விழி ஏற்றினன்=பார்வையைச் செலுத்தினுன், வீரன்=இராமன்

பாரதப் பொருள்:- மஞ்சு=மேகத்தைப்போல் கருத்தும், சநக=பாவ மற்றதும் (ஆன,) மகவின் உதயத்தால் = கடோற்கசன் பிறப்பினுல், சலனம் அறு=மிக்க உறுதி படைத்த அவ் வீரன்=வீமன், அசுர இயல்பு ரமணி=இடும்பியானவள், மனே=தனதுமன்னனுகிய வீமனே, சால விலகும்=அறவே விட்டு நீங்கிச் செல்லும், நெறிமிது விழி ஏற்றினன்.

வாய்மையுறு மாபதிம னன்பினல ரீன்ற
தாய்மனம கிழ்ந்திட தடங்கணெறி யுற்றே
தூய்மையுறு மாவனத்தி ரேன்றுபரி வுன்னுன்
சேய்மனக மேவுமனத் தின்றிரவி யல்பால். 139

இராமாயணப் பொருள்:- வாய்மை உறும் மாமன் = சத்தியசீலனுகிய பெருந்தன்மையுடைய ஜனகமன்னனது, பதி= பட்டிணத்தில்,அலர்ஈன்றதாய்=தாமரைமலர்களேத்தன்னகத்தே கொண்டுஇலகும், தடங்கள் நெறி=தடாகங்கள் மலிந்த வழியை, உற்று=அடைந்து, சேய்மன்=மன்சேய்=இராமன், அன்பின் =

ஆசையினுல், அகம்மேவும் = தனது உள்ளத்தே சேர்ந்த. அன்னத்தின் = சீதையினது, திர இயல்பால் = நிலை பெற்ற தன்மையால், (தனது) மனம் மகிழ்ந்திட (அதனுல்) மா வனத்தில்=அழகிய சோலையில், தோன்றும், பரிவு = இன்பம் உன்ஞன் =(இயற்கையின்பத்தைநுகரும்) கருத்தில்லாதவனுனன்.

பாரதப் பொருள்:- மாபதிமன்= (தனது) பெருந்தலைவ னுகிய மன்னன் பாண்டு பூபதி (யினுடைய) அன்பின், நலர்ஈன்ற தாய்=நற்குணம் படைத்த மக்களைப் பெற்ற குந்திதேவி, மனம் மகிழ்ந்திடும்படியாக, தடம்=விசாலமாக, கண்நெறி=கண்ணில் காணப்படும் வழியை, உற்று=நாடி அடைந்து சேய்மன் = இளவரசனுன வீமன், அகம் மேவும்=தான் என்னும் தன்மை கொண்ட மனத்தின், திர இயல் பால் = உறுதித்தன்மையால், ஆவனத்தின் = (தாயையும் சோதரர்களையும்) பாதுகாப்பதில், தோன்றும், பரிவு=துன்பத்தை, உன்ஞதவன் ஆனுன்.

மெய்ம்மருவு நற்றுவிச லீலைாநனி மேவி
யைம்முகில்பொ னைப்பொழிவ தாங்கொழுகு மமுதம்
கைம்மலர ணிந்துநகர்க் கானநெடுந் தோன்றல்
செய்ம்மகிமை யாலவர்ம னந்திகழ மாதோ 140

இராமாயணப் பொருள்:- நல், துவிசம்=பறவைகள், மெய்ம்மருவு லீலை = கூடிக்குலாவும் விநோதம், மேவியும், ஐம்முகில் = தெய்வத் தன்மை வாய்ந்த மேகம், பொன்னைப் பொழிவது ஆங்கு=பொன்னையுருக்கும் மழையாகப் பொழிவதைப் போல, கைம்மலர்=மலர்களென்னும் கைகளில், அணிந்து=ஏந்தி, ஒழுகும் அமுதம்=சொரிகின்ற தேன் பெருக்கமும், (உடைய தான) நகர்க்கானம் = பட்டிணத்தையடுத்த பூஞ்சோலையினது, நெடும் தோன்றல்=பெரியகாட்சியானது செய்யும் மகிமையால், அவர்=அந்த இராம லக்குமணர்களின், மனம் திகழ=உள்ளங் களிக்க.

பாரதப் பொருள்:- நகர்=வேத்திரகீய நகரத்தில், கால் நல் நெடும் தோன்றல் = வாயுவின் மைந்தனான வீமன், மெய்ம் மருவும்=உடலைப் பொருந்திய, துவிசலீலை=இரு பிறப்பாளரின் தன்மை (பார்ப்பனத் தன்மை யென்பதாம்) மேவி, ஒழுகும்= இல்லந்தோறும் தடையின்றிச் சொரியப்படுகிற, அமுதம்=அரிசி கைம்மலர் அணிந்து=கரத்தால் ஏற்றுவந்து, செய் மகிமையால், அவர் மனம் = அந்தப்பாண்டவர்களின் மனம் திகழ, (இங்கு பார்ப்பன வேடந்தாங்கியதாக வீமனை மட்டும் குறிப்பிட்டது மற்றவர்களுக்கும் உப லக்ஷணம்)

மனமகிழ வேத்திரைமை பதிமருவி யாங்கு
தனயசுக வாழ்வினைய கற்றியிடர் சால
வனவரத மாற்றுமியல் பகவினைக ளன்றவ்
வனிலவர சேய்தனவ மோகவலி மாற்ற. 141

இராமாயணப் பொருள்:- மனம் மகிழ ஏத்தும்=புகழ்தற் குரிய, இரமைபதி=திருமகள் நாயகனான இராமன், (அவனை) மருவி=தழுவி தன், அய=ஐய தந்தையினிடத்து வசித்தலாகிய, சுகவாழ்வினை அகற்றி = இன்ப வாழ்வை விட்டு, அனவரதம், சால, இடர் ஆற்றும் இயல்பு (உடைய) அக=மனத்தினது, வினைகளை, அனில=காற்றினது. வர=சிறந்த, சேய் = இளந் தன்மை (இளங்காற்று என்பதாம்) தன்=தனது, நவமோகவலி= புதுமையான இன்பத்தின் வலிமையால், மாற்ற. இங்கு ‘அனில வரசேய்’ என்பதனை, அன் + நில + வர + சேய் எனப் பிரித்து, அந்த + பூமியில் தோன்றிய + மேன்மையுற்ற + குழந்தை அதாவது சீதை எனப் பொருள் கொள்ளுதல் சிறப்புடைத்து.

பாரதப் பொருள்:- வேத்திரம் = வேந்திர கீயமென்னும், ஐபதி=உயர்ந்த நகரம் அல்லது பார்ப்பனர் நிறைந்த பட்டினம், ஆங்கு=அந்நகரத்தில், வசிப்பவர்களுடைய, தயை=மைந்தரால் ஆகக்கூடிய, சுகவாழ்வினை, அகற்றி, அனவரதம்=எப்போதும், இடர் ஆற்றும், பகவினைகள்=பகாசூரனுடைய செயல்களை அவ், அனிலவரசேய்=வாயுமைந்தனான வீமன், தன்=தன்னுடைய, அவமோகவலி = மோகமற்ற பலம், (பகைக்குணம்மிக்க வலிமையென்பதாம்).

ஆயிடைநி கழ்ந்தசெய லாய்ந்துதரை தேவர்
நேயமுற தந்நகரி னின்றுவகை யுற்றார்
தூயருல கோர்க்குறுவெந் துயரினைய கற்றி
சேயமற வாங்கொழுகச் செய்தன்முறை யாமே 142

இராமாயணப் பொருள்:- ஆயிடை, தரை(யில்) நிகழ்ந்த செயல் ஆய்ந்து. தேவர், தம் நகரினின்று, உவகை உற்று, சேயம் = அழிவு, "க்ஷேயம்" என்பது "சேயம்" எனத்திரிந்தது.

பாரதப் பொருள்:- தரைதேவர் = பார்ப்பனர், தம் நகரினின்று = தமது வேத்திரகீயநகரத்திருந்து, பிற பொது.

மன்றலை நாடும் மாண்பு

(வேறு)

தீர மோடன் றேக விரைவின் றிகழரிச்
சீர ருஞ்சே யம்பு யவருந் திறலினங்
கார பன்ன மதசெருக்க கன்றிடப்
பாரு ளோர்வி யந்த னருளம் பார்த்தரோ. 143

இராமாயணப் பொருள்:- தீரமோடு அன்று, ஏக, திகழ், அரிச்சீர் = மஞ்சள் நிறத்தின் சிறப்பும், அரும் சேய் = அரிதான செந்நிறத்தின் பொலிவுமுடைய, அம்புய = தாமரை மலரின், அரும் திறலின் = அரிய அழகென்னும் திறத்தினால், அங்கார பன்ன = தீயினது சுடரின், மதச்செருக்கு = இருமாப்பான கர்வத்தை (தன்னைப்போன்ற பொன்னிறப் பொலிவும், செந்நிறப் பொலிவும் எங்குமில்லையென்னும் செருக்கு) அகன்றிட = ஒழித்து விடவே, வியந்தனர்.

பாரதப் பொருள்:- அரி=இந்திரனுடைய, அரும்சேய்= மைந்தனாகிய அருச்சுனனுடைய, அம், புய=தோள்களின் அரும், திறலினால், அங்காரபன்ன=அங்கார பன்னனென்னும் கந்தருவனுடைய, மதச்செருக்கு, அகன்றிட, பாருளோர் வியந்தனர்.

உரிய துவிசா னீக மனலி னோங்குசீர்
தருவி னைச்சேர் பொற்கொ டியருந் தகைசுயம்
வரவி வாகங் கண்டு மகிழ வருக வென்
றரைவ தாங்கு நிகழு மச்செய லாய்ந்தரோ. 144

இராமாயணப் பொருள்:- அனலின் = தீச்சுடரைப்போல செந்நிறமான இளந்தளிர்களோடு சீர் ஓங்கு=அழகுமிகுந்து தோன்றும், தருவினை=மரத்தை அல்லது மரங்களை சேர்=தழுவிக் கொண்டுள்ள, (ஒரு) பொற்கொடி=பொன்நிறமுள்ள கொடியினது, சுயம்வர விவாகம் கண்டு மகிழ வருக என்று அரைவது ஆங்கு=அழைப்பதைப்போல் நிகழும். துவிச + அநீகம்=துவிசா நீகம்=பறவைக்கூட்டம் அதன் செயலை "ஆய்ந்து" சென்று என அடுத்த செய்யுளோடு வினைத்தொடர். இதில் "அறைவது" என்பது எதுகை நோக்கி "அரைவது" என வந்தது.

பாரதப் பொருள்:- துவிச = அந்தணர், அநீகம் = சமூகம் அனலின்=அக்கினியினின்றும், ஓங்கும்=தோன்றிய, சீர்தரு= ஒழுக்கம்வாய்ந்த, வினைசேர்=செயல்களோடு கூடிய, பொற்கொடி=திரௌபதியினது அரும்தகை, சுயம்வர விவாகம் கண்டு மகிழ வருக என்று, (ஒருவர்க்கொருவர்) அறைவது=பேசிக் கொள்ளுவது, ஆய்ந்து, 'சென்று' என அடுத்த மாட்டுடன் அமையும்.

புகழுந் தன்மை வாய்ந்தி லங்கும் பூமிசை
மகிழம் பொற்கொம் பிற்கி சைந்த மன்றலன்
நிகழுந் தன்மை யொன்று மின்றி யின்புறு
நிகழும் பொற்பை யாய்ந்து சென்றந் நெறியொடே. 145

இராமாயணப் பொருள்:- பூமிசை=சீதை "பூமிஜா" என்பதன்திரிபு, மகிழ்=அம் + பொன் + கொம்பிற்கு = கொம்பு போன்றவளுக்கு, இசைந்த=ஏற்ற, மன்றல், இகழும் தன்மை இன்றி, நிகழும், பொற்பை=அழகை. பிற பொது.

பாரதப் பொருள்:- பூமிசை = உலகத்தில், அம் பொற் கொம்பு = திரௌபதி. பிற பொது.

வலங்கொ ளுலகத் துருப தபதி வாஞ்சையோ
டிலங்கும் விமல வரச நகரி லிசைந்துநன்
னலங்கண் டமர ரியக்கர் சித்தர் நாகரோ
டலங்க லேந்தன் றுளங்க ளிக்க லாயினர். 146

இராமாயணப் பொருள்:- உலகத்து, உரு + பத + பதி= நல்ல வடிவ மைந்த + திருவடிகளையுடைய + இராமபிரான், வர = மேன்மையுற்ற, சநகர் + இல் = ஜனக மன்னனுடைய நகரத்தில், இசைந்து, இலகும். நல், நலம் கண்டு உளங்களிக்க லாயினர். பிற பொது.

பாரதப் பொருள்:- விமல அரசு = தூய்மை வாய்ந்த மன்னனாகிய, துருபதன் (வசிக்கும்) பதி = பட்டினத்தில், அநகர் = பாவமற்றவர்களான பாண்டவர்கள், இசைந்து = சேர்ந்து. இலங்கும், நலங்கண்டு, களிக்கலாயினர்.
பிற இருகாதைக்கும் பொது

பேரிகற்செ யற்றடுக்கும் பெட்பொடு
வீரவெந்தி ரங்களுற்ற விப்பிரா
காரவடிவைக் கண்டியம்ப லரிதெனச்
சேரவருகி னரவ்வேந்தன் செல்வரே. 147

இராமாயணப் பொருள்:- இகல் = பகைமை, வீர (த்தன்மை வாய்ந்த) எந்திரங்கள் = பொறிகள், (போருக்குரிய தளவாடங்கள் என்பதாம்) இ = இந்த, பிராகாரவடிவு = மதிற் சுவரின் தோற்றம், அல்லது அமைப்பு, அரிது என = அரிய தெனச் சிந்தித்துக் கொண்டு, சேர அருகினர் = அங்கே சேர முற்பட்டனர், வேந்தன் செல்வர் = இராம இலக்குமணர்.

பாரதப் பொருள்:- எந்திரங்கள் உற்ற = ஆயுதங்களைத் தாங்கிய தன்மையோடு விளங்கும், விப்பிர = அந்தணர்களின், ஆகாரவடிவு = தோற்றத்தோடு கூடிய அழகு, இயம்பல் அரிது, என = என்று காண்போர் கருதும்படி, வேந்தன் செல்வர் = பாண்டு புத்திரர்கள். பிற பொது.

ஏகு நெறிகண் கண்ட செயலு மிசைந்தவை
போக சுகசம் பிரம வியலும் போந்தியல்
பாக வயலில் நீந்துங் கயலு மிவர்மனேற்
சாக லீலை செய்த தன்று சாலவே. 148

உரை இருகாதைக்கும் பொது. கண்கண்ட செயல் = கண்ணிற்கண்ட பறவை முதலியவற்றின் காரியங்கள். வை போகம் = பெருமகிழ்ச்சி, போகும் வழியில் கண்ட நல்ல சகுனங்களைக் கண்டு மகிழ்ந்தனர் என்பது கருத்து

வேலை சூழ்நி லத்தவர்வி யப்புறுங்
காலை பூமஞ் சனக மன்க ளிக்கவே
சீல முற்ற வனியு தித்த செல்வியின்
பால மைந்த மாவ னப்பைப் பகருவாம். 149

இராமாயணப் பொருள்:- பூமம் = பெருமை (வாய்ந்த) சனகமன் (னன்) களிக்க, சீலம், உற்று, அவனி உதித்த = பூமியில் பிறந்த, செல்வி = சீதை, பிற பொது.

பாரதப் பொருள்:- பூம் = அழகு, அஞ்ச = பகைவர் அஞ்சும்படியான தோற்றம், அனக = பாவமற்ற தன்மை, மன் = அரசன் (துருபதன்) சீலம், உற்ற. வனி = அக்கினியில் உதித்த செல்வி = திரௌபதி பிற பொது.

(வேறு)

ஆயிர முறையம் மாதி னழகியம் புதலே னுவீ
ராயிர மமைந்தி லங்கு மனந்தனுய்ந் துரைக்க வல்லோ
னுயிருந் துஞ்சொ லற்கிங் கசத்தனென் றியம்புங் காலிம்
மாயிருந் தலத்தில் வாழு மாந்தர்யார் வகுக்க வல்லார். 150

உரை இருகாதைக்கும் பொது, எளிது.

சீர்முகத் தமைந்தி லங்குஞ் செல்விய யோனி சைக்கிப்
பார்முகத் துளங்க ளித்துப் பரிசென வாங்க மைத்த
கார்முகத் திலங்கு மச்ச யந்திரங் காணப் போந்த
போர்முகத் தரச ரோடப் புதல்வருஞ் சாரப் புக்கார். 151

இராமாயணப் பொருள்:- அயோனிசை = தாய்வயிற்றிற் பிறவாதவள் (சீதை), ஆங்கு = அந்த மிதிலா நகரத்தில், கார்முகம் = வில், (வட சொல்) இலங்கும், அ + சயம் அந்த வெற்றி, திரம் = அசைக்கவியலாத நிலை, ''ஸ்திரம்'' என்பதன்திரிபு 'திரம், புதல்வர் = இராம இலக்குமணர். பிற எளிது.

பாரதப் பொருள்:- அயோனிசை = திரௌபதி. கார், முகம் = மேகமண்டலம் இலங்கும், மச்சயந்திரம் = மீன்பொறி, அப்புதல்வர் = அந்தப் பாண்டு மைந்தர். பிற பொது

தேவியின் நிலை.

மண்டலத் தரசர் மன்னன்
மாளிகை சேர்ந்து மன்றல்
மண்டபத் தமர்ந்தாங் கெய்து
மங்கல வினைக ளாய்ந்து
குண்டலம் பொலிய வுள்ளங்
குதூகலித் தசைத்துச் சென்னி
விண்டிடு மோதை கோதை
வியந்தனள் செவியுற் றன்றே. 152

இராமாயணப் பொருள்:- மன்னன் மாளிகை = ஜனக மன்னனதரண்மனை, கோதை=சீதை.

பாரதப் பொருள்:- மன்னன் மாளிகை=துருபத மன்னன தரண்மனை, கோதை=திரௌபதி.

மகிதலத் ததிப ரோங்கு
மண்டபத் தமர்ந்து சால
விகிதமாய்க் குலவுஞ் செய்கை
விரும்பியே காணப் பாங்கி
சகிதமாய் அவனி சையோர்
சாளரத் தருகே நின்று
நகைமலி செயலி னோடு
நானிலம் நோக்க லுற்றாள். 153

இராமாயணப் பொருள்:- அவனிசை=பூமியிற் பிறந்தவள் (சீதை) ''அவனிஜா'' என்பது ''அவனிசை'' எனத்திரிந்தது, பிற எளிது.

பாரதப் பொருள்:— அவ் + வன்னி + சை = அவனிசை, அவ் = அந்த, வன்னி = தீயினிடத்து, சை = பிறந்தவள், (திரௌபதி) பிற பொது.

உப்பரி கைமீ துற்ற
வுவகையார் தோழியர் சேர்ந்
தெப்புவி புரக்கு மன்மீ
தேந்திழா யுன்ம னந்தா
னெப்பிய ததனைச் சற்றே
யுரையெனக் கேட்க நாணங்
கப்பிய வுளத்த ளாகிக்
கடைக்கணாற் சவையை நோக்கும். 154

உரை பொது, எளிது.

நலந்தரு மவையிற் றுவிசர்
நாப்பணில் வீர வெந்தோள்
வலந்தரு செயலி னோங்க
வந்தமர்ந் திருக்கும் விசயன்
புலந்தர வவன்ற னெழிலிற்
புகுத்திய சிந்தை யோடு
சலந்தரு மனத்த ளாகித்
தவித்தனள் மணத்தி னுக்கே 155

இராமாயணப் பொருள்:- துவிசர் = தவமுனிவர், விசயன் = வெற்றியாளன் (இராமன்) சலம் = அசைவு, (உறுதியற்ற தன்மை யென்பதாம்). பிற எளிது.

பாரதப் பொருள்:- துவிசர் = இருபிறப்பாளர் (பிராமணர்கள் என்பதாம்) விசயன் = பார்த்தன். பிற பொது.

அன்னவன் வனப்பிற் றேய்த்த வலர்க்கணை யேவி மாரன்
மன்னவன் புதல்வி புந்தி மயங்கிடச் செய்த போழ்தி
லென்னவீ தேது நேர்ந்த தின்றிவட் கென்றே கூடிப்
பன்னியே தோழி யர்தாம் பரிவுட னுபச ரித்தார். 156

உரை:- பொது; வெளிப்படை

விரக வேதனை.

மதனது கணையான் மிக்க மருண்டதோர் காலை பூவி
னிதமுறு மமளி சேர்த்தன் றிடுஞ்செய லாய்ந்தப் பூவை
யிதயமே னிரக்க மில்லா திவ்வித மாக வீங்கித்
ததிகனன் மீதே யென்னைத் தவிக்கச்செய் தீர்க ளென்பாள் 157

உரை:- பொது: வெளிப்படை.

விரிந்தபூங் கணையால் மிக்க வேதனை யடையுங் காலை
பரிகரித் திடவே யெண்ணிப் பாவைமா ரதற்குச் சாந்தி
புரிந்திடப் போந்து சாந்தைப் பூசலாய்ந் தம்ம டந்தை
யெரிதரு மரக்கி லென்னை யிடுதலு முறையோ வென்பாள். 158

உரை:- பொது, எளிது.

மோகவெந் தணலா லின்று மூர்ச்சையாய் வீழ்தல் மாரன்
சாக்தச் செயலா மென்று தருணிமா ராய்ந்து ளத்தே
சோகமுற் றதற்கி சைந்த தொழில்செயுங் காலந் நங்கை
நாகவெவ்விட த்தா லென்னை நலிவுறச் செயலே னென்பாள் 159

உரை:- பொது; எளிது.

மல்லிகை மலர்போ லாவி மங்கைபா லசைவு றுங்கால்
மெல்லிய சிவிறி யேந்தி வீசுத லாய்ந்தக் கோதை
சொல்லுதற் கரிய தாய சுழற்பெருங் காற்றி லென்னைப்
புல்லிடச் செய்து துன்பம் புரிகிறீ ரென்னும் போழ்தில். 160

இதுவும், பொது, எளிது.

தாமரை கரங்கள் கூப்ப தகுங்கருங் குவளை விள்ள
மாமரப் பறவை யார்ப்ப மந்தமா ருதங்கால் வீச
காமனைங் கணைக ளேந்திக் கனல்விலால் அளிநாண் பூட்டி
பூமிசை மெதுவாய்ச் சேரப் புகுந்தது மாலைப் போழ்து. 161

இதுவும், பொது எளிது.

ஓம்

மதியுதய வருணனை

மேற்கூறப்படும் இரண்டு செய்யுட்களும் பொதுவானவை.

ஓதுதற் கரிய தாய வுதயமா மலையின் மீது
மாதவன் மனைய ணிந்த வயிரவெண் குழையோ வென்ன
பூதலத் தறிஞ ரேத்திப் புகழவே யிடைய ருமற்
கோதறுங் கதிர்க ளோடு குளிர்ந்தெழுங் காலத் திங்கள். 162

திங்களென் றியம்புஞ் சீயம் திமிரவெங் களிற்றின் மத்த
கங்களைப் பிளந்து முத்தைக் ககனவா யுதிர்த்தாற் போல
பங்கமற் றிலகுங் கோள்கள் பரவவன் றடர்ந்து நின்ற
மங்களத் துலங்க வங்கண் மாநிலம் விளங்கிற் ருமால். 163

மன்மதனை நிந்தித்தல்

இது முதல் நான்கு செய்யுட்களும் பொதுவானவை

தண்மதிக் குடையைத் தாங்கிப் பூஞ்சரங் கனல்விற் கொண்டு
பண்மொழி யளிநாண் பூட்டிப் பையவே தென்ற லூர்ந்து
பெண்மக ளருகிற் போந்து பெய்மலர்க் கணையால் வாடி
திண்மதி யோடு வேளைச் சீறினுள் சகியா துள்ளம். 164

சூரியோதய வருணனை

(வேறு)

இது முதல் இரண்டு செய்யுட்களும் பொதுவானவை.

கங்குலு மெதுவாய்ச் செல்லக் கைரவங் கரங்கள் கூப்பச்
செங்கம லங்கள் பூப்பத் தென்றலு மெதுவாய் வீசத்
திங்கள்மேற் றிசையிற் சேரச் செறிந்தசெவ் வானந் தோன்ற
எங்கணும் பறவை யார்ப்ப வெழுந்தனன் அருணன் மாதோ. 165

வானட ரிருள்க ணீங்க வைகறை வெள்ளி மங்க
வூனமொன் றின்றிக் கீழ்க்கோட்டுச்சியை நாடி யெல்லோன்
ஈனமற் றிலகுந் தூய விரத்தினப் பந்தைப் போல
மானவர் முனிவர் சந்தி வந்தனங் கூறப் போந்தான். 166

மணம் நாடிய மன்னர்

பாங்கிய ருபச ரிக்கப் பைந்தொடி யகம கிழ்ந்தாள்
ஓங்கிய மண்ட பத்தி லுற்றமன் னவர்கு ழாந்தம்
தீங்கறு கார்மு கத்திற் றிகழுமொண் செயலைக் கண்டு
வீங்கிய தோள்க ளோடு விரைந்தனர் சரங்க ளெய்ய. 167

இராமாயணப் பொருள்:- பைந்தொடி = சீதை, கார் முகம் = பெரியவில்.

பாரதப் பொருள்:- பைந்தொடி = திரௌபதி, கார் = மேகம், முகம் = அதன் முன்பு. (மேகமண்டலத்தை யளாவ என்றபடி)

பற்பல தேய வேந்தர் பாங்குற வாங்க மைத்த
வற்புதச் செயலால் வையத் தருஞ்சொறீ மடந்தை சேர்வம்
பொற்புற வென்று மான மீனந்தன் புலங்கொ ளாது
நற்புகழ் வாய்ந்த மாவி ஞணங்கை யுற்ற யர்ந்தார். 168

இராமாயணப் பொருள்:- அரும் = அரிதாய; தீம் சொல் மடந்தை = இனிய சொற்களைப் பேசும் பெண் (சீதை) மானம் = தத்தமக்கேற்ற பெருமையையும், ஈனம் = தோல்வியால் வரும் இழிவையும், மா = பெரிய, வில், நாண், அம், கை, உற்று, அயர்ந்தார். (வில்லைச் சிலரும், நாணியைச் சிலரும் அசைத்துப் பார்த்து அயர்ந்து விட்டார் என்பதாம்)

பாரதப் பொருள்:- அரும் சொல் (வாய்ந்த) தீ மடந்தை= தீயிற் பிறந்தவள் (திரௌபதி) மானம் = வானத்தில் உள்ள, மீனம் = மச்சயந்திரம், புலம் = மனம். பிற பொது. இதில் ''மானம்'' என்பது கிராமியச் சொல்.

மகிழுற வவனி வந்த மங்கையை மணப்போ மென்றே
புகழுறு சிந்து தேயப் புரவலன் மிகவி ரைந்து
திகழுமச் செயலி யற்றத் திறனிலா தகன்ற வன்றன்
இகழிலா மரபைச் சால விழிந்துகூ றிடச்செய் தானுல். 169

இராமாயணப் பொருள்:- அவனிவந்த= நிலத்தில் பிறந்த மங்கை = சீதை, பிற பொது.

பாரதப் பொருள்.- அவ் + வனி = வன்னி = தீ, (நடுக் குறை) மங்கை = திரௌபதி.

அங்கர்கோன் அதனை நோக்கி யதிவிரை வாயெ ழுந்தென்
செங்கரத் தீங்கிவ் வற்புச் செயலியற் றிடுவே னென்றே
பொங்குமவ் விணையி ழைப்பப் புயவலி சிறிதே குன்றி
யங்கவ மான முற்றவ் வரசர்முன் றலைகு னிந்தான். 170

உரை பொது:- ''அங்கர்கோன்'' என்பதை மட்டும் பாரதத்துக்கு ''கர்னன்'' எனக் கொள்ளத்தக்கது.

இயலுற வவையாய்ங் துள்ளத் திலங்கைமா நகரின் வேந்தன்
புயலுறு வரைத கர்த்த புயவலி யாலு மற்றச்
செயலினுக் கிடருற் றங்தோ திகைத்தனன் தனது வன்மை
யயலவன் வன்மை நோக்கா தவன்செய லிழிவு ருதோ. 171

இராமாயணப் பொருள்:- இலங்கை மாநகரின் வேந்தன் = இராவணன், வரை = கயிலங்கிரியை, தகர்த்த = அசைத்தெடுத்த, பிற எளிது

பாரதப் பொருள்:- உள்ளத்தில், அம் = அழகிய. கைமா நகர் = அத்திநகர், வேந்தன் = துரியோதனன், வரை தகர்த்த = மலையைத் தோற்கச் செய்த புயவலி, பிற எளிது.

கார்முகத் தகர்ப்பு

(வேறு)

விரவிய புயபல மமைங்தொளி ராகவ
வீரனன் றெழுந்ததி விரைவின்

கரதலத் துயர்ந்தவுக் கிரதனு வளைத்ததன்
கணையுற வெந்திர வியல்பின்

சுரருள நெறியெழு மீனவர்த் தனையறத்
துணித்துநற் றவமுனித் திரளோ

டரசரின் மனவிழி வியப்பெனுங் கடலிடை
யமிழ்ங்திடச் செய்தனன் மிகவே 172

இராமாயணப் பொருள்:- ஒளி=உடற்பொலிவும், உள்ளப் பொலிவும், ராகவ வீரன்=இரகு குலத்துவீரன் (இராமபிரான்) உக்கிரதனு = உக்கிரவடிவானவனது வில், (சிவனுடைய வில் என்பதாம்) அதன் கண்=அதனிடத்து, நை+உற=அழிவு ஏற் படும்படியாக, (முறிந்து விழும்படி என்பதாம்) திர இயல்பு= நிலையுற்ற இயல்பு, (அசைக்கமுடியாத வலிமையியல்பு என்பதாம்) சுரர், உள்ள நெறி=மனத்தின் மார்க்கம், (தேவர்களின் சிந்தனை யென்பதாம்) எழும்=தோன்றிய, ஈன வர்த்தனை = (சிறு பிள்ளை இக்காரியத்தைச் செய்ய வல்லனு என்னும்) இழிகுணச் செயல், அற துணித்து, முனித்திரள்=தவசிகளின் கூட்டம், மன, விழி= மனத்தையும், பார்வையையும், பிற, எளிது.

பாரதப் பொருள்:- ஒளிர்=பொலிவுமிக்க, ஆகவ வீரன்= போர் வீரன், (அருச்சுனன்) உக்கிரதனு=பிறர் அஞ்சும்படியான பயங்கரத்தோற்றமுடைய வில், அதன்=அந்த வில்லில், கணை உற=அம்பு பொருந்தும்படி செய்து, எய்து, எந்திர இயல்பு = பொறி வடிவமாக அமைக்கப்பட்டுள்ள தன்மையுடைய, மீன வர்த்தனை=மீனின் செயலை, (சுழலும் நிலையிலிருந்த மீன் பொறியை) சுரர் உள்ளநெறி = தேவர்களிருக்கும் வழியில், (வான வெளியில் என்பதாம்) அறத்துணித்து= அற்று விழும்படி செய்து, நல் = நல்ல, தவ = விரத நெறிகளில் ஈடுபட்டுள்ள, முனித்திரள்=விப்பிரர் கூட்டம், பிற பொது.

அசைவறத் துலங்குமவ் வீமபு யாதிசு
யாற்புதத் துறுநெடுந் துணையால்
விசையக ரோற்சவ மிசைதலு ணர்ந்ததி
வீரனென் றயர்வறப் பரவுந்
திசைநர வரர்புகல் மாவிரைச் சல்லிய
னிகழ்தரத் திகழ்ந்தனன் மனதின்
னிசைதளர்ந் தேமிக வேகுத லாய்ந்தம
ரேசரன் றுளங்களித் தனரே. 173

இராமாயணப் பொருள்:- அசைவு=நடுக்கம்; வீமபுயம்= பகைவர்க்கு அச்சமூட்டத்தக்க தோள், அதிசய=அளவுகடந்த, அற்புதம்=வியப்பு, விசைய=விஜய=வெற்றி, கர=செய்யத்தக்க, உற்சவம் = மகிழ்ச்சி, பரவுந்திசை = பரவும்போது, நரவரர் = அரசர், மா+இரைச்சல்=பேரொலியின், இயல்=தன்மை, நிகழ் தர, வேகுதல் = உள்ளுக்குள் வேதனைப்படுதல், அமரேசர் = இந்திரன் முதலியோர், பிற பொது.

பாரதப் பொருள்:- பார்ப்பன வடிவமுடைய பார்த்தனது வெற்றியைக்கண்டு மனம் பொருது போர்விளைத்த துரியோதனுதி யரின் தோல்வி இச்செய்யுளிற் காணப்படுகிறது

அசைவு அற துலங்கும் அந்த, வீமனுடைய புய அதிசயத்து உறும், துணையோடு, விசையனது, கரத்தின் உற்சவமும் இசைதல் =சேர்ந்ததை, உணர்ந்தவனுய், அயர்வு அற = ஒய்வில்லாமல், வீரன் என்று, பரவும் = பாராட்டப்பட்டவனும், திசை நரவரர் = பல திசைகளின் மன்னர்களினுல், புகழ் = புகழ்ந்து பேசுதற்குரிய வனும், மாவிரைச்சல்லியன்=மிக்க கலவைச் சாந்துகளையணிந்து வந்தெதிர்த்த சல்லியன் என்பான், இகழ்தரத்திகழ்ந்தனன் = போருக்குத் தோற்று காண்போர் இகழும் படியாக விளங்கினன். (அதைக் கண்ட துரியோதனன்) இசை தளர்ந்து = தனது கீர்த்தி யழிந்ததற்கு கவலையுற்று, மனதில், வேகுதல்=வேதனையடைதல். ஆய்ந்து, அமரர் உளங்களித்தனர்.

மன்றல் மாட்சி

அப்பெருஞ் செயலேக்கண் கண்டவர் யாவரும்
அற்புதச் சாகரத் தமுழ்ந்த
விப்பிர பாவமுற் ருங்கினி தெய்தவில்
வீரனி ராமன்பொற் கலஞ்சேர்
சிப்பிளங் கொங்கைய யோனிசை தன்கரத்
தேன்மலர்த் தார்களத் தணிந்தே
யிப்புவி யோர்தொழு தேத்திடு மாமனுக்
கின்புறச் செய்திலங் கினனுல். 174

இராமாயணப் பொருள்:- கண் கண்டவர் = கண்கூடாகக் கண்டவர், இப்பிரபாவம் = இவ்விதப் பெருமை, வில் வீரன் (ஆகிய) இராமன், அயோனிசை = சீதை, மாமனுக்கு = சனக மன்னனுக்கு

பாரதப் பொருள்:- விப்பிரபாவம் = அந்தணர் வடிவம், இராமன் = அழகு வாய்ந்தவன் (அருச்சுனன் என்பதாம்) அயோனிசை = திரௌபதி, மாமனுக்கு = துருபத மன்னனுக்கு, பிற பொது.

கூடினர் வானிடை விண்ணவர் யாவருங்
கொடிபடை யுடைகலன் றுலங்க
பாடினர் பண்களைக் கின்னரர் யாவரும்
பற்பல வாத்தியம் முழங்க
ஆடினர் அச்சர மங்கையர் யாவரும்
அணிந்தபொற் சிலம்புக ளலம்ப
நாடினர் முத்தமிழ் நாவலர் யாவரும்
நானிலம் நன்குவாழ்ந் திடவே. 175

உரை; பொது, எளிது.

அறிவுடைய மாந்தர்தரு மபதியென வேத்திடுமஞ்
சனகமனன் றுயின் மொழிமா
மறையறிவி யாதநெறி யூழ்வினையின் பயனுணர்ப
வன்செயலொ டிதய வியலும்
உறுதியுறத் தூண்டவவ னுடன்பிறந்த வேந்தருளு
வந்திசையு மாறு வினவி
திறமையுறு மனைவருக்குந் தாரவியல் புற்றுமணஞ்
செய்தல்மிகு நீதி யெனவே. 176

இராமாயணப் பொருள்:- தருமபதி = அறங்களைக்காக்கும் தலைவன் என, ஏத்திடும், அம் = அழகிய சிந்தையுடைய, சனக மன்(னன்), அன்று, அறிவுடைய மாந்தர், ஆய் = ஆராய்ந்து உரைக்கின்ற, இன் மொழி(யும்) மாமறை அறிவியாத = மிக்க வேதங்களாலும் அறிவிக்கமுடியாத, நெறி = உயர்ந்த நிலையில் (பரமபதத்தில் என்பதாம்) உள்ள பெருமான், ஊழ் வினை = ஊழிதோறும் நடைபெறுகிற செயல்களையும், (அவற்றின்) பயனையும் உணர்பவன் (ஆகிய பரந்தாமனது) செயலோடு, (தன்னுடைய) இதய இயலும் = மனநிலையும், தூண்ட, அவன் = அந்த இராமனுடைய, உடன் பிறந்த வேந்தர் = பரத, லக்குமண, சத்துருக்கினர், உள் = மனம், உவந்து இசையுமாறு = மகிழ்ந்து ஒப்பும்படியாக வினவி = சனகன் அப்பெரியார்களை வினவி, பிற எளிது.

பாரதப் பொருள்:- தருமபதி = தருமராசன், அஞ்சன் = அமிசன், (தருமத்தின் அம்ஸன் என்பதாம்) அனக = பாவமற்ற, மன்னன், தாயின் மொழியும், மாமறை அறிந்த, வியாதநெறி = வியாசன் கூறும் வழியும், ஊழ்வினை(யின்) பயன் உணரும், பவன் செயல் = சிவன் செயலும், இதய இயலும், தூண்ட, அவன் = அந்த உதிட்டிரன், உடன் பிறந்த வேந்தர் = பீமன், விசயன், நகுலன், சகாதேவன், இசையுமாறு = திரௌபதியை மாலையிடுதற்குச் சம்மதிக்குமாறு, வினவி, பிற பொது.

இயந்திசையு மன்றடல்சு வாகுசெயத் தொளிர்பவன்பின்
னிலகுமிறை மணிகட் கரிய

சயந்தருமத் தெரிவைதன தங்கையரு நறுவமலர்த்
தாரிடவி சைந்த பொழுது

பயன்றிகழங் கெடுஞ்செ யற்குப்பொன்னுலக மன்னவரும்
பன்னகருங் கின்ன ரருமே

வியந்தனரென் றியம்பிடுங்கா லிவ்வுலகி லுறைமாந்தர்
விரித்ததனை யியம்ப லெளிதோ. 177

இராமாயணப் பொருள்:- சுவாகு செயத்து ஒளிர்பவன் = சுபாகுவை வென்று திகழ்பவன் ஆகிய இராமன். பின் = (அவனுடைய) பின்னவர்களாய், இலகும் இறைமணிகட்கு = விளங்குகிற பரத, இலக்குமண, சத்துருக்கினர்களுக்கு, தெரிவை = சீதை, தன தங்கையரும் = தன்னுடைய தங்கையர்களாகிய மாண்டவி, ஊர்மிளை, சுருதகீர்த்தி ஆகிய மூவரும். பிற எளிது.

பாரதப் பொருள்:- சுவாகு, சு = மிக்க, வாகு = தோள் வலிமையினால், செயத்து ஒளிர்ப = வெற்றியுடையோனாகி அருச்சுனன் பிரகாசிக்க, அன்பின் இலகும் = ஒருவர்க்கொருவர் அன்பு பாராட்டிக்கொண்டு விளங்குபவர்களாகிய, இறைமணி கட்கு = தருமா, வீம, நகுல, சகாதேவர்களுக்கும், அத்தெரிவை = அந்தத்திரௌபதி, தனது + அம் + கை + அரும் + நறுவமலர்த் தார், பிற பொது எளிது.

முகிலியலுற் றிலகுமிறை தனயரொடு தந்தையுள
  முவந்துவந்து நோக்கும் பெரியோர்
தகையுறவித் திருமணம்போ லிழைத்தலரி தெனவியக்குந்
  ததிசெழுமென் புயச னகியைப்
பகருகிளி மொழ்ழியமுதத் துருபதைச்சீ ருற்றொளிர்செம்
  பவளவித ழெனுஞ்சு முகியை
புகழரும்பொற் பாவைதனைப் பொலிவமைந்த வனியுதித்த
  பூவைதனைக் கைசெய் தனரால். 178

இராமாயணப் பொருள்:- இறை = சக்ரவர்த்தியாகிய, தந்தை = தயரதர், உவந்து = களித்து, தனயரொடு = பரதசத்துருக் கனரோடு, வந்து (சேர்ந்து) பெரியோர்.........அரிதென, வியக் குந்ததி = ஆச்சரியப்படும்போது, சனகியை = சனக மன்னனது புதல்வியை, கிளி மொழி(யை), அமுதத்து உருபு = அமுதமே வடிவு கொண்டதென விளங்கும், அதை = அந்தவடிவத்தை, சுமுகியை = நல்ல இதழ் உடையவளை, பாவைதனை, பொலிவு, அமைந்து, அவனி உதித்த = பூமியில் பிறந்த, பூவைதனை, கை செய்தனர் = அழகு படுத்தினர்.

பாரதப் பொருள்:- தந்தை = பாஞ்சாலியின் பிதாவான, இறை = துருபத மன்னன், தனயரொடு = திட்டத்துயுமன் முதலான புதல்வரோடு, உளம், உவந்து, வந்து = பாண்டவர் இருந்தவிடத்தைச்சேர்ந்து, நோக்கும்=பார்ப்பாராயினர், பெரியோர் வியக்குந்தகி, மென்புய = மிருதுவான தோள்கள் என்னும், சனகியை = மூங்கிற்கழியுடையவளை, (மூங்கிற் கழி போன்ற தோளுடையாள் என்பதாம்) துருபதை=துருபதனுடைய மகள், வனி = வன்னி = தீ, வனி யுதித்த பூவை = திரௌபதி பிற பொது.

சுரிகுழலிற் கடிமலரும் விற்புருவத் தழகுமையுந்
தூ நுதலிற் செழுந்தி லதமும்
பரிவுறவத் திருவுருக்கொண் மூவரைநேர் குவிமுலையிற்
பைந்தரளக் கச்சை யுமடர்
அரியிடையிற் பூந்துகிலு மெழிலுறுமற் றவயவத்திற்
கிசைந்தகல னணிந்து நிகழும்
வரர்மனையி லிவைபோன்ற காலையெமை நினைமினென
மாதர்நனி வாழ்த்தி னரரோ 179

இராமாயணப் பொருள்:- மூவரை=மாண்டவி, ஊர்மிளை, சுருதகீர்த்தி என்னும் மூவரை, வரர் =கணவன்மார் பிற பொது.

பாரதப் பொருள்:- மூ+வரைநேர் =பெரிய, மலை போன்ற, பிற பொது.

பெண்மணிகட் ககமகிழ்ந்தன் றிழைத்ததவ மேவியைந்து
பேரரசு மைந்தர் கமலக்
கண்மருவித் திகழுயர்வ டிவினுல்வ ராச்சரிய
கரவேந்தர் வாழ்ந்த னரெனு
வண்மைமிகு பொன்னெடுந்தூ சணிகலன்பூண் டொளிராக
வரைமலர்தார் கமழுங் கலவை
தண்மையுறப் புனைந்தவ்வெழி லியல்பாண்ட வரைநோக்கித்
தரைமாந்தர் வியந்த னரரோ. 180

இராமாயணப் பொருள்:- அன்று = முற்பிறவியில், பெண் மணிகட்கு = சீதை, ஊர்மிளை, மாண்டவி, சுருதகீர்த்தி ஆகிய வர்களுக்கு, இழைத்த, தவமே, இயைந்து = கைகூடப்பெற்று, பேரரசு மைந்தர் = சக்கரவர்த்தித் திருக்குமாரர்கள், உயர் வடிவின் = பேரழகுடைய, நால்வர் = இராம இலக்குமண, பரத, சத்துருக்கனர் ஆகிய நால்வர், (ஆகிய) ஆச்சரிய கர வேந்தர் = வியப்புறுஞ் செயல்கள் புரியத்தக்க அரசகுமாரர், ஒள் = ஒழிமிக்க, இராகவரை = இரகு குலத்துப்பிள்ளைகளை, ஆண்டு = அப்போது, அவரை நோக்கி, வியந்தனர்.

பாரதப் பொருள்:- அன்று இழைத்த தவமேவி = முற் பிறவியில் கணவனுக்காகச் செய்த தவமே கைகூடப் பெற்று, ஐந்துபேர் = தரும, விசய, நகுல, சகதேவனென்னும் ஐவர், அரசு மைந்தர் = பாண்டுபுத்திரர்கள், பெண்மணிகட்கு = திரௌபதியின் கண்ணுக்கு, உயர் வடிவினால், ஆச்சரியகர = பேரழகு படைத்து வியப்புண்டாக்கத்தக்க, வேந்தர் = அரசிளங்குமாரர், ஒளிர், ஆக வரை = போர் வீரரை, பாண்டவரை நோக்கி மாந்தர் வியந்தனர். பிற பொது

மறைவகுத்த மலர்க்கரத்தி னுன்குருவிற் கியைந்தொழுக
வகுத்தனனென் றவர்கட் கரிய
நெறியுறுமென் கிளிமொழிமாதரையிசைந்தின்றளிக்குச்செயல்
நேர்ந்ததென வுள்ளத் துவகை
யுறவதியு மவணனெடுஞ் சனகன்மிக விளங்கமலத்
துருபதனவ் வுயர்வ ரைபுயத்
திரைவரனே வருமகிழ மணமங்கை யருங்களிப்புற்
றிசையபரி ணயஞ்செய் தனனால். 181

இராமாயணப் பொருள்:- (வேதன்) மறை வகுத்த மலர்க் கரத்தில், நான்கு உருவிற்கு, இயைந்து ஒழுக = பொருத்தமாக அமையும்படி, வகுத்தனன் = சிருட்டித்தனன் என்று, அவர்கட்கு = அந்த சக்கரவர்த்தியின் புதல்வருக்கு, மாதரை = மணப்

பெண்களை, அவண்=அந்தமிதிலையில், வதியும், மிக, இளம், கமலத்து + உரு + பதன் = கமலம் போன்ற வடிவழகமைந்த பாதமுடையவள், சனகன் இறைவர் அனைவரும்=அரசகுமாரர் நால்வரும், மணமங்கையரும், இசைய, பரிணயம் = திருமணம், செய்தனன்.

பாரதப் பொருள்:- மலர்க்கரத்தினன் = பிரமன், குரு= குருகுலத்தின், இற்கு = இல்லத்திற்கு, அவர்கட்கு = அந்தப் பாண்டுபுத்திரர்களுக்கு, மா, + தரை = பேருலகத்தில், கிளி மொழி = திரௌபதியை, அவள் = அந்த திரௌபதியின். நல், நெடும் = பெரியோனாகிய, சனகன் = தந்தை, மிக, விளங்கும், அமல= தூய்மையுடைய, துருபதன், இறைவரனைவரும்=பாண்ட வர்களைவரும், மணமங்கை (யான திரௌபதி) அரும்=அரிதான களிப்பு உற்று, இசைய=ஐவரையும் மணப்பதற்கு சம்மதிக்கவே, பரிணயம் செய்தனன். பிற பொது.

எதிர்பாருங்கள்:

இரவீச மரபினர் காதை

(பிற் பகுதி)



நூல் கிடைக்குமிடம்:

ஆ. இராமசாமி அய்யா,

திருவேங்கட விலாசம்.

இராசிபுரம். (சேலம் *Dt.*)